MSU/ 2021-2022 / PG-Colleges / M.A. Tamil / Semester - 118/ Ppr.80.14/ Core - 10

இலக்கணம் 111 - தொல்காப்பியம் பொருள் - 1 (முதல் ஐந்து இயல்கள்)

நோக்கம்

1.பொருள் இலக்கண மரபைஅறியச் செய்தல்
2.களவு கற்பு வாழ்க்கைக் கோட்பாடுகளை உணர்த்துதல்
3..போர் நெறியின் முறைகளை விளக்குதல்,
பயன்

1.தமிழின் தனித்துவத்தை பொருளிலக்கணம் வாயிலாக உணர்தல்,

2.ஆதித்தமிழரின் வாழ்வியலை ஆழமாக அறிதல்

3.தொல்காப்பியத்தோடு நம்பிஅகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை →ஒப்பீட்டின் வழி தமிழரின் வரலாற்று மரபில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் வளர்ச்சிநிலைகளைக் கண்டறிதல்

அலகு1 தொல்காப்பியம் அகத்திணையியல் - களவியல்

அலகு2 தொல்காப்பியம் - கற்பியல் - பொருளியல்

அலகு3 தொல்காப்பியம் - புறத்திணையியல்

அலகு4 தொல்காப்பியம் - நம்பி அகப்பொருள் ஒப்பீடு

அ. ஒற்றுமைகள், வேற்றுமைகள்

ஆ. மரபு போற்றப்படல்

இ. மரபு வளர்ச்சி

அலகு5.தொல்காப்பியம் புறத்திணையியல் - புறப்பொருள்வெண்பாமாலை ஒப்பீடு

அ ஒற்றுமைகள், வேற்றுமைகள்

ஆ மரபு போற்றப்படல்

இ. மரபு வளர்ச்சி

அலகு1

## தொல்காப்பியம் - பொருள்

தமிழில் மிகவும் பழைய இலக்கண நூலாக விளங்குவது தொல்காப்பியம் ஆகும். இது கி.மு. நான்காம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இதை இயற்றியவர் தொல்காப்பியர் ஆவார். இந்த நூலில் எழுத்து அதிகாரம் சொல் அதிகாரம் பொருள் அதிகாரம் என்ற மூன்று அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வோர் அதிகாரத்திலும் ஒன்பது இயலாக இருபத்து ஏழு இயல்கள் உள்ளன. தமிழில் உள்ள இலக்கண நூல்களிலேயே மிகவும் பெரியது தொல்காப்பியம் ஆகும். தொல்காப்பியம் தமிழரின் முதல் அடையாளம். தமிழ்மொழிக் காப்பு முயற்சி மட்டுமன்றி தமிழின வரலாற்றுக் களஞ்சியப் பதிவாகவும் மன்னாயமாம் சமுதாய வாழ்வு பற்றிய சான்றுகளைப் பொதிந்து வைத்த ஆவணமாகவும் இது திகழ்கிறது.தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனார் என்னும் அறிஞர் பாயிரம் எழுதியுள்ளார். இவர் தொல்காப்பியருடன் பயின்றவர் என்று அறிய முடிகிறது. பாயிரம் என்பது தற்காலத்தில் எழுதப்படும் முன்னுரை போன்றது. நிலந்தரு திருவின் பாண்டிய மன்னனின் அவையில் அதங்கோட்டாசான் தலைமையில் தொல்காப்பியம் அரங்கேறியது என்று பாயிரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது தொல்காப்பியம் இலக்கணத்தை மிகவும் விரிவாகக் கூறுகிறது. சூத்திரங்கள் இலக்கண அமைப்பை விளக்கும் முறையில் அமைந்துள்ளன. சிறு இலக்கண விதிகளைக்கூட விட்டுவிடாமல் மிகவும் நுட்பமாகத் தொல்காப்பியம் கூறுகிறது. தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், தெய்வச்சிலையார், கல்லாடர், பேராசிரியர் ஆகியோர் உரை எழுதியுள்ளனர்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தைப் பழந்தமிழர் நாகரிகக் கையேடு என்றே குறிப்பிடலாம். இதன்கண் தொல் பழங்கால - பண்பாட்டு மானுடவியல் சார்ந்த - தமிழினத் தோற்ற வளர்ச்சி பற்றிய வரலாறு சார்ந்த குறிப்புக்களும் உள."பொருள்" என்பது உலகத்தை உலகியலை மானுட வாழ்வைப் பற்றியது என அறியலாம். தொல்காப்பியப் பொருளதிகாரம், இந்த உலக வாழ்வை, இலக்கியமாகப் படைக்கும் நெறிமுறைகளைக் குறிக்கிறது.இலக்கியப் பொருளாக இந்த உலகமும் உலக மக்களும் அவர்கள் வாழ்வுமே படைக்கப்படுதலால் இது பொருள் அதிகாரம் ஆனது.பொருள் அதிகாரத்தில் தமிழின் பொருள் இலக்கணமும் யாப்பு இலக்கணமும் சொல்லப்பட்டுள்ளன. தொல்காப்பியப் பொருள் அதிகாரத்தில் உள்ள உவமை இயலில் அணி இலக்கணம் சொல்லப்பட்டுள்ளது. இன்று தமிழில் உள்ள ஐந்திலக்கணங்களுக்கும் தோற்றுவாயாகத் தொல்காப்பியம் திகழ்கிறது. மானுட வாழ்வு அகம், புறம் எனப் பகுக்கப்பட்டது.

அகம் காதல், குடும்பம் பற்றியது தனிப்பட்டோர் வாழ்வு பற்றியது. அகம் - உள்ளத்துணர்வால் நுகரும் இன்பம். தனித்த மறைபொருள்: வெளிப்படப் பகரப்படாதது. புறம் - அதுதவிர்த்த அனைத்து உலக வாழ்வும் பற்றியது. அகம் வரையறைக்குட்பட்டது. அகம் அல்லாதன எல்லாம் புறம். உயர்திணை - உயர்திணை அல்லாதன எல்லாம் அல் திணை (அ.்.றிணை). வேற்றுமை - வேற்றுமை அல்லாதன எல்லாம் அல்வழி. அகம் - அகமல்லாதன எல்லாம் புறம். இதுதான் மரபு வழி விளக்கம்.பொருளதிகாரம் தமிழ்மக்களின் வாழ்வியலைக் கூறுகிறது. வாழ்வியல் நூல்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதையும் விளக்குகிறது.

பொருளதிகாரத்தில் ஒன்பது இயல்கள் உள்ளன. பொருளதிகாரத்தில் அகத்திணையியல், களவியல்,கற்பியல்.பொருளியல் ஆகிய நான்கு இயல் அகம் பற்றியன. புறத்திணையியல், மெய்ப்பாட்டியல், உவமஇயல், செய்யுளியல், மரபியல் ஆகிய ஐந்துஇயல் புறம் பற்றியது. முதலாவதாக உள்ள அகத்திணையியல், புறத்திணையியல் ஆகியவை முறையே அகத்திணைகள் ஏழையும்,புறத்திணைகள் ஏழையும் விளக்குகின்றன. மூன்றாவதாக உள்ள களவியலும், நான்காவதாக உள்ள கற்பியலும் அகத்திணையின் உட்பகுப்பு விளக்கங்கள்.ஐந்தாவதாக உள்ள பொருளியல் அகப்பாடல்களுக்குப் பொருள் காணும் முறைமையை விளக்குகிறது.ஆறாவதாக உள்ள மெய்ப்பாட்டியல் அகவொழுக்கத்திலும் புறவொழுக்கத்திலும் புலப்படும் மெய்ப்பாடுகளைக் கூறுகிறது. மெய்ப்பாடு என்பது உள்ளத்து உணர்வுகள் உடலில்(மெய்யில்) வெளிப்படுவது.ஏழாவதாக உள்ள உவமயியல் வாய்மொழியில் பொருளை வெளிப்படுத்தும் பாங்கை விளக்குகிறது.எட்டாவதாக உள்ள செய்யுளியல் அகச் செய்திகளையும் புறச் செய்திகளையும் பண்டைய பாடல்களும் நூல்களும் எவ்வாறு புலப்படுத்தின என்பதை விளக்குகிறது.ஒன்பதாவதாக உள்ள மரபியலில் உயிரினங்களின் பாகுபாடும் அவற்றின் இளமை, ஆண், பெண் பாகுபாட்டு வழக்குப் பெயர்களும் விளக்கப்படுகின்றன. அத்துடன் ஓரறிவு உயிர்களை மரம் என்றும், புல் என்றும் பாகுபடுத்தி அவற்றின் இலை, காய், பழம், முதலானவற்றிற்கு வழங்கப்படும் பெயர்களும் சுட்டப்படுகின்றன. நிலம், தீ, நீர், வளி, விசும்பு என்னும் வரிசையில் ஐந்து பூதப்பொருள்களும் சுட்டப்படுகின்றன.

## அகத்திணை இயல்

அகத்திணைக்கெல்லாம் பொதுஇலக்கணம் உணர்த்துதலால் அகத்திணையியல் என்னும் பெயர் பெற்றது. இது மக்கள் வாழ்வின் காதல் அறமாண்புகளைச் செவ்விதின் விளக்கும் பகுதி ஆகும். ஒத்த அன்பினால் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம். அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவர் தத்தமக்குப் புலனாக நிற்குமேயன்றிப் புறத்தார்க்குப் புலனாகாது என்ற இயல் நோக்கி இது அகம் எனப் பெயர்பெற்றது என்பர் இளம்பூரணர். அகத்தே நிகழுகின்ற இன்பத்திற்கு அறம் என்பது ஓர் ஆகுபெயராக அமைந்தது. இவ்வியல் சூத்திரங்களை இளம்பூரணர் 58 ஆகவும், நச்சினார்க்கினியார் 54 ஆகவும் கொண்டு உரை கூறியுள்ளார்கள்.

அகத்திணையின் உள் வகைகள் - முதல் கரு உரி என அகப்பாடலில் அமையும் பொருள்கள் - பிரிவு வகைகள் - காதலர் உடன் போக்கு அச்சூழலில் நிகழும் கூற்றுவகைகள் - அகப்பாடலுக்கே மிக இன்றியமையாத உள்ளுறை - சிறு வரவிற்றான கைக்கிளை, பெருந்திணைகளின் இலக்கணம் - அகப் பாடலின் அடிக்கருத்து உலக வாழ்வு என்பது அது நாடக வழக்காகப் புனையப்படும் என்பது அகம் எனும் காதல்பாட்டு உலக மக்களுக்கெல்லாம் பொதுவானதாதலின். எந்த ஒரு அகப்பாடலிலும் யார் ஒருவர் இயற்பெயரும் இடம் பெறாமை இவை யாவும் நிரலே - விளக்கப்படுகின்றன

## அகத்திணை விளக்கம்

தொல்காப்பியரால் கூறப்பட்ட அகத்திணைச் செய்திகள் எல்லாம் இலக்கண (புலனெறி) வழக்கில் உள்ளவை. இவை நாடக வழக்கினும், உலகியல் வழக்கினும் பாடல்களில் வரும். இவை கலிப்பாஇ பரிபாடல் ஆகிய பாடல்களில் வரும்.இவற்றில் தனி ஒருவரைச் சுட்டும் பெயர் வராது.தனியொருவரின் பெயர் சுட்டப்பட்டால் அது அகத்திணை அன்று. புறத்திணையாகும்அகத்திணை என்பது தமிழர் கண்ட காதல் நெறியாகும். இந்நெறி கொள்கைகளே திணை என்ற பெயரில் விளக்கப்பட்டுள்ளன

**"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**
**முற்படக் கிளந்த எழுதிணை என்ப" (அகத்.1)**

என்ற நூற்பா கைக்கிளை முதலாகப் பெருந்திணை இறுதியாக உள்ள அகத்திணைகள் ஏழு என்று கூறுகிறது. அகத்திணை எண்ணிக்கை கைக்கிளை முதலாக பெருந்திணை ஈறாக, அகத்திணை ஏழு என முன்னதாகப் பகுக்கப்பட்டது.

ஏழுதிணை - கைக்கிளை, முல்லை, குறிஞ்சி,பாலை, மருதம், நெய்தல்,பெருந்திணை முற்கூறிய ஏழில், இடையிலுள்ளவை ஐந்து. அவற்றிற்குப் பொதுவான திணை பாலை என்பது. அது நீங்கலாக ஏனைய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நிலவுலகம் பகுக்கப்படும் இயல்பினது. இவை முறையே மலை, காடு, வயல், கடல் ஆகும். தமிழகத்தில் முல்லை குறிஞ்சி நிலங்களின் எல்லையோரப் பகுதிகள், மழையில்லாத கோடையில் பாலையாக மாறும். பாலைக்குத் தனிநிலம் இல்லை. முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்ற நடுவண் ஐந்திணையுள் நடுவதாகிய பாலை ஒழிய ஏனைய நான்கும் நிலம் பெறும் இயல்பினை உடைத்து. இச்செய்திகளை அவற்றுள்

**"நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்**

**படுதிரை வையம் பாத்திய பண்பே" (அகத்.2)**

என்ற சூத்திரம் விளக்குகின்றது.

முற்படக் கிளந்த ஏழுதிணை கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணை எனவே பிற்படக் கிளக்கப்படுவன (கூறப்படுவன) ஏழு திணைகள் உள என்பதும் பெறப்படும் எனக் கூறி, அவை வெட்சி முதலாகப் பாடாண் திணை ஈறாக உள்ள புறத்திணைகள் என்று இளம்பூரணர் விளக்குகின்றார்.

இவற்றுள் கைக்கிளை என்பது ஒருதலைக்காமம். கை என்பது சிறுமை என்ற பொருள் பற்றியது. கிளை என்பது உறவு. எனவே பெருமை இல்லாத தலைமக்கள் உறவு கைக்கிளை ஆகும். கைக்குட்டை, கையேடு. கைவாள். என்ற உலக வழக்கிலும் கை என்பது சிறியது என்ற பொருள் தருவது நோக்கற்பாலது.பெருந்திணையாவது பொருந்தாக் காமம். ஒத்த காமத்தின் மிக்கும் குறைந்து வருவது. வடவர் கூறும் எண்வகை மணத்தினுள்ளும் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம். தெய்வம் என்பன பெருந்திணைப் பாற்படுவது. இவை நான்கும் மேன்மக்கள் இடத்து நிகழ்பவை. மேலும் இவையே உலகினுள் பெருவழக்கு என்பதாலும் இது பெருந்திணை என்று பெயர்பெற்றது என்பர். மேற்குறிப்பிட்ட எழுதிணையுள் கைக்கிளை, பெருந்திணை நீங்கலாக நடுவிலுள்ள ஐந்தும் நடுவண் ஐந்திணை எனப் பெயர் பெறும். அன்பின் ஐந்திணை என்றும் சிறப்பிக்கப்பெறும். அ∴தாவது ஒத்த அன்புடைய தலைவன் தலைவியரிடை தோன்றும் காதலாகும்.

அகத்திணைக்கு இணையாகப் புறத்திணையும் ஏழு என்று வகுக்கப்பட்டுள்ளது. இவற்றை,

| அகம் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை | பெருந்திணை | பாடாண் |
|---|---|---|---|---|---|---|---|
| புறம் | வெட்சி | வஞ்சி | உழிஞை | தும்பை | கைக்கிளை | வாகை | காஞ்சி |

என்று பின்வரும் புறத்திணையியல் வகுக்கின்றது. பாடலின் திணையை அறிந்துகொள்ள உரிப்பொருள் கருப்பொருள் ஆகியவை முறையே அளவுகோலாக எடுத்துக் கொள்ளப்படும். அத்துடன் உள்ளுறை உவமம் தெய்வம் அல்லாத கருப்பொருள்களில் அமைந்திருக்கும். கருப்பொருள்களின் இயல்புகளும் செயல்பாடுகளும் அகத்திணை மாந்தரின் இயல்புகளோடும் செயல்பாடுகளோடும் இணைத்துப் பார்த்துப் பொருள் உணர்ந்து கொள்வது உள்ளுறை உவமம்.ஏனைய உவமத்தில் உவமையும் பொருளும் வெளிப்படையாகப் பொருத்திக் காட்டப்பட்டிருக்கும். ஆகிய நான்கும் பெருந்திணை முதிராத முன்னைய நிலை. இவை நான்கும் கைக்கிளை.

## அகப்பொருள்கள்

பொருள் - முதல், கரு, உரி - என 3 வகைப்படும். மூன்றும் அகப் பாடலினுள் வருபவையாகும். முதற்பொருள். கருப்பொருள். உரிப்பொருள் எனும் மூன்றும் ஒன்றைவிட ஒன்று சிறந்தவை. அதனினும் உரிப்பொருளே ஆகச் சிறந்தது. அகப்பாடல்களில் பொருள் முறைமை சான்றோர் செய்யுளகத்து இடம்பெறும் அகப்பொருள் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்று மூன்று வகைப்படும். இந்த மூன்றின் அடிப்படையில் பாடல் பொருள் சிறப்பிக்கப்பெறும் என்பதனை.

> **"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே**
> **நுவலுங்காலை முறைசிறந் தனவே**
> **பாடலுள் பயின்றவை நாடுங் காலை" (அகத். 3)**

என்று உரைத்துள்ளார் தொல்காப்பியர்.முறைமையிற் சிறத்தலாவது ஒரு செய்யுளில் முதல், கரு, உரி என்ற மூன்றும் வரின் முதற்பொருளால் திணையும், கருப்பொருளும், உரிப்பொருளும் வரின் கருப்பொருளால் திணையும். உரிப்பொருள் மட்டுமே வரின் அதனால் திணை அமையும் என்று இளம்பூரணர் உரை கூறியுள்ளார்.

**முதற் பொருள்**( நிலம், பொழுது - என 2 வகை)

### நிலம்

முல்லை - மாயோன் மேய காடுறை உலகம்

குறிஞ்சி - சேயோன் மேய மைவரை (இருண்ட மலை) உலகம்

மருதம் - வேந்தன் மேய தீம்புனல் (நன்னீர்) உலகம்

நெய்தல் (கடல் உவர்நீர் உள்ள) வருணன் மேய பெருமணல் உலகம்

### காலம்

முல்லை நிலத்துக்குப் பொழுது - கார், மாலை

குறிஞ்சி நிலத்துக்குப் பொழுது - கூதிர், யாமம்இபனி எதிர்கொள்ளும் முன்பனிப் பருவம் உரியது.

மருத நிலத்துக்குப் பொழுது -வைகறை, விடியல் பொழுதும் உரியன

நெய்தல் நிலத்துக்குப் பொழுது - எற்பாடு பொழுது உரியது

பாலை நிலத்துக்குப் பொழுது - வேனில், நண்பகல் இபாலைக்குப் பின்பனிப் பருவமும் உரியது

முதற்பொருள் என்பது மேலே சொல்லப்பட்ட நிலம்இ காலம் ஆகிய இரண்டு மட்டுமே

**"முதல் எனப்படுவது நிலம்பொழுது இரண்டின்**

**இயல்பென மொழிப இயல்பு உணர்ந்தோரே" (அகத்.4)**

என்ற சூத்திரத்தின்படி. நிலம் பொழுது(காலம்) இவற்றின் இயல்புகளைக் கூறுவது முதல் பொருளாகும். அவற்றுள் நிலமாவது காடுறை உலகம், மைவரை உலகம், தீம்புனல் உலகம், பெருமணல் உலகம் என்று நில இயலின் அடிப்படையில் நான்காகப் பகுக்கப்பெற்றுள்ளது. அவை முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என பெயர்பெற்றன. நிலங்களின் பெயரினைச் சுட்டுகின்ற ஆசிரியர் அவற்றை அந்நிலங்களுக்குரிய தெய்வங்களோடு இணைத்துச் சுட்டுகின்ற நிலம் நோக்குதற்குரியது. அவற்றை அந்நிலங்களுக்குரிய தெய்வங்களோடு இணைத்துச் சுட்டுகின்ற நிலம் நோக்குதற்குரியது. இயற்கையோடு இணைந்து வாழ்ந்த பண்டைத் தமிழர்தம் வாழ்க்கை எளிமையானது. இன்பம் நிறைந்தது. அன்பும் அறமும் தழுவப்பெற்றது. எனவே அவர்தம் வாழ்வில் தெய்வத்திற்கு முதலிடம் கொடுத்து வாழ்ந்ததில் வியப்பு ஒன்றும் இல்லை. முதற்பொருளில் ஒன்றான நிலம் பற்றிச் சுட்டும் தொல்காப்பியர் கருப்பொருட்களில் ஒன்றாகிய தெய்வத்தையும் இணைத்தே காட்டுகிறார். முல்லை, குறிஞ்சி, எனும் நிலப்பெயர்கள் காரணக்குறியோ? அல்லது இடுகுறியா? மேற்கண்ட வினாவிற்கு இளம்பூரணர் விடை கூறும்போது காரணம் பற்றி முதலாசிரியர் இட்டதோர் குறி என்பர், எடுத்துக்காட்டாக,

"நெல்லோடு நாழிகொண்ட நறவி முல்லை

அரும்பவிழ் அலரி தூஉய்"

என்ற வரிகள் காடும் காடு சார்ந்த பகுதியாகிய முல்லை நிலத்திற்கு முல்லைப்பூ சிறந்தது என உணர்த்துகிறது.

"கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு

பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே" (குறுந்-3)

என்ற வரிகள் மலையும் மலைசார்ந்த பகுதியாகிய குறிஞ்சிக்குக் குறிஞ்சி மலர் சிறந்தது என உணர்த்துகிறது.

மருதத்திற்கு "இறாஅல் அருந்திய சிறுசிரல் மருதின்தாழ்சினை

உறங்குந் தண்துறை ஊர"(அகம்.286)

என்ற வரிகள் வயலும் வயல்சார்ந்த பகுதியாகிய உயர்த்துகிறது.

"பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்

இன்மீன் இருங்கழி ஓதம் மல்குதொறும்

கயமூழ்கிமகளிர் கண்ணின் மானும்" (குறுந்-9)

என்ற வரிகளால் கடலும் கடல் சார்ந்த பகுதியாகிய நெய்தலுக்கு நெய்தல் மலர் சிறந்தது என்று அறியலாம்.

பாலை என்பது மணல், மணல் சார்ந்த வறண்ட நிலம் ஆகும். இப்படிப்பட்ட குறிப்பிட்ட நிலம் இல்லை என்றாலும் வேனில்காலத்துக் காணப்படுவதொரு நிலம் ஆகும் என்றும் அவ்வேனிற் காலத்தும் தளிரும் சினையும் வாடுதல் இன்றி நிற்கும் பாலை என்பதோர் மரம் உண்டு. அது பற்றி அந்நிலம் பாலை என்னும் பெயர் பெற்றது என்று நிலப் பெயர்களுக்கான காரணம் காட்டுகின்றார் இளம்பூரணர். இப்பெயர் அமைப்புகள் சங்க கால மக்களின் இயற்கை ஈடுபாட்டினையும் உணர்த்துவதாக உள்ளது அவ்வந்நிலத்தில் சிறப்பாக மலருகின்ற மலர்ப்பெயரே அவ்வந்நிலத்தின் பெயராக அமையப்பெற்றது.

## பொழுது அல்லது காலம்

காலம் என்பதைத் தொல்காப்பியர் பொழுது என்று குறிப்பிடுகிறார். இது உலக நிகழ்வுகளுக்குத் துணையாய், முன்னும் பின்னும் நடுவுமாகி என்றும் உள்ளத்தோர் அருவப் பொருள். பொழுது பெரும்பொழுது, சிறுபொழுது என இருவகைப்படும். பெரும்பொழுது, என்பது ஓர் ஆண்டின் காலப்பிரிவு. அவையாவன: கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என ஆறாகும்.சிறுபொழுது என்பது ஒரு நாளின் காலப்பிரிவு அல்லது உட்கூறு. அவையாவன: மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், ஏற்பாடு என ஆறாகும்.மாலை என்பது இராப்பொழுதின் முதற்கூறு, யாமம் - நடுப்பொழுதின் நடுக்கூறு, வைகறை இராப்பொழுதின் பிற்கூறு, விடியல் பகற்பொழுதின் முதற்கூறு, நண்பகல் - பகற்பொழுதின் நடுக்கூறு, ஏற்பாடு - கதிரவன் படும்(மறையும்) பொழுது என விளக்குகின்றார் இளம்பூரணர். ஒவ்வொரு திணைக்கும் உரிய பெரும்பொழுது மற்றும் சிறுபொழுதுகளைத் தொல்காப்பியர் ஏழு நூற்பாக்களில் அமைத்துள்ளார் அவையாவன:

**"காரும் மாலையும் முல்லை. குறிஞ்சி,**

**கூதிர் யாமம் என்மனார் புலவர்"**

**"பனிஎதிர் பருவமும் உரித்தென மொழிப"**

**"வைகறை விடியல் மருதம், ஏற்பாடு**

**நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும்''**

**''நடுவுநிலைத் திணையேநண்பகல் வேனிலோடு**

**முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே''**

**''பின்பனிதானும் உரித்தென மொழிப'' (அகம்.6 -12)**

**முல்லை**

முல்லை நிலத்திற்கு உரிய பெரும்பொழுது கார்காலம் ஆகும். வேனிற்காலத்து வெப்ப மிகுதியால் மரமும், புதரும், கொடியும் அழகிழ்ந்து வாடிக் கிடந்தன. கார்காலத்தில் மழை பெய்ய இந்நிலம் அழகு பெறுதலால் கார்காலம் முல்லைக்கு உரித்தாயிற்று.சிறுபொழுது மாலை நேரம். இந்நேரம் முல்லை மலரும் காலம். முல்லை நிலத்தின் கருப்பொருளாகிய ஆநிரைகள் இல்லத்திற்குத் திரும்பிவரும் காலம். மேலும் தலைவனைப் பிரிந்து ஆற்றியிருக்கும் இந்நிலத் தலைவியருக்கு முல்லை மலர்தல், ஆநிரைகள் மீண்டு வரல் ஆகியன கண்டபோது வருத்தம் மிகும் ஆதலாலும் மாலைநேரம் முல்லைக்குரிய சிறுபொழுது ஆயிற்று.

**குறிஞ்சி**

குறிஞ்சிக்குப் பெரும்பான்மையும் களவிற்புணர்ச்சியே ஒழுக்கம் ஆகும். இப்புணர்ச்சிக்குத் தனியிடம் வேண்டும். கூதிர் காலத்தில் பகலும் இரவும் நுண்நுளி சிதறுவதால் ஆங்கு இயங்குவோர் இலர். அச்சூழலில் தலைவனும், தலைவியும் சந்தித்தல் எளிதாயிற்று. யாமப் பொழுதினும் இயங்குவார் இலர். அப்போது புணர்ச்சிக்கு வாய்ப்பு மிகுதி எளிது. எனவே கூதிர், யாமம் குறிஞ்சிக்காயிற்று.

**மருதம்**

வைகறை என்பது இராப்பொழுதின் பிற்பகுதி விடியலாவது பக வயலும் வயல் சார்ந்த பகுதியுமாகிய மருத நிலத்தில் வாழ்பவர் மேன்மக்கள். ஆடவர் சிற்படு பரத்தையின் பிரிந்த வழி, அவர் அங்குத் தங்கியதை மறைக்க வேண்டி வைகறையில் தம் வீடு நோக்கி வருவர். இதனால் மனைவி ஊடல் கொள்வாள். இவ்வூடல் விடியற்காலத்தும் நீட்டிக்கும். எனவே வைகறை, விடியல் மருதத்திற்காயிற்று.

**நெய்தல்**

நெய்தலின் உரிப்பொருள் இரங்கல் ஆகும். தலைவனைப் பிரிந்த தனிமையில் வருந்துவோர்க்குப் பகற்பொழுதைக் காட்டிலும் இராப்பொழுது மிக்குத் தோன்றும். அம்மாலை நேரம் வருவதற்குக்

காரணமான ஏற்பாடு கண்டார். இனி வருவது மாலை என்று வருத்தம் கொள்வார்.(எல்பாடு - எற்பாடு. எல் -பகலவன் பாடுபடுதல்)

**பாலை**

பாலையின் உரிப்பொருள் பிரிவு, பிரிவின் போது தலைமகனுக்குத் துன்பம், ஏற்படும் என்று தலைமகள் வருந்துவாள், நிழலும் நீரும் இல்லாத வழியில் செல்வாரே என்று பெரிதும் கவலை கொள்வாள். நிழலும் நீரும் இல்லாமைக்கு வேனிற் காலமும் நண்பகலும் சிறக்குமாதலால் வேனிலும் நண்பகலும் பாலைக்கு ஆயின என்று இளம்பூரணர் விளக்குகிறார். கருப்பொருளாவது யாது?இடத்தினும் காலத்தினும் அவ்வந்நிலத்தில் தோன்றும் பொருட்களே கருப்பொருள் ஆகும். அதாவது முதற்பொருட்கள் தோன்றும் பொருள்கள். அவையாவன : தெய்வம், உணவு, மா, மரம், பறவை, பறை, தொழில், யாழ் மற்றும் அத்தன்மையன பிற புல் முதல் மக்கள் ஈறாக உள்ள உயிர்ப்பொருள்களும் ஏனைய உயிரல் பொருள்களாகும். இன்னின்ன கருப்பொருள் இன்னின்ன நிலத்திற்கு என்று தொல்காப்பியர் விரித்துரைக்கவில்லை. எனினும் இளம்பூரணர் தம் உரையில் அதனைத் தெளிவு செய்கிறார். உரிப்பொருள் மேற்குறிப்பிட்ட உரிப்பொருள்கள் தவிர, கொண்டு தலைக்கழிதல், பிரிந்தவண் இரங்கல் என்ற இரண்டு உரிப்பொருள் ஒழுக்கங்களை,

**"கொண்டு தலைக் கழிதலும்பிரிந்து அவன் இரங்கலும்**

**உண்டென மொழிப ஓரிடத்தான''(அகத்-17)**

என்ற சூத்திரத்தில் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். இளம்பூரணர் இவற்றை விளக்கும்போது கொண்டு தலைக்கழிதல் பாலையிலும், பிரிந்தவண் இரங்கல் பெருந்திணைக் கண்ணும் இடம்பெறும் என்கிறார். கொண்டு தலைக் கழிதலாவது தலைவியை உடன் கொண்டு பெயர்தல். இந்நிகழ்வு நிலம் பெயர்ந்து (கடந்து) செல்லுதலால் புணர்தல் என்ற உரிப்பொருளுள் அடங்காது. உடன்கொண்டு செல்லுதலால் பிரிதல் என்ற உரிப்பொருளினுள் அடங்காமையின் தனியே கூறப்பட்டது.பிரிந்தவன் இரங்கல் என்பது தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் பிரிந்து இடத்து இரங்கல். அது நெட்டாறு (நீண்ட தொலைவு) சென்ற வழி இரங்குதல் இன்மையாலும், ஊரின் கண் பிரிந்திருக்கும் போது(ஒருவழித் தணந்தபோது) ஆற்றியிருக்க இயலாது. வேட்கை மிகுதியால் இரங்குதலான் இது இரங்கல் என்ற உரிப்பொருளினுள் அடங்காது வேறு ஓதப்பட்டது என்கிறார். இதனை ஏறியமடல்திறம் மற்றும் தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் என்று விளக்கி, பெருந்திணைக்கு உரியன என்பர்.

"கலந்த பொழுதும் காட்சியும் அன்ன'' (அகத்.18)

என்ற நூற்பாவழி தலைவனைக் காணுற்றவழி(பார்த்த போது) மனநிகழ்ச்சி ஏற்படும் காலமும், பின்னர் மனக்குறிப்பு அறியும் வரை நிகழும் நிகழ்ச்சியும், தலைவியை எதிர்படுதலும் ஓரிடத்து நிகழும் உரிப்பொருளாகும் என்ற செய்தி இடம்பெறுகின்றது.இவை புணர்த்தல் நிமித்தமும் ஆயினால் ஏற்படும் குற்றம் என்ன? என்று வினவுவார்க்கு,ஒருவன் ஒருத்தியை எதிர்ப்பட்டபோது புணர்ச்சி விருப்பு தோன்றலும் தோன்றாமையும் உண்டு. ஐயம், தெளிவு, துணிவு மற்றும் குறிப்பறிதல் போன்ற மன நிகழ்வுகள் தலைமகளிடத்துக் காமக்குறிப்பு இல்லாதவழிக் காமக்குறிப்பு உணராது கூறுதலின் புணர்தல் நிமித்தம் அன்று ஆயிற்று என்பர் இளம்பூரணர்.(அகத். 17-19) இத்துணையும் கூறப்பட்டது உரிப்பொருள் பற்றியது.

## உரிப்பொருள்

புணர்தல் மற்றும் இவற்றின் நிமித்தம் - குறிஞ்சி

பிரிதல் மற்றும் இவற்றின் நிமித்தம் - பாலை

இருத்தல் மற்றும் இவற்றின் நிமித்தம் -முல்லை

இரங்கல் மற்றும் இவற்றின் நிமித்தம் - நெய்தல்

ஊடல் மற்றும் இவற்றின் நிமித்தம் - மருதம்

## கருப்பொருள்

தெய்வம் இ உணாஇ மாஇ மரம் இ புள் இ பறைமுழக்கம் இசெய்தி(செய்தொழில்) இயாழ் (பண்) ஆகியவை திணைக்கு உரிய கருப்பொருளாக வரும்.பூவோஇ புள்ளோ எந்த நிலத்தில் வருகிறதோ அந்த நிலத்தினவாக அவை கொள்ளப்படும்.

முல்லைக்குரிய கருப்பொருள்

தெய்வம் -மாயோன் , உணவு - வரகு, முதிரை, மா – மான், முயல், மரம் - கொன்றை, குருந்தம், புதல் புள் - கானாங்கோழி. பறை - ஏறு கோட்பறை. செய்தி - நிரை மேய்த்தல். யாழின் பகுதி என்பது பண். அது சாதாரி. பிறவும் என்றதனால், பூ முல்லையும் பிடவும் தளவும். நீர் - கான்யாறு. என்பனவும் அமையும்.

குறிஞ்சிக்குரிய கருப்பொருள்

தெய்வம் - சேயோன் என்னும் முருகன். உணவு – தினை, ஐவனம், வெதிர்நெல், மா – யானை, புலி, பன்றி, கரடி, மரம் - வேங்கை, கோங்கு புள் - மயில், கிளி, பறை - வெறியர்டுப் பறை, தொண்டகப் பறை. செய்தி - தேனழித்தல், பண் - குறிஞ்சி. பிறவும் என்றதனால், பூ - வேங்கைப்பூவும், காந்தட்பூவும், குறிஞ்சிப் பூவும். நீர் - சுனை நீரும், அருவி நீரும், பிறவும் அன்ன.

பாலைக்குரிய கருப்பொருள்

தெய்வம் - கொற்றவை. உணவு - ஆறலைத்தலான் வரும் பொருள். மா - வலியழிந்த யானையும், வலியழிந்த புலியும், வலியழிந்த செந்நாயும். மரம் - பாலை, இருப்பை,கள்ளி, சூரை. புள் - எருவையும். பருந்தும். பறை - ஆறலைப்பறையும், சூறைகொண்ட பறையும். செய்தி - ஆறலைத்தல். பண் - பாலை. பிறவும் என்றதனால். பூ - மராம்பூ. நீர் - அறுநீர்ச் சுனையும், பிறவும் அன்ன.

மருதத்திற்குரிய கருப்பொருள்

தெய்வம் - இந்திரன் உணவு - நெல். மா - எருமையும், நீர்நாயும், மரம் - மருதும். காஞ்சியும், புள் - அன்னமும் அன்றிலும். பறை - நெல்லரி பறை, செய்தி - உழவு. பண் - மருதம். பிறவும் என்றதனால், பூ தாமரையும் கழுநீரும். நீர் -ஆற்றுநீரும் பொய்கை நீரும். பிறவும் அன்ன.

நெய்தற்குரிய கருப்பொருள்

தெய்வம் - வருணன், உணவு - உப்பும் மீனும் விற்றுக் கொள்ளப்பட்டன. மா - கராவும் சுறவும். மரம் - புன்னையும் கைதையும். புள் - கடற்காக்கை. பறை - நாவாய்ப் பறை. செய்தி - மீன்படுத்தலும் உப்பு விளைத்தலும். பண் - செவ்வழி. பிறவும் என்றதனால், பூ - நெய்தல், நீர் - கேணி நீரும் கடல் நீரும். பிறவும் அன்ன.

கருப்பொருளுக்குரிய சிறப்பு விதி:

**“எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்**

**அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்**

**வந்த நிலத்தின் பயத்த ஆகும்.”**(19)

இது, மேலதற்கு ஒரு புறனடை உணர்த்திற்று. யாதானும் ஒரு நிலத்திற் குரிய பூவும் புள்ளும், அந் நிலத்தொடும் பொழுதொடும் வந்திலவாயினும், வந்த நிலத்தின் பயத்த ஆகும்.

## திணைமயக்கம்

தொல்காப்பியர் திணைமயக்குறுதல் என்று சுட்டுகிறார் திணைப் பொருளாகவும் மயங்கும். நிலம் வேறு திணையாக மயங்காது.உரிப்பொருள் அல்லாத முதலும் கருப்பொருளும் பிற திணைகளிலும் மயங்கி வரும். உரிப்பொருள் மயங்காது.இதனால் சொல்லப்பட்டது என்னவென்றால் ஆணும் பெண்ணும் புணர்தல் பற்றியும் இப் புணர்ச்சிக்குத் துணைநிற்பனவுமாகிய செய்திகளைக் கொண்ட பாடல் குறிஞ்சித்திணை. குறிஞ்சித்திணையில் காலமாகிய முதற்பொருளும் கருப்பொருளும் மயங்காமலும் மயங்கியும் வந்திருக்கும்

**‘‘திணைமயக் குறுதலும் கடிநிலை இலவே**

**நிலனொருங்கு மயங்குதல் இன்றென மொழிப**

**புலன்நன் குணர்ந்த புலமை யோரே’’(12)**

என்ற சூத்திரம் திணைமயக்கம் பற்றியதாகும்.. இந்நூற்பாவின்படி முதல், கரு, உரி - முப்பொருள்களுள் முதலும் கருவும் மட்டுமே மயங்குவதற்கு உரியன. இவற்றுள்ளும் முதற்பொருளில் நிலம் மயங்காது. காலம் மட்டுமே மயங்கும் என்பது தெளிவாகிறது.ஒருதிணைக்குரிய முதற்பொருளும், கருப்பொருளும் மற்றொரு திணைக்குரிய முதற்பொருளுடனும், கருப்பொருளுடனும் சேர நிற்பது திணைமயக்கம் ஆகும். இதனை உரிப்பொருள் அல்லன் மயங்கவும் பெறுமே (அகத்.15) என்ற சூத்திரம் தெளிவுறுத்துகிறது. நச்சினார்க்கினியர் மூன்றும் மயங்குதற்குரியன என்பர்.மயங்கவும் என்பதிலுள்ள உம்மை எதிர்மறை பொருளது. எனவே மயங்காமையே பெரும்பான்மை என்பது இளம்பூரணர் விளக்கம். காலம் மயங்குவதற்கு எடுத்துக்காட்டு

‘‘தொல் ஊழி தடுமாறி...’’( நெய்தல் -12)

எனத் தொடங்கும் கலித்தொகை பாடலில்

”மெல்லியான் பருவம்போல் மயங்கிருள் தலைவா

எல்லைக்கு வரம்பாய இடும்மைகூர்

மருள்மாலை பாய்திரை பாடோவாப்பரப்புநீர்ப்

பனிக்கடல் தூவறத் துறந்தனன் துறைவன்”

என்பதில் முல்லைக்குரிய மாலைக்காலம் மயங்கியது.

”ஒண்செங் கழுநீர்க் கண்போல் ஆயிதழ்

ஊசிபோகிய சூழ்செய் மாலையன் பக்கம்

சேர்த்திய செச்சைக் கண்ணியன்

குயமாண்டகம் செஞ்சாந்து நீவ” (செச்சை-வெட்சி மலர்)

என்னும் பாடலில் மருத நிலத்தின் கருப்பொருளாகிய செங்கழுநீரும் குறிஞ்சி நிலத்திற்குரிய வெட்சிபூவும் அணிந்தோன் என கருப்பொருள் மயங்கி வந்துள்ளது. யாதானும் ஒரு நிலத்திற்குரிய பூவும் புள்ளும் அந்நிலம் மற்றும் பொழுதோடும் வந்திலவாயினும் அந்த நிலத்தின் பயத்தவாகும்(உரியதாகும்) என்றும் உரை கூறுகின்றார். இளம்பூரணர்.

## திணைநிலைப்பெயர்

**‘‘திணைநிலைப்பெயர் பெயரும் வினையுமென்று**

**ஆயிரு வகைய திணை தொறும்**

**மரீஇய திணைநிலைப் பெயரே’’**

திணைதொறும் மருவிப் பிறக்கும் திணைநிலைப்பெயர். குலப்பெயரும் தொழிற்பெயரும் என இருவகைப்படும். திணைநிலைப்பெயர் என்றதனால் அப்பெயருடையார் பிறநிலத்து இரார் என்று கொள்ளப்படும். அதனானே எல்லா நிலத்திற்கும் உரியராகிய மேன்மக்களை ஒழித்து நிலம்பற்றி வாழும் கீழ்மக்களையே குறித்து ஓதினார் என்று கொள்க. பெயர் என்றதனால் பெற்ற தென்னை? மக்கள் என அமையாதோ? எனின், மக்களாவார் புள்ளும் மாவும் போல வேறு பகுக்கப் படார். ஒரு நீர்மையராதலின் அவரை வேறுபடுக்குங்கால் திணைநிலைப்பெயரான் அல்லது வேறுபடுத்தல் அருமையின், பெயர் என்றார் என்பது உரையாசிரியரின் உரை விளக்கம்.

திணைநிலைப்பெயர் என்பது நிலத்தால் பெயர் பெறும் மக்களைக் குறிக்கும். அப்பெயர் நிலத்தின் பெயராலும் அவர் செய்யும் தொழிலின் பெயராலும் அமையும்.ஆ மேய்ப்பர் ஆயர். வேட்டையாடுவோர் வேடர். அம்பு எய்பவர் எயினர். (எயினர் குலப்பெயர்)

திணைநிலைப்பெயர் மேலும் சில. குலப்பெயர்இ தொழிற்பெயர்இ தலைமக்கட்பெயர். குறிஞ்சி குறவன் குறத்திஇ மலைநாடன் வெற்பன். பாலை எயினன் எயிற்றி மீளி விடலை மருதம் உழவன் உழத்தியர் ஊரன் மகிழநன் நெய்தல் நுளையர் நுளைச்சியர் சேர்ப்பன் துறைவன் கொண்கன்.

## மக்கட்பெயர்

**‘‘ஆயர் வேட்டுவர் ஆடூஉத்திணைப்பெயர்**

**ஆவயின் வருஉம்கிழவரும் உளரே.''(21)**

இது முல்லைக்குரிய மக்கட்பெயர் உணர்த்திற்று. ஆண் மக்களைப்பபற்றி வரும் திணைப்பெயர் ஆயர் எனவும் வேட்டுவர் எனவும் வரும். அவ்விடத்து வரும் கிழவரும் உளர். ஆயர் என்பார் நிரைமேய்ப்பார். வேட்டுவர் என்பவர் வேட்டைத் தொழில் செய்வார். அ∴து எயினர் என்னும் குலப்பெயருடையார் மேல் தொழிற்பெயராகி வந்தது. "வந்தது கொண்டு வாராதது முடித்தல்" (மரபு. 112) எனபதனான் ஆய்ச்சியர் எனவும் கொள்க. அவ்விரு திறத்தாரும் காடு பற்றி வாழ்தலின் அந்நிலத்தின் மக்களாயினார். அவ்வயின் வருஉம் கிழவர் இருவகையர் ஆவர். அவர் முறையே அந்நிலத்தை ஆட்சி பெற்றோரும், அந்நிலத்து உள்ளோரும் ஆம். "குறும்பொறை நாடன் - ஆட்சிபற்றி வந்தது. பொதுவன் ஆயன் - குலம் பற்றி வந்தது. திணைநிலைப்பெயர்:. ஏனோர் மருங்கினும் எண்ணுங் காலை ஆனா வகைய திணைநிலைப் பெயரே. இது, குறிஞ்சி முதலாய திணைக்கண் வரும் திணை நிலைப்பெயர் உணர்த்திற்று. ஏனை நிலத்துள்ள மக்கள்மாட்டும் ஆராயுங்காலத்து, அவ்விடத்து அவ்வகைய திணைநிலைப் பெயர் அமையும். திணைதொறும் குலப்பெயரும் தொழிற்பெயரும் கிழவர் பெயரும் வரும். அவை வருமாறு - குறிஞ்சி - மக்கட் பெயர் குறவன் குறத்தி - தலைமக்கட்பெயர், மலைநாடன் வெற்பன் பாலை - மக்கட்பெயர், எயினர் எயிற்றியர், தலை மக்கட்பெயர் – மீளி, விடலை மருதம்- மக்கட்பெயர், உழவர் உழத்தியர், தலைமக்கட்பெயர் - ஊரன், மகிழ்நன் நெய்தல்- மக்கட்பெயர், நுளையர் நுளைச்சியர், தலைமக்கட்பெயர் - சேர்ப்பன் துறைவன் கொண்கன் முல்லைத்திணைக்குச் செய்யுள். முல்லை வைந்நுனை தோன்ற இல்லமொடு ( அகம் 4 ) - முல்லைக்கு உரித்தாகிய நிலமும் காலமும் கருப்பொருளும் இருத்தலாகிய உரிப்பொருளும் வந்தமைந்த பாடல்.

<table>
<tr><td>வ.எ</td><td>**திணை**</td><td colspan="3">**முதற்பொருள்**</td><td>**கருப்பொருள்**</td><td>**உரிப்பொருள்**</td></tr>
<tr><td rowspan="3">1</td><td rowspan="3">குறிஞ்சி</td><td rowspan="2">நிலம்</td><td colspan="2">பொழுதுகள்</td><td rowspan="3">முருகன்,குறவன்,<br>கிளி,மயில்,புலி,<br>அருவிநீர்,</td><td rowspan="3">புணர்தல் மற்றும்<br>இவற்றின்<br>நிமித்தம</td></tr>
<tr><td>பெரும்பொழுது</td><td>சிறுபொழுது</td></tr>
<tr><td>மலையும்</td><td>குளிர்காலம்</td><td>நள்ளிரவு</td></tr>
</table>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | மலை சார்ந்த நிலமும் | | | சந்தனமரம், தினைஅரிசி, வெறியாடல் | |
| 2 | முல்லை | காடும் காடு சார்ந்த நிலமும் | மழைக் காலம் | மாலை | திருமால்,ஆயர், காட்டுக்கோழி, மான்,முயல், காட்டாறு,ஆடு, வரகு,குழலூதுதல் ,ஏறு தழுவுதல் | இருத்தல் மற்றும் இவற்றின் நிமித்தம் |
| 3 | மருதம் | வயலும் வயல் சார்ந்த நிலமும் | கார்காலம் முதலான எல்லாக் காலமும் உரியது. | வைகறை | இந்திரன்,உழவன், அன்னம்,எருமை, ஆறு,கிணறு, தாமரை,நெல் அரிசி,உழவு | ஊடல் மற்றும் இவற்றின் நிமித்தம் |
| 4 | நெய்தல் | கடலும் கடல் சார்ந்த பகுதியும் | கார்காலம் முதலான எல்லாக் காலமும் உரியது | பிற்பகல் (சூரியன் மறையும் நேரம் | வருணன்,பரதவர், கடற்காகம்,சுறா மீன்,பாக்கம், உவர்நீர்க்கேணி, தாழைமலர், மீனும் உப்பும் விற்றல்,கடலாடல் | இரங்கல் மற்றும் இவற்றின் நிமித்தம் |
| 5 | பாலை | | வேனிற்காலம் | நண்பகல் | கொற்றவை எயினர்,மறவர் புறா,பருந்து செந்நாய்குராசு மலர்,வழிப்பறி, புகற்சூறை | பிரிதல் மற்றும் இவற்றின் நிமித்தம் |

## அகத்திணைப் பிரிவுகள்

தொல்காப்பியர் பாலைத் திணைக்குரிய பிரிவினைப் பலவகையாக பிரித்துக் கூறுவார். பிரிவினை முதலில் இருபெரும் பிரிவினுள் அடக்குவார்.

**"இருவகைப் பிரிவும் நிலைபெறத்தோன்றலும்**

**உரியதாகும் என்மனார் புலவர்"(11)**

இதனுள் குறிக்கப்படும் இருவகைப்பிரிவினை தலைமகளைப் பிரிதலும் தலைமகளை உடன்கொண்டு தமர்வரைப்பிரிதலும் என இருவகைப்படும் என குறிப்பார் இளம்பூரணர். ஆனால் பிற உரையாசிரியர்கள் காலிற்பிரிவு, கலத்திற்பிரிவு என்றும் வேனில் பிரிவு பின்பனிப்பிரிவு என்றும் வகைப்படுத்துவர். கைக்கிளை முதலாக எழுதிணையும் உணர்த்தினார் தொல்காப்பியர், அவற்றுள் நிலம் பகுக்கப்பட்ட முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நான்கு திணையும் களவு, கற்பு என்னும் இருவகை கைக்கோளின் நிகழ்தலின் அவற்றை நீக்கி நிலம் பகுக்கப்படாத கைக்கிளையும் பெருந்திணையும் பாலையும் இதனுள் உணர்த்துகின்றார். ஆதலின் அவற்றுள் பாலைக்கு உரித்தாகிய பிரிவு உணர்த்தும் பொருட்டு பிரிவுக்கு நிமித்தம் உணர்த்துகின்றார் தொல்காப்பியர்

**"ஓதல் பகையே தூதிவை பிரிவே"(25)**

ஓதலும் பகையும் தூதும் என்று சொல்லப்பட்ட இத் தன்மைய பிரிவிற்கு நிமித்தமாம்.

**பகைவயிற்பிரிவு:** பகைவயிற் பிரிவு என்பது தன் அரசன் மாற்றரசனோடு போர் செய்யும் காலத்துத் தலைமகன் தலைமகளைப் பிரியும் பிரிவு ஆகும். பகைவர் காரணமாகி பிரியும் பிரிவு அரசன் தானே சேறலும், அவனொடு கூடி ஒழிந்தோர் சேறலும் வேந்தன் மேற்று ஆகும். இதனுள் அரசன் தலைமகனாய வழி அது பகைதணிவினைப் பிரிவு எனவும், அவனொடு சிவணி ஏனோர் தலைவராயவழி வேந்தற்குற்றுழிப் பிரிவு எனவும் இரு வகையாகக் கொள்ளப்படும்.

**"தானே சேறலுந் தன்னொடு சிவணிய**

**ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே"(27)**

**தேவர் காரணமாய்ப் பிரியும் பிரிவு**: இது முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச் சொல்லிய நால்வகை நிலத்தினும் மேவிய சிறப்பையுடைய மக்களையல்லாத தேவரது பூசையும் விழாவும் காரணமாகவும் முறைமையில் தப்பியவழி தப்பாது அறம் நிறுத்தல் காரணமாகவும், செய்யப்பட்ட பொருள் ஆக்குதல் காரணமாகவும் பிரியும் பிரிவாகும்.

**"மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய**

**முல்லை முதலாச் சொல்லிய முறையாற்**

**பிழைத்தது பிழையாதாகல் வேண்டியும்**

**இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே''(28)**

சேரன் செங்குட்டுவன் கண்ணகியைக் கடவுள் மங்கலம் செய்தற்குப் பிரிந்த பிரிவினைச் சிலப்பதிகாரம் உணர்த்தும். இத்துணையும் பிரிவு அறு வகைப்படும். பரத்தையிற் பிரிவு அதுநிலம் பெயர்ந்து உறையாமையானும், இவை போல் சிறக்காமையானும். அறமுறைமை செய்யப் பிரிதலும் பொருள் காரணமாகப் பிரிதலுமின்றிப் பிரிதலினானும், கற்பியலுள் கூறப்படுகிறது.

**''மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே''(29)**

மேலோராகிய தேவரது முறைமையை நிறுத்தற்குப் பிரியும் பிரிவு நான்கு வருணத்தார்க்கும் உரித்து. மன்னர் பாங்கின் பின்னோர் ஆகுப. முறை செய்தற்கு அரசன் தான் சேறல் வேண்டாமையின், அதற்குரியராய் அவனது ஏவல் வழி வரும் வணிகரும் வேளாளரும் உரியர் ஆவர். உயர்ந்தோர்க் குரிய ஓத்தி னான மன்னர்க்குப் பின்னோராகிய இருவகையோரிலும் உயர்ந்தோராகிய வணிகர்க்கு, ஓதுதல் நிமித்தமாகப் பிரிதலும் உரித்தாகும்.

**''வேந்துவினை இயற்கை வேந்தன் ஒரீஇய**

**ஏனோர்மருங்கினும் எய்திடன் உடைத்தே''(32)**

வேந்தனது வினை இயற்கையாகிய தூதுப் பிரிவு வேந்தனை ஒழிந்த வணிகர்க்கும் வேளாளர்க்கும் உரித்து. பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே. பொருள்வயிற் பிரிவும் மேற்சொல்லப்பட்ட வணிகர் வேளாளரிடத்தில் உரியதாகும். உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக் கத்தான உயர்தோராகிய அந்தணர் பொருள்வயிற் பிரியுங்காலத்து ஒழுக்கத்தானே பிரிவர். இதனாற் சொல்லியது, வணிகர்க்கும் வேளாளர்க்கும் வாணிகம் முதலாயின பொருள் நிமித்தம் ஆகியதுபோல, அந்தணர்க்கு இவை பொருள் நிமித்தம் ஆகாது என்பதும், அவர்க்கு இயற்கை ஒழுக்கமாகிய ஆசாரமும், செயற்கை ஒழுக்கமாகிய கல்வியுமே பொருட்குக் காரணமாகும் என்பதும் பெறப்படும்.

## பொருள்வயிற் பிரிவு

காலிற்பிரிவு கலத்திற்பிரிவு என இருவகைப்படும். அவற்றுள் கலத்திற்பிரிவு தலைவியுடன் இல்லை. எனவே, காலிற்பிரிவு தலைமகளை உடன்கொண்டு பிரியவும் பெறும் என்பது தெரியவரும்.

**பெண்பால்-சிறப்பு**

**1.முந்நீர் வழக்கம் -**

**“முந்நீர் வழக்கம் மகடூஉ வோடு இல்லை”(34)**

கடல் வழி பயணம் மகளிருக்கு இல்லை.

**2.மடன்மேல் குறித்த வரையறை:**

**“எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்**

**பொற்புடை நெறிமை இன்மை யான”(35)**

இது கைக்கிளை பெருந்திணைக்கு உரிய இயல்பு உணர்த்திற்று. எத்திணை மருங்கினும் பெண்பால் மடலேறுதல் இல்லை. அது சிறப்புடைய நெறியும் ஆகாது.

**உடன்போக்கில் நற்றாய் கூற்று** தலைமகளைப் பிரிதல் தலைமகளை உடன்கொண்டு தமர்வரைப்பிரிதல் என்னும் இருவகைப்பிரிவினுள் தமரைப் பிரிதலாகிய உடன்போக்கு நிகழ்ந்த காலத்து நற்றாய் கூற்று நிகழுமிடம் உணர்த்திற்று.

**“தன்னும் அவனும் அவளும் சுட்டி**

**மன்னும் நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்**

**நன்மை தீமை அச்சஞ் சார்தலென்று**

**அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ**

**முன்னிய கால மூன்றொடு விளக்கித்**

**தோழி தேஎத்துங் கண்டோர் பாங்கினும்**

**போகிய திறத்து நற்றாய் புலம்பலும்**

**ஆகிய கிளவியும் மவ்வழி உரிய.”(36)**

தன்னும் அவனும் அவளும் சுட்டல்- தன்னையும் தலைமகனையும் தலைமகளையும் குறித்துக் கூறல் மன்னுநிமித்தம்: ஆட்சி பெற்ற நிமித்தம் அது பல்லி முதலாயினவாம். மொழிப்பொருள்:பிறர்

தம்முள் கூறும் மொழிப்பொருளை நிமித்தமாகக் கோடல் அதனை நற்சொல் என்பது. தெய்வம்: உலகினுள் வாழும் இயக்கர் முதலாயினார் ஆவேசித்துக் கூறும் சொல். நன்மை தீமை அச்சம்: தனக்கும் அவர்க்கும் உளதாகிய நன்மையும் தீமையும் அச்சமும் குறித்தல். சார்தல்: அவர் தன்னை வந்து சார்தல் என்பனவும் அத் தன்மையவாகிய பிறவும் அவற்றோடு கூட குறித்த காலம் மூன்றும் ஒருங்கு தோற்றுவித்து, தோழிமாட்டும் கண்டோர்மாட்டும் புலம்புதலும் உண்டு. முன்னியகாலம் மூன்றுடன் விளக்குதல்: முன்பு இத் தன்மையள் ஆயினாள் இப்பொழுது இத் தன்மையள் ஆகா நின்றாள் மேல் இன்னள் ஆகுவள் என மூன்று காலமும் ஒருங்கு தோற்றுவித்துப் புலம்புதல் ஆகும். "தோழியர் சூழத் துனறமுன்றில் ஆடுங்கால் வீழ்பவள் போலத் தளருங்கால் - தாழாது கல்லதர் அத்தத்தைக் காதலன் பின்போதல் தலைமகள் உடன்போகிய வழி நற்றாய் கவன்றுரைத்தது.

**உடன்போக்கில் செவிலி**

> **''ஏமப் பேரூர்ச் சேரியுஞ் சுரத்தும்**
>
> **தாமே செல்லுந் தாயரும் உளரே''**(37)

இது, தலைமகள் உடன்போகியவழிச் செவிலிக்கு உரியதோர்திறன் உணர்த்திற்று. ஏமம் பொருந்திய பெரிய ஊரகத்துச் சேரியின்கண்ணும் ஊரினின்றும் நீங்கிய சுரத்தின்கண்ணும் தாமே செல்லுந் தாயரும் உளர். "தாமே செல்லுந் தாயர்" என்பதனால் செவிலி என்பது பெறப்படும். "தாயரும்" என்றதனால் தாயர் பலர் என்று கொள்ளப்படும். அவ்வழிச் சேரியோரை வினாதலும், சுரத்திற் கண்டோரை வினாதலும் உண்டு. தாய் எனப் பன்மைகூறித் "தாமே" எனப் பிரித்ததனால் சேரிக்கு நற்றாய் சேறலும், சுரத்திற்குச் செவிலித்தாய் சேறலும் புலனெறி வழக்கிற்குச் சிறந்ததென்று உணர்க.

**சேரியோரை வினாதல்**: இதுஎன் பாவைக் கினியநன் பாவை இதுவென் பைங்கிளி எடுத்த பைங்கிளி இதுவென் பூவைக் கினியசொற் பூவையென்று அலம்வரு நோக்கி னலம்வரு சுடர்நுதல் காண்தொறுங் காண்தொறுங் கலங்கி நீங்கின ளோவென் பூங்க ணோளே (ஐங்குறு-375) **சுரத்திடை வினாதல்:**"காலே பரிதப் பினவே கண்ணே நோக்கி நோக்கி வாள்இழந் தனவே அகல்இரு விசும்பின் மீனினும் பலரே மன்றஇவ் வுலகத்துப் பிறரே" (குறுந்-44)

**தோழி கூற்று நிகழிடம்:**

> **''தலைவரும் விழும நிலையெடுத் துரைப்பினும்**

**போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்**

**நீக்கலின் வந்த தம்முறு விழுமமும்**

**வாய்மையும் பொய்மையுங் கண்டோர்ச்சுட்டித்**

**தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளினும்**

**நோய்மிகப் பெருகித்தன் னெஞ்சுகலுழ்ந்தோளை**

**அழிந்தது களையென மொழிந்தது கூறி**

**வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தோடு**

**என்றிவை எல்லாம் இயல்புற நாடின்**

**ஒன்றித் தோன்றுந் தோழி மேன.''**(39)

தலைவரும் விழும நிலையெடுத் துரைத்தல் முதலாகச் சொல்லப்பட்டன தோழிமாட்டுப் பொருந்தித் தோன்றும் கிளவிகள் ஆகும்.

தலைவரும் விழுமநிலை எடுத்துரைத்தல் பின்பு வரும் நோய் நிலையை எடுத்துக் கூறுதல். "பாஅல் அஞ்செவிப் பணைத்தாள் மாநிரை --- கல்லெனக் கவின்பெற்ற விழவாற்றுப் படுத்தபின் புல்லென்ற களம்போலப் புலம்புகொண்டு அமைவாளோ--- ஓரிரா வைகலுள் தாமரைப் பொய்கையுள் நீர்நீத்த மலர்போல நீநீப்பின் வாழ்வாளோ எனவாங்கு, பொய்ந்நல்கல் புரிந்தனை புறந்தரல் கைவிட்டு எந்நாளோ நெடுந்தகாய் நீ செல்வது அந்நாள்கொண்டு இறக்கும் இவள் அரும்பெறல் உயரே"(கலி. பாலை. 4) எனவரும். இதனுள் "யாம் நுமக்குச் சிறந்தனமாதல் அறிந்தனிராயின்" என்றமையாலும்,"பொய்ந் நல்கல் புரிந்தனை" என்றமையாலும் வரைவதன் முன்பென்று கொள்ளப்படும். இவள் இறந்துபடும் என்றமையால் உடன்கொண்டு போவது குறிப்பு அமைந்தது. போக்கற்கண் உடன்கொண்டு பெயர் என்று கூறுதற்கண்ணும் எனல் "அன்பறச் சூழாதே ஆற்றிடை நும்மொடு துன்பந் துணையாக நாடின் அதுவல்லது இன்பமும் உண்டோ வெமக்கு"(கலி. பாலை. 5) விடுத்தற்கண்: தலைமகன் உடன்போக்கு ஒருப்பட்டமை தலைமகளுக்குக் கூறி அவளை விடுத்தல். "நின்னினும் மடவள் நனிநின் நயந்த அன்னை அல்லல் தாங்கிநின் ஐயர் புலிமருள் செம்மல் நோக்கி வலியாய் இன்னுந் தோய்கநின் முலையே"(அகம். 259) இது விடுத்தவழிக் கூறியது. நீக்கலின் வந்த தம்முறு விழுமம் - தமரை நீக்குதலால் தமக்குற்ற நோயின்கண்ணும் என்பதாம். விளம்பழங் கமழும் கமஞ்சூல் குழிசிப்

நும்மொடு வரவுதான் அயரவும் தன்வரைத்து அன்றியுங் கலுழ்ந்தன கண்ணே"(நற். 12) இஃது உடன்போக்குத் தவிர்தற்பொருட்டுக் கூறியது. வாய்மையும் பொய்ம்மையும் கண்டோற் சுட்டித் தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளல்: மெய்ம்மையும் பொய்ம்மையும் காணப்பட்ட அவனைச் சுட்டித் தாய்நிலை நோக்கி மீட்டுக்கொள்ளுதற்கண் கூறல். நோய் மிகப் பெருகித் தன் நெஞ்சு கலுழ்ந்தோளை, அழிந்தது களையென மொழிந்தது கூறி, வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தொடு,என்றிவை எல்லாம் இயல்பு நாடின், ஒன்றித் தோன்றும் தோழிமேன தலைமகன் பிரிதலால் வந்துற்ற நோய் மிகவும் பெருகித் தன் நெஞ்சு கலங்கியோளை அழிந்தது களைதல் வேண்டுமெனத் தலைமகன் சொன்ன மாற்றத்தைக் கூறி வன்புறையின் பொருட்டு நெருங்கி வந்ததன் திறத்தோடு இத்தன்மைய வெல்லாம் இயல்பு ஆராயின் தலைமகளொடு பொருந்தித் தோன்றும் தோழி மேலன என்பதாம். ஒன்றித் தோன்றுந் தோழி என்றதனால் தோழிமார் பலருள்ளும் இன்றியமையாதாள் என்று கொள்க. "தோழி தானே செவிலி மகளே" (களவியல் - 35) என்றதனான், அவள் செவிலிமகள் என்று கொள்ளப்படும். மொழிந்தது கூறி வன்புறை நெருங்குதல்: தலைமகன் மொழிந்தது கூறி வற்புறுத்தலாம். "இனைநலம் உடைய கானஞ் சென்றோர் ---- புனைநலம் வாட்டுநர் அல்லர் மனைவயின் பல்லியும் பாங்கொத்து இசைத்தன நல்எழில் உண்கணும் ஆடுமால் இடனே" (கலி - பாலை -11) – வன்புறை என்றிவை எல்லாம் இயல்புற நாடின் என்றதனால், பருவம் வந்தது எனவும் பருவம் அன்று எனவும் வருவனவும் அமையும். இன்னும் "என்றிவை எல்லாம்" என்றதனால், பிரியுங்காலத்துத் தலைமகட்கு உணர்த்துகின்றேன் எனத் தலைமகற்கு உரைத்தலும், தலைமகட்கு அவர் பிரியார் எனக் கூறுதலும் கொள்க என்பார் இளம்பூரணர்.

**கண்டோர் கூற்று:**

**"பொழுது மாறும் உட்குவரத் தோன்றி**

**வழுவின் ஆகிய குற்றங் காட்டலும்**

**ஊரது சார்பும் செல்லுந் தேயமும்**

**ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும்**

**புணர்ந்தோர் பாங்கிற் புணர்ந்த நெஞ்சமொடு**

**அழிந்தெதிர் கூறி விடுப்பினும் ஆங்கத்**

**தாய்நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும்**

**சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்**

**கண்டோர் மொழிதல் கண்டது என்ப.''(40)**

இது, கண்டோர் கூற்று நிகழும் இடன் உணர்த்துதல் நுதலிற்று.பொழுது மாறும் உட்குவரத் தோன்றி வழுவின் ஆகிய குற்றங் காட்டல்: காலமும் நெறியும் அச்சம் வருமாறு தோன்றும் தன்மை காட்டி அவ்வழிச் செல்லின் தீங்கு நேரும்: எனவே செல்லற்க எனக் கூறும் வழி கூற்று நிகழும். ஊரது சார்பும் செல்லுந் தேயமும்ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழி: ஊரது அண்மையும் செல்லும் இடத்தின் சேய்மையும் ஆர்வ நெஞ்சமொடு கூறி எம் ஊரில் தங்கிச் செல்க என்னும் வழி கூற்று நிகழும். "எம்ஊர் அல்லது ஊர்நணித்து இல்லை வெம்முரண் செல்வன் கதிரும் ஊழ்த்தனன் சேந்தனை சென்மோ பூந்தார் மார்ப இளையள் மெல்லியள் மடந்தை அரிய சேய பெருங்கல் ஆறே புணர்ந்தோர் பாங்கில் புணர்ந்த நெஞ்சமொடு அழிந்துஎதிர் கூறி விடுத்தல்: தலைவனும் தலைவியும் தங்கள் ஊரில் தங்கிச் செல்ல உடன்படாத நிலையில் புணர்ந்து செல்கின்றோர் பக்கத்து விரும்பின நெஞ்சத்தோடு மடன் அழிந்து உங்கள் ஊருக்காயினும் செல்க எதிர்மொழி கூறி விடுத்தற்கண்ணும் கூற்று நிகழும். ஆங்கு அத் தாய்நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும்: ஆண்டுப் பின் சென்ற அச் செவிலித்தாயது நிலைமையைக் கண்டு போகாமல் தடுத்தற்கண்ணும் போகவிடுத்தற் கண்ணும் கூற்று நிகழும். "பெயர்ந்து போகுதி பெருமூ தாட்டி சிலம்புகெழு சீறடி சிவப்ப இலங்குவேற் காளையோ டிறந்தனள் சுரனே." - இது தடுத்தற்கண் வந்தது. "நெருப்பவிர் கனலி உருப்புசினந் தணியக் --- பொன்னேர் மேனி மடந்தையொடு வென்வேல் விடலை முன்னிய சுரனே." (ஐங்குறு – 388- இது விடுத்தற்கண் வந்தது, சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்:சேய்மைக்கண் அகன்றோர் செல்லுத்தற்கண்ணும் வரவின்கண்ணும் கூற்று நிகழும்."வில்லோன் காலன கழலே தொடியோள் மெல்லடி மேலவுஞ் சிலம்பே நல்லோர் யார்கொல் அளியர் தாமே ஆரியர் கயிறாடு பறையிற் கால்பொரக் கலங்கி வாகை வெண்நெற் றொலிக்கும் வேய்பயில் அழுவம் முன்னி யோரே" (குறுந் - 7)

**தலைமகன் கூற்று நிகழிடம்:.**

**''ஒன்றாத் தமரினும் பருவத்துஞ் சுரத்தும்**

**ஒன்றிய மொழியொடு வலிப்பினும் விடுப்பினும்**

**இடைச்சுர மருங்கில் அவள்தமர் எய்திக்**

கடைக்கொண்டு பெயர்தலிற் கலங்கஞர் எய்திக்
கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட
அப்பாற் பட்ட ஒருதிறத் தானும்
நாளது சின்மையும் இளமைய தருமையுந்
தாளாண் பக்கமுந் தகுதிய தமைதியும்
இன்மைய திளிவும் உடைமைய துயர்ச்சியும்
அன்பின தகலமும் அகற்சிய தருமையும்
ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்
வாயினுங் கையினும் வகுத்த பக்கமோடு
ஊதியம் கருதிய ஒருதிறத் தானும்
புகழும் மானமும் எடுத்துவற் புறுத்தலும்
தூதிடை யிட்ட வகையி னானும்
ஆகித் தோன்றும் பாங்கோர் பாங்கினும்
மூன்றன் பகுதியும் மண்டிலத் தருமையும்
தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்
பாசறைப் புலம்பலும் முடிந்த காலத்துப்
பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினும்
காவற் பாங்கின் ஆங்கோர் பக்கமும்
பரத்தையின் அகற்சியிற் பிரிந்தோள் குறுகி
இரத்தலுந் தெளித்தலும் எனஇரு வகையோடு

உரைத்திற நாட்டம் கிழவோன் மேன.''(41)

இது பிரிவின்கண் தலைமகற்குக் கூற்றுநிகழும் இடன் உணர்த்திற்று. வரைவு உடன் படாத தமர்கண்ணும் தலைமகன் கூற்று நிகழும். பருவத்தின்கண்ணும் தலைமகன் கூற்று நிகழும்.சுரத்தின்கண்ணும் தலைமகன் கூற்று நிகழும். பொருந்திய சொல்லொடு தலைமகளை உடன் கொண்டுபோகத் துணியினும் விடுத்துப்போகினும் தலைவனுக்குக் கூற்று நிகழும். "வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில் குளவி மொய்த்த அழுகற் சின்னீர் வளையுடைக் கையள் எம்மோடுணீஇயர் வருகதில் அம்ம தானே அளியளோ அளியள்ளன் நெஞ்சமர்ந் தோளே" (குறுந்.56) அவ்வழி இடைச்சுரத்திற் கூறியதற்குச் செய்யுள் தலைமகள் செல்கின்ற இடைச்சுரத்திடைத் தலைமகள் தமர் எய்தி மீட்டுக்கொண்டு பெயர்தல் மரபாதலின் அங்ஙனம் பெயர்வர் எனக் கலங்கி வருத்தமுற்றுக் கற்பொடு புணர்ந்த அலர் உளப்பட அப்பகுதிப்பட்ட உடன்போக்கின் கண்ணும் தலைவனுக்குக் கூற்று நிகழும்.அக் கூற்றானது தமர் வருவர் என ஐயுற்றுக் கூறலும் வந்தவழிக் கூறலும் என இருவகைப்படும். "வினையமை பாவையின ் இயலி நுந்தை --- அமர்வரின் அஞ்சேன் பெயர்க்குவன் நுமர்வரின் மறைகுவென் மாஅ யோளே." (நற்.362) - இது வருவர் என ஐயுற்றுக்கூறியது. நாளது சின்மையும், இளமையது அருமையும், தாளாண் பக்கமும், தகுதியது அமைதியும், இன்மையது இளிவும், உடைமையது உயர்ச்சியும், அன்பினது அகலமும், அகற்சியது அருமையும், ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும் என்பதாகச் சொல்லப்பட்ட எட்டனையும் பொருந்தாத பொருட்கண் ஊக்கிய பக்கத்தினும் அவற்றுக் கூற்று நிகழும். நாளது சின்மையை ஒன்றாமை: யாக்கை நிலையாது என உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை. இளமையது அருமையை ஒன்றாமை: பெறுதற்கரிய இளமை நிலையாது என உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை. தாளாண் பக்கத்தை ஒன்றாமை: முயற்சியான் வரும் வருத்தத்தை உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை. தகுதியது அமைதியை ஒன்றாமை: பொருண்மேற் காதல் உணர்ந்தோர்க்குத் தகாது என உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை, இன்மையது இளிவை ஒன்றாமை: இன்மையான் வரும் இளி வரவினைப் பொருந்தாமை. உடைமையது உயர்ச்சியை ஒன்றாமை: பொருள் உடையார்க்கு அமைவு வேண்டுமன்றே, அவ்வமைவினைப் பொருந்தாமை: அஃதாவது மென்மேலும் ஆசை செலுத்துதல். அன்பினது அகலத்தை ஒன்றாமை: சிறந்தார்மாட்டுச் செல்லும் அன்பினைப் பொருந்தாமை. அகற்சியது அருமையை ஒன்றாமை: பிரிதலருமையைப் பொருந்தாமை. வாயான் வகுத்த பக்கமோடும் கையான் வகுத்த பக்கமோடும் பயன் கருதிய ஒரு கூற்றானும் அவற்குக் கூற்று நிகழும். வாயான் வகுத்த பக்கமாவது ஓதுதல். கையான் வகுத்த பக்கமாவது - படைக்கலம் பயிற்றலும் சிற்பங் கற்றலும். ஊதியங் கருதிய ஒரு திறனாவது மேற்சொல்லப்பட்ட பொருள்வயிற் பிரிதலன்றி அறத்திறங் காரணமாகப் பிரியும் பிரிவு. இது மறுமைக்கண் பயன் தரும் என்பர். அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை மறத்தலி னூங்கில்லை கேடு" (குறள் -

32) பிரிந்ததனால் வரும் புகழும் பிரியாமையால் வரும் குற்றமும் குறித்துத் தலைமகளை யான் வருந்துணையும் ஆற்றியிருத்தல் வேண்டுமெனக் கூறுதற் கண்ணும் தலைமகனுக்கக் கூற்றுநிகழும். “அறனு மீகையு மன்புங் கிளையும் புகழு மின்புந் தருதலிற் புறம்பெயர்ந்து தருவது துணிந்தமை பெரிதே விரிபூங் கோதை விளங்கிழை பொருளே” - என வரும். இரு பெரு வேந்தர் போருக்கு எதிர்ந்த வழி சந்து செய்தற்குத் தூதாகிச் செல்லும் வகையின் கண்ணும் தலைமகனுக்குக் கூற்று நிகழும். வேந்தற்கு உற்றுழிப் பிரியும் பிரிவு பிரியும் வழியும் தலைமகனுக்குக் கூற்று நிகழும் மூன்றன் பகுதியாவன, நால்வகை வலியினும் தன்வலியும் துணைவலியும் வினைவலியும் என்பன. அவை பகைவர்மாட்டுள்ளன. மண்டிலத்து அருமை:, பகைவர் மண்டிலங் கொண்ட அருமை மாற்றோர் மேன்மை: மாற்றோரது உயர்ச்சி பாசறைப் புலம்பல்: பாசறைக்கண் தலைமகன் தனிமையுரைத்தல் . தூதினும் வேந்தற்கு உற்றுழியினும் பகை தணிவினையினும் பாசறைக்கட் புலம்பலினும் தலைமகனுக்குக் கூற்று நிகழும். “வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த ---- நற்றோள் நெகிழ வருந்தினள் கொல்லோ நுண்பல் தித்தி மாஅ யோளே.” (அகம். 41) - என்பது பகையிற் பிரியும் தலைமகன் கூற்று. வினை முடிந்த காலத்துப் பாகனொடு விரும்பப்பட்ட வினைத் திறத்தினது வகையின் கண்ணும் தலைவனுக்குக் கூற்று நிகழும்.அது பாசறைக்கட் கூறலும், மீண்டு இடைச்சுரத்துக் கூறலும் என இருவகைப்படும். இன்னும், “வகை” என்றதனான் நெஞ்சிற்குக் கூறியனவுங் கொள்ளப்படும். “வந்துவினை முடித்தனன் வேந்தனும் பகைவரும் --- தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ நாணொடு மிடைந்த கற்பின் வாள்நுதல் அந்தீங் கிளவிக் குறுமகள் மென்றோள் பெறநசைஇச் சென்றஎன் நெஞ்சே.” (அகம்.9) - இது இடைச்சுரத்துச் சொல்லியது. காவற்பக்கமாகிய இடத்தின் கண் தலைவனுக்குக் கூற்று நிகழும். “நின்னாங்கு வரூஉமென் நெஞ்சினை” (கலி. பாலை.22) என்றாற் போலக் கொள்க. இது வாரியுள் யானை காணவும், நாடுகாணவும், புனலாடவும், கடவுளரை வழிபடவும் பிரியும் பிரிவு. ஒருபக்கம் நாட்டெல்லையிலிருந்து பகைவரைக் காக்கவேண்டிப் பிரிவது பகைவயிற் பிரிவின் அடங்குதலின் அஃததன் உண்மைக்கண் பிரியும் பிரிவு என்று கூறப்பட்டது. பரத்தையின் அகற்சி: பரத்தையரிற் பிரியும் பிரிவின்கண்ணும் என்பதாம். மேற்கண்ட இடங்களில் எல்லாம் தலைவன் கூற்று நிகழும்.

## எஞ்சியோர் கூற்று:

### “எஞ்சி யோர்க்கும் எஞ்சுதல் இலவே”(42)

.இதுகாறும் பிரிவின்கண் கூறுதலுரியார் பலருள்ளும் நற்றாயும், செவிலியும், கண்டோரும், தோழியும், தலைமகனும் கூறுங்கூற்றுக் கூறினார். இஃது அவரை ஒழிந்த தலைமகட்கும், பாங்கற்கும், பார்ப்பார்க்கும், பாணர்க்கும், கூத்தர்க்கும், உழையோர்க்கும் கூற்று நிகழுமாறு

உணர்த்துதல் பொருட்டு அமைந்தது. முன்னர்க் கூறாது எஞ்சி நின்றார்க்கும் கூற்று ஒழிதல் இல்லை என்பது இதன் பொருள் ஆகும்.. "பாங்கர் முதலாயினாரை இச் சூத்திரத்தாற் கூறுப.தலைமகள் கூற்றுத் தனித்துக்கூறல் வேண்டும். இவரோடு ஒரு நிகரன்மையின்" எனின் ஒக்கும். தலைமகள் கூற்று உணர்த்திய சூத்திரம் காலப் பழைமையாற் பெயர்த்தெழுதுவார் விழ எழுதினார் போலும், ஆசிரியர் இச் சூத்திரத் தானும் பொருள் கொள்ள வைத்தமையின், தலைமகள் கூற்று வருமாறு தலைமகள் பிரிதலுற்ற தலைமகன் குறிப்புக் கண்டு கூறுதலும், பிரிவுணர்ந்து கூறுதலும், பிரிவுணர்த்திய தோழிக்குக் கூறுதலும், உடன் போவல் எனக் கூறுதலும் இடைச்சுரத்து ஆயத்தார்க்குச் சொல்லி விட்டனவும், தமர் வந்துற்றவழிக் கூறுதலும், மீளலுற்றவழி ஆயத்தார்க்குக் கூறிவிட்டனவும், பிரிவாற்றாமையும், ஆற்றுவல் என்பது படக் கூறுதலும், தெய்வம் பராவலும், பருவங்கண்டு கூறுதலும், வன்புறை எதிரழிந்து கூறுதலும் இவையெல்லாம் கூறப்படும் என உரை விளக்கம் செய்வார் இளம்பூரணர்,.

**உள்ளுறை உவமம்**

உவம வகையான் ஐந்திணைக்கும் உரியதோர் இயல்பு உணர்த்துதல் நுதலிற்று. உள்ளுறைக்கண் வரும் உவமமும் ஒழிந்த உவமமும் என இருவகையாலும், திணை உணரும் வகை தப்பாது அமையும்.

> **"உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம்எனக்**
>
> **கொள்ளும் என்ப குறிஅறிந் தோரே."**

உள்ளுறையாவது கருப்பொருள் தெய்வம் ஒழிந்த பொருளை, இடமாகக் கொண்டுவரும்.

> **"உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகென**
>
> **உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்."**

உள்ளுறுத்துக் கருதிய பொருள் இதனோடு ஒத்து முடிக என உள்ளுறுத்துக் கூறுவதே உள்ளுறை உவமம். எனவே, உவமையாற் கொள்ளும் வினை, பயன், மெய், உருவன்றிப் பொருளுவமையாற் கொள்ளப்படுவது என்பது தெரியவரும். "வெறிகொள் இனச்சுரும்பு மேய்ந்ததோர் காவிக் குறைபடுதேன் வேட்டுங் குறுகும் - நிறைமதுச்சேர்ந்து உண்டாடுந்

தன்முகத்தே செவ்வி உடையதோர் வண்தா மரைபிரிந்த வண்டு" (தண்டியலங்காரம்) ஒட்டணி இது வண்டோரனையர் மாந்தர் எனக் கூறுதலான் உவமிக்கப்படும் பொருள் புலப்படாமையின் உள்ளுறையுவம் ஆயிற்று. இதனுட் காவியும் தாமரையும் கூறுதலான் மருதமாயிற்று.

**ஏனை உவமம்:**

**''ஏனை உவமம் தானுணர் வகைத்தே.''(49)**

உள்ளுறை ஒழிந்த ஏனைஉவமம் தான் உணரும் வகையான் வரும். தான் உணரும் வகையாவது, வண்ணத்தானாதல் வடிவானாதல் பயனானாதல் தொழிலானாதல் உவமிக்கப்படும் பொருளொடு எடுத்துக் கூறுதல். அது வருமாறு உவமவியலுள் கூறப்படுகிறது. "உரைத்திசிற் றோழியது புரைத்தோ அன்றே துருக்கங் கமழும் மென்தோள் துறப்ப என்றி இறீஇயர்என் உயிரே". (சிற்றட்டகம்) இது துருக்கம் என உவமை கூறுதலாற் குறிஞ்சியாயிற்று.

**கைக்கிளைக் குறிப்பு:**

காமம் அமையாத இளையவள் மாட்டு ஏமம் அமையாத இடும்பை எய்தி, புகழ்தலும் பழித்தலுமாகிய இருதிறத்தால், தனக்கும் அவளுக்கும் ஒத்தன சுட்டிச் சொல்லி சொல் எதிர் பெறாத ஆண்மகன் தானே சொல்லி இன்புறுதல் பொருந்தித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பு ஆகும்.

**''காமஞ் சாலா இளமை யோள்வயின்**

**ஏமஞ் சாலா இடும்பை யெய்தி**

**நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்**

**தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்**

**சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்**

**புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே.''(50)**

"புல்லித்தோன்றும்" என்றதனால், புல்லாமற்றோன்றும் கைக்கிளையும் கொள்ளப்படும்.

**பெருந்திணை**

ஏறிய மடற்றிறமும், இளமை தீர்திறமும், தேறுதலொழிந்த காமத்து மிகுதிறமும், மிக்க காமத்து மாறாய திறனொடு கூட்டி, சொல்லப்பட்ட நான்கு திறமும் பெருந்திணைக்குரியதாம்.

**“ஏறிய மடல்திறம் இளமை தீர்திறம்**

**தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்**

**மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்**

**செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே.”(51)**

கைக்கிளை புணராது நிகழும் என்றமையால், இது புணர்ந்தபின் நிகழும் என்பது பெறப்படும். ஏறிய மடற்றிறம் தலைமகற்கே உரித்து. “எழின்மருப் பெழில்வேழ மிகுதரு கடாத்தால் --- அன்புறு கிளவியாள் அருளிவந் தளித்தலின் துன்பத்தில் துணையாய மடல்இனி இவட்பெற இன்பத்துள் இடம்படலென்றிரங்கினள் அன்புற்று அடங்கருந் தோற்றத்து அருந்தவ முயன்றோர்தம் உடம்பொழித்து உயருல கினிதுபெற் றாங்கே.” ( கலித் . நெய் .21) இளமை தீர் திறமாவது, இளமை நீங்கிய திறத்தின்கண் நிகழ்வது அது மூவகைப்படும். தலைமகன் முதியனாகித் தலைமகள் இளையளாதல், தலைமகள் முதியளாகித் தலைமகன் இளையனாதல், இவ்விருவரும் இளமைப் பருவம் நீங்கியவழி அறத்தின் மேல் மனம் நிகழ்தலன்றிக் காமத்தின்மேல் மனம் நிகழ்தல் என்பதாம். “உளைத்தவர் கூறும் உரையெல்லாம் நிற்க முளைத்த முறுவலார்க் கெல்லாம் - விளைத்த பழங்கள் அனைத்தாய்ப் படுஇளி செய்யும் முழங்கு புனலூரன் மூப்பு.” (புறப். இருபாற் பெருந்திணை . 14 ) - தலைமகன் இளமை தீர் திறம் வந்தவாறு காண்க. தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்: : தெளிவு ஒழிந்த காமத்தின் கண்ணே மிகுதல். இது பெரும்பான்மை தலைமகட்கே உரித்து, மிக்க காமத்து மிடல் : ஐந்திணைக்கண் நிகழும் காமத்தின் மாறுபட்டு வருவது . அதாவது, வற்புறுத்துந் துணையின்றிச் செலவழுங்குதலும், ஆற்றருமை கூறுதலும் இழிந்திரந்து கூறுதலும், இடையூறுகிளத்தலும் அஞ்சிக்கூறுதலும், மனைவி விடுத்தலிற் பிறள்வயிற் சேறலும், இன்னோரன்ன ஆண்பாற்கிளவியும், முன்னுறச் செப்பலும், பின்னிலை முயல்தலும் கணவனுள்வழி இரவுத்தலைசேறலும், பருவம் மயங்கலும், இன்னோரன்ன பெண்பாற் கிளவியும், குற்றிசையும் குறுங்கலியும் இன்னோரன்ன பெண்பாற் கிளவியும், பிறவுமாகிய ஒத்த அன்பின் மாறுபட்டு வருவன எல்லாம் கொள்ளப்படும். “நடுங்கி நறுநுதலாள் நன்னலம்பீர் பூப்ப ஒடுங்கி உயங்கல் ஒழியக் - கடுங்கணை வில்லேர் உழவர் விடரோங்கு மாமலைச் செல்லேம் ஒழிக செலவு.” இதனானே கைக்கிளை இன்பம் பயப்ப வருமென்பதும், பெருந்திணை துன்பம் பயப்ப வரும் என்பதும் தெரியவரும்.

### அகத்திணை மரபுகள்:

அகத்திணையின் இறுதியில் அகத்திணை மரபுகள் சிலவற்றைக் குறிப்பிடுகிறார் தொல்காப்பியர். அதனுள் வழக்கு என்பதும் ஒன்றாம்.வழக்கு இரண்டு வகைப்படும்.அவை நாடக வழக்கு, உலகியல் வழக்கு என இரு வகைப்படும். மேலும் பாடல் சான்ற புலனெறி வழக்கம் கலி, பரிபாடல் ஆகிய இருவகை பாவினால் அமையும். நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கம் கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும் உரிய தாகும் என்மனார் புலவர் . நாடக வழக்காவது, சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல். அதாவது செல்வத்தானும், குலத்தானும் ஒழுக்கத்தானும், அன்பினானும் ஒத்தார் இருவராய்த் தமரின் நீங்கித் தனியிடத்து எதிர்ப்பட்டார் எனவும், அவ்வழிக் கொடுப்போரும் இன்றி அடுப்போரும் இன்றி வேட்கை மிகுதியால் புணர்ந்தார் எனவும், பின்னும் அவர் களவொழுக்கம் நடத்தி இலக்கண வகையான் வரைந்தெய்தினார் எனவும், பிறவும் இந்நிகரனவாகிச் சுவைபட வருவனவெல்லாம் ஒருங்கு வந்தனவாகக் கூறுதல். உலகியல் வழக்காவது, உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒத்து வருவது. பாடல் சான்ற புலன் நெறி வழக்கம் - இவ்விருவகையானும் பாடல் சான்ற கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்க் கூறப்படுகின்ற அகப்பொருள். அவ் அகப்பொருள்கலியும் பரிபாடலும் என்னும் இரண்டு பாவிலும் உரிமையுடைத்தாம் என்று உரைப்பர் புலவர். ஒழிந்த பாக்கள் இத்துணை அகப்பொருட்கு உரியவாய் வருதலின்றிப் புறப்பொருட்கும் உரியவாய் வருதலின் கூறாது விடுத்தார். புறப்பொருள் உலகியல்பால் அன்றி வாராமையின், அது நாடக வழக்கம் அன்றாயிற்று.

**சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறா மரபு**: அகத்திணையுள் கைக்கிளை பெருந்திணை ஒழிந்த ஐந்திற்கும் உரியவாகிய நிலமும் காலமும் கருப்பொருளுமன்றி மக்களைப்பற்றி வரும் புணர்தலும் பிரிதலும் இருத்தலும் இரங்கலும் ஊடலும் என்று சொல்லப்பட்ட ஐந்து பொருண்மையும், அவ்வைந்திணைக் கண்ணும் தலைமகனாகப் புலனெறி வழக்கம் செய்ய வேண்டின் நாடன ˙ ஊரன், சேர்ப்பன் என்னும் பொதுப்பெயராலே குறிக்கப்பெறுவர். ஒருவர்க்கு உரித்தாகி வரும் பெயரால் சுட்டியுரைக்கமாட்டார் புலவர். இதன்வழி தலைமக்கள் பெயர் பாடலுள் சுட்டும் மரபு தமிழ் மரபு அன்று என்பது தெரியவரும்.

**“மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்**

**சுட்டிஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர்”(54)**.

இதனால் ஒருவர்க்குரித்தாகி வரும்பெயர் அகத்திணை பற்றி வரும் கைக்கிளை பெருந்திணையினும் வரப் பெறாது என்பதும், புறத்திணையுள் வரும் என்பதும் ஆங்கும் பாடாண் பாட்டுக் காமம் பொருளாக வரின் அவ்வழி வரும் என்பதும் புலனாகிறது. இதனான் அகப்பொருள் ஒருவரைச் சாராது பொதுப்பட வரும் என்பதை அறிய முடிகிறது. புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே.

## பயிற்சி வினாக்கள்:

**குறுவினாக்கள்**

1. ஐந்திணைக்குரிய பொழுதுகளைப் பட்டியலிடுக
2. பிரிவின் போது நற்றாய்க்கு நிகழும் கூற்றினைப் பட்டியலிடுக
3. ஐந்திணைக்குரிய உரிப்பொருள் குறித்தெழுதுக
4. பிரிவின் போது தோழிக்குக் கூற்று நிகழும் இடங்களைப் பட்டியலிடுக
5. ஐந்திணைக்குரிய கருப்பொருள்களைப் பட்டியலிடுக
6. கண்டோர் கூற்று நிகழுமிடங்களை உரைக்க.
7. ஐந்நிலங்கள் குறித்து எழுதுக.
8. சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறா மரபு தமிழின் அக மரபிரைனத் தருக.

9. முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை விளக்குக?
10. திணைநிலைப் பெயர் என்றால் என்ன?

**கட்டுரை வினாக்கள்**

1. குறிஞ்சித்திணையின் முதல் ,கரு ,உரிப்பொருட்களைப் பட்டியலிடுக .
2. அறத்தொடு நிற்றல் -விரித்துரைக்க
3. ஐந்திணைக்குரிய பொழுதுகளைப் புலப்படுத்துக .
4. அகத்திணையியல் செய்திகளைத் தொகுத்தரைக்க.
5. மருதத்திணையின் மூவகைப் பொருட்களை விவரிக்க
6. தோழி கூற்றால் அறியலாகும் செய்திகள் யாவை?
7. செவிலி கூற்று நிகழ்த்துமிடங்களையும் அவளுக்குரிய மரபுகள் குறித்தும் எழுதுக.
8. தலைவன் எவ்வெவ்விடங்களில் கூற்று நிகழ்த்துதற்கு உரியன?
9. உள்ளுறை உவமம் - விளக்கு ஒரு கட்டுரை வரைக
10. திணை மயக்கம் - விளக்குக.

## களவியல்

காதல் வாழ்க்கையைக் கூறும் அகத்திணையின் இரு பகுதிகளாகக் களவும், கற்பும் அமையும். ஒருவனும் ஒருத்தியும் தமக்குள்ளே கண்டு காதல் கொள்ளும் ஒழுக்கம் களவு என்று வழங்கப்படும். அகப்பொருள் பற்றிய இலக்கியங்களில் களவு தான் மிகுதியாகப் பேசப்படும்.களவாவது, பிறர் நன்கு அறியாதபடி மறைவாக நிகழும் ஒழுக்கமாகும். களவியல் தொல்காப்பிய பொருளதிகாரத்தின் மூன்றாவது இயல் களவியலாகும். களவு, கற்பு என்னும்

இருவகைக் கைக்கோள்களில் களவொழுக்கம் உணர்த்தியமையால் களவியல் என்னும் பெயர் பெற்றது. அகத்திணையில். அகமாகிய இன்பத்தின் பொது இலக்கணம் உணர்த்தி அடுத்து புற ஒழுக்கமாகிய போர் மற்றும் கொடை போன்றவற்றின் இலக்கணங்களைப் புறத்திணையியலில் கூறியவர். அக ஒழுக்கமாகிய இன்பத்தின் சிறப்பிலக்கணத்தை கூறும் முகமாக "களவியலை" அடுத்து அமைத்துள்ளார். இவ்வியலில் இளம்பூரணர் உரைப்படி 51 நூற்பாக்களும், நச்சினார்க்கினியர் உரைப்படி 50 நூற்பாக்களும் அமைகின்றன. இயற்கையாகவே ஒத்த இளமை, முதலிய ஒத்த தன்மைகளையுடைய ஒருவனும், ஒருத்தியும் ஓரிடத்தில் எதிர்ப்பட்டு அன்பு கொண்டு காதலில் திளைப்பர். அக்காதலர் ஊரறிய மணவினை நிகழும் அளவு, களவு நெறியில் இருப்பர். களவு நெறியைக் குற்றமாகப் பெற்றோர் எண்ணினாலும் சமூகம் குற்றமாகக் கருதவில்லை.தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் அகத்திணையியல், புறத்திணையியலை அடுத்து, களவியல் என்ற இயல் வருகின்றது. இக்களவியல் அகத்திணைகளில் ஒருதலைக் காதலாகிய கைக்கிளை, பொருந்தாக் காதலாகிய பெருந்திணை ஆகியவற்றை நீக்கி, அன்பின் ஐந்திணைகளை மட்டும் கூறுகின்றது.

## களவு விளக்கம்

**"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**

**ஆன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**

**குாமக்கூட்டம் காணுங் காலை**

**மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்**

**துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே"**(1)

அன்பின் ஐந்திணை ஒழுக்கமே களவு, கற்பு என இருவகையாகப் பகுக்கப்பட்டுள்ளது. களவு என்பது பிறருக்குரிய பொருளை அவரறியாமல் எடுத்துக் கொள்வதாகும். இது பஞ்சமாபாதங்களுள் ஒன்றாகும். ஆனால் களவியல் உணர்த்தும் களவு அத்தகையது அன்று. இது அறத்தின் பாற்பட்ட களவு. தலைவன், தலைவியர் உள்ளம் அறிய குறிப்பாகத் தலைவியின் சுற்றத்தார் அறியாமல் அன்பினால் "செம்புலப் பெயல்நீர்போல" உள்ளம் கலந்து மறைந்து ஒழுகும் ஒழுக்கமே களவியல் கூறும் களவொழுக்கம் ஆகும். எனவே இது அறவழிப்பட்ட

அன்பின் ஒழுக்கம் ஆகும். இதனையே இளம்பூரணர்,,,களவு என்னும் சொல் கண்டுழியெல்லாம் அறப்பாற்பாடதென்றால் அமையாது. களவாவது, பிறர்க்குரிய பொருள் மறையிற் கோடல் இன்னதன்றி ஒத்தார்க்கும் மிக்கார்க்கும் பொதுவாகிய கன்னியரைத் தமர் கொடுப்பக் கொள்ளாது கன்னியர்தம் இச்சையினால் தமரை மறைத்துப் புணர்ந்து பின்னும் அறநிலை வழாமல் நிற்றலாம். இ∴து அறம் எனப்படும் என்று உரை எழுதுகிறார். பிறரால் அறியப்படாத பொருள் உடையதாதலின் வேதம் 'மறை' என்னும் பெயரால் சுட்டப்படுகிறது. இம்முறை போலப் பிறரால் அறியப்படாத புணர்ச்சி ஆதலால் களவாகிய ஒழுக்கம் மறை எனும் பெயர் பெற்றது என்னும் பொருளில் ''அருமறை மறைந்த ஒழுக்கம்'' மறை என்னும் பெயர்களால் தொல்காப்பியர் சுட்டுகிறார்.

## வடநூல் கூறும் மணங்களும் தமிழர்தம் மணங்களும்

களவொழுக்கம் கூறும் வடநூலார் எண்வகை மணங்களுள் "காந்தருவம்" என்ற மணத்தோடு ஒத்தது என்பர் தொல்காப்பியர். தொல்காப்பியர் காலத்தில்தான் வடநாட்டார் அல்லது ஆரியர் நாகரிகம் தமிழகத்தில் மெல்ல நுழைந்து பரவத் தலைப்பட்டது. எனவே அவர்தம் மணமுறைகளையும் தமிழர்தம் மணமுறையையும் ஒப்பிட்டுக் காண வேண்டியதொரு சூழல் ஏற்பட்டது. இவ்வெண்வகை மணங்களை மறையோர் தேஎத்து மன்றல் எட்டு என்பார் தொல்காப்பியர். இவை தமிழர்க்குரியன அல்ல. மன்றல் எட்டாவன: 1. பிரமம் 2. பிரசாபத்தியம் 3. ஆரிடம் 4. தெய்வம் 5. காந்தருவம் 6. அசுரம் 7. இராக்கதம் 8. பைசாசம் என்பன இவை முறையே, 1. அறநிலை 2. ஒப்பு 3. பொருள்கோள் 4. தெய்வம் 5. யாழோர் கூட்டம் 6. அரும்பொருள் வினைநிலை 7. இராக்கதம் 8. பேய்நிலை என்னும் தமிழ்ச்சொற்களால் குறிப்பிடப்படுகின்றன. 1.**பிரமம்:** அறநிலை: கன்னியை அணிகலன் அணிந்து நாற்பத்தெட்டு ஆண்டுகள் பிரமசாரியாய் வாழந்த ஆடவனுக்கு தீ முன்னிலையில் மணம் செய்து கொடுப்பது. 2.**பிரசாபத்தியம்:** ஒப்பு: உரிய கோத்திரத்தார் பெண் கேட்டுச் சென்றால் மறுக்காமல் மகளை அலங்கரித்துத் தீ முன்னிலையில் தானமாகக் கொடுப்பது. 3.**ஆரிடம்:** பொருள்கோள்: தகுதியுடையவன் ஒருவனுக்குப் பொன்னால் பசுவும் எருதும் செய்து அவற்றிற்கிடையே பெண்ணை நிறுத்தி, இவைபோலப் பொலிவுடன் வாழ்க என நீர் வார்த்துக் கொடுப்பது. 4.**தெய்வம்:** வேள்வி செய்யும் ஆசிரியன் ஒருவனுக்கு அவ்வேள்வித் தீ முன்னர் கன்னியை அலங்கரித்துத் தட்சணையாகக் கொடுப்பது. 5.**காந்தருவம்:** யாழோர் கூட்டம்: காந்தருவ குமாரரும்ப கன்னியரும் தம்முள் எதிர்ப்பட்டுக் கூடினாற் போன்று ஒத்த இயல்புடைய ஒருவனும் ஒருத்தியும் கூடுவது. 6.**அசுரம்:** அரும்பொருள் வினைநிலை: கொல்லும் இயல்புடைய எருது அடக்கியவன், வில்லை வளைத்தவன், உயரத்தில் அமைந்த சுழலுகின்ற பன்றியை வீழ்த்தியவன் போன்றோருக்குப் பெண்ணைக் கொடுப்பது, காளையை அடக்கிப் பெண்ணை மணந்து கொள்ளும் முறையினை முல்லைக் கலியில் காணலாம் இராமன் வில்வளைத்து சீதையை மணந்தான். 7.**இராக்கதம்:** தான்

விரும்பிய பெண்ணை, அவள் விருப்பத்திற்கும் தமர் விருப்பத்திற்கும் மாறாக வலிந்து கவர்ந்து கொள்வது. 8.**பைசாசம்:** தன்னை விட மூத்தவள், துயின்றவள், கள்ளுண்டு களித்தவள் ஆகிய பெண்ணை மணப்பது.

இவ்வெண்வகை மணங்களுள் அசுரம், இராக்கதம், பைசாசம் என்ற மூன்றும் கைக்கிளையின் பாற்படும். பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்ற நான்கும் பெருந்திணையின் பாற்படும். காந்தருவம் ஒன்றே தமிழ் நூற்பா கூறும் களவுடன் ஒத்தது ஆகும். காந்தருவமும் களவும்: களவொழுக்கம் என்பது ஐந்திணைக்குரிய ஒழுக்கம் ஆகும். காந்தருவமானது கந்தருவ குமாரரும் கன்னியும் தம்முள் எதிர்பட்டுக் கண்டு வேட்கை புணர்வர். அது போலவே களவிலும் தலைவனும் தலைவியும் எதிர்பட்டுப் புணர்வர் இந்நிலையில் இரண்டும் ஒற்றுமையுடையன என்றாலும் இவ்விரண்டிற்குமிடையே வேறுபாடும் உண்டு. கந்தருவ ஒழுக்கத்தில் மெய்யுறு புணர்ச்சி முதலிலேயே இடம்பெறுகிறது. அதன் பயிற்சியினால் உள்ளப் புணர்ச்சி நிலைபெற்றுச் சாகும் வரையில் கூடி வாழ்வர். தம் எதிர்ப்பட்டவரைக் கூடிப் பிரிதலும் உண்டு. ஆனால் என்றும் பிரியா நிலையில் நின்ற கடவாமல் அன்பினால் கூடும் உள்ளப் புணர்ச்சியே களவொழுக்கம் ஆகும். செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே என்ற சான்றோரால் புகழப்படுவது இக்களவொழுக்கம். இத்தகைய களவொழுக்கத்தின் சிறப்பினை ஆரிய அரசன் பிரகத்தனுக்கு அறிவிக்கும்படி கபிலரால் பாடப்பட்டதே குறிஞ்சிப்பாட்டு என்ற பெயரில் அமைந்துள்ள 269 வரிகள் அடங்கிய சங்கப் பாடல் ஆகும். “கந்தருவருக்குக் கற்பு இன்றி” அமையவும் பெறும் முன்னுறு புணர்ச்சி, தெய்வப் புணர்ச்சி என்னும் பெயர்களால் சுட்டப்பெறும். ஒத்தார் இருவர் இயல்பாகத் தாமே கூடும் கூட்டம் தாயின் ஏவற்படி தினைப்புனம் காக்கச் செல்வர் தலைவியும் தோழியரும். எஞ்சிய நேரங்களில் அருவியாடி, தழை மற்றும் மலர் கொய்து பொழுது போக்குவர். அப்போது வேட்டையாடி வரும் தலைவன் ஒருவன் அங்கு வந்து தன்னால் வேட்டையாடப்பட்டுத் தப்பிய யானையைக் கண்டதுண்டோ என அவர்களை வினவி வருவான். அப்பெண்கள் நாணமடைவர். மறுமொழி கூறாது நிற்பர். இந்நிலையில் இருவர் கண்களும் உறவு கொண்டன. பின்னர் அவ்வுறவு காதலாக மலரும். இவ்வாறு கண்ணினால் ஏற்பட்ட “காமம் கண்தர வந்த காம ஒள்ளெரி” என்று குப்பைக் கோழியரால் (குறுந்:305) குறிப்பிடப்படுகிறது

அன்புடையார் இருவர் முற்பிறப்பின் நல்வினையால் ஒருவரை ஒருவர் கண்டு அன்பினால் உள்ளம் ஒத்தலாகிய நெஞ்சக் கலப்பே காமப்புணர்ச்சி என்பது தொல்காப்பியக் கருத்து இதனை,

**“ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**

**ஒன்றி உயர்ந்த பால தாணையின்**

**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப**

**மிக்கோ னாயினும் கடிவரை யின்றே" (2)**

என்ற நூற்பா மூலம் உணரலாம். இயற்கைப் புணர்ச்சி நான்கு நிலைகளை உடையது. அவை : காட்சி, ஐயம், தெளிவு, துணிவு என்பன ஆகும்.

**காட்சி** ஒருவனும் ஒருத்தியுமாக இல்லறத்தில் கூடி வாழ்வாரை மறுபிறப்பிலும் சேர்த்து வைப்பதும் பிரித்து விலக்குவதும் ஊழ் ஆகும். சேர்த்து வைப்பது நல்லூழ் எனவும், பிரித்து வைப்பது தீயூழ் எனவும் சுட்டப்படும். நல்லூழினைத் தொல்காப்பியம் உயர்ந்தபால் எனச் சுட்டும். இத்தகைய நிலையில் உயர்ந்த ஊழால் ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் காண்பதே காட்சி ஆகும். இருவரில் யார் முந்திக் கண்டவர் என்ற கேள்விக்கே இடம் இல்லாமல் இருவரும் ஒரே நேரத்தில் காண்பர். இதனை பயிலியது கெழீஇய நட்பு என்று பாராட்டுகிறது குறுந்தொகை. தலைமக்களை "ஒத்த கிழவனும் கிழத்தியும்" என்று பாராட்டுகிறார் தொல்காப்பியர். இவ்வொப்புமை பத்து நிலைகளில் காணப்பெறும் என்பதை மெய்ப்பாட்டியல் 25ம் நூற்பா உணர்த்துகிறது. "பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு உருவு நிறுத்த காம வாயில் நிறையே அருளே உணர்வொடு முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே" என்பதே அந்நூற்பா.

1. பிறப்பு: அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், ஆயர், வேட்டுவர், குறவர் என்பன போல வரும் குலம். 2. குடிமை: குலத்திற்குரிய சிறப்பான ஒழுக்கம். 3. ஆண்மை: தலைவன், தலைவியரது நற்பண்புகள் 4. ஆண்டு: ஒத்த பருவம். அது தலைவனுக்கு 16 ஆண்டும் தலைமகளுக்கு 12 ஆண்டும் ஆகும்.

**ஐயம்** கோவலனை காணப்பட்ட இடச்சிறப்பு இவை காரணமாகத் தலைவனுக்கு ஐயம் தோன்றும். தலைவி நில உலகப் பெண்ணா அல்லது தெய்வமா என்ற கேள்வி ஐயத்தின் அடிப்படையில் எழும். ஆனால் தலைவி ஐயம் கொள்ள மாட்டாள். ஐயம் எழுமிடத்து இவன் தெய்வமோ என்று எண்ணும்போது அவளது உள்ளத்தில் அச்ச உணர்வு தோன்றுமே அல்லாமல் காமவுணர்வு தோன்றாது. எனவே ஐயம் தலைமகனுக்கே உரியது. "அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை மாதர் கொல் மாலும்என் நெஞ்சு" (குறள் ) என்று தலைவன் ஐயுறுகிறான்.

**"சிறந்துழி ஐயம் சிறந்தது என்ப**

**இழிந்துழி இழிவே சுட்டலான" (3)**

என்பது தொல்காப்பியம் நூற்பா.

**துணிவு** தலைவி தெய்வமகள் அல்லள். மானுட மக்களுள் ஒருத்தியே எனத் துணிவாள். இதுவே அகப்பொருளில் துணிவு எனப்படும். இத்துணிவிற்கு அடிப்படையாக அமையும். (கருவிகள் எட்டும் பிறவும் என்பர் தொல்காப்பியர்)

**"வண்டே இழையே வள்ளி பூவே**

**கண்ணே அலமரல் இமைப்பே**

**அச்சமென்று அன்னவை பிறவும்**

**ஆங்கண் நிகழ நின்றவை**

**களையும் கருவி என்ப" (4)**

வண்டு: தலைவியின் கூந்தலில் அணிந்த பூவைச் சுற்றுகின்ற வண்டு. இது பழகிய மற்றும் மணம் தேன் நிறைந்த பூவின் மேல் அல்லது சுற்றாது. எனவே வண்டு சுற்றுதல் கொண்டு மானிடப் பெண் என்று துணிதல்.

இழை: தலைவி அணிந்துள்ள அணிகலன் இவ்வுலகில் ஒருவரால் செய்யப்பட்டது என்பது காட்டும். வள்ளி: பெண்கள் முலையிலும் தோளிலும் எழுதிய கொடி. அது மண்ணுலகப் பெண்களுக்குரியது. பூ: தலையிலணிந்த பூவின் வாடுதல் தன்மை கண்: மருண்ட பார்வை அலமரல்: தடுமாறுதல் அல்லது சுழலுதல் இமைப்பு: கண் இமைத்தல் தெய்வம் ஆயின் கண் இமைத்தல் இல்லை. அச்சம்: ஆடவரைக் கண்டு அஞ்சுதல். "அன்னவை பிறவும்" என்றதனால் கால் நிலம் தோய்தல், வியர்த்தல், நிழல் தோன்றுதல் முதலியவற்றாலும் அவள் மானிடப் பெண் எனத் துணிவான். இது தெளிவு ஆகும்.

**தொல்காப்பியர் விளக்கம்**

இன்பம், பொருள், அறம் மூன்றும் இணைந்தது வாழ்க்கை. அன்பின் வழியில் அமையும் இதனை ஐந்து திணையொழுக்கங்களாக எண்ணிப் பார்ப்பது தமிழர் நெறி. இதனைக் காமக்கூட்டம் என்பர். ஊழ்வினையால் காதல் காட்சி நிகழும். ஒன்றியிருந்தால் சிறப்பு. காதலன் காதலியை விடச் சிறந்திருந்தாலும் குறையில்லை. காதலி சிறந்தவளாய் இருந்தால், கிடைப்பாளோ எனக் காதலனுக்கு ஐயம் தோன்றும் தெய்வமோ என அவன் ஐயுறும்போது பெண்மகள் என உணர்ந்துகொள்வான். ஆணுக்கும், பெண்ணுக்குமகாதல் நினைவுகள் ஆசை மிகுதல், ஒருவர் மட்டும் நினைத்தல், நினைவால் உடலும் உள்ளமும் மெலிதல், இன்னது செய்தால் இன்னது நேருமோ என எண்ணுதல், நாணம் வரம்பைக் கடத்தல், பார்க்கும் பொருள்களிலெல்லாம் காதலர் நினைவே வருதல், தன்னையே மறந்து பித்தாதல், எண்ணச் சோர்வால் மயங்கி விழுதல், காதல் நிறைவேறாதபோது சாகத் துணிதல் முதலான நினைவலைகள் களவுக் காலத்தில் காதலர் உள்ளத்தில் மோதிக்கொண்டே இருக்கும்.

காதலன் காதலியிடம் பேச்சு கொடுத்தல் களவியல் செய்திகளைக் "காதலர் செய்திகள்" எனப் புரிந்துகொள்ள வேண்டும். காதலன் காதலியிடம் பேச்சு கொடுத்தல், தன் சொல்லுக்கு அவளைக் கட்டுப்படுமாறு செய்தல், கட்டுப்பட்டால் இன்ன நன்மை என விளக்குதல், அவளது புன்னகையின் பொருளை உணர்ந்துகொள்ளுதல், அவளை நினைத்துத் தான் மெலிவதை உரைத்தல், அவள் இல்லாவிட்டால் தனக்கு நிகழப்போகும் தீங்கை எடுத்துரைத்தல், தன் கைவிடாத் தனமையை அவளுக்குத் தெளிவுபடுத்துதல் முதலான பேச்சுகளால் காதலன் காதலியை

வயப்படுவான்.காதலன் காதலியைத் தொட்டுக் காதலைப் பயிலுதல் காதலியைத் தொடுதல். அவள் அழகைப் பொய்யாகப் பாராட்டுதல். அவள் ஒப்புதலுடன் அணைத்துக்கொள்ளல். அவளிடம் வருவதற்குத் தனக்கு நேர்ந்த இடையூறுகளை எடுத்துரைத்தல். அவள் உறவு கிடைக்கவில்லையே எனப் பெருமூச்சு விடுதல். உடலுறவு கொள்ள முயல்தல், காதலியைத் துய்த்தல், ஆசை அடங்காமை என்னும் இவை எட்டும் ஒரு வகை.

பெற்றவழி மகிழ்தல், அவள் பிரிந்து செல்லும்போது கலங்குதல், நிகழவேண்டியதை எடுத்துரைத்தல், தன்னைக் குறைகூறும் பாங்கனுக்கு எடுத்துரைத்தல், பாங்கன் உதவியை வலியுறுத்தல், தன் ஊர், பேர், அவள் இல்லாவிட்டால் தனக்கு நேரும் கெடுதி முதலானவற்றைக் கூறித் தோழியின் உதவியை நாடல், தோழி தன் தலைவியை இணங்கச்செய்தல், தலைவி இணங்காவிட்டால் மீண்டும் மீண்டும் கெஞ்சுதல், இணங்கியபின் அரவணைத்தல், அவள் தயங்கும்போது தனக்கு நேரும் கெடுதியையும், தன் பெருமைகளை எடுத்துரைத்தல், கைக்கிளை, பெருந்திணை உறவு 4 என்றும், மண உறவுகளில் ஏழு வகைகளைப் பகுத்துக் காட்டி, யாழோர் கூட்டம் 5 என விரித்துரைக்கிறார்.சில முறைமைகள் கிழவோள் (அவள்) தன்னால் அளக்கமுடியாத அறிவினை உடையவள் எனக் கிழவோன் (அவன்) ஐயுற்று உரையாடுவான்.

அவன்முன் அவள் தன் விருப்பத்தைச் சொல்லமாட்டாள். எனினும் அவளது உடலில் நீர் போல வெளிப்படும்.அவன் தனக்குத் தானே தூதுவனாகி அவளிடம் செல்வதும் உண்டு. அவன் எங்கு வேண்டுமானாலும் வரமுடியும் ஆதலால் கூடும் இடத்தை அவள்தான் சொல்வாள். தோழி தூதும் உண்டு. அவள் தோழி இல்லாமல் தனிமையில் மூன்று நாளுக்கு மேல் செல்லமாட்டாள்.அவள் மட்டுந்தான் தோழி துணையுடன் வருவாள்.அவளுக்குத் தாய் எனச் சொல்லப்படுபவள் அவளைப் பேணி வளர்க்கும் செவிலித்தாயே. (பெற்றவள் நற்றாய்)அவளுக்குத் தோழி அவளை வளர்க்கும் செவிலியின் மகள்..தோழியும் செவிலியும் அவன்-அவள் உறவை அறிதலை ‘மதியுடம்படுதல்’ என்பர். இது முன்னுற உணர்தல், குறையுற உணர்தல், இருவரும் இருக்கும்போது உறுதியாக உணர்தல் என மூன்று வகைப்படும். தெளிவாக உணர்ந்த பின்தான் தோழியும் செவிலியும் செயல்படுவர்.அவள் முயலும்பொது அவர்கள் உதவுவர்·இனி கூடுவது பகலிலா இரவிலா என அவள் குறிப்பாள். இரவுக்குறி மனை எல்லைக்குள் இருக்கும் ,பகற்குறி இல்லத்துக்குப் புறத்தே அவள் அறிந்த இடமாக இருக்கும். அவன் வந்தான் என்று அவள் ‘அல்ல-குறி’ப் படுதலும் உண்டு.குறியிடத்தில் கூடுவதும் களவொழுக்கம்.

குறிப்பிட்டநேரம், குறிப்பிட்ட நாள் அல்லாமல் அவனும் அவளும் கூடார். அவன் வழியில் நேரும் இடையூறுகளுக்கு அஞ்சாமல் குறித்தபடி வருவான்.அவளைப் பெற்ற தாய்தந்தையர் குறிப்பால் உணர்ந்துகொள்வர்.தாய் அறிந்தால் செவிலி போல் நடந்துகொள்வாள். களவு வெளிப்பட்டு அம்பல், அலர் தூற்றப்படுவது அவன் நடத்தையால்தான்·களவு வெளிப்படுவதற்கு முன்னரும் களவு அம்பல், அலரால் வெளிப்பட்ட பின்னரும் என இருவேறு

காலங்களிலும் திருமணம் நடைபெறும்.களவு வெளிப்பட்ட பின்னர்த் திருமணம் நடந்தால் அது கற்புமணம். (களவுக்கு முன்னர் எனின், அவன் அவளை அழைத்துக்கொண்டு செல்லும் கொண்டுதலைக் கழிதல்') எப்படியோ அவளைத் திருமணைம் செய்துகொள்ளாமல் கைவிடமாட்டான்களவு என்பது இன்ப உணர்வின் அடிப்படையில் நிகழக் கூடியது. இக் களவு ஒழுக்கம் நான்கு வகையாகப் பகுத்துக் கூறப்படும்.அவை :

1.**காமப் புணர்ச்சி**: இ·.து அன்புடைய இருவர் நல்வினையால் எதிர்ப்பட்டு, காதல் கொள்வது. காம வேட்கை மிகுதியால் தான் இக்காதல் உருவாகிறது.காதல் எவ்வாறு உண்டாகும் என்பதைத் தொல்காப்பியர் களவியல் நூற்பாவில் (2) விளக்குகிறார்.ஒருவனும் ஒருத்தியும் கூடிவாழும் இல்லறத்தின் பயனால் அவ்விருவரையும் ஒவ்வொரு பிறவியிலும் சேர்த்தும், பிரித்தும் வைப்பதுமான இருவகை ஊழ்வினை உண்டு. அவற்றுள் நல்லூழின் ஆணையால் ஒத்த பிறப்பு, குடி, ஆண்மை, ஆண்டு, அழகு, அன்பு, நிறை, அருள், உணர்வு, திரு என்னும் பத்துப் பண்புகளுடன் இருக்கும் ஓர் ஆணும், பெண்ணும் கண்டு காதல் வயப்படுவர். இதில் தலைவன் தலைவியுடன் ஒத்த பண்புடையனாகவோ தலைவியின் மிக்கோனாகவோ இருத்தல் வேண்டும்.தலைவி தன்னுடன் ஒத்த நலன்களால் சிறந்து தோன்றிய வழி தலைவனுக்குஇவள் தெய்வ மகளோ?' என்ற ஐயம் தோன்றும். ஆனால் அவள் அணிந்துள்ள மாலை, அணிகலன் ஆகியவற்றைக் கண்டு அவள் மானிட மகளே எனத் தெளிவான்."பிறகு அவள் தன்மேல் விருப்பம் கொண்டிருக்கிறாளா என அறிய அவள் கண்களை நோக்குவான். காம வேட்கையினால் அந்நான்கு கண்களும் தாம் கொண்ட காதலை உரைக்கும்.ஒருவரை ஒருவர் காணும் முதற்காட்சியிலேயே மெய்யுறு புணர்ச்சிக்கு உடன்படாது, உள்ளப் புணர்ச்சி அளவிலேயே ஒழுகி மணந்து கொண்ட பின்னரே கூடி மகிழ்வர்.

2.**இடந்தலைப்பாடு** இயற்கைப் புணர்ச்சி எனப்படுகின்ற இருவரும் கூடி மகிழ்கின்ற நிலையை நாள்தோறும் நிகழ்த்த வேண்டும் என்ற எண்ணம் இருவருக்கும் ஏற்படும். முதல்நாள் சந்தித்த அதே இடத்திற்கு ஒவ்வொரு நாளும் தலைவன் சென்று காதலியைச் சந்தித்து மகிழ்வான். இதுவே இடந்தலைப்பாடு ஆகும்.

3.**பாங்கர் கூட்டம்** இடந்தலைப்பாடு இடையூறு இன்றி நிகழ்தல் அரிது. ஆதலால் தலைவியோடு தனக்குள்ள உறவினைப் பாங்கனுக்குக் (தோழனுக்கு) கூறுவான். பிறகு அத்தோழன் அப்பெண் எவ்விடத்தைச் சேர்ந்தவள்? எத்தன்மை உடையவள்? என வினவி, அவள் இருப்பிடம் அறிவான். அவளிடம் சென்று அத்தலைவியைக் கண்டு வருவான். கண்டு வந்து அவள் நிலையைத் தலைவனுக்குக் கூறுவான்.

4.**தோழியிற் கூட்டம்** தலைவியை நீண்ட நாட்களுக்குத் தொடர்ந்து கூட விழையும் தலைவனுக்குப் பாங்கற் கூட்டம் பயன்தராது. அதனால் தலைவியோடு பழகிவரும்

உயிர்த்தோழியை நட்பாக்கிக் கொண்டு அவளை இரந்து, அவள் பின் நிற்பான். பிறகு அவள் வாயிலாகத் தலைவியைக் கூடுவதே தோழியிற் புணர்வாம். இது தோழியிற் கூட்டம் எனவும் உரைக்கப்படும்.

5.**இருவகைக் குறிகள்** தலைவியைத் தோழி குறிப்பிட்ட ஓரிடத்தில் இருக்கச் செய்து, பின்னர்த் தலைவனிடம் சென்று தலைவி தலைவனுக்காகக் காத்திருக்கும் இடத்தைக் குறிப்பிடுவாள். தலைவன் அவ்விடம் சென்று தலைவியுடன் கூடி மகிழ்வான். இக்கூட்டம் பகலில் நிகழ்ந்தால் பகற்குறி என்றும் இரவில் நிகழ்ந்தால் இரவுக் குறி என்றும் அழைக்கப் பெறும்.

**குறிப்பறிதல்:** காட்சி, ஐயம், துணிவு என்ற மூன்றும் கைக்கிளைக் குறிப்பு. இந்நிலையில் இருவரிடத்தும் ஒத்த அன்பு நிகழ்ச்சி உண்டு என்று கூற இயலாது. குறிப்பறிதலால் இருவரும் ஒத்த அன்பினர் என்பது வெளிப்படும். மானிடப் பெண்ணே என்று துணிந்த தலைவன் அவளது உள்ளக் கருத்தை உணராமல் அவளை நெருங்கினால் அச்செயல் பொருந்தா ஒழுக்கம் ஆகும். அது பெருந்திணையின் பாற்படும். ஆதலில் தலைவி தன்னை விரும்புகின்றாளா இல்லையா என்ற உள்ளக் கருத்தைத் தலைவன் உணர்ந்து கொள்ளுதலே குறிப்பறிதல் எனப்படும். குறிப்பறிதலில் கண்களே பேசுவன வாயினால் உரையாடுதல் முறையன்று. மேலும் தலைவியின் பண்புகளான அச்சம், மடம், நாணம் போன்றவை உரையாடுதலைத் தடுக்கும். ஆகவே தலைவன் தலைவியர்தம் கண்களே அவர்தம் உள்ள வேட்கையை எடுத்துரைக்கும். "கண்ணிற் சிறந்த உறுப்பில்லை" என்கிறது தஞ்சை வாணன்கோவை. வள்ளுவமும்,"கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல" என்று கண்களின் ஆற்றலை உணர்த்துகிறது. இக்குறிப்பறிதலைத் தொல்காப்பியர் இரண்டு நூற்பாக்களில் விளக்குகிறார்.

**"நாட்டம் இரண்டு அறிவுடம் படுத்தற்குக்**
**கூட்டி உரைக்கும் குறிப்புரையாகும்" (5)**
**"குறிப்பே குறித்தது கொள்ளு மாயின்**
**ஆங்கவை நிகழும் என்மனார் புலவர்"(6)**

1.**நாட்டம்** என்பது கண்களைக் குறிக்கும் சொல். கண்களால் குறிப்பினை உணர்ந்து கொண்ட பின்னரே அன்பின் ஐந்திணையாகிய களவொழுக்கம் நிகழும்.
2.**இடந்தலைப்பாடு**: குறிப்பினால் தலைமகளது வேட்கை(விருப்பம்) உணர்ந்த தலைமகன் பிற்றைநாளும் (மறுநாள்) அவ்விடம் சென்று தலைவியை எதிர்ப்படுதல் இடந்தலைப்பாடு ஆகும்.
3.**பாங்கற் கூட்டம்**: பாங்கனால் தலைவனுக்குத் தலைவியோடு ஏற்படும் புணர்ச்சி. இருவரது காதல்

வளர்ச்சிக்குத் துணை நிற்பவன் பாங்கன். சங்கப் பாடல்களில் பாங்கற் கூட்டம் பற்றிய 27 அகப்பாடல்கள் இடம் பெறுவதைக் காணலாம்.

4.**பாங்கியர்க் கூட்டம்**: புணர்ச்சிக்குத் தலைவிபக்கம் துணைநிற்கும் தோழியர் பற்றியது. இது தோழியர் கூட்டம் மற்றும் இளையிற் கூட்டம் என்றும் கூறப்பெறும். அகப்பாடல்களில் தோழியர் கூட்டம் பற்றிய பாடல்களே மிகுதி.

**அன்பின் ஐந்திணைத் தலைவன் இலக்கணம்:** அகப்பொருள் தலைவன் உயர்பண்புகள் உடையவனாக அறிவு நிறைந்தவனாக பிறர் நலம் பேணும் பெரும்பண்பினனாக விளங்குபவன். இதனை,

**"பெருமையும் உரனும் ஆடுஉ மேனே" (7)**

என்ற நூற்பா உணர்த்துகிறது. இவற்றுள் பெருமையாவது கல்வி, தறுகண், கொடை மற்றும் வலிமையால் ஏற்படுவது. இது பழி பாவங்களுக்கு அஞ்சுதல் என்றும் பொருள் கொள்ளப்பெறும். உரன் என்பது நல்லது. தீயது இவற்றைப் பகுத்தறியும் ஆற்றல்.

**அன்பின் ஐந்திணைத் தலைமகள் இலக்கணம்**

**"அச்சமும் நாணமும் மடனும் முந்துறுத்த**

**நிச்சமும் பெண்பாற்று உரிய என்ப" (8)**

களவு ஒழுக்கக் கால மெய்ப்பாடுகள்: குறிப்பறிதலின் பின்னர் இடம்பெறும் மெய்ப்பாடுகளே களவு ஒழுக்கக் கால மெய்ப்பாடுகள் ஆகும். இவை உள்ளப் புணர்ச்சிக்குப் பின்னர் மெய்யுறுபுணர்ச்சிக்கு முன்னர் நடைபெறும் மெய்ப்பாடுகள். இவற்றை அவத்தைகள் என்பர் இளம்பூரணர். அவையாவன:

**"வேட்கை ஒருதலை உள்ளுதல்மெலிதல்**
**ஆக்கஞ் செப்பல் நாணுவரை இறத்தல்**
**நோக்குவ எல்லாம் அவையே போறல்**
**மறத்தல் மயக்கஞ் சாக்காடு என்றிச்**
**சிறப்புடை மரபினவை களவென மொழிப" (9)**

அவத்தை என்பது உணர்வுநிலை ஆகும். இவ்அவத்தைகள் பத்து ஆகும். காட்சி, ஐயம், தெளிவு, துணிவு என்னும் இயற்கைப் புணர்ச்சியை முதல் அவத்தையாகக் கொண்டு வேட்கை முதலாகச் சாக்காடு இறுதியாகக் கூறப்பட்ட உணர்வுநிலைகளை அவத்தைகளாக கொளல் வேண்டும். 1.காட்சி, ஐயம், தெளிவு 2.வேட்கை – ஒருவரை ஒருவர் பெறல் வேண்டுமென்ற விருப்பம் 3.ஒருதலை உள்ளுதல் - இடைவிடாது எண்ணுதல் 4.மெலிதல் - உணவு போன்றவை உண்ண இயலாமையால் ஏற்படும் உடல் மெலிவு 5.ஆக்கம் செப்பல் - ஏற்பட்ட துன்பங்களைக் கூறல் 6.நாணுவரை இறத்தல்: நாணம் நீங்குதல் 1.நோக்குவ எல்லாம் அவையே போறல் -

காணப்பட்ட பொருள்களில் எல்லாம் தலைவியின் அழகைக் காணல் 2. மறத்தல்: பைத்தியமாதல் 3. மயக்கம்: மோகித்தல் 4. சாக்காடு: சாதல் (மடலேறுவேன், வரைபாய்ந்து இறுப்பேன் என்பன போன்றன) இயற்கைப் புணர்ச்சி திறம்: வேட்கை மீதூரப் புணர்ச்சி விரும்பிய தலைவன், தலைவியிடத்துள்ள அச்சம், நாணம் இவற்றை நீக்க முற்படுகிறான். அப்போது நிகழ்வனவற்றை,

**"முன்னிலை ஆக்கல் சொல்வழிப்படுத்தல்" (10)**

என்று துவங்கும் நூற்பாவில் தொகுத்துரைக்கின்றார்.

1.**முன்னிலை ஆக்கல்**: தலைமகன் போன்று தலைமகளும் விருப்பம் மேலிட, புணர்ச்சி விரும்பினள் ஆயினும் அச்சம், நாணம் காரணமாக அக்குறிப்பே இல்லாதவளைப் போல நிற்பாள். அப்போது அவளை, முன்னிலைப்படுத்தி,"ஒள்ளிழை மகளிரொடு ஓரையும் ஆடாய் வள்ளிதழ் நெய்தல் தொடலையும் புனையாய் விரிபூங் கானல் ஒருசிறை நின்றோய் யாரையோ நின் தொழுதனம் வினவுவதும்" (நற் : 155) என்று புகழ்ந்து அவளது கவனத்தை உள்ளப்புணர்ச்சிக்குப் பின்னரே மெய்யுறு புணர்ச்சி என்ற தமிழர்தம் களவொழுக்க இயல்பை இது தெளிவுபடுத்துகிறது. "தீண்டலும் இயைவது கொல்லோ

--- --- --- நாறிருங் கூந்தல் கொடிச்சி தோளே" (குறுந் : 272) என்ற பாடலடிகளைக் காண்க.

2. **பொய்பாராட்டல்**: மெய்தொட்டுப் பயின்ற தலைமகன், தலைவியின் கூந்தல் கலையாதிருந்தும் அதனைத் திருந்துவேன் என்று அருகில் சென்று பொய்யாக ஒரு காரணம் படைத்துக்கொண்டு அவளைப் பாராட்டிப் பேசுவான்.

3.**இடம்பெற்றுதழாஅல்**: பொய்பாராட்டல் காரணமாகத் தலைவியிடம் சென்ற தலைவன் அணிமையில் சென்று அவளைத் தழுவமுயலுதல் "கொல்யாவை வெண்மருப்புங்கொலவல் புலியதளும்" எனத் துவங்கும் திணைமாலை நூற்றைம்பது 22-ம் பாடலில்,"யான் போகாமை யீரம்பினா லெய்தாயின்று" என்று தலைவன் கூற, மாற்றம் கூறாமல் நிற்கும் தலைவியைத் தலைவன் புறம் வந்து வண்டு ஓச்சி தழுவ முயலுதல் குறிப்பிடப்பட்டுள்ளது.

4.**இடையூறு கிளத்தல்:** தலைவன் தனது மெய்யைத் தொட, அறிவு நலன் இழந்து, செய்வதறியாது பூங்கொம்பு அல்லது கொடி ஒன்றினைச் சாந்து தலைவி நிற்க தலைவன் அவளை நோக்கி, இன்பத்திற்கு இடையூரான நின் உள்ளத்துள் நிகழ்ந்தது என்ன என்று வினவுதல்.

5.**நீடு நினைந்து இரங்கல்**: தலைவியைக் கூட முடியாமல் தலைவிக்கும் தலைவன் அதனை எண்ணி வருந்துதல். இதனைத் தஞ்சை வாணன் கோவை 13ஆம் பாடல் வழி உணரலாம். 6.**கூடுதல் உறுதல்** : கட்சிக்குப் பின்னர் புணர்ச்சி நிகழுதல் "வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை போழப் படாஅ முயக்கு" (குறள் : 1108)

7.**சொல்லிய நுகர்ச்சி வல்லே பெறுதல்**: இயற்கைப் புணர்ச்சிக்குக் களனாக மெய்தொட்டுப் பயிறல் முதலாகக் கூடுதல் உறுதல் "கண்டு கேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்

ஒண்தொடி கண்ணே உள" (குறள் : 1101) என்ற வள்ளுவர் வாக்காலும் அறியலாம். தீராத் தோற்றம்: இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்தாலும் உள்ளத்தில் ஏற்படும் தெளிவின்மை. அதாவது இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னரும் தலைவி ஆற்றாமை உடையளாகவே காணப்பட, தலைவன் அவளைத் தெளிவிப்பதற்காகச் சூளுரை கூறுதல். "---- எம்மூர் வியன்துறை நோடை முன்கை பற்றிச் சூரர மகளிரோடுற்ற சூளே" (குறுந்: 53) அகம் 85-ம் பாடலையும் சான்றாகக் கொள்ளலாம்.

**பாங்கற் கூட்டத்தில் தலைவன் கூற்று:**

இன்பத்தினைப் பெற்றவழி உள்ளத்தில் மகிழும்போதும் கூடின தலைவி தன்னைவிட்டுப் பிரிந்தபோதும், தலைவியாலே நமக்கு இல்லறம் இனிது நடக்கும் என்று மனத்தில் எண்ணும்போதும் இடந்தலைப்பாட்டிற்குப் பின்பு காதல் மிகுதியால் சோர்வுடன் காணப்பட, அக்குற்றத்தைப் பாங்கன் எடுத்து உரைப்பான். ஆனால் தலைவனோ விதியின் வலிமையை எடுத்துச் சொல்லி மறந்து ஆற்றாமையினால் வருந்த, அவ்வருத்தத்தை பாங்கன் நீக்க முயலும் போதும் தலைவன் கூற்று நிகழும். "இடிக்குங் கேளிர் நும்குறை யாக நிறுக்க லாற்றினோ நன்றுமற்றில்ல ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில் கையி லூமன் கண்ணில் காக்கும் வெண்ணெய் உணங்கல் போலப் பரந்தன் றறிநோய் நோன்றுகொளற் கரிதே" (குறுந் : 58) என்ற பாடலின் தலைவன் தனது ஆற்றாமையைப் பாங்கனிடத்து எடுத்துரைப்பதைக் காணலாம். நின்னால் காணப்பட்டாள் எவ்விடத்தாள். எத்தன்மையள் எனப் பாங்கன் வினவுதலும், அதற்குத் தலைவன் இடமும் அவள் உருவமும் கூறுதலும், பாங்கன் அவ்விடம் தோழியற் கூட்டத்தில் தலைவன் கூற்று. பாங்கனால் தலைவியைப் பெற்று மணந்துக் கொண்டு வாழ எண்ணாமல் மீண்டும் களவுப் புணர்ச்சியே விரும்பும் தலைவன் தோழியை இரந்து நிற்கிறான். அப்போது தோழியிடம் கூற்று நிகழ்த்துகிறான் தலைவன் இதனை "பெட்டவாயில் பெற்று இரவு வலியுறுத்தல்" என்பர் தொல்காப்பியர். தோழியை வாயிலாகக் கொண்டு சூறை இரக்கும் தலைவன், தோழியிடம் "பெருங்கல் வேலிச் சிறுகுடி யாது என" (நற்:213) என ஊர் வினவும்போதும், நும்பேர் யாது? என வினவும்போதும், தன்னால் தொலைக்கப்பட்ட (அம்பு எய்தப்பட்ட) விலங்கு இவ்வழி வந்தது கண்டீரோ என வினவும்போதும் தலைவன் கூற்று நிகழ்த்துவனான். அவையேயன்றி வழி வினாவுதல், யான் இங்கு தங்கினும், எம்மோடு புணரினும் உங்களுக்குப் பழி உண்டோ என்று வினவுதல் வழியும் கூற்று நிகழும். தொடர்ந்து தலமகன் தோழியிடம் பலமுறை இரக்கின்றான். பகற்குறி மற்றும் இரவுக்குறிக்கு உதவுமாறு வேண்டுகிறான். "பின் வருவேன்" என்று சொல்வது போலக் கூறுவான். "தலைவியின் ஆகத்தைப் பொருந்தாவிடில் நான் என்ன சொல்ல? முத்தும் சந்தனமும் செழும்பனி நீர்விட்டு அரைத்து வேட்கை நோயினால் வருந்தும் என்மேனியில் பூசினாலும் வெப்பம் ஆறாது. இன்று என் காரியமெல்லாம் உன்னால் மட்டுப்பட்டது" (தஞ்சைவாணன் கோவை -93) என்று தலைவன் தன் ஆற்றாமையை

எடுத்துரைப்பான். மேலும் தோழி தலைவனை நோக்கி, தலைவி மிகவும் இளமையானவள். இத்தகைய காதல் எல்லாம் அறியாதவள் என்று கூறும் போது தலைவன் கூற்று நிகழும். இவ்வாறான களவொழுக்கம் கேட்டினையே தரும். எனவே உலகத்தார் திருமணம் செய்து கொள்வது போலத் தலைவியைத் திருமணம் செய்து கொள் என்று தோழி கூறும் நிலையிலும் தலைவன் கூற்று நிகழ்த்துவான். தாய் வருவாள், தமையன்மார் வருவர், காவலர் வருவார் என்று இடையூறுகளுக்காகத் தாங்கள் அஞ்சினமையைத் தோழி உணர்த்த, தலைவன் மனம் வருந்தி மடலேறுவேன் என்று கூறுவதுமுண்டு. “மாவென மடலும் ஊர்ப பூவெனக் குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப மறுகின் ஆர்க்கவும் படுப பிறிதும் ஆகுப காமங்காழ் கொளினே” (குறுந் : 7) என்று தலைவன் கூற,“அறிவும் அருளும் உடையோர் நாணந்தரத்தக்க இத்தகைய செயல்களைச் செய்யார் என்று தோழி கூற, அப்போது தலைவன் தோழியை நோக்கி “நாணொடும் நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன் காமுற்றார் ஏறும் மடல்” (குறள் : 1133) என்பது போல கூற்று உரைப்பான். இவ்வாறாக இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைபாடு, பாங்கற் கூட்டம், பாங்கியற் கூட்டம் என்ற நால்வகை நிலைகளிலும் தலைவன் கூற்று நிகழ்வதைக் களவியல் 11-ம் நூற்பா எடுத்துரைக்கிறது.தலைவன் மடலேறுவன் என்று கூறும்போது அதனைத் தடுத்து நிறுத்த முயலுதல் தோழியர் கூட்டத்து இயல்பு ஆகும் என்பதனை,

**“பண்பிற் பெயர்ப்பினும் பரிவுற்று மெலியினும்**
**அன்புற்று நகினும் அவள்பெற்று மலியினும்**
**ஆற்றிடை உறுதலும் அவ்வினைக்கு இயல்வே” (12)**

என்ற நூற்பா உணர்த்துகிறது. பண்பிற் பெயர்த்தல்: தலைமகளின் இளமைப்பண்பு கூறித் தலைவனைச் செல்லுமாறு சொல்லுதல். இதனை “குன்றக் குறவன் காதல் மடமகள் வண்டுபட கூந்தல் தண்டழைக் கொடிச்சி வளையள் முளைவாள் எயிற்றள் இளையளாயினும் ஆரணங்கினளே” (ஐங் : 25) என்ற செய்யுள் புலப்படுத்துகிறது. பரிவுற்று மெலிதல்: தலைவனது காதல் உண்மையை அறிந்து தோழி இரங்கிய காலம் “தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு மாலை உழக்கும் துயர்” (குறள் : 1135) என்று தலைவன் கூறுவது காண்க. அன்புற்று நகுதல்: தலைவன் குறையை மறுக்க வேண்டும் என்று எண்ணிய தோழி அன்பு தோன்றும் உள்ளத்துடன் சிரிக்க, தலைவன் கூற்று நிகழ்த்துவதை நற்றிணை 75-ஆம் பாடலில் காணலாம். அவள் பெற்று மலிதல்: தோழியின் உடம்பாட்டினைப் பெற்ற தலைவன் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் நிலையில் கூற்று நிகழ்த்துவான், தோழியின் உதவியால் இரவுக்குறி மற்றும் பகற்குறியில் தலைவியைக் காணப்பெற்ற களிப்பில் தலைவன் கூற்று இடம்பெறும். தான் செல்லும் வழியிடை இடையூறு தோன்றிய இடத்தும் தலைவன் கூற்று நிகழும் என்பதே மேலை நூற்பாவின் பொருளாகும்.

பாங்கர் கூட்டம்(பாங்கர் துணையாகும் இடம்) :"பாங்கர் துணையாகக் கூடும் கூட்டம் 12 வகைப்படும் என்பதை

**"பாங்கர் நிமித்தம் பன்னிரெண்டென்ப" (13)**

என்ற நூற்பா வழி அறியலாம். கருத்து வேறுபாடு மிக்க நூற்பா இது. இளம்பூரணர் விளக்கம்: பாங்கரால் கூடும் கூட்டம் என 3-ம் வேற்றுமைப் பொருளில் கொள்ளப்படுகிறது. இவர் கருத்துப்படி 1. பிரமம் 2. பிரசாபத்தியம் 3. ஆரிடம் 4. தெய்வம் 5. கந்தர்வம் 6. உடன்போக்கு 7. கற்பியல் இற்கிழத்தி 8. கற்பில் காமக் கிழத்தி 9. கற்பில் காதற்பரத்தை 10. அசுரம் 11. இராக்கதம் 12. பைசாசம் என்பன. நச்சினார்க்கினியர் கருத்துப்படி, 1. பிரமம் 2. பிரசாபத்தியம் 3. ஆரிடம் 4. தெய்வம் 5. முல்லை 6. குறிஞ்சி 7. பாலை 8. மருதம் 9. நெய்தல் 10. அசுரம் 11. இராக்கதம் 12. பைசாசம் என்னும் 12 இடங்களிலும் பாங்கன் துணையாகத் தலைவன் தலைவியர் கூட்டம் நிகழும் என்பர்.

வெள்ளை வாரணர்: 1. காட்சி 2. ஐயம் 3. துணிவு 4. வேட்கை 5. ஒருதலை உள்ளுதல் 6. மெலிதல் 7. ஆக்கம் செப்பல் 8. நாணுவரை இறத்தல் 9. நோக்குவ எல்லாம் அவையே தோழியிற் கூடிய தலைமகன் மணக்கும் வரையில் சொல்லும் பொருளை

**"இருவகைக் குறி பிழைப்பாகிய இடத்தும்" (14)**

என்று துவங்கும் நூற்பா தொகுத்துரைக்கிறது. அவ்விடங்களில் யாவை எனக் காண்போம். இருவகைக் குறி பிழைப்பாகிய இடம்: பகற்குறி, இரவுக்குறி என்னும் இருவகைக் குறி தவறிய இடத்துத் தலைவன் கூற்று நிகழும். தலைவன் தலைவி இருவரும் பிறரறியாமல் பகலிலும், இரவிலும் உரையாடுவதெற்கெனக் குறிக்கப்பட்ட இடமே குறி என்பது. இது இரவுக்குறி, பகற்குறி என இருவகைப்படும். பகற்குறி என்பது பகற்பொழுதில் தலைவி குறிப்பிட்ட இடத்தில் தலைமகன் வந்து கண்டு உரையாடுதல். இரவுக்குறி ஆவது மனையினுள் புகாமல், அம்மனையிலுள்ளோர் கூறும் சொற்களைக் கேட்கும் அணிமையில் அமைவது. இது இல்வரை இகவாதது. பகற்குறி ஊரின் மதில்புறமாய்த் தலைமகள் அறிந்து சேர்தற்குத் தகுதியுடைய இடம் ஆகும். அல்லக்குறி என்ற ஒன்றும் குறிப்பிடப்படுகிறது. அ∴தாவது இரவுக்குறியில் தலைவியைக் காண வருகின்ற தலைவன் நீர்நிலையில் கல் எறிதல் அல்லது பறவைகள் போல ஒலி எழுப்புதல் போன்ற செயல்களால் தன் வரவை அறிவிப்பான். இத்தகைய செயல்களைத் தலைவன் நிகழ்த்தாத போதும். தேங்காய் வீழ்தல், பனம்பழம் வீழ்தல் போன்ற இயற்கை நிகழ்ச்சிகளால் ஒலி எழுப்புவதும் உண்டு. இவ்வொலிகள் தலைவனால் எழுப்பப்பட்டவை எனத் தவறாக எண்ணித் தலைவி குறியிடம் வருவாள். தலைவன் இல்லாத வறுங்களம் கண்டு வருந்திச் சென்றுவிடுவாள். பின்பு தலைவன் வந்து உண்மையான ஒலிகளை எழுப்ப, அது முன்னையது போன்றது என எண்ணிக் குறியிடம் செல்லாமல் இருந்து விடுவாள் தலைவி. வீட்டிலுள்ளோர் ஐயப்படுவர் என எண்ணியும் தலைவி வெளியில் வர தயக்கம் கொள்வாள். இவ்வாறு நிகழ்வதே அல்லகுறி

எனப்படும். அல்லக்குறியால் வருந்திய தலைவன் தான் வந்து சென்றததற்கு அடையாளமாகத் தன் மாலையை மரக்கிளையில் மாட்டி விட்டுச் செல்வதும் உண்டு. இத்தகைய சூழல்களால் வருந்திய தலைவன் தோழியைக் கண்ட இடத்து,“மழைவர வறியா மஞ்ஞையாலும் அடுக்கல் நல்லூர் அசைநடைக் கொடிச்சி தானெம் அருளாள் ஆயினும் யான் தன்னுள்ளுபு மறந்தறியோமே” (ஐங் : 598) என்று வருந்துவதைக் காணலாம். காணா வகையின் பொழுது நனி இகத்தல்: தலைவியைக் காணாமல் பொழுது நீட்டிக்கும் போது தலைவன் தனது வருத்தத்தைத் தோழியிடத்துக் கூறுவான். தலைவியின் அழகை நேரே அனுபவிக்க இயலாத தலைவன், அவளை மனத்தால் எண்ணிப் பார்க்க வேண்டிய நிலை ஆகிவிட்டதே என வருந்துகின்றான். குறுந்தொகை 286-ஆம் பாடலில்,“உள்ளிக் காண்பென் போல்” எனக் கூறுவதைக் காணலாம். இவ்வாறு பொழுது மிகக் கழிய, தலைவியைக் காண வேண்டும் என்ற ஆசையாம் குறியிடம் சென்று அங்கு அவளைக் காணாமையால் வருந்தி, வேட்கை காரணமாக மயங்கிக் கையற்ற நிலையிலும் கூற்று நிகழுதல் உண்டு. தலைவியின் வீட்டினுள் நுழைவதற்குப் பொருந்தாத காலத்தில் நுழைந்து தலைவியை எதிர்ப்பட்ட பொழுது அங்குள்ளவர்களால் விருந்தினனாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சூழலில் கூற்று நிகழும் இந்நிலையில் தலைவியும் தோழியும் தலைவனை விருந்து உபசரிப்பவர்களாக எதிர்கொள்ளும் போதும் கூற்று நிகழும் என்பதனை,

**“புகாஅக் காலைப் புக்கு எதிர்ப்பட்டுழிப்**

**பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்**

**வேளாண் எதிரும் கண்ணும்” (களவியல்16)**

என்ற நூற்பாவரிகள் உணர்த்துகின்றன. பொருள் தேடும் முயற்சியை எதிர்நோக்கி நெடுந்தூரம் செல்லும் பிரிவன்றி அண்மையில் பிரியும் பிரிவில் தலைவன் தலைவியிடம் பேசுவதை: “இன்றே சென்று வருவது நாளைக்---- - ----சின்னிரை வால்வளைக் குறுமகள் பன்மாண் ஆகாம் மணந்துஉவக் கும்மே” (குறுந் : 189) என்ற பாடல் உணர்த்துகிறது. நாணு நெஞ்சு அலைப்ப விடுத்தற் கண்ணும் கூற்று நிகழும். அதாவது நாணம் தலைவியின் நெஞ்சினை வருத்த அதனை நீக்க முயலும்போது கூற்று நிகழும். தலைவியைத் திருமணம் செய்து கொள்ளும்படித் தோழி வேண்டிய பின்னரும் தலைவன் களவொழுக்கம் வேண்டிக் கூறுவான். அல்லது தோழியின் சொற்களைக் கேட்டுத் திருமணம் செய்ய உடன்பட்ட போதும் தலைவன் கூற்று நிகழும். ஆங்கு அதன் புறத்து குற்றம்பட வந்த அலரை மறுத்துக் கூறும்போதும் தலைவன் கூற்று நிகழும் என்பர் தொல்காப்பியர்.(களவியல் : 17)

**தலைமகளின் கூற்றும் இயல்பும்**: நாணமும் மடனும் பெண்மைக்குரிய சிறப்பியல்புகள் இவை தலைவியிடம் நிலைத்து நிற்பவை ஆதலால் தலைவி தன் வேட்கையை வெளிப்படுத்த இயலாதவள் ஆகின்றாள். எனவே குறிப்பினாலோ இடத்தினாலோ அல்லாமல் வேட்கை புலப்படாது என்பதை

**“காமத் திணையிற் கண்நின்று வரூஉம்**

**நாணும் மடனும் பெண்மையை ஆகலின்**

**குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை**

**நெறிப்பட வாரா அவள்வயின் ஆன” (17)**

“உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல் கண்டார்மகிழ் செய்தல் இன்று” (குறள் : 1090) என்று எண்ணுவதைக் குறள்வழி உணரலாம். வேட்கை உள்ளபோதும் நாணமும் மடமும் தலைவியை விட்டு நீங்காதோ என்றால், வேட்கை உரைக்காத கண்கள் உலகில் இல்லை. எனவே வேட்கை காரணமாக அச்சம் மட்டுமே தலைவியை விட்டு நீங்கும் நாணும் மடனும் நீங்கா. நூணும் மடனும் இல்லாத தலைவியை உயர்ந்தோர் மதியார் ஆதலால் நாணமும் மடனும் பாதுகாவலாக தலைவி குறிப்பினால் வேட்கையை உணர்த்துவாள்.

**“காமஞ் சொல்லா நாட்டம் இன்மையின்**

**ஏமுற இரண்டும் உளவென மொழிப” (18)**

தலைவியிடம் ஒரு கூற்றுச் சொல் நிகழுமிடம்: உடன்படும் வேட்கை உடையவள் தலைவி என்றாலும் அத்தன்மையைத் தலைவனுக்குப் பதிலாகக் கூறாள். பதில் கூறுதல் அருமை. எனவே உடன்பாடல்லாத கூற்று மொழியே தலைவிமாட்டு நிகழும்.

**“சொல்லெதிர் மொழிதல் அருமைத்து ஆகலின்**

**அல்ல கூற்றுமொழி அவள்வயினான” (19)**

களவில் தலைவி கூற்று நிகழும் இடங்கள்: களவில் இடம்பெறுகின்ற தலைவி கூற்றுகள் அமைத்தும் தலைவியின் வேட்கையைப் புலப்படுத்தும் நிலையில் அமைந்தயையே ஆகும். வேட்கையினை வெளியிட்டு உரைக்கும் நிலையில் தோன்றுவன அல்ல. எனவே களவொழுக்கத்தின் போது தலைவியின் உள்ள நிகழ்ச்சிகளும் நூற்பாவின் தொகுத்துரைக்கப்பட்டுள்ளன.

**“மறைந்தவற் காண்டல் தற்காட்டுறுதல்” (20)**

எனத் துவங்கும் நூற்பாவில் கருத்துக்கள் தொகுத்துரைக்கப்படுகின்றன. தன்னைத் தலைவன் காணாமல் தான் அவனைக் காணுதல், தலைவன் தன்னைக் காணுமாறு நிற்றல், மிகுதியான வேட்கையால் தலைவன் கூறிய சொற்களைக் கேட்டு எதிர்மொழி கூறாது நிற்றல் ஆகிய இம்மூன்று இடங்களிலும் தலைவியின் கூற்று நிகழாது. இவ்வாறு கூற்று நிகழாமையின்போது நடைபெறுவன: தலைவியின் வேட்கைக் குறிப்புக் கண்டு, தலைவன் தலைவியை நெருங்கி வரும்போது அதற்கு உடன்படாது மறுத்து நிற்றல். இது கூற்றினும் குறிப்பினும் நிகழும். மறுத்த நிலையை விடுத்துப் பின் ஏற்றுக்கொள்ளுவான். பின்னர் புணர்ச்சிக்கு உடன்பாடு காட்டும்

நிலையில் தலைவனைப் பார்த்து புன்சிரிப்பு காட்டுவாள். இவை அனைத்தும் புணர்ச்சிக்கு முன் நிகழ்பவை ஆகும். இனி, தலைவி தன் தோழியிடம் கூற்று நிகழ்த்துமாறு காண்போம். தலைவன் கையகப்பட்ட பின்பு என்ன செய்துவிட்டோம் எனக் கலக்கமும் வேளையில் தோழியிடம் கூறுவாள்"“மையல் யானையின் மருட்டலும் மருட்டினான் அதனால், அல்லல் களைந்தனள் தோழி” (கலித்:54) நாணம் மிகுதிப்பட்ட இடத்தும் தலைவன் பிரிவான் என அஞ்சி அதற்கு இரக்கமுறுகின்ற போதும் கூற்று நிகழும். “அம்ம வாழி தோழி காதலர் பாவையன்ன என் ஆய்கவின் தொலைய நல்மா மேனி பசப்பச் செல்வோம் என்பதம் மலைகெழு நாட்டே” (ஐங்:221) தலைவன் தலைவியைக் காண வருவதற்கு இயலாதப்படி காவல் செய்த வேளையிலும் அவனும் வருதலைத் தவிர்த்த போதும் கூற்று நிகழ்த்துவான். தலைவன் வந்த போது அலராகும் என் அஞ்சி இகழ்ந்த போதும், தன்னிலையை மறையாமல் சொல்லி இரங்கும் போதும், தலைவன் தன்னைத் தெளிவிக்க, அதனை ஏற்றுக் கொள்ளாது நொந்து கொண்ட இடத்தும், தலைவன் பிரிதலின்போது கலக்கம் அடையும் வேளையிலும், தலைவனைப் பெற்று மகிழும் போதும் தோழியிடத்துத் தலைவி கூற்று நிகழ்த்துவான். தலைவன் தன்னைக் காண வருவதற்கு இடையூறாகக் காவலர் ஊரைச் சுற்றி வர, தலைவனது வருகை அரிதாகும் என்று தோழி கூறு அதற்குப் பதில் கூறுமிடத்துத் தலைவி பேசுவதைக் காணலாம். இவையே தலைவி தோழியிடத்துக் கூற்று நிகழ்த்துகின்ற இடங்களாகும். இவையே அன்றித் தலைவி மனையகப்பட்டு வெளியில் செல்ல முடியாத நிலையில் இற்செறிக்கப்படுகின்றாள். அப்போது தலைவனைக் காண முடியாதே என்று மனம் கலங்கி,“அருமறைப்பொருள்” ஆகிய வேட்கையைத் தோழியிடம் கூறுவாள். இவையெல்லாம் இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்பு நிகழ்வன ஆகும். குறியிடம் பிழைத்த இடத்து தலைவி கூற்று: களவொழுக்க நிலையிலுள்ள தலைவி தன்னைப் பிறர் வரைவு செய்ய வேண்டி வந்தால் அதனை மாற்றுவதற்கு முயன்று கூற்று நிகழ்த்துவாள். “அன்னை வாழிவேண்டு அன்னை புன்னை பொன்நிறம் விரியும் பூக்கெழு துறைவனை என்னை என்றும் யாமே, இவ்வூர் பிறிதொன்றாகக் கூறும் ஆங்கும் ஆக்குமோ? வாழிய பாலே” (ஐங் : 110) என்ற பாடலில் காணலாம். மேலும் தலைவனோடு தனக்குள்ள புணர்ச்சியினால் கண் சிவப்ப, நுதல் வியர்ப்பு முதலான வேறுபாடுகள் தன் மெய்யின்கண் நிகழ, அதனை ஏனையோர் அறியாதபடி தலைவி மறைக்க முற்படுவாள். பாலது ஆணையால்(ஊழ்) தனக்கும் தலைவனுக்கும் ஏற்பட்ட காதல் நிலையில் தலைவன் தன்னை மணந்து கொள்வதற்கு முன்வருதனைத் தெளிந்த தலைவி அருமை சான்ற எண்வகையினால் பெருமையுடைய இயல்பினளாகி நிற்கும்போது தலைவி கூற்று நிகழ்த்துவாள். அவ்வெட்டு வகையாவன மெய்ப்பாட்டியலில் கூறப்படும் “முட்டுவயிற் கழறல், முனிவு மெய்நிறுத்தல் அச்சத்தின் அகறல், அவன் புணர்வு மறுத்தல் தூது முனிவின்மை, துஞ்சிச் சேர்தல் காதல் கைம்மிகல், கட்டுரை இன்மை” என்பனவாகும். முட்டுவயிற் கழறல்: நிலவு வெளிப்பாடு, காவலர் விரைதல், தாய் துஞ்சாமை போன்ற நிகழ்வுகளால் தலைவன்

குறியிடம் வருதல் தரைபட, இனி களவு ஒழுக்கம் இயலாது என எண்ணி, மணந்துகொள்ளும் வரையில் புணர்ச்சி விரும்பாமல் கலக்கமின்றித் தெளிவுடையளாதல். முனிவு மெய்ந்நிறுத்தல்: களவொழுக்கத்தினால் ஏற்பட்ட துன்பத்தைப் பிறர்க்கு வெளிப்படுத்தாமல் தனது உடம்பின்கண் மறைத்தும் நிறுத்தல். அச்சத்தின் அகறல்: குறியிடம் சென்றால் பிறர் அறிவரே என்ற அச்சத்தால் செல்லாமை அவன் புணர்வு மறுத்தல்: அச்சம் காரணமாக புணர்ச்சி மறுத்தல் தூது முனிவின்மை: ஆயினும் தலைவனிடமிருந்து வருகின்ற தூதுச் செய்திகளை வெறுக்காமல் கேட்டல். துஞ்சிசேர்தல்: மகிழ்வுடன் உறங்குதல் காதல் கைம்மிகல்: காதல் எண்ணம் மிகுதல் கட்டுரை இன்மை கூற்று இன்மை தலைவன் பொய்மையாக “மடலேறுவேன்” என்று தன்னை அச்சுறுத்திய போது குறியிடம் செல்லாள். அவளது கண்ணீரைத் தோழி துடைத்து ஆற்றுவாள். தலைவியின் வேறுபாட்டிற்கான காரணம் அறிய செவிலி வெறியாடல் நிகழ்த்துவாள். தலைவன் செய்த குறி அல்லக்குறி எனத் தெளிந்த தலைவி குறியிடம் செல்லாளாய் தோழியை நோக்கி,“அணிகடல் தண்சேர்ப்பன் தேர்ப்பரி மாபூண்ட மணியரவம் என்றெழுந்து போந்தேன் கனிவிரும்பும் புள்ளரவங் கேட்டுப் பெயர்ந்தேன் ஒளியிழாய் உள்ளுருகு நெஞ்சினேன் யான்” என தனது வருத்தத்தைக் கூறுவாள். தலைவன் தன்னைத் திருமணம் செய்து கொள்ளும் நாள் நெருங்கி வரும்போதும், களவினைப் பிறர் அறிந்து கொண்ட போதும், தலைவியை இற்செறித்த போதும் போன்ற இடங்களிளெல்லாம் தலைவி குறியிடம் செல்லாது தோழியிடம் கூற்றுரைப்பாள். தலைவன் எதிர்ப்படுதல் இல்லாத காலத்தில், தலைவி குறியிடம் வந்து, தலைவன் இல்லாத வறுங்களம் நோக்கி, இதற்குக் காரணம் தன் பிழையே என்று எண்ணி,“வந்தேன் கொடியனும் அல்லன், தந்த நீதவறு உடையயும்அல்லை, நின்வயின் ஆனா அரும்படர் செய்த யானே தோழி தவறுடை யானே” (அகம் : 72) என்று தோழியிடம் வருந்திக் கூறுவாள். இனிவரும் ஐந்து இடங்கள் தன்னிடத்து உரிமையும் தலைவனிடத்துப் பரத்தமையும் தோன்ற கூறும் கூற்றுகளாகும். தலைவன் கொடியன் என்று கூறிய போது, அவன் குற்றம் இல்லாதவன் எனத் தலைவி இயற்பட மொழிவாள். ‘‘---- கொடியன் ஆயினும் ஆக அவனே தோழி என்னுயிர்க் காவலனே” (ஐங் : 6) “விளைவாய் சிறுகிளி விழைதினை கடிய ஆரிருள் நடுநாள் வருதி சாரல் நாட வாரலோ எனவே” (குறுந் : 114) என்பன போன்று தலைவன் வரும் காலம் குற்றமுடையது என்று கூறுகிறாள். தலைவனிடத்து காமம் மிக்கு விளங்கும் போதும், தலைவன் தலையளி மிகும்போதும், தலைவன் தன்னைத் திருமணம் செய்து கொண்டல்லால் தன்னைவிட்டு நீங்கான் என்ற பாதுகாவல் பொருந்திய மகிழ்ச்சி வந்தபோதும் தன்வயின் உரிமையும் அவன் வயின் பரத்தமையும் தோன்றத் தலைவி கூறுவாள். தலைவி தானே கூறும் காலம்: இயற்கைப்புணர்ச்சி புணர்ந்து நீங்குகின்ற தலைவன் இன்ன நாளில் மணந்து கொள்வேன் என்று கூறித் தோழியர் கூட்டத்திற்கு முயலாமல் பிரிந்தபோது, பிறருக்கு ஐயம் தோன்றாமல், அவன் வரும் வரையில் மறைத்து வாழ விரும்புவாள். எனினும் ஆற்ற இயலாது வருந்துவாள். இந்நிலையில் தலைவன் செவிலி முதலியவர்களைச்

சந்தித்தபோதும். இவ்வொழுக்கத்தினை நின் தோழிக்கு உரையெனத் தலைவன் கூறிய இடத்தும் தோழி களவைப் பற்றி வினவாதபோதும் தானே எடுத்துக் கூறுவாள்.

**“வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்**

**வரையா நாளிடை வந்தோன் முட்டினும்**

**உரையெனத் தோழிக்கு உரைத்தற் கண்ணும்**

**தானே கூறும் காலமும் உளவே”** (களவியல் :21)

எல்லாவற்றையும் விடச் சிறந்தது உயிர். அந்த உயிரைவிட நாணம் மகளிர்க்குச் சிறந்தது. நாணைவிடக் கற்புச் சிறந்தது என்று முன்னோர் கூறிய கூற்றினைக் கருத்திற்கொண்டு தலைவன் இருப்பிடத்திற்குச் செல்லுதலும், அங்குச் சென்று குற்றமற்ற சொற்களைச் சொல்லுதலும் பொருளிலக்கணம் ஆகும் என்று களவியல் நூற்பா 22 கூறுகிறது.

## தோழியின் கூற்றும் இயல்பும்

அகவாழ்வில் தோழியின் துணை இன்றிக் களவு ஒழுக்கம் நிகழாது. நீளாது. தலைவியின் நலனில் அக்கறை உடையவள் தோழி. இவள் செவிலியின் மகள் ஆவாள். தலைவியின் செயல்கள் அனைத்தும் நன்கு அறிந்தவள். உலகியல் மற்றும் உளவியல் அறிவு மிக்கவள் தலைவியின் தோழிமார் பலருள்ளும் தலைவியால் பெரிதும் நம்பப்படுபவள். விரும்பப்படுபவள். இத்தகைய தோழியின் கூற்று நிகழும் இடங்களை,

**“நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்”**எனத் துவங்கும் களவியல்: 23-ம் நூற்பாவில் தொகுத்து உரைக்கின்றார் தொல்காப்பியர். இந்நூற்பாவில் உயிர்தோழியின் செயல்களாக 32 எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவை நாற்றம், தோற்றம், ஒழுக்கம், உண்டி, செய்வினை மறைப்பு, செலவு, பயில்பு என்னும் ஏழினால், தலைவன் தலைவியரிடையே புணர்ச்சி நிகழ ்ந்துள்ளமையைத் தோழி அறிந்துகொள்வாள். அறிந்தபின்பு மெய்யாகவும், பொய்யாகவும், வழிநிலையிலிருந்து மாறாமலும் குற்றேவல் செய்யும் முறையில் தவறாமலும் பல்வேறு கவர்பொருள்படக் கூறித் தலைவியின் ஒழுக்கச் செயல்பாடுகளை ஆராய்வாள். நாற்றம்: தலைவன் கூட்டத்தால் தலைவி உடம்பில் வீசும் மலர் மற்றும் மன்மதச் சாந்தின் மணம் தோற்றம்: அழகு அல்லது பொலிவு ஒழுக்கம்: சிறுபிள்ளைத்தன இயல்புகள், செயல்கள் மாறி பெண் தன்மைக்கு ஏற்ப ஒழுகுதல் உண்டி: முன்பு உண்ணும் உணவின் அளவு குறைதல் செய்வினை மறைத்தல்: தலைவன் பற்றிய நினைவும் செயலும் பிறர்க்குப் புலனாகாதவாறு மறைத்தல். செலவு: முன்பு போல வேண்டியவாறு நடவாமல் அழகாக நடத்தல் பயில்பு: ஓரிடத்திலேயே பயிலுதல் இந்த ஏழு வகையாலும் தலைவன் தலைவி புணர்ச்சி உண்மையை அறிந்த பின்னர் கூற்று நிகழ்ந்துள்ளன. தனது குறையைச் சொல்ல வேண்டித் தன்னை எதிர்ப்படும் தலைவனிடத்தில் களவொழுக்கத்தினை அறிந்தும் அறியாதவள் போல மறைத்து, தலைவனது பெருமையினைக் கூறி அவன் குறிப்பினை மாற்றுவாள். ‘‘---- மீன்எறி பரதவர் மகளே: நீயே ---- கடுந்தேர் செல்வர்

காதல் மகளே” (நற் : 45) என்பன போல வரும். தலைவனிடம் உலகத்தார் மகள் கொள்ளும் முறைப்படி நீயும் மணந்து கொள்வாயாக என்று கூறுவாள். “இதனை உலகு உரைத்து ஒழித்தல்” என்பர் ˙ தொல்காப்பியர். இதற்கு தலைவன் கையுறை (பரிசு) யாகக் கொண்டு வரும் பொருளை மறுத்தல் என்றும் கூறுவர். சில இடங்களில் தலைவியின் அருமை கூறித் தலைவனை அகற்றுவாள். இவ்வாறு கூறியும் தலைவன் அங்கிருந்து அகலாமல் நின்றால், உன்னால் காதலிக்கப்பட்ட என் தலைவியிடம் சென்று அறிவித்துப் பின்னர் என்னிடத்து வா எனக் கூறுவாள். தலைவனே! நீ நேராகச் சென்று காதலை அறிவுறுத்தினாலும் அவள் அறியக் கூடிய பருவத்தினள் அல்லள் என்று தலைவியின் பேதைமைத் தன்மையை எடுத்துக் கூறி விலக்குவாள். “யானை உழலும் அணிகிளர் நீர்வரைக் கானக வாழ்க்கைக் கறவர் மகளிரேம் ஏனலுள் ஐய வரவு மற்று என்னைகொல் காணினும் காய்வர் எமர்” (திணைமொழி : 6) என்று தமர் வரவு அஞ்சித் தலைவனைப் புனம்விட்டுப் போகும்படி வேண்டுவாள். உன்னால் காதலிக்கப்பட்டவள் யாவன்? என வினவிய போது”இத்தன்மையன்‟ என்று தலைவி கூற அவளும் ‘‘இத்தன்மையள்‟ என இருவர் நிலையையும் ஒப்பிட்டுக் கூறுவாள் தோழி. யானை வந்ததா? மான் வந்ததா? என மாயம் செப்பி (ஒரு காரணம் காட்டி) வந்த தலைவனைத் தலைவி பொறுத்த காரணம் பற்றி எண்ணும்போது தோழி கூற்று நிகழும். தலைவன் குறிப்பு, தலைவி குறிப்பு, இருவரும் உள்ளபோது அவன் வரவு உணர்தல் என்ற மூவகையாலும் புணர்ந்தபின் தலைவனிடத்துத் தோழி பணிந்து நிற்கும் போது “இவளேநின் சொற்கொண்ட என்சொல் போது பசுநனை ஞாழல் பல்கிளை ஒருசிறைப் புதுநலன் இழந்த புலம்புமார் உடையள் உதுக்காண் தெய்ய உள்ளல் வேண்டும்” (குறுந்:81) தோழி உரையாற்றுகின்றாள். தலைவனிடத்து மனம் இரங்கிய தோழி தலைவியிடம் சென்று தலைவனது குறையை எடுத்துரைப்பாள். நாணம் மிகுதியினால் தலைவி தன் வேட்கையை தோழியிடம் ஒளித்து உடன்படாது நிற்பாள். அப்போது தோழி அவர்தம் புணர்ச்சியைத் தான் அறிந்தமையைக் கூற்றினாலும் குறிப்பினாலும் உணர்த்தி தலைவியை வேண்டி நிற்பாள். தோழி இவ்வாறு குறை நயந்தமையைத் தலைவி ஏற்றுக்கொண்ட போது அதனைத் தலைவனிடம் சென்று உரைப்பாள். “அன்னையும் அறிந்தனள் அலரும் ஆயின்று” என்பது போல களவு ஒழுக்கம் புறத்தார்க்குப் புலனாக அவர் அலர் தூற்றி நகைப்பர் என்று கூறுவாள். புணர்ச்சி விரும்பிய தலைவனுக்கு அதற்குரிய இடம் உணர்த்துவாள் தோழி, இரவு வருவானைப் பகல் வருக எனவும் பகல் வருவானை இரவு வருக எனவும் குறிபெயர்த்துக் கூறி வரைவு வலியுறுத்துவாள். தலைவன் புணர்ச்சி விரும்பாது பிரிய எண்ணிய போதும் தோழியின் கூற்று நிகழும். வேளாண்மைக்கு(உபசரிப்பு) உரிய இல்லற வாழ்வு நடத்தல் வேண்டும் என்று தோழி தலைவனிடத்து வேண்டி நிற்பாள். அல்லகுறி பட்டபோதும் தோழியின் கூற்று நிகழும் களவில் ஒருவழித் தணத்தலின் போதும், வரைவிடை வைத்துப் பொருள்காரணமாகப் பிரியும்போதும், புனத்திடைப் புணர்ச்சியின்றி நீங்கும்போதும் தலைவியைப் “பாதுகாத்துக்கொள்”

என்று ஓம்படைக் கூற்று நிகழ்த்துவாள். “மாமலை நாட மடமொழிதன் கேண்மை நீ மறவல் நெஞ்சத்துக் கொண்டு” (ஐந் ஐம்பது : 18) என்பது போல வரும். தலைவி கடுமொழி கூறித் தலைவனை இயற்பழித்த போது, தோழி தலைவியை அடைந்து தலைவன் அன்பும் அருளும் உடையவன்: உன்னைப் பாதுகாப்பான் என்று கூறி வற்புறுத்துவாள். “கோட்டுமா வழங்கும் காட்டக நெறியே” (ஐங்:282) என்பன போன்று தலைவன் வருகின்ற வழியின் தீமை அறிந்து அடைந்த மனக்கலக்கத்தாலும் கூற்று நிகழும். தலைவியின் இற்செறிப்பு கடுமை மிகுதியாகின்ற போது தோழி அதனை எடுத்து உரைப்பாள். “வேரல் வேலி வேர்கேட் பலவின் சாரல் நாட ---- சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கிவள் உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே” என்ற குறுந்தொகை 18ஆம் பாடல் கருத்து போலத் தலைவிக்குத் தலைவன் மீது காதல் மிகுதிபட, அதனைத் தலைவனிடம் எடுத்துக் கூறுவாள் தோழி. தோழி தலைவனிடம் அவனது நாடு, ஊர், இல்லம், குடிப்பிறப்பு, பண்புச்சிறப்பு போன்றவற்றின் சிறப்புமிகுதிகளை எடுத்துக் கூறிப் புகழ்ந்து, அதனால் நீ தலைவியை வரைந்து கொள்ள வேண்டும ் என வேண்டி நிற்பாள். தலைவியின் களவொழுக்கம் பற்றித் தாய்க்கு ஐயம் ஏற்பட, தோழி அது பொய் எனக் கூறி மறுத்து வேறோர் காரணம் காட்டிக் குறிப்பாக உணர்த்துவாள். “:வேங்கை நறுமலர் வெற்பிடை யாம்கொத்து மாந்தளிர் மேனி வியர்ப் மற்றாங்கு எனைத்தும் பாய்ந்தருளி ஆடினோம் ஆகப்பணி மொழிக்குச் சேர்ந்தனவாம் சேயரிக்கண் தாம்” (ஐந்திணை ஐம்பது:15) அனையாடியதால் கண்கள் சிவந்தன என்கிறாள். இவையேயன்றி, காவல் மிகுதி, காதல் மிகுதி, நொதுமலர் வரைவு, தலைவியின் செயல் மற்றும் உடல் வேறுபாடு கண்டு செவிலி வெறியாடும் இடத்தும், பிறர்வரைவு வந்த இடத்தும், தலைவன் வரைவு மறுத்த இடத்தும், தோழி அறத்தொடு நிற்கும் போது,தலைவனுக்கும், தலைவிக்கும், தனக்கும், குலத்திற்கும் பழி ஏற்படாத சொற்களைத் தாயிடத்தில் நயமாக எடுத்துக் கூறுவாள் தோழி. இவற்றுள் அறத்தொடு நிற்றல் என்பது, எளித்தல், ஏத்தல், வேட்கை உரைத்தல், கூறுதல், உசாவுதல், ஏதீடு தலைப்பாடு, உண்மை செப்பும் கிளவி என ஏழுவகைப்படும் என்று பொருளியல் 12ம் நூற்பா கூறுகிறது. தமர் வரைவு உடன்பட்டதைத் தோழி தலைவனிடத்துக் கூறும் போதும், வரைவு உடம்பட்டு பின்னர் காலம் நீட்டிக்க தலைவனிடம் கடுஞ்சொற் கூறி, வரைவு கடாவும் போதும், தலைவன் உடன்பட்ட தன்மையால் தலைவியை வற்புறுத்தும் போதும் தோழி கூற்று நிகழும் என 32 இடங்களைத் தொல்காப்பியர் தொகுத்துரைக்கிறார்.

## செவிலி இலக்கணம்

செவிலி என்பவள் தலைவிக்கு அன்னை போன்றவள். செவிலியின் தாய். நற்றாய்க்கு நல்ல தோழியாக விளங்குபவள். செவிலிக்கு பதின்மூன்று இடங்களில் கூற்று நிகழும் என்பதை
**“களவு அலராயினும் காமம் மேற்படினும்” (களவியல்:25)**என்ற நூற்பாவில் தொகுத்துரைக்கின்றார். தலைவன் தலைவியோடு கூடியொழுகும் ஒழுக்கம் அலராகிப் பழி ஏற்பட்ட இடத்து செவிலி

தோழியை அது குறித்து வினவுவாள். “எதின்மாக்கள் நுவறலும் வினவுவாள் அழிவ தெவன்கொல் இப்பேதை ஊர்க்கே” (குறுந் : 89) என வரும் பாடலடிகளைக் காண்க. தலைவியிடத்து பிறக்கும் வேட்கை மிகுதிப்பட்ட இடத்தும் தோழியை வினவுவாள். தலைவியின் உடல்வேறுபாடு கண்டு,“மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை அணியில் தகழ்வதொன் றுண்டு” (குறள் : 1273) என்று வினவுதல். பொதும்மைப் பருவத்தளாகிய தலைவியின் உடல் உறுப்புகள் புணர்ச்சி காரணமாக அளவில் பெரியதாகிய இடத்தும் அது குறித்துத் தோழியிடம் வினவுவாள். தலைவனோடு தலைவியை உடன்கண்ட இடத்தும், கட்டு மற்றும் கழங்கு வைத்து வினவியவழி அவர் கூறிய சொற்கேட்டும் தோழியிடம் விளக்கம் கேட்டாள். நற்றாய்யும் செவிலியும் தலைவியின் நிலைகுறித்து வெறியாடலை எண்ணிய போது தோழியிடம் கூற்று நிகழ்த்துவாள். தலைவன் மீது கொண்ட காதல் மிகுதியால் தலைவி கனவில் அரற்றுகின்ற போது செவிலி கூற்று நிகழும். மேற்கூறிய நிகழ்வுகளின் போது காரணம் அறிய செவிலி தோழியை வினவுவாள். இவை நிகழாதபோது வினவாள். இன்னின்ன தன்மையினால் தலைவியிடம் வேறுபாடு ஏற்பட்டது என்று தோழி உரைத்தபோது அச்செய்தியை நற்றாய்க்கும் தந்தைக்கும் எவ்வாறு கூறுவது என எண்ணி ஆற்றாதவளாகச் செவிலி தெய்வத்தை வேண்டுவாள். தலைவி தலைவனுடன் உடன்போக்கில் சென்றுவிட்டாள் என்பதனைத் தோழி வாயிலாக அறிந்த செவிலி அவர்களை இல்லறத்தில் நிறுத்தற் கண்ணும் கூற்று நிகழும். “நாலூர்க் கோசர் நன்மொழி போல வாயா கின்றே தோழி ஆய்கழல் சேயிலை வெள்வேல் விடலையோடு தோடுவளை முன்கை மடந்தையோடு நட்பே” (குறுந் : 5) இவையே அன்றித் தலைவன் வரைந்து கொள்ளாமல் பிரிந்து சென்ற வேளையில், அலர் ஆகுதலும் அன்றி, வேறுபாடும் இன்றி மனையிலே தனியளாக இருக்க, அவளது உள்ளக்கருத்து அறிதல் வேண்டி கூற்று நிகழும். உடன்போக்கிற்குத் தன்மகள் ஒருப்பட்ட போதும், தலைவன் குடிப்பெருமையும் தலைவியின் குடிப்பெருமையும் பொருந்துமா? என்று ஆராய்கின்ற போதும் செவிலியின் கூற்று இடம்பெறும்.

**நற்றாய் இலக்கணம்**

**“தாய்க்கும் வரையார் உணர்வு உடம்படினே” (26)**

என்ற நூற்பாவால் செவிலித்தாயின் உணர்வோடு உடம்பட்ட உள்ளம் நற்றாய்க்கு ஏற்பட்டால் செவிலிக்குக் கூறிய கூற்று நிகழுமிடங்கள் எல்லாம் நற்றாய்க்கும் பொருந்தும் என்றார். தலைவியின் வேறுபாடு அறிந்த நற்றாயும் செவிலியும் தமது மகள் தலைவனைப் பற்றி ஒன்றுமே அறியாதவள். எதற்கும் மயங்காத தலைவி இத்தலைவன் பொருட்டு மயங்கினாளே காரணம்

என்னவோ என்று உயர்ந்தோரிடம் வினவுவர். அவர்களும் ஐயம் ஏற்பட்டும் வண்ணம் பதில் உரைக்க, நற்றாயும் செவிலியும் உண்மை உணர்வர் என்பதனை,

**“கிழவோன் அறியா அறிவினள் இவளென**

**மையறு சிறப்பின் உயர்ந்தோர் பாங்கின்**

**ஐயக் கிளவியின் அறிதலும் உரித்தே” (27)**

என்று கூறியுள்ளார். “ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின் தாயெனப் படுவள் செவிலி ஆகும்” என்ற நூற்பா செவிலியின் சிறப்பினை உணர்த்துகிறது. தலைவிக்குரிய இலக்கணம் தலைவி தனது வேட்கையைத் தலைவன் முன்னிலையில் சொல்லுவது கிடையாது. அங்ஙனம் சொல்லா இடத்தும் புதிய மண்பானையில் ஊற்றப்பட்ட நீர்போல, புறங்கசித்து வேட்கை உணர்வானது வெளிப்படும் என்று,

**“தன்னுறு வேட்கை கிழவன் முன் கிளத்தல்**

**எண்ணுங் காலைக் கிழத்திகு இல்லைப்**

**பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்**

**பெய்ந்நீர் போலும் உணர்விற்கு என்ப” (28)**

உணர்த்தியுள்ளார். எனவே தலைவியிடம் வேட்கை குறிப்பினால் வெளிப்படுமே அன்றி வெளிப்படையாக எடுத்துக் கூறப்பெறாது என்பது பெறப்படும். இயற்கைப் புணர்ச்சியாகிய கூட்டம், கூட்டிவைப்பார் யாருமன்றி நாமே கூடினோம் என்ற தனிமை உணர்வு தோன்றிய போது, இருவரும் தத்தமது உள்ளக் கருத்தைப் புலப்படுத்தும் தூதுவராக அமைவர் என்று களவியல் 29ம் நூற்பா உணர்த்துகிறது.

இயற்கைப் புணர்ச்சியின் பின்பு தலைவன் கூறிய எல்லையைக் கடத்தல் தலைவிக்கு அறம் ஆகாது. எனவே குறியிடம் கூறுதல்(களம் சுட்டும் கிளவி) தலைவிக்கே உரியது என்பர். **“தோழியின் முடியும் இடனுமார் உண்டே” (31)**என்பதால் தோழி கூறுவது மரபாகும். பாங்கற் கூட்டம் நிகழும் இடம்: பாங்கன் துணையின்றித் தலைவனுக்குக் களவில் புணர்ச்சி நிகழாது. பாங்கி அல்லது தோழியின் துணையின்றித் தலைவிக்கும் நிகழாது. தலைவன், தலைவி, தோழி அல்லது பாங்கன் ஆகிய மூவர்தம் மதியினையும் (அறிவு) ஒன்றுபடுத்தியே தலைவன் தலைவி புணர்வு நிகழ்தலால் இதனை “மதி உடம்படுதல்” என்பர் தொல்காப்பியர். எனவே குறையற உணர்தல், முன்னுற உணர்தல் மற்றும் இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல் என்னும் மூவகையால் புணர்ச்சியை உணர்ந்த பின் அல்லாமல், இரந்து நிற்கும் தலைவனது விருப்பத்தை மட்டும் ஏற்றுப் புணர்ச்சிக்குத் தலைவி உடன்பட்டாள். தலைவியை”இப்படிச்சொல்““இப்படி வா“ என்று தோழியர் கூட்டத்தினின்று தனியே பிரித்து நிறுத்தி, அதன் பின்னரே தலைவியைத் தலைவனோடு கூட அனுமதிப்பாள் தோழி.

**குறியிடம்:**

**“குறி எனப்படுவது இரவினும் பகலினும்**

**அறியக் கிளந்த ஆற்றுது என்ப”** (10)

என்பதால் தலைவன் தலைவி பகற்பொழுதிலும், இரவுப்பொழுதிலும் சந்திக்கும் இடமே குறி எனப்படும் என்பது தெரிகிறது. இது பகற்குறி, இரவுக்குறி என இருவகைப்படும். இல்லத்தின் எல்லைக்குள்ளும் மனையின் அகத்துள்ளோர் பேசுவது கேட்கும் அளவு உள்ள தொலைவில் இரவுக்குறி இடம் அமைதல் எனப்படும். பகற்குறிக்கான இடம் எயிலின் புறமாக, தலைவி அறிந்த இடமாதல் வேண்டும். தலைவன் செய்த குறி தவறிவரின் அது அல்லக்குறி எனப்படும்.

**தலைவன் இயல்பு**: ஓரையும் (முகூர்த்தம்) நாளும் துறந்து ஒழுகும் ஒழுக்கம் தலைவனுக்கு இல்லை, வழியினது அருமை, மன்னன் அழிவு, அஞ்சுதல், இடையூறு ஏற்படுமே என்று கலங்குதல் போன்றவை தலைவனுக்கு இல்லை(களவியல்:46) இவை தலைவிக்கும் தோழிக்கும் உண்டு. தந்தை, தன்னை போன்றோர் களவொழுக்கத்தைக் குறிப்பினால் உணர்வர். செவிலி நற்றாய்க்கு உணர்த்த(அறத்தொடு நிற்க) நற்றாய் உணர்வாள். களவை வெளிப்படுத்துவதன் அலரும் அம்பலும் ஆகும். அதற்குக் காரணம் தலைவனே ஆவான். இந்நிலையில் வரைவு(திருமணம்) களவு வெளிப்பட நடத்தல், வெளிப்படாது நடத்தல் என இரண்டு வகைப்படும். ‘அறத்தோடு நிற்றல்’ எனும் துறை களவொழுக்கம் நிலையில் காப்பு மிகுதி, காதல் மிகுதி, நொதுமலர் வரைவு மற்றும் தமர் வரைவு மறுத்தல் போன்ற காரணங்களால் தலைவி உடல் மெலிந்து காணப்படுவாள். அதற்குரிய காரணம் அறிய வேண்டி செவிலி கட்டுவிச்சியை அழைத்துக் குறி கேட்பாள். வேலனை அழைத்து வெறியாடலை நிகழ்த்துவாள். சில வேளைகளில் தலைவன் சுற்றத்தார் அல்லாத பிறர் தலைவியைப் பெண் கேட்டு வருவர். இத்தகைய சூழல்களில் தலைவியைப் பாதுகாக்க விரும்புவாள் தோழி. எனவே முன்னிலை வகையினாலோ அன்றி அறத்தோடு நின்றோ தலைவனுக்கும் தலைவிக்கும் தனக்கும் தங்கள் குலத்திற்கும் பழி ஏற்படாதவாறு தலைவியின் களவொழுக்கச் செய்தியைச் செவிலித் தாயிடம் நயமாக எடுத்துரைப்பாள். இதுவே “அறத்தோடு நிற்றல்” ஆகும்.

அறத்தோடு நிகழ்வு நிலை ஏழு வகைப்படும். **எளித்தல்:** தலைவன் நம்மிடத்து எளியவனாக நடந்து கொள்கிறான் என்று கூறுதல். “தொடலை ஆயமொடு கடலுடன் ஆடியும் சிற்றில் இழைத்தும் சிறுசோறு குவைஇயும் வருந்திய வருத்தம் தீர யாம் சிறிது இருந்தனமாக எய்த வந்து” எம்மிடம் வந்து உணவு வேண்டினன் நாங்களோ,“இவை நுமக் குரிய அல்ல இழிந்த கொழுமீன் வல்சி” என்று கூறினோம் என்று கூறி அவன் தங்களை அன்புடன் பார்த்து நின்ற நிலையைத் தோழி எடுத்துரைப்பதை அகம்:110 ஆம் பாடலில் காணலாம். “ஒண்செங் கழுநீர்க் கண்போல் ஆயிதழ் ஊசிபோசிய சூழ்செய் மாலையன் பக்கஞ் சேர்த்திய செச்சைக் கண்ணியன்”

(அகம்:18) என்று உயர்த்திக் கூறுதல். **வேட்கை உணர்த்தல்:** தலைவனிடத்துத் தலைவிக்குள்ள வேட்கையும் தலைவியிடத்துத் தலைவன் கொண்ட வேட்கையையும் கூறுதல். "நின் மகன் உண்கண் பன்மா ணோக்கிச் சென்றோன்" என்பது தலைவன் வேட்கையுரைப்பதாகும்."அன்னாய்வாழிவேண் டன்னை என்தோழி நனிநா ணுடையாள் எனினும் அஞ்சும் ஒலிவெள் ளருவி யோங்குமலை நாடன் மலா்ந்த மாா்பிற் பாயல் தவநனி வெய்ய நோகோ யானே"இது தலைவி வேட்கை கூறியது. **கூறுதல்**: தலைவியைத் தலைவற்கு மணம் முடித்துக் கொடுக்க வேண்டும் என்பது படக்கூறுதல். உசாவுதல்: வெறியாட்டு கழங்கும் நடைபெறும் போது வேலன் அல்லது பிறரிடத்து தோழி உரையாடுதல். "முருகயா்ந்து வந்து முதுவாய் வேல -------- விண்டோ் மாமலைச் சிலம்பன் தண்டா ரகலமும் உண்ணுமோ பலியே" என்று வேலனிடம் தோழி உசாவுகின்றாள். **ஏதீடு தலைப்பாடு**: யாதானுமோா் காரணத்தை முன்னிட்டுத் தலைவி தலைவனோடு உடன்பட்டாள் எனல். "காமா் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவென்" தலைவன் தாங்கள் நீா்விளையாடலின் போது வந்து உதவினான் எனல். உண்மை செப்பும். கிளவி: உள்ளதை உள்ளபடியே கூறுவது. "--வியன்மாா்பு முயங்காது கழிந்த நாள்இவள் மயங்கிதழ் மழைக்கண் கலுழும் கண்ணாய்" என்பன போன்று கூறுவது.

.இவ்வாறுதொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தில் அகத்திணையியல், புறத்திணையியலை அடுத்துள்ள களவியல்அகத்திணைகளில் ஒருதலைக் காதலாகிய கைக்கிளை, பொருந்தாக் காதலாகிய பெருந்திணை ஆகியவற்றை நீக்கி, அன்பின் ஐந்திணைகளை மட்டும் கூறுகின்றது.

**பயிற்சி வினாக்கள்:**

குறுவினாக்கள்

1. தலைமகன், தலைமகள் இலக்கணம் அல்லது அப்பண்புகளைச் சுட்டுக?
2. களவு என்பதற்கு இளம˙பூரணா் தரும் விளக்கம் யாது?
3. ஒத்த கிழவனும் கிழத்தியும்-விளக்குக?
4. எண் வகை மணங்களை விளக்குக
5. அம்பல், அலா் விளக்குக
6. மறையோா் தேயத்து மன்றல் எட்டு
7. மெய்யுறு புணா்ச்சிக்கு முன்னா் நிகழும் மெய்ப்பாடுகள் எவை?
8. ஐயம் நீக்கும் கருவிகள் யாவை?
9. “பாங்கா் நிமித்தம் பன்னிரெண்டென்ப”– விளக்குக?
10. களவொழுக்கத்தின்போது தலைவி கூற்று நிகழ்த்தாமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக

கட்டுரை வினாக்கள் :

1. களவிற்குரிய கிளவித்தொகையைத் தொகுத்துரைக்க
2. தோழியின் திறனைச் சான்றுடன் எடுத்துரைக்க
3. நற்றாய், செவிலி,தோழியின் இயல்புகளைத் தொல்காப்பியா் வழிப் புலப்படுத்துக
4. களவில் பிரிவின் வகைகளையும் ,இலக்கணத்தையும் வரையறுக்க .
5. உணா்த்த உணரும் ஊடற்குரிய கிளவிகளைத் தொகுத்துரைக்க
6. பகற்குறி இடையீட்டின் வகை ,விரிகளைப் புலப்படுத்துக .
7. இடந்தலைப்பாட்டின் வகை ,விரியினைத் தருக
8. களவியலில் இடம் பெறும் “குறியிடம்“ குறித்து எழுதுக
9. களவியலில் செவிலி கூற்று நிகழுமிடங்களைப் புலப்படுத்துக
10. பாங்கி மதி உடன்பாட்டின் வகைகளை மதிப்பிடுக

## அலகு:2கற்பியல்

### அகமரபில் கற்பு

கற்பியல் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் நான்காவது இயல் கற்பியல் ஆகும். இவ்வியல் கற்பு, கற்பு சார்ந்த ஒழுக்கங்களைப் பற்றி விளக்குதலால் கற்பியல் என்று அழைக்கப்பெற்றது. தொல்காப்பியர் இவ்வியலில் அமைந்துள்ள நூற்பாக்களின் வழி கரணம், அகமாந்தர் கூற்றுகள், பிரிவுகள், ஊடல், ஊடல் தணிக்கும் வாயில்கள் போன்றவற்றை விளக்கி உரைக்கிறார். கற்பென்று சொல்லப்படுவது கரணத்தோடு பொருந்தி மனைவியாகக் கொள்ளுவதற்குரிய மரபினையுடைய (தகுதி) தலைவியின் சுற்றத்தார் தலைவியைக் கொடுக்கக் கொள்வதாகும் எனபர் தொல்காப்பியர்.கரணம் என்பது வதுவைச் சடங்கு(திருமணச் சடங்கு) வதுை0வச் சடங்கு இல்லாமல் திருமணம் நிகழ்தல் இல்லை

### கற்பு மணம்

**"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்**
**கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குரிய மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே."**(1)

களவின்கண் ஒத்தாரிருவர் வேட்கை மிகுதியாற் கூடி ஒழுகிய வழிக் கரணத்தின் அமையாது இல்லறம் நடத்தலாமோ எனின் அ∴தாகாது என்றதற்குக் கரணமொடு புணர என்றார். கரணம் என்பது - வதுவைச் சடங்கு. கொளற்குரி மரபிற் கிழவோன். என்றதனால் ஒத்த குலத்தானும் உயர்ந்த குலத்தானும் என்று கொள்க. கொளற்குரி மரபிற் கிழத்தி என்றதனால், ஒத்த குலத்தாளும் இழிந்த குலத்தாளும் என்று கொள்க. கொடைக்குரி மரபினோர் என்றதனால், தந்தையும் தாயும் தன்னையரும் மாதுலனும் இவரில்லாதவழிச் சான்றோரும் தெய்வமும் என்று கொள்க. கொடுப்பக் கொள்வது கற்பு என்றமையால், அது கொடுக்குங்கால், களவு வெளிப்பட்ட வழியும், களவு வெளிப்படாத வழியும், மெய்யுறு புணர்ச்சியின்றி உள்ளப் புணர்ச்சியான் உரிமைபூண்ட வழியும் கொள்ளப் பெறும் எனக் கொள்க . களவியற் சூத்திரத்துள்,

**"இன்பமும் பொருளு மறனு மென்றாங் கன்பொடு புணர்ந்த". (களவியல்-1)**

என்பதனைத் தந்துரைத்து, ஐந்திணை மருங்கிற் கற்பெனப்படுவது எனக் கூட்டுக. அ∴தேல், கொடுப்பக் கொள்வது கற்பாயின் பிரமம் முதலிய எண் வகையும் கொள்க.

**“கொடுப்போரின்றியும் கரண முண்டே**

**புணர்ந்துடன் போகி காலை யான“**

என்னும் இது கற்பாகுமோ எனின்,அவையும் கற்பாதல் ஒக்குமேனும் காந்தருவம்போல ஒத்த அன்புடையார் ஆகல ஒருதலையன்மையின் கைக்கிளை பெருந்திணைப்பாற்படும். கரண நிகழ்ச்சி உண்டு. எனவே கற்பிற்குக் கரணநிகழ்ச்சி ஒருதலையாயிற்று. இதனானே கொடுப்போர் இல்வழியும் நிகழும் கரணநிகழ்ச்சி உண்மையும் ஒழுக்கக் குறைபாடு இன்மையும் கொள்க என்பர் இளம்பூரணர்,“பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு தொல்மூ தாலத்துப் பொதியில் தோன்றிய நாலூர்க் கோசர் நன்மொழி போல வாயா கின்றே தோழி யாய்கழற் சேயிலை வெள்வேல் விடலையொடு தொகுவளை முன்கை மடந்தை நட்பே”(குறுந்.15) இதனுள் விடலையொடு மடந்தைநட்பு பறைபடப் பணிலம் ஆர்ப்ப இறைகொண்டு நாலூர்க் கோசர் நன்மொழிபோல வாயாயிற்று எனச் செவிலி நற்றாய்க்குக் கூறினமையானும் விடலை எனப் பாலை நிலத்திற்குரிய தலைவன் பெயர் கூறினமையானும் கொடுப்போரின்றியும் கரணம் நிகழ்ந்தது வெளிப்பட்டு நிற்கும்.

**“மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணங்**

**கீழோர்க் காகிய காலமும் உண்டே.”**(3)

மேற் குலத்தாராகிய அந்தணர், அரசர், வணிகர் என்னும் மூன்று வருணத்தார்க்கும் புணர்த்த கரணம் கீழோராகிய வேளாண் மாந்தர்க்கும் ஆகிய காலமும் உண்டு. இதனாற் சொல்லியது, முற்காலத்துக் கரணம் பொதுப்பட நிகழ்தலின் எல்லாருக்கும் ஆம் என்பதும் பிற்காலத்து வேளாண் மாந்தர்க்குத் தவிர்ந்ததெனவுங் கூறியவாறு போலும். அஃதாமாறு தருமசாத்திரம் வல்லாரைக் கொண்டுணர்க என்பார் இளம்பூரணர்.

**“பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்**

**ஐயர் யாத்தனர் கரணம் என்ப”.** (4)2

பொய்கூறலும் வழூஉப்பட ஒழுகலும் தோன்றிய பின்னர் ஐயர் கரணத்தைக் யாத்தனர் என்று சொல்வர் தொல்காப்பியர்.

**கற்பில் தலைவன் கூற்று**

கற்பில் தலைவன் கூற்று நிகழும் இடங்களை பினவரும் நூற்பா விளக்கி உரைக்கிறது. தலைமகன் கூற்று நிகழ்த்தும் இடங்களாக 33 கூறப்படுகிறது.

**“கரணத்தின் அமைந்து முடிந்த காலை**
**நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சிக்கண்ணும்**
**எஞ்சா மகிழ்ச்சி இறந்துவரு பருவத்தும்**
**அஞ்ச வந்த உரிமைக் கண்ணும்**
**நன்னெறிப் படருந் தொன்னலப் பொருளினும்**

பெற்ற தேஎத்துப் பொருமையின் நிலைஇக்
குற்றஞ் சான்ற பொருளெடுத் துரைப்பினும்
நாமக் காலத் துண்டெனத் தோழி
ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்
அல்லல் தீர ஆர்வமோ டளைஇச்
சொல்லுறு பொருளின் கண்ணுஞ் சொல்லென
ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது
வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கென
அடிசிலும் பூவுந் தொடுத்தற்கண்ணும்
அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்
அந்தமில் சிறப்பிற் பிறர்பிறர் திறத்தினும்
ஒழுக்கங் காட்டிய குறிப்பினும் ஒழுக்கத்துக்
களவினுள் நிகழ்ந்த அருமையைப் புலம்பி
அலமர லுள்ளமொ டளவிய இடத்தும்
அந்தரத் தெழுதிய எழுத்தின் மான
வந்த குற்றம் வழிகெட ஒழுகலும்
அழியல்அஞ்சலென் றாயிறு பொருளினுந்
தானவட் பிழைத்த பருவத் தானும்
நோன்மையும் பெருமையும் மெய்கொள வருளிப்
பன்னல் சான்ற வாயிலொடு பொருந்தித்
தன்னி னாகிய தகுதிக் கண்ணும்
புதல்வற் பயந்தபுனிறுதீர்பொழுதின்.
நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி
ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியுஞ்
செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற் கண்ணும்
பயங்கெழு துணையணைப் புல்லிப் புல்லாது
உயங்குவனள் கிடந்த கிழத்தியைக் குறுகி
அல்கல் முன்னிய நிறையழி பொழுதின்
மெல்லன் சீறடி புல்லிய இரவினும்
உறலருங் குரைமையின் ஊடன்மிகுத் தோளைப்
பிறபிற பெண்டிரிற் பெயர்த்தற் கண்ணும்
பிரிவின் எச்சத்துப் புலம்பிய இருவரைப்
பரிவு நீக்கிய பகுதிக் கண்ணும்
நின்றுநனி பிரிவின் அஞ்சிய பையுளுஞ்
சென்றுகை இகந்துபெயர்த் துள்ளிய வழியுங்
காமத்தின் வலியுங் கைவிடின் அச்சமுந்
தானவட் பிழைத்த நிலையின் கண்ணும்

**உடன்சேறற் செய்கையொ டன்னவை பிறவும்**
**மடம்பட வந்த தோழிக் கண்ணும்**
**வேற்றுநாட்டகல்வயின் விழுமத்தானும்**
**மீட்டுவர வாய்ந்த வகையின் கண்ணும்**
**அவ்வழிப் பெருகிய சிறப்பின் கண்ணும்**
**பேரிசை யூர்திப்பாகர் பாங்கினுங்**
**காமக் கிழத்தி மனையோள் என்றிவர்**
**ஏமுறு கிளவி சொல்லிய எதிருஞ்**
**சென்ற தேஎத் துழப்புநனி விளக்கி**
**இன்றிச் சென்ற தன்னிலை கிளப்பினும்**
**அருந்தொழில் முடித்த செம்மற் காலை**
**விருந்தோடு நல்லவை வேண்டற் கண்ணும்**
**மாலை யேந்திய பெண்டிரும் மக்களுங்**
**கேளிர் ஒழுக்கத்துப் புகற்சிக் கண்ணும்**
**ஏனைய வாயிலோ ரெதிரொடு தொகைஇப்**
**பண்ணமைபகுதிமுப் பதினொரு மூன்றும்**
**எண்ணருஞ் சிறப்பிற் கிழவோன் மேன.**"(5)

கரணத்தினமைந்து முடிந்த பின்பு, நெஞ்சுதனை அவிழ்ந்த புணர்ச்சி முதலாக ஏனைய வாயிலோர் எதிரொடு கூடிப் பண்ணுதலமைந்த பகுதியினையுடைய முப்பத்தின் மூன்றிடத்தினும் கூறல் சிறப்பினையுடைய கிழவோன் மேலன ஆகும்.

ஆசான் புணர்ந்த கரணத்தினால் வதுவை முடிந்தபின் என்பதாம். தலைவியைத் தலைவன் கண்ணுற்ற காலத்து தலைவன்மாட்டு உளதாகிய பெருமையும் உரனும் தலைவிமாட்டு உளதாகிய அச்சமும் நாணும் மடனும் ஏதுவாக இயற்கைப்புணர்ச்சி இடையீடு பட்டுழி வேட்கை தணியாது வரைந்து எய்துங்காறும் இருவர்மாட்டும் கட்டுண்டு நின்ற நெஞ்சம் கட்டு விடப்படுதல். இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன் அலர் அறிவுறுக்கப்பட்டு நீங்கி வரைந்து எய்துங்காலும் புணர்ச்சி வேட்கையாற் செல்கின்ற நெஞ்சினை இருவரும் வேட்கை தோற்றாமல் தளைக்கப்பட்டதனைத் தளை என்றலும் ஒன்று ஆகும். "உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை ------- முயங்கல் விருப்பொடு முகம்புதை திறப்ப அஞ்சினள் உயிர்த்த காலை யாழநின் ------- அகமலி உவகையள் ஆகிமுகன் இகுத்து ஒய்யென இறைஞ்சி யோளே மாவின" (அகம் 89) இதனுள் முயங்கல் விருப்பொடு முகம்புதை திறப்ப அஞ்சினள் உயிர்த்தகாலை என்பதனால் இயற்கைப் புணர்ச்சி இன்மையும், அகமலி யுவகையாகி முகன் இகுத்து ஒய்யென விறைஞ்சி என்பதனால் உள்ளப் புணர்ச்சி உண்மையும் அறிக. ஒழியாத மகிழ்ச்சி மிக்கு வருங்காலத்துத் தலைவன்கண் கூற்று நிகழும்."குனிகாயெருக்கின் குவிமுகிழ் விண்டலோடு ------- பலபா ராட்டவும் படுவ மாதேர் கடைந்து கவித்தன்ன கால்வீங்கு கருங்கட் புடைதிரள் வனமுலை புலம்பல் அஞ்சிக் காமர் நுழை

நுண் நுசுப்பின் தாமரை முகத்தியைத் தந்த பாலே”. தலைவன் தானும் பிறரும் அஞ்சும்படியாகத் தலைவிமாட்டு உளதாகிய கற்பாகிய உரிமைக்கண்ணும் கூற்று நிகழும். நன்னெறிக்கண் செல்லும் தொன்னலப் பொருண்மைக் கண்ணும் கூற்று நிகழும்..நன்னெறியாவது அறம் பொருளின்பம் வழுவாத நெறி. தலைமகன் சிறப்புத் தொன்றுதொட்டு வருதலினால் குடிநலத்தைத் தொன்னலம் என்றார். இதனாற் சொல்லியது அறம் பொருள் இன்பங்களை வழாமல் தன் குலத்திற்கேற்ற மனைவாழ்க்கையைத் தலைமகள் நடத்துதற்கண்ணும் தலைவன் கண் கூற்று நிகழும். “தடமருப் பெருமை மடநடைக் குழவி ---- அட்டி லோளே அம்மா அரிவை எமக்கே வருகதில் விருந்தே சிவப்பாள் அன்று சிறியமுள் எயிறு தோன்ற முறுவல் கொண்ட முகங்காண் கம்மே.” (நற்றிணை. 120) இதனுள் ஊடற்குறிப்பினளாகிய தலைவி மனைவாழ்க்கைத் தருமமாகிய விருந்து புறந்தருதல் விருப்பினளாதலின் நன்னெறிப் படர்தல் ஆயிற்று.பெற்றதே எத்துப் பெருமையின் நிலைஇக் குற்றஞ்சான்ற பொருள் எடுத்துரைத்தல்: தலைவியை வரைந்து பெற்ற நிலையில் அவளை இல்லறத் தலைமையாகிய பெருமையின்கண்ணே நிறுத்திக் களவுக் காலத்துக் குற்றஞ்சான்ற பொருளை எடுத்துக் கூறுதல். “நுந்தை நன்னாட்டு வெந்திறல் முருகென நின்னோய்க் கியற்றிய வெறிநின் தோழி திருந்திழைப் பணைத்தோள் புணர்ந்துவந் ததுவே.” ( புறம் ) அச்சக்காலத்து நமக்குத்துணையாயிற்றெனத் தோழி ஏமுறு கடவுளை ஏத்துதற்கண்ணும் தலைவனுக்குக் கூற்று நிகழும்.தலைவி தன் துன்பந்தீர ஆர்வத்தொடு பொருந்தச் சொல்லப்பட்ட பொருண்மைக்கண்ணும் தலைவன் கூற்று நிகழும். அதாவது களவுக்காலத்து வருந்திய வருத்தந்தீரத் தனது காதல் மிகுதி தோன்றச் சொல்லுதற் பொருளின்கண்ணும் தலைவன் கூற்று நிகழும். “யாயும் ஞாயும் யாரா கியரோ எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர் யானும் நீயும் எவ்வழி அறிதுஞ் செம்புலப் பெயனீர் போல அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே” (குறுந்.40 ) சொல்லென ஏனது சுவைப்பினும் நீ கை தொட்டது வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கெனஇதற்குக் காரணம் சொல்லுவாயாக என்று அடிசில் தொடுத்தற்கண்ணும் பூத்தொடுத்தற்கண்ணும் கூற்று நிகழும்.

பார்ப்பார் கண்ணும் சான்றோர் கண்ணும் மிக்க சிறப்பினையுடைய பிறராகிய அவரவரிடத்தும் ஒழுகும் ஒழுக்கத்தைக் குறிப்பினால் காட்டிய இடத்தினும் கூற்று நிகழும். ஒழுக்கத்தினுங் களவுக்காலத்து நிகழ்ந்த அருமையைத் தனித்துச் சுழன்ற உள்ளத்தோடே உசாவிய விடத்தும் தலைவன் கூற்று நிகழும். களவுக்காலத்து ஒழுகிய ஒழுக்கக் குறைபாட்டான் நிகழ்ந்த குற்றத்தை ஆகாயத்து எழுத்துப் போல வழிகெட ஒழுகுதல் கண்ணும் கூற்று நிகழும்.அழியல், அஞ்சல் என இயற்கைப்புணர்ச்சிக்கட் கூறிய அவ் இருபொருளைப் பிழைத்த காலத்தினும் தலைவன்கண் கூற்று நிகழும். அதாவது, புறப்பெண்டிர் மாட்டுப் பிரிதல். “நகுகம் வாராய் பாண பகுவாய் அரிபெய் கிண்கிணி ஆர்ப்பத் தெருவில் தேர்நடை பயிற்றுந் தேமொழிப் புதல்வன் பூநாறு செவ்வாய் சிதைத்த சாந்தமொடு காம நெஞ்சந் துரப்ப யாந்தம் முயங்கல் விருப்பொடு

குறுகினேம் ஆகப் பிறவனப் புற்ற மாசறு திருநுதல் நாறிருங்கதுப்பினெங் காதலி வேறுணர்ந்து வெரூஉமான் பிணையின் ஒரீஇ யாரை யோவென்றுஇகந்துநின் றதுவே" (நற்றிணை - 250)

பொறுமை பெருமையும் மெய்யெனக் கொள்ளுமாறு அருளி ஆராய்தல் அமைந்த வாயிலொடு பொருந்தித் தலைவன் தன்னான் ஆகிய தகுதிக்கண்ணும் கூற்று நிகழும். அதாவது பொறுத்தல் வேண்டும் எனவும் சிறுமை செய்தல் குற்றம் எனவும் கூறுதலும், தலைமகள் தன்னால் வந்ததனை என்னால் வந்தது நீ என் செய்தனை? இவள் வெகுள்தற்குக் காரணம் என்னை? என ஆராய்தலிற் பொருந்திய தோழி என்பதாம். "யாரினுங்காதலம் என்றேனா ஊடினாள் யாரினும் யாரினும் என்று." (குறள்.1314)அச்சம் தோன்றும் காலத்தில் நமக்குத் துணையாக அமைந்தது என தோழி ஏமுறு கடவுளைப் போற்றும் போது தலைமகன் கூற்று நிகழும். பொறுத்தல் வேண்டும் எனவும், சிறுமை செய்தல் குற்றம் எனக் கூறும்போதும், ஊடல் தீர்க்கும் வாயிலாகிய தோழி, தலைமகனிடம் நீ செய்த குற்றம் என்ன? தலைவியின் வெகுளிக்குக் காரணம் என்ன? என்று வினவும் போது தலைவன் கூற்று நிகழும். "தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல் எம்மை மறைத்தீரோ என்று""கோட்டுப் பூச்சூடினும் காயும் ஒருத்தியைக் காட்டிய சூடினீர் என்று" என்ற குறட்பாக்களைச் சான்றாகக் கொள்ளலாம்.

தலைவி களவு காலத்தில் ஏற்பட்ட துன்பம் தீர, ஆர்வமுடன் தலைமகனை நெருங்கித் தனது காதல் மிகுதி தோன்றச் சொல்லும் போது தலைமகன் மகிழ்ந்தது. "யாயும் ஞாயும் யாராகியரோ எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர் யானும் நீயும் எவ்வழி அறிதும் செம்புலப் பெயல்நீர் போல அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே (குறுந் : 40) என்பது போல கூற்று நிகழ்த்துவான். ஏதாவது உணவினை உண்ணும் போது நீ கை தொட்டால் அது எனக்கு வானோர் அமிழ்தம் போல் உள்ளது. இதற்குக் காரணம் என்ன என்று உணவு உண்கின்ற போதும், தலைவி பூ தொடுக்கும் போதும் தலைவன் கூற்று நிகழும்.இயற்கைப் புணர்ச்சிக் காலத்தில் தலைவியிடம் மனம் வருந்தாதே, அஞ்சாதே என்று கூறிய தலைமகன் இவ்விரண்டினும் மீறித் தவறு செய்து புறப்பெண்டிரிடம் பிரிந்து சென்று மீண்டும் வந்து ஊடல் தீர்க்கின்ற வேளையில் பாணனை நோக்கி,,,நகுகும் வாராய் பாணி ------- முயங்கால் விருப்பொரு குறுகினோம் ஆகப் ------- வேறு உணர்ந்து வெரூஉ மான்பிணையின் ஓரீஇ யாரையோ என்று இகழ்ந்து நின் றதுவே" (நற் : 250) என்று கூறுகிறான்.

புதல்வனைப் பெற்று சில நாட்கள் கழிந்த பின்னர் நெய்யணி அணிந்து நீராடிய தலைவியைக் குறித்த முனிவர் இடத்து அமரரைக் குறித்து செய்கின்ற சிறப்புகளைக் கூறுமிடத்து தலைமகன் கூற்று நிகழும். தலைமகன் பரத்தையிடம் பிரிந்தபோது தலைவி ஊடல் கொள்கிறாள். ஊடல் வருத்தம் மிகுதியால் தலையணையை அணைத்துக் கொண்டு படுக்கையில் கிடக்கிறாள். அப்போது தலைமகன் தலைவியின் மென்மையான பாதங்களைப் பிடித்து இரத்தலின்

போது கூற்று நிகழும் என்பதை,“பயங்கெழு துணையனைப் புல்லிப் புல்லாது உயங்குவனள் கிடந்த கிழத்தியைக் குறுகி அல்கல் முன்னிய நிறையழி பொழுதின் மெல்லென சீறடி புல்லிய இரவினும்” என்ற தொல்காப்பிய வரிகள் உணர்த்துகின்றன. ஊடல் கொண்டவளை அடைவதற்கு ஏதுவாகப் பிறபிற பெண்டிரைக் காட்டித் தலைமகன் ஊடலை உணர்த்தும் போதும்,

பிரிவு காரணமாக வருந்திய மனையாளையும் காமக் கிழத்தியையும் அவ்வருத்தத்தினின்று நீக்கிய பொழுதினும், நீண்ட நாள் பிரியும் பிரிவை எண்ணி அஞ்சிய துன்பத்தின் போதும்,காமக்கித்தியும் மனைவியும் தலைவனிடம் நீவிர் சென்ற அருஞ்சுரத்தில் மிக்க துன்பம் அடைந்தீரோ? என வினவும் போதும், இவ்விருவரும் இல்லுறை மகளிராதலின், தலைவன்மாட்டு நிகழுமவை “இருவருக்கும் பொருந்தும். எரிகவர்ந் துண்ண என்றூழ் நீளிடை கடுமான் திண்டேர் கடைஇ நெடுமா னோக்கிநின் உள்ளியாம் வரவே.” (ஐங்குறு.360) பெண்டிரல்லாத வாயில்களாவார், எதிர்கொண்ட போதும் தலைமகனின் கூற்று நிகழும் என்று தொகுத்து உரைக்கப்பட்டுள்ளது முன்னொருகால் சென்று, மீண்டும் அவ்வழியே போக நினைத்த போதும் பொருளை விடக் காமம் வலிமையானது என்று எண்ணும்போதும், பிரிந்த காலத்து மனைவியின் உயிர் போய்விடுமோ என்று அஞ்சுகின்ற போதிலும், தலைவன் தலைவியிடத்து “உன்னை ஒரு போதும் பிரியேன்” என்று முன்பு சொன்ன வாக்கினின்று தவறிப் பிரிய நேரிட்ட போதும் தலைவன் கூற்று நிகழும்.

தலைவி தானும் உடன்வருவேன் என்று கூறிய போது,“எவ்வளை எம்மொடு நீவரின் யாழநின் மெல்லியல் மேவந்த சீறடித் தாமரை அல்லிசேர் ஆயிதழ் அரக்குத் தோய்ந் தலைபோலக் கல்லுறின் அவ்வடி குறுக்கு அல்லவோ” (கலித் : 13) என்று தலைவியை ஆறுதல்படுத்தும்போதும் கூற்று நிகழ்த்துவான்.தலைவியை உடன் அழைத்துச் செல்க என்று தோழி கூறிய இடத்து அது எவ்விதத்திலும் முறையன்று என்று தலைமகன் கூறுவான். வேற்றுநாட்டுக்குப் பிரிந்து செல்ல வேண்டியபொழுது போவோமா அல்லது தவிர்வோமாக என்று எண்ணும்போதும் தலைமகன் கூற்று நிகழும்.பிரிந்து சென்ற தலைமகன் தான் சென்ற நிகழ்ச்சிக் கண் மிக்க சிறப்பு அடைந்த இடத்தும்,“செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு நறுமென கூந்தல் மெல்லணை யேமே” (குறுந். 270) - இது வந்து புகுந்த தலைவன் கூற்று. தலைவன் பிரிந்த வழிப் பெருகிய “சிறப்பினும் கூற்று நிகழும். கோடல் எதிர்முகைப் பசுவீ முல்லை நாறிதழ்க் குவளையொ டிடைப்பட விரைஇ ஐதுதொடை மாண்ட கோதை போல நறிய நல்லோள் மேனி முறியினும் வாயது முயங்குகம் இனியே” (குறுந். 62) தான் அடைந்த இன்பத்தினைத் தேர்ப்பாகனிடத்துக் கூறும் போதும், மறத்தற் கரிதால் பாக பன்னாள் “வறத்தொடு பொருந்திய உலகுதொழிற் கொளீஇய -------- மடமா அரிவை மகிழ்ந்தயர் நிலையே”. (நற்றிணை.42)

தான் சென்ற தேயத்து வருத்தத்தை மிகவும் விளக்கித் தலைவியை ஒழித்துச் சென்ற தன்னிலை கிளப்பினும் தலைவனுக்குக் கூற்று நிகழும். “ஒழித்தது பழித்த நெஞ்சமொடு வழிப்படர்ந்து உள்ளியும் அறிதிரோ எம்மென யாழநின் முள்ளெயிற்றுத் துவர்வாய் முறுவல் அழுங்க நோய்முந் துறுத்து நொதுமல் மொழியல்நின் ஆய ˙நலம் மறப்பேனோ -------- போற்றா யாகலின் புலத்தியால் எம்மே”. (அகம் . 39) அரிய வினையை முடித்து வந்த தலைமைக் காலத்து விருந்தினரோடு கூட நல்லவற்றைக் உரைத்தற்கு விருப்பமுறும் பொழுதும் தலைவனுக்குக் கூற்று நிகழும். தலைவனை எதிர்கொண்டு மங்கலமாக மாலையேந்தி நின்ற பெண்டிரும் மக்களும் கேளிரும் ஒழுகும் ஒழுக்கத்து விருப்பத்தின்கண்ணும் கூற்று நிகழும். “உள்ளினென் அல்லனோ யானே உள்ளி ˙ மனைப்பெருங் காமம் மீண்டுகடைக் கொளவே” (குறுந்.99 )பெண்டிரும் அல்லாத வாயில்களாயினார் எதிர் கூறும் கூற்றும் தலைவன் மாட்டு நிகழும். இவ்வாறு உரைக்கப்பட்ட முப்பத்து மூன்றிடத்தினும் நிகழும் கூற்று மிக்க சிறப்பினையுடைய தலைவன் மேலன ஆகும்.

## கற்பில் தலைவி கூற்று

கற்பில் தலைவி கூற்று நிகழும் இடங்களைக் கீழ்க்கண்ட நூற்பா விரித்துரைக்கின்றது.

**“அவனறிவாற்ற அறியும் ஆகலின்**
**ஏற்றற் கண்ணும் நிறுத்தற் கண்ணும்**
**உரிமை கொடுத்த கிழவோன் பாங்கின்**
**பெருமையில் திரியா வன்பின் கண்ணும்**
**கிழவனை மகடூஉப் புலம்புபெரி தாகலின்**
**அலமரல் பெருகிய காமத்து மிகுதியும்**
**இன்பமும் இடும்பையும் ஆகிய இடத்துங்**
**கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி**
**நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறீஇ**
**நளியி னீக்கிய விளிவரு நிலையும்**
**புகன்ற உள்ளமொடு புதுவோர் சாயற்கு**
**அகன்ற கிழவனைப் புலம்புநனி காட்டி**
**இயன்ற நெஞ்சந் தலைப்பெயர்த் தருக்கி**
**எதிர்பெய்து மறுத்த …..”**(6)

தலைவனது மனநிலையைத் தலைவி நன்கு அறிவாள் ஆதலின்,"நின் சொல்லர் நீடுதோன் றினியர் என்றும் என்தோள் பிரிபறி யலரே" (நற்:1) என உயர்த்தி கூறுவாள். தலைவனது பண்புகளைத் தோழி கூறியபோது அதற்குத் தலைவியும் உடன்பட்டு அப்பண்புகளை உயர்த்திக் கூறுவாள். அதாவது,"------ குன்றநாடன் குடியன் குடையன் கூடுநாற் பிரியலன் கெடுநா மொழியலன் அன்பினா் எனநீ வல்லகூறி வாய்வதிற் புணர்ந்தோய் வதுவை நாளினும் இனியனால் எமக்கே (அகம்:352) என்பன போலக் கூறுவாள். தனக்கு மனைவி என்ற உரிமையை வழங்கிய தலைவனது அன்பினை "நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று நீரினும் ஆரள வின்றே சாரற் கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தே விழைக்கும் நாடானொடு நட்பே" (குறுந் : 3) என்று பெருமையுடன் கூறும் போது கூற்று நிகழும். தலைவனைப் பிரிந்ததால் வருந்தும் தலைவி காமத்து மிகுதி காரணமாக "என்னைக் கொண்டு தன்கண் ஒற்றியும் தன்கைக் கொண்டு என்நுதல் நீவியும் அன்னை போல இனிய கூறியும் கள்வா் போலக் கொடியன் மாதோ -------- கோடுயா் பிறங்கல் மலைகிழவோனோ" (நற் : 28) என்று புலம்புவாள். தலைவிக்கு இன்பமும் துன்பமும் ஒருங்கே ஏற்பட்ட வழியும் கூற்று நிகழும்.

புதல்வனைப் பெற்று நெய்தேய்த்து நீராடிய தலைவியை அடைய விரும்பும் தலைவனிடத்துத் தன்மனம் புண்படும்படி பிரிந்து சென்ற தன்மையை எடுத்துக் கூறி வருந்தும்போது தலைவி கூற்று நிகழ்த்துவாள். "கரும்புநடு பாத்திக் கதிர்த்த ஆம்பல் கரும்புபசி களையும் பெரும்புனல் ஊர புதல்வனை யீன்றவெம் மேனி முயங்கன்மோ தெய்யநின் மாா்புசிதைப் பதுவே" (ஐங் : 65) தலைவனிடத்து மிகுந்த அன்பு கொண்டவள் தலைவி. அதன் காரணமாக புதிய பரத்தையின் அழகு காரணமாக அவளை விரும்பிய உள்ளத்தோடு பிரிந்த தலைவனைத் தனது தனிமைத்துயரம் மிகும்படியாகக் காட்டி, தலைவனிடத்துச் சென்ற மனதைச் செல்லவிடாமல் மீட்டு, தலைவன் விரும்பிய பரத்தையை எதிா்பெய்து கொண்டு புணா்ச்சி மறுத்தபோதும் கூற்று நிகழும். பரத்ததையரிடம் தங்கி வந்த தலைவனை வணங்கி, நினது பொய்யுரைகளை அவா்களிடமே கூறுக என்று வேண்டிக் கொள்வாள் தலைவி. பரத்தையரிடத்துப் போகாத வேளையிலும் அவனிடத்து ஊடல் கொண்டு,"ஆங்கே அவா்வயின் சென்றீ அணிசிதைப்பின் "கள்வா்படா் தந்ததுபோலத் தாம்எம்மை எள்ளுமாா் வந்தாரோ தெருவில் விளையாடிய தன் மகனைக் காமக்கிழத்தி நெருங்கித் தழுவ தலைவி புதல்வனை நோக்கி,"வீதழ் அறியா விழுப்பொருள் நச்சியாா்க்கு பெருமமாற்று ஒவ்வாதி மாதா்மென் நோக்கின் மகளிரை நுந்தைபோல் நோய்கூா் நோக்காய் விடல்" (கலி : 86) என்பாள். கொடியரது கொடுமைகள் வருத்தம் செய்கிறது. என்று புணா்ச்சியை விரும்பாது நின்ற தலைவி, பின்பு தலைவனே வாயிலாக வந்தபோது புகழை விரும்பினோா் சொல்லும் பொருட்டுத் தன் தலைவனோடு கொண்டிருந்த வேறுபாட்டுணா்வின் நீங்கி, புணா்ச்சியை விரும்பிய தருணத்தின் கண்ணும் கூற்று நிகழ்த்துவாள்.

தனது கொடுமை ஒழுக்கத்தினைத் தலைவி பொறுத்துக் கொள்ள வேண்டுமென்று தன்னடியில் வீழ்ந்து வணங்கும் தலைவனைக் தூக்கி விட்டு,“நீர் செய்கின்ற இச்செயலை எம் தங்கையர்களாகிய பரத்தையர் கண்டால் மிகவும் நன்றாக இருக்கும்” என்று கூறுமிடத்தும் கூற்று நிகழும். பரத்தையால் அணியப்பெற்ற நல்ல அணிகலன்களை உடைய தன் புதல்வனைக் கண்டு,“சிறுபட்டி ஏதிலார் கை எம்மை எள்ளுபு நீ தொட்ட மோதிரம் யாவோ? ------ தந்தாரயார் எல்லா இது” (கலித் : 84) என்று வினவுகின்ற வழி கூற்று நிகழும்.

தலைவி, தன்னிடத்து உள்ள அன்பு மிகுதியையும், தலைவனிடத்து உள்ள தகுதியற்ற ஒழுக்கக் குறைவையும் முன்னர் அவன் கூறிய சூளுறையுடன் எண்ணிப்பார்த்து கூற்று நிகழ்த்துவாள். “தேர்மயங்கி வந்த தெரிகோதை அந்நல்லார் தார்மயங்கி வந்த தவறஞ்சிப் போர்மயங்கி நீயுறும் பொய்ச்சூள் அணங்காகின் மற்று இனி யார்மேல் விளியுமோ கூறு” (கலித் : 88) என்று தலைவி கூறுவதாக அமைந்துள்ளது. காமக் கிழத்தியின் நலத்தினைப் பாராட்டித் தன்னை இழித்துக் கூறிக்கொள்ளுமிடத்தில் கூற்று நிகழும். தலைவனிடத்து நிகழும் கொடுமை ஒழுக்கங்களில் சிலவற்றையே தோழியிடத்து எடுத்துக் கூறுவாள் தலைவி. அவையாவன குற்றமற்ற சிறப்பினை உடைய கற்பினின்று திரியாமல் தலைவனை வெகுளுதல், உவர்ந்து பாராட்டுதல், அன்பின்றி நீக்கி நிறுத்தல், விரும்பிப் பேணிக்கொள்ளுதல், போன்ற நிலைகளில் கூற்று நிகழும் காய்தல் போன்ற வெகுளுதல் பற்றி: “நன்னலந் தொலைய நலமிகச் சாஅய் இன்னுயிர் கழியினும் உரையல் அவர்நமக்கு அன்னையும் அத்தனும் அல்லரோ தோழி புலியது எவனோ அன்பிலங் கடையே” (குறுந் : 93) உவந்து பாராட்டல் பற்றி: “காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால் காணேன் தவறு அல்லவை” (குறுந் : 1286) இவையேயன்றி ஊடல் தீர்க்கும் வாயில்களாக பார்ப்பார், பாங்கன், தோழி, செவிலி, பாணன், பாடினி, விறலி, இளையர், விருந்தினர், கூத்தர், அறிவர், கண்டோர் ஆகியோரிடத்தும் தலைவி கூற்று நிகழ்த்துவாள். “அன்னாய் இவனோர் இளமா ணாக்கன் தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ இரந்தூண் நிரம்பா மேனியோடு விருந்தின் ஊரும் பெருஞ்செம் மலனே.” (குறுந். 33) இது பாணன் வாயிலாக வந்த வழிக் கூறியது. வாயிலின் வரூஉம் வகை என்றமையான், தன் ஆற்றாமையும் வாயில்களாக் கொள்ளப்படும் என்பது பெறப்படும். “புள்ளிமி ழகல்வயின்” என்ற மருதக் கலிப் பாட்டினுள், “பூங்கட் புதல்வனைப் பொய்பாராட்டி நீங்காய் இகுவாய் நெடுங்கடை நில்லாதி ஆங்கே அவர் வயின் சென்றீ அணிசி தைப்பான் எனவே புலவியின் மூழ்கிய தலைவியிடத்துச் சென்று அப் புலவியைத் தீர்க்கும் இடத்தும் தோழி கூற்று நிகழும். “மானோக்கி நீயழ நீத்தவன் ஆனாது நாணில னாயின் நலிதந் தவன்வயின் ஊடுவ தென்னோ வினி.” (கலித்.87) இத்துடன்,

**“புணர்ந்துடன் போகிய கிழவோள் மனையிருந்து**

**இடைச்சுரத்து இறைச்சியும் வினையும் சுட்டி**

**அன்புறு தக்க கிளத்தல் தானே**

**கிழவோன் செய்வினைக்கு அச்சமாகும்.''(7)**

என்ற நூற்பாவும் தலைவி கூற்றை எடுத்துரைப்பதாகும். களவுக்காலத்தில் தலைவனுடன் சேர்ந்து உடன்போக்கில் சென்ற தலைமகள் கற்புக் காலத்தில் வீட்டில் இருந்து, வினைமேற் சென்ற தலைவன் இடைச்சுரத்தில் காணக்கூடிய கருப்பொருள்களையும் அவற்றின் அன்புச் செயல்நிகழ்வுகளையும் எடுத்துக் கூறுதல், தலைவன் தான் மேற்கொண்ட வினையை முடிக்காமல் திரும்பி வந்து விடுவானோ என்ற அச்சத்தின் காரணமாகக் கூறுவதாகும். (ஆண் யானை பெண் யானைக்கு நீருட்டுதல், ஆண்மான் பெண்மானுக்கு நீா் ஊட்டுதல், ஆண் புறா பெண்புறாவிற்குத் தன் சிறகால் நிழல் கொடுத்தல் போன்ற நிகழ்வுகள்) தோழி உள்ளிட்ட வாயில்களைத் தலைமகளிடத்துத் தூதாக அனுப்புதலும், மேற்குறிப்பிட்ட அச்சம் காரணமாகவே அமையும் என்பதை,

**“தோழி உறுத்த வாயில் புகுப்பினும்**

**ஆவயின் நிகழும் என்மானாா் புலவா்” (8)**

என்ற நூற்பா உணா்த்துகிறது.

## கற்பில் தோழி கூற்று

பெறுவதற்குரிய திருமணம் முடிந்த தலைவனைப் பெற்ற பின்பு: தலைவனைத் தோழி சிறப்பித்துக் கூறுவாள், களவுக் காலத்து இரவுக்குறி, பகற்குறி மற்றும் அல்லல்குறி போன்றவற்றால் ஏற்பட்ட வருத்தம் இப்போது நீங்கினமையை எடுத்துக் கூறுவாள். “வாழி ஆதன் வாழி அவினி வேந்து பகை தணிக யாண்டு பல நந்துக என வேட்டோனே யானை, யாமே மலா்ந்து பொய்கை முகைந்த தாமரைத் தண்துறை ஊரன் வரைக எந்தையும் கொடுக்க என்வேட்டோமே” (ஐங:6) என தலைவன் நலம் கருதித் தெய்வக்கடன் நிகழ்த்தும் போது தோழி கூற்று நிகழும். அறம், பொருள் மற்றும் இசை, கூத்து முதலியவற்றால் தலைவன் இல்லத்தினை மறந்து ஒழுகும் காலத்து,“------ இவள் நல்லணி நயந்துநீ துறத்தலின் பல்லோா் அறியப் பசுந்தன்று நுதலே” (ஐங : 55) என்று கூறுவாள். தலைவனின் பரத்தமை ஒழுக்கம் காரணமாக வருந்திய தலைவியிடத்து, அவன் அத்தகையவன் அல்லன் என்று கூறித் தலைவியை ஆற்றுவிப்பாள் தோழி. பரத்தமை ஒழுக்கம் மேற்கொண்டு வந்த தலைவனை அடைந்து தலைவியை தலையளி செய்யும் கடமையை உணா்த்தி ஊடல் தீா்த்து வைக்க முயலுவாள் தோழி. பரத்தையிடத்துச் செல்லுதல் கூடாது எனப் பணிந்து தலைவனிடம் வேண்டுவாள் தோழி.

“தண்துறை ஊர! தகுவதோ ஒண்தொடியை பாராய் மனைதுறந்து அச்சேரி செல்வதனை ஊராண்மை யாக்கிக் கொளல்” (ஐந்திணை எழுபது : 52) எனக்கூறி வேண்டுவாள் தலைவியைப் பிரிந்து பரத்தமையார் சேரி சென்று இன்பம் துய்தலைக் குற்றம் என்று சுட்டிக் காட்டுவாள் தலைவன் தன் புதல்வனை நினையாது பிரிந்து சென்று வாழும் நிலையிலும், நீ தலைவியிடமிருந்து கவர்ந்து கொண்ட நலத்தினைத் தந்துவிட்டுப் போ என்று கூறுகின்ற நிலையிலும் தோழி கூற்று நிகழும். தலைமகன் தனக்குரிய பெருமை, உரன் போன்ற உயரிய பண்புகளைப் பாதுகாத்து வாழாத நிலையினை எண்ணித் தலைவி நாணம் கொண்ட இடத்து,“தண்ணந் துறைவன் கொடுமை நம்முள் நாணிக் கரப்பாடும்மே” (குறுந்தொகை) என்று கூறுவர். தலைவன் கூறிய சூளுரை பொய்த்தது கண்டு சோர்வுற்று வருந்திய இடத்து,“எம்அணங் கினவே மகிழ்ந முன்றில் ----- நேரிறை முன்கை பற்றிச் சூரர மகளிரொடு உற்ற சூளே” என்று கூறுவாள். பெரியோரது ஒழுக்கம் பெரிது என்று கூறிய நீ இப்போது பொய்த்துவிட்டாய் என்று சுட்டிக் காட்டும் போதும், ஊடலில் மூழ்கிய தலைவியிடம் சென்று அவ்வூடலை நீக்க முற்படும் போதும், அப்போதும் ஊடல் நீங்காத வழி தலைவன் பக்கம் நின்று,“உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது மிக்காற்றல் நீள விடல்” (குறள் : 1302) என்பது போல வெகுண்டு கூறும்போதும் கூற்று நிகழும். அருமைக் காலத்துப் பெருமை காட்டிய எளிமைக் காலத்து இரக்கம்: தலைவி அரியளாகிய களவுக் காலத்து பெருமையைக் காத்து, அவள் எளியளாகிய கற்புக் காலத்து பெருமையைக் காவாத இரக்கம். இதனாற் சொல்லியது, இரங்குதல் அன்றிப் களவுக் காலத்து இவ்வாறு செய்தனை! இப்பொழுது இவ்வாறு செய்யாநின்றனை எனத் தமது உயர்வும் தலைமகனது நிலைஇன்மையும் தோற்ற இரங்குதலாயிற்று. இதுவும் புலவிமாத்திரமன்றித் தலைவன் நீங்கி ஒழுகும் ஒழுக்கம் மிக்கவழிக் கூறுவதெனக் கொள்க தலைவி வருந்த தோழி தலைவனிடம்,“வேம்பின் பைங்காய்என் தோழி தரினே தேம்பூங் கட்டி என்றனிர் இனியே பாரி பரம்பிற் பனிச்சுவைத் தெண்ணீர் தைஇத் திங்கள் தண்ணிய தரினும் வெய்ய உவர்க்கு மென்றனிர் ஐய அற்றால் அன்பின் பாலே” என்று எடுத்துக் கூறுவாள். மற்றும் பாணர், கூத்தர், விறலியோர் போன்றோர் வாயில்வேண்டி வர தோழி அதனை மறுத்துக் கூறும்போதும், பல நாட்கள் பிரிந்து சென்ற தலைவன் மீண்டு வரும்போது,“இன்னாது இசைக்கும் அம்பலொடு வாரல் வாழியர் ஐயஎம் தெருவே” (குறுந் : 139) என்று கண்ணோட்டமின்றி நீங்கிய போதும், தலைவன் சேய்மைக்கண் பிரியும் போது முற்கூறிய மரபினின்று மாறுபட்டு ஒழுகின்றாய் என்று கூறும்போதும், பிரிந்த தலைவன் வருவான் என்று கூறும்போதும், பருவங்கண்டு கூறும்போதும், நிமித்தம் கண்டு கூறும்போதும், வந்து விட்டான் என்று கூறும்போதும் தோழி கூற்று நிகழும்.பாணர், கூத்தர்,விறலியர் இத்தன்மையர் விரும்பிச் சொல்லிய வாயிலை மறுத்தல். மறுத்தல் போலும் வாயில் நேர்ந்தவிடத்துக் கூற்று நிகழும்.. “புலைமகன் ஆதலிற் பொய்ந்நின் வாய்மொழி நில்லல் பாண செல்லினிப் பரியல் பகல்எஞ் சேரிக் காணின் அகல்வய லூரன் நாணவும் பெறுமே.”

நீத்தகிழவனை நிகழுமாறு படீஇயர் காத்த தன்வயிற் கண்நின்று பெயர்த்தல்: தலைவியை நீத்த தலைவனை அவளுடன் இல்லறத்தே நிகழுமாறு படுத்தல் வேண்டி அவனைப் புறத்தே போகவிடாது பாதுகாத்தமையால் தன்னிடத்துற்ற தலைமகனைக் கண்ணோட்டமின்றிப் பெயர்த்தற்கண்ணும் கூற்று நிகழும். "மனையுறு கோழிக் குறுங்காற் பேடை ------- இன்னா திசைக்கும் அம்பலொடு வாரல் வாழியர் ஐயஎம் தெருவே." (குறுந் . 139 ) தலைவன் நெடுந்தொலைவு பிரியுங் காலத்து முன்னின்று சொல்லிய மரபுடை மாறுபாடு. அதாவது கற்பினுள் பிரிவு மரபு கெடாமல் கிளத்தல் வேண்டும் என்பதாகும். "அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிறிதாற்றிப் பின்இருந்து வாழ்வார் பலர்" ( குறள் - 1160 ) மேற்சொல்லப்பட்ட கிளவியன்றிப் பிற வாய்பாட்டாற் பாகுபட வந்த கிளவி எல்லாம் தோழிக்குரிய என்றுரைப்பர் புலவர்.

## காமக்கிழத்தியர் கூற்று

காமக் கிழத்தியர் என்பார் பரத்தையர் என்றும் சுட்டப்படுவர். பரத்தையாவார் யாரெனில் அவர் ஆடலும் பாடலும் வல்லாராகி, அழகும் இளமையும் காட்டி, இன்பமும் பொருளும் விரும்பிஒருவர் மட்டும் தங்காதார் என்பர். காமக் கிழத்தியர் என்பார் பின்முறை ஆக்கிய கிழத்தியர் ஆவார். அவர் ஒத்த கிழத்தியர், இழிந்த கிழத்தியர், வரையப்பட்டார் என மூவகைப்படுவர். **ஒத்த கிழத்தியர்** - முன்புள்ள மனையாளன்றிக் காமம் பொருளாகப் பின்னும் தன் குலத்துள்ளான் ஒருத்தியை வரைதல். **இழிந்தாராவார்** - அந்தணர்க்கு அரச குலத்திலும், வணிக குலத்திலும் வேளாண் குலத்தினும் கொடுக்கப்பட்டாரும் அரசர்க்கு ஏனை இரண்டு குலத்தினும் கொடுக்கப்பட்டாரும் வணிகர்க்கு வேளாண் குலத்தில் கொடுக்கப்பட்டாரும் ஆவர். **வரையப்பட்டார்** - செல்வராயினும் கணிகைக் குலத்துள்ளார்க்கு இற்கிழமை கொடுத்து வரைந்து கோடல்.களவால் வரைந்து கொண்ட தலைவியோடு தலைவன் காவும், குளனும் ஆடிய கண்டு பொறையின்றி எய்திய துன்பத்தின் கண்ணும் கூற்று நிகழும்.தலைவன் தன்னைத் தழுவி இன்பம் துய்க்கும் நிலை தடைபட்ட இடத்தும், தலைவனின் மனையகத்தோர் செய்த செயலை இகழ்ந்து கூறும் போதும், பல்வேறு சிறுவர்களோடு இணைந்து தலைவனின் புதல்வன் விளையாடுதலைக் கண்டு மகிழ்ந்து கூறும்போதும் கூற்று நிகழும். களவொழுக்கத்தின் வழி மணந்துகொண்ட தலைவியோடு தலைவன் மகிழ்ந்திருப்பது கண்டு பெறாது துன்பப்படும்போது காமக்கிழத்தி கூற்று நிகழும். தன்னிடத்துத் தலைவன் கொண்ட காதற் சோர்வினாலும் ஒப்புரவுடைமையானும் தாய்போற் கழறித் தலைவியை உடன்படுத்திக் கொண்டு தலைவனைக் கழறிப் தலைவியன் சினம் தணிவித்து தலைமகன்மாட்டுப் பொருத்தற்கண்ணும் கூற்று நிகழும். காதல் சோர்வு என்பது தன்மாட்டுக் காதல் சோர்தல். இது தலைமகன் மாட்டுத் துனியுளவழி நிகழும் நிகழ்ச்சி. "வயல்வெள் ஆம்பல் சூடுதரு புதுப்பூக --------- கொள்ளல் மாதோ முள்ளெயிற் றோயே நீயே பெருநலத் தகையே அவனே நெடுநீர்ப் பொய்கை நடுநாள் எய்தித் தண்கமழ் புதுமலர் ஊதும் வண்டென மொழிப மகனென் னாரே." (நற்றிணை.290) தலைவன் அனுப்பிய பலவகை ஊடல் தீர்க்கும் வாயில்களை

மறுத்தபோதும் ஏனைய வாயில்களை மறுத்த வழி இனிய நகையையுடைய புதல்வனைத் தழீஇ இழையணிந்து தலைமகன் வாயிலாகக் கொண்டு புகுதல். “தகைபெறு கழனியந் தண்துறை யூரகேள்; பூங்கண் புதல்வனைப் பொய்பல பாராட்டி நீங்காய் இகவாய் நெடுங்கடை நில்லாதி ஆங்கே யவர்வயின் சென்றீ அணிசிதைப்பான் இப்பொழுது இன்னோர் இவ்வாறு செய்து பயன்பெறா நின்றாரெனவும், இவ்வாறு செய்தார் பின்பு நன்மை தீமை பெறுவர் எனவும் கூறுதல். அவை, அறனும் பொருளும் இன்பமும் பற்றி நிகழும் அவையாவன தலைமகன்மாட்டும் உலகத்தார் மாட்டும் ஒழுகும் திறன் கூறுதல். “தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்”. (குறள். 56) ”தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யு மழை”. (குறள். 55) இன்னகைப் புதல்வனை தழுவிக்கொண்டு, அணிகலன் பல அணிந்து தலைவனே வந்தபோது கூற்று நிகழ்த்துவான். தான் மனைவியை ஒத்தவள் ஆதலின் தன் போல்வர் பலர் தலைவனுக்கு இருத்தல் மிகை என்று கூறுவாள். ஆறு, குளம், சோலை முதலியவற்றில் தலைவனோடு சேர்ந்து விளையாடலாம் என எண்ணும்போதும் ஆகிய இவ்விடங்களில் எல்லாம் காமக்கிழத்தியர் கூற்று நிகழும்.

## செவிலிக் கூற்று

இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலத்திலும் தன் குலத்துள்ளார். பின்வருமாறு நல்லவை கூறுதலும் அல்லவை கடிதலும் செவிலிக்குரியது. முன்புள்ளார் இவ்வாறு செய்து நன்மை பெற்றார். இவ்வாறு செய்து துன்பம் பெற்றார். இவ்வாறு செய்தால் இவ்வாறு பெறுவர் என்பது போலக் கூறுதல், அவை அறம், பொருள். இன்பம் பற்றி நிகழும். “தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்” (குறள் :56) “அடிசிற் கிளியாளை அன்புடை யாளைப் படிசொற் பழநாணு வாளை-அடிவருடிப் பின்துஞ்சி முன்னுணரும் பேதையை யான்பிரிந்தால் என்துஞ்சம் கண்கள் எனக்கு” இவை நல்லவை கூறல். அல்லவை கடிதலாவது,“எறியென்று எதிர்நிற்பாள் கூற்றும் சிறுகாலை அட்டில் புகாதாள் அரும்பிணி – அட்டதனை உண்டி உதவாதாள் இல்வாழ்பேய் இம்மூவர் கொண்டானைக் கொல்லும் படை” (நாலடி : 363) இதனை,

> **“கழிவினும் நிகழ்வினும் எதிர்வினும் வழிகொள**
> **நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்**
> **செவிலிக்குரிய ஆகும் என்ப”**(12)

என்ற நூற்பா உணர்த்துகிறது

## அறிவர்க்குரியதோர் கூற்று

**“சொல்லிய கிளவி அறிவர்க்கும் உரிய.”(13)**

அறிவர் கூற்று நிகழுமாறுணர்த்திற்று. செவிலிக்குரித்தாகச் சொல்லப்பட்ட கிளவி அறிவர்க்கும் உரியதாம்.

**“இடித்துவரை நிறுத்தலும் அவர தாகுங்**

**கிழவனுங் கிழத்தியும் அவர்வரை நிற்றலின்.”(14)**

கழறிய எல்லையின் கண்ணே நிறுத்தலும் அறிவர்க்குரிய ஆகும்.தலைவனும் தலைவியும் அவர் ஏவல்வழி நிற்றல் என்பதாம். “உடுத்துந் தொடுத்தும் பூண்டுஞ் செரீஇயுந் தழையணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி விழவொடு வருதி நீயே இஃதோ ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை பெருநலக் குறுமகள் வந்தென இனிவிழ வாயிற் றென்னும்இவ்” (குறுந். 295) - தலைமகற்குக் கூறியது.

**வாயில்கள்- வாயில்கட்குள்ளதோர் மரபு**

**“தோழி தாயே பார்ப்பான் பாங்கன்**
**பாணன் பாட்டி இளையர் விருந்தினர்**
**கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்**
**யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப.”53**

தோழி முதலாகச் சொல்லப்பட்ட பன்னிருவரும் வாயில்களாவார்.

**“மனைவி தலைத்தாட் கிழவோன் கொடுமை**
**தம்முள வாதல் வாயில்கட் கில்லை.”26**

மனைவிமாட்டுக் கிழவோன் கொடுமையைத் தாங்கார் கூறல் வாயில்கட்கில்லை.மனைவி முன்னர்க் கையறு கிளவி மனைவிக் குறுதி உள்வழி உண்டே. மனைவி முன்னர்ச் செயலற்றுக் கூறும் சொல் மனைவிக்கு உறுதியுள் வழி வாயில்கட்கு உண்டு. “இனியவர் வரினும் நோய்மருந் தல்லாய் வாரா தவணர் ஆகுக காதலர் இவண்நம் காமம் படர்பட வருத்திய நோய்மலி வருத்தங் காணன்மா ரவரே”

**“முன்னிலைப் புறமொழி எல்லா வாயிற்கும்**
**பின்னிலைத் தோன்றும் என்மனார் புலவர்.”27**

முன்னிலைப் புறமொழியாகக் கூறும் சொல் எல்லா வாயில்கட்கும் உரியதாம். அது பின்னிலை முயலுங்கால் தோன்றும். முன்னிலைப் புறமொழியாவது முன்னிலையாக நிற்பாரைக் குறித்துப்

பிறனைக் கூறுமாறுபோலக் கூறுதல். “உண்கடன் வழிமொழிந் திரக்குங்கால் முகனுந்தாங் கொண்டது கொடுக்குங்கால் முகனும்வேறாகுதல் பண்டுமிவ்வுலகத் தியற்கை”. (கலித். 22)

**“எல்லா வாயிலும் இருவர் தேஎத்தும்**

**புல்லிய மகிழ்ச்சிப் பொருள என்ப”38**

வாயில்கள் எல்லாம் இருவர் மாட்டும் பொருந்திய மகிழ்ச்சிப் பொருண்மையுடையன. இருவராவார் தலைவனுந் தலைவியும். எனவே வெகுட்சிப் பொருண்மை கூறப்பெறார் என்பதனைக் குறித்தது.

**அன்புதலைப் பிரிந்த கிளவி தோன்றின்**

**சிறைப்புறங் குறித்தன்றென்மனார் புலவர்.39**

வாயில்கண் மகிழ்ச்சிப் பொருண்மை கூறுதலன்றி அன்பு நீங்கிய கிளவி கூறினாராயிற் தலைவன் சிறைப்புறத்தானாகப் பெறுவர் எனச் சொல்லுவர்.

**கூத்தர்க்குரிய கூற்று**

கூத்தர்க்குரிய கூற்று எட்டு என்பதனை பின்வரும் நூற்பா உணர்த்தும்.

**“தொல்லவை உரைத்தலும் நுகர்ச்சி ஏத்தலும்**

**பல்லாற்றானும் ஊடலில் தணித்தலும்**

**உறுதி காட்டலும் அறிவுமெய்ந் நிறுத்தலும்**

**ஏதுவின் உரைத்தலும் துணியக் காட்டலும்**

**அணிநிலை உரைத்தலும் கூத்தர் மேன.”28**

முன்புள்ளார் இவ்வாறு செய்வரெனக் கூறுதல். நுகர்ச்சி இவ்வாறு இனிய ஒன்றெனப் புகழ்தல். பலநெறியானும் ஊடலினின்றுந் தலைவியை மீட்டல்.அதாவது இவ்வாறு செய்தல் குற்றம் என்றானும் அன்புடையார் செய்யார் என்றானும் மனைக்கிழத்தியர் செயலன்று என்றானும் கூறுதல்.இவ்வூடல் தணிந்ததனாற் பயனிது எனவும் நன்மை பயக்கும் எனவும் கூறுதல். தலைமகள் மெய்யின்கண் மிக்க துணிவினாற் கெட்டவறிவை இது தக்கதன்றென அறிவு கொளுத்துதல். இவ்வாறு செய்யின் இவ்வாறு குற்றம் பயக்கும் என ஏதுவினாற் கூறுதல்.அவள் துணியும் வகையில் காரணங் காட்டுதல்.நீ அணிந்துள்ள அணி யாதொரு பயனும் இல்லாமல் புலரவிடுகின்றதனால் என்ன பயன் எனக் கூறுதல். இவையெல்லாம் கூத்தர் மேலன ஆகும்..

**கூத்தர்க்கும் பாணர்க்கும் உரிய கூற்று**

**நிலம் பெயர்ந் துரைத்தல் அவள்நிலை உரைத்தல்**

**கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை உரிய.29**

இது, கூத்தர்க்குஞ் சொல்லாத பாணர்க்கும் உரிய கிளவி ஆகும்.தலைவன் பிரிந்தவிடத்துச் சென்று கூறுதல்.அவள் நின்ற நிலையைத் தலைவற்குக் கூறுதல். “அருந்தவ மாற்றியானு கர்ச்சிபோல” என்னும் பாலைக் கலியுள்,“தணியா நோய் உகந்தானாத் தகையவள் தகைபெற அணிகிளர் நெடுந்திண்தேர் அயர்மதி பணிபுநின் காமர் கழலடி சேரா நாமஞ்சால் தெவ்வரின் நடுங்கினள் பெரிதே” (கலித்.30) பாசறைக்கண் தலைவற்குத் தலைவி வருத்தங் கூறியது.

**இளையோர் கூற்று**

**“ஆற்றது பண்பும் கருமத்து வினையும்**

**ஏவன் முடிபும் வினாவுஞ் செப்பும்**

**ஆற்றிடைக் கண்ட பொருளும் இறைச்சியுந்**

**தோற்றஞ் சான்ற அன்னவை பிறவும்**

**இளையோர்க் குரிய கிளவி யென்ப.”**30

தலைவனானவன் தன் தலைவியுடனோ தனியோ போகத்துணியின் இக்காலம் தண்ணியது,இக்காலம் வெய்யது, போகும் இடம் அண்மையது, சேய்மையது என்று கூறல். செய்யும் தொழிலாகய வினையை உரைத்தல். அதாவது பொருள் செயல்வகை முடிக்கும் திறத்தை அறிந்து கூறல் இவ்விடத்து சென்று இன்ன வினையைச் செய்க எனத் தலைவன் ஏவியபோது அதனை முடித்து வந்தமை கூறல். தலைவன் ஏவலைத் தாம் கேட்டல் அல்லது செய்கை யாவை? எனத் தலைவன் கேட்டலுமாம். தலைவன் வினவாதபோதும் தலைவிக்கு வேண்டியவற்றைத் தலைவன்பால் சொல்லுதல் ஆற்றிடைக் கண்ட பொருள்: செல்லும் சுரத்திடைக் கண்ட நிமித்தம் முதலாய பொருள்களை தலைவனுக்கும் தலைவிக்கும் உறுதி பயக்குமாறு கூறல் சுரத்திடைத் தாய் கண்ட மாவும் புள்ளும் புணர்ந்து விளையாடுவனவற்றை தலைவன் தலைவி ஆகிய இருவருக்கோ அல்லது தலைவனுக்கோ மட்டும் சுட்டிக் கூறல். “விருந்தும் பெறுகுநள் போலுந் திருந்திழைத் தடமென் பணைத்தோள் மடமொழி அரிவை தண்ணில மருங்கிற் போழ்ந்த வழியுள் -------- நிரைசெல் பாம்பின் விரைபுநீர் முடுகச் செல்லு நெடுந்தகை தேரே முல்லை மாலை நகர்புகல் ஆய்ந்தே” (அகம். 324)

**“உழைக்குறுந் தொழிலுங் காப்பும் உயர்ந்தோர்**

**நடக்கையெல்லா மவர்கட் படுமே.”**31

இதுவும் இளையோர்க்குரிய திறன் உணர்த்திற்று. இடத்தினின்று குற்றேவல் செய்தலும் மெய்காத்தலும் பிறவும் உயர்ந்தோர்க்குளதாகிய நடையெல்லாம் இளையோர்கட்படும்.

**தலைவன் கலங்கல் - தலைமகள் தழீஇக் கோடல்**

**“பின்முறை ஆகிய பெரும்பொருள் வதுவைத்**

**தொன்முறை மனைவி எதிர்ப்பா டாயினும்**
**மின்னிழைப் புதல்வனை வாயில்கொண்டு புகினும்**
**இறந்த துணைய கிழவோன் ஆங்கட்**
**கலங்கலு முரியன் என்மனார் புலவர்.''32**

"இம்மை உலகத் திசையொடும் விளங்கி மறுமை யுலகமும் மறுவின் றெய்துப சேறுநரும் விழையுஞ் செயிர்தீர் காட்சிச் சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப் பல்லோர் கூறிய பழமொழி யெல்லாம் வாயே யாகுதல் வாய்த்தனந் தோழி" (அகம்.69)

**''தாய்போற் கழறித் தழீஇக் கோடல்**
**ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப'33**
**''அவன் சோர்வு காத்தல் கடனெனப் படுதலின்**
**மகன்தாயுயர்புந் தன்னுயர் பாகுஞ்**
**செல்வன் பணிமொழி இயல்பாக லான''.34**

கவவொடு மயங்கிய காலை யான. காமக்கிழத்திமாட்டுத் தாய்போற் கழறித் தழீஇக் கோடல் மனைக்கிழத்திக்கும் உரித்து. கவவால் வருத்த முற்ற காலத் தென்றவாறு; அ∴தாவது புலவாவழி என்றவாறு. ''வயல்வெள் ளாம்பல் சூடுதரு புதுப்பூக் --------- தண்கமழ் புதுமலர் ஊதும் வண்டென மொழிப மகனென்னாரே." (நற்றிணை. 260) மேலும், தலைமகனது சோர்வு காத்தல் தலைமகட்குக் கடனாதலால் தன் மகனுக்குத் தாயாகிய காமக்கிழத்தி உயர்பும் தன்னுயர்பாகும். இருவருந் தலைமகன் பணித்த மொழிகோடல் இயல்பாதலால் ஆகும். சோர்வாவது ஒழுக்கத்திற் சோர்வு. அது பரத்தையிற் பிரிவு. அதனை மறையாது காமக்கிழத்தி ஆற்றில் தலைமகற்குக் குறைபாடு வரும் என்பதனால் அவளை உயர்த்தி அவ்வொழுக்கம் பிறர்க்குப் புலனாகாமை ஏற்றுக் கோடல் வேண்டுமெனக் கூறுதலுந் தனக்கு இழிபு ஆகாது உயர்ச்சியாம்.

## பார்ப்பார்க்கு உரிய கூற்று

**''காமநிலை யுரைத்தலும் தேர்நிலை யுரைத்தலுங்**
**கிழவோன் குறிப்பினை எடுத்துக் கூறலும்**
**ஆவொடு பட்ட நிமித்தங் கூறலும்**
**செலவுறு கிளவியும் செலவழுங்கு கிளவியும்**
**அன்னவை பிறவும் பார்ப்பார்க்குரிய.''37**

இது, பார்ப்பார்க் குரிய கிளவி யுணர்த்திற்று. நீ பிரியின் இவள் காமமிகும் என்று கூறுதல். ‘‘அறனின்றி அயல்தூற்றும் அம்பலை என்பதனுள், உடையிவளுயிர்வாழாள் நீநீப்பின் எனப்பல இடைகொண்டியாம் இரப்பவும் எமகொள்ளாய் ஆயினை கடைஇய வாற்றிடை நீர்நீத்த வறுஞ்சுனை அடையொடு வாடிய அணிமலர் தகைப்பன’’ (கலித். 3)ஆராய்ச்சி நிலையாற் கூறுதல். ‘‘வேனி லுழந்த வறிதுயங் கோய்களிற் ---- சென்னவை யரவத்து மினையவள் நீநீப்பின் தன்னலங் கடை கொளப் படுதலின் மற்றிவள் இன்னுயிர் தருதலும் ஆற்றுமோ முன்னிய தேஎத்து முயன்றுசெய் பொருளே’’. (கலித். 7) தலைவன் குறிப்பினைத் தலைவிக்கு விளங்கக் கூறல். ஆவொடு பட்ட நிமித்தங் கூறுதலும் என்றவாறு பட்ட நிமித்தம் என்றதனால் எல்லா நிமித்தமுங் கொள்க. செலவுற்ற சொல்லும் என்றவாறு. அ∴தாவது தலைமகன் போயினான் என்று கூறுதல். செலவழுங்கல் வேண்டுமெனக் கூறுதல். ---------- ‘‘விறன்மலை வெம்பிய போக்கறு வெஞ்சுரஞ் மன்னவன் புறந்தர வருவிருந் தோம்பித் தன்னகர் விழையக் கூடின் இன்னுறழ் வியன்மார்ப அதுமனும் பொருளே”. (கலித் 8) இவை பார்ப்பார்க்குரிய தென்றவாறு. ஓருபாற் கிளவியேனைப் பாற்கண்ணும்“ (பொருளியல்-27) வரும் என்பதனால் தோழிமாட்டும் பாங்கன்மாட்டும் கொள்க என்பார் இளம்பூரணர்.

**தலைவிக்குரியதோர் மரபு**

**தற்புகழ் கிளவி கிழவன்முற் கிளத்தல்**

**எத்திறத் தானும் கிழத்திக் கில்லை**

**முற்பட வகுத்த இரண்டலங் கடையே.(40)**

தலைவன் பரத்தையிற் பிரிந்து வந்தவழி இரத்தலும் தெளித்தலும் ஆகிய இரண்டிடமும் அல்லாதவழி தலைவன் முன்னர்த் தன்னைப் புகழுங் கூற்று எவ்வழியானுங் கிழத்திக்கு இல்லை ‘‘ஒரூஉ நீ எம்கூந்தல் கொள்ளல் யாம்நின்னை வெரூஉதுங் காணுங் கடை” (கலித். 87) தன்னை உயர்த்துக் கூறுதலாற் புகழ்ந்தாளாம்:

‘‘நீயுறும் பொய்ச்சூள் அணங்காகின் மற்றினி யார்மேல் விளியுமோ கூறு”. (கலித்.88) என்றவழியும் பெண்டிர் பலர் உளராயினும் அவர் எல்லார் மாட்டுஞ் செல்லாது தன்மேல் வருமெனக் குறித்தாளாதலின், தன்னைப் புகழ்ந்தாளாம்.

**தலைவற்கு உரிய மரபு**

**‘‘கிழவி முன்னர்த் தற்புகழ் கிளவி**

**கிழவோன் வினைவயின் உரிய என்ப.''(41)**

தலைவி முன்னர்த் தலைவன் தன்னைப் புகழுங் கூற்று வினைவயிற் பிரியும் வழி உரியது ஆகும். "இல்லென இரந்தோர்க்கொன் றீயாமை இழிவு" (கலித்.2)"இல்லிருந்து மகிழ்வோர்க் கில்லையால் புகழ்" என்றும் இவ்வாறு கூறுதல். இவ்வாறு கூறவே "யான் செய்யேன்" எனத் தன்னைப் புகழ்ந்தவாறாம்.

**''துன்புறு பொழுதினும் எல்லாங் கிழவன்**

**வன்புறுத்தல்லது சேறல் இல்லை''(44)**

இது, தலைவற் குரியதொரு மரபுணர்த்திற்று. துன்புறு பொழுதினும் எல்லாப் பிரிவினும் தலைவன் தலைவியை வற்புறுத்தியல்லது சேறலில்லை. துனபுறுபொழுதாவது களவுகாலம். களவினும் கற்பினும் பொது.

**பாங்கற் குரியதொரு மரபு**

**''மொழிஎதிர் மொழிதல் பாங்கற் குரித்தே''(.42)**

தலைவன் கூறிய பொழுது எதிர்கூறுதல் பாங்கற்கு உரித்து. எதிர் கூறுதலாவது மாறுபடக் கூறுதல். அவை களவுக் காலத்துக் கழறலுங் கற்புக்காலத்துப் பரத்தையிற் பிரிவிற்கு உடம்படாது கூறலும் இவை போல்வனவும் ஆம். ''காமங் காமம் என்ப காமம் அணங்கும் பிணியும் அன்றே நுணங்கிக் கடுத்தலும் தணித்தலும் இன்றே யானை குளகு மென்று ஆள்மதம் போலப் பாணியும் உடைத்தது காணுநர்ப் பெறினே".(குறிந். 136) ''பொருட்பொருளார் புன்னலந் தோயார் அருட்பொருள் ஆயும் அறிவினவர்". (குறள். 914)

**''குறித்தெதிர் மொழிதல் அ.ஃகித் தோன்றும்.''(43)**

மேற் குறித்ததற்கு எதிர் கூறுதல் அருகித் தோன்றும்.

**பிரிவு**

- கல்விப்பிரிவு

**''வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது.''(48)**

கல்விக்கண் பிரியும் காலம் மூன்றியாண்டின் மிகாது.

- தூது, காவல் பிரிவு

**''வேந்துறு தொழிலே யாண்டினது அகமே''(49)**

எனவே, ஓர் ஆண்டாயினும் தூது காவல் என அவ்வழிப் பிரிவிற்கும் ஓர் ஆண்டினது அகமே.

- பொருள்வயிற் பிரிவு

**“ஏனைப் பிரிவும் அவ்வியல் நிலையும”.(50)**

பொருள்வயிற் பிரிவிற்குங் காலம் ஆண்டினது அகம் ஆகும். காலம் என்பதாம். எனவே அறுதிங்கள் முத்திங்கள் எல்லாங் கொள்ளப்படும்.

## கற்பியலின் மரபு

- தோழிக்குரிய மரபு

**“புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்துஞ்**
**சொலத்தகு கிளவி தோழிக்குரிய.”(17)**

புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்தும் சொலத்தகும் கிளவி தோழிக்குரிய.தாகும் “அலந்தாரை யல்லல்நோய் செய்தற்றால் தம்மைப் புலந்தாரைப் புல்லா விடல்”. (குறள். 1303) - இது கற்பு. “கலந்த நோய் கைம்மிகக் கண்படா என்வயின˙ புலந்தாயு நீயாயின் பொய்யானே வெல்குவை இலங்கு தாழ் அருவியோ டணிகொண்ட நின்மலைச் சிலம்புபோற் கூறுவ கூறும் இலங்கேர் எல்வளை இவளுடை நோயே”. (கலித். 46) - இது களவு.

**“பரத்தை மறுத்தல் வேண்டியுங் கிளவி**
**மடத்தகு கிழமை உடைமை யானும்**
**அன்பிலை கொடியை என்றலும் உரியள்”.(18)**

இதுவும் தோழிக்கு உரியதோர் இயல்பு ஆகும்.

- தலைமகள் ஊடல்

**“அவன்குறிப் பறிதல் வேண்டியுங் கிழவி**
**அகமலி யூடல் அகற்சிக் கண்ணும்**
**வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறுமே”(.19)**

தலைவன் குறிப்பறிதல் வேண்டியும் தலைவி தனது அகமலிந்த ஊடல் நீங்கும் இடத்தினும் வேற்றுமைக்கிளவி தோற்றவும் பெறும். யாரிவன் என்கூந்தல் கொள்வான்” (கலித்.89) “யாரையோ எம்மில் புகுதருவாய்” (கலித். 98)

- தலைவன் பணிமொழி(வழிபடு கிழமை)

**“காமக் கடப்பினுட் பணிந்த கிளவி**
**காணுங் காலைக் கிழவோற் குரித்தே**
**வழிபடு கிழமை அவட்கிய லான.”(20)**

இது, தலைமகற்குரியதொரு மரபு ஆகும். “ஒரூஉ கொடியியல் நல்லார் குரல்நாற்றத் துற்ற” என்னும் மருதக் கலிப்பாடலுள். ”பெரியார்க் கடியரோ ஆற்றா தவர்” எனத் தலைவி கூறியவழி,“கடியர் தமக் கியார்சொலத் தக்கார் மற்று” (கலித்.88) - என வரல்.

- தலைவி அருள்மொழி

**“அருண்முந் துறுத்த அன்புபொதி கிளவி**
**பொருள்பட மொழிதல் கிழவோட் குரித்தே”(21)**

இது தலைமகட்குரியதோர் இயல்புணர்த்திற்று. பொருள்பட மொழிதலாவது பொய்யாக் கூறாது மெய்யே கூறல்.

- .அலர்

**“களவுங் கற்பும் அலர்வரை வின்றே.”(22)**

அலர் ஆமாறு உணர்த்திற்று. களவினுங் கற்பினும் அலராகு மெ.ன்று கூறுதல் வரைவின்று என்பதாம். “கண்டது மன்னும் ஒருநாள் அவர்மன்னுந் திங்களைப் பாம்புகொண் டற்று”. (குறள்.1146) - இது களவு. “ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல் நீராக நீளும்இந் நோய்”. (குறள்.1147) இது கற்பு

- காமத்தின் மிகுதி

**“கிழவோன் விளையாட்டு ஆங்கும் அற்றே”.(24)**

கிழவோன் விளையாட்டும் காமத்தின் மிகுதியைக் காட்டும். “அகலநீ துறத்தலின் அழுதோவா உண்கணெம் புதல்வனை மெய்தீண்டப் பொருந்துதல் இயைபவால் நினக்கொத்த நல்லாரை நெடுநகர்த் தந்துநின் தமர்பாடுந் துணங்கையுள் அரவம்வந் தெடுப்புமே”. (கலித்.70)

- தலைமகன் ஊடல்

**“உணர்ப்புவரை இறப்பினும் செய்குறி பிழைப்பினும்**
**புலத்தலும் ஊடலும் கிழவோற் குரிய.”(16)**

தலைமகன் புலக்குமிடம் கூறுதல் நுதலிற்று. புலவி அண்மைக் காலத்தது. ஊடல் அதனின் மிக்கதாம். "எவ்வி இழந்த வறுமையர் பாணர் பூவில் வறுந்தலை போலப் புல்லென் றினைமதி வாழிய நெஞ்சே மனைமரத் தெல்லுறு மௌவல் நாறும் பல்லிருங் கூந்த லாரே நினக்கே" (குறுந். 19)

- புலம்பல்

தலைவன் வினை மேற்கொள்ளும் காலத்து தலைவியை நினைத்துப் புலம்புவதாய் பாடும் மரபு இல்லை. ஆனால் வினை முடித்தவிடத்து தலைவியை நினைந்து புலம்புவதாய்ப் பாடுதல் உண்டு,

**‘‘கிழவி நிலையே வினையிடத் துரையார்**

**வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும’’.(46)**

உரையாமை யாவது உருவு வெளிப்பாடு. அதனை வினைநிகழும் இடத்து உரைக்கப் பெறார். தலைமக்கள் தமது வினை முடிந்த காலத்து விளங்கித் தோன்றும். எனவே, வினையிடத்துள் நினைப்பாராயினும் அமையும். உரைக்கப் பெறார் என்பதும், வென்றிக்காலத்துக் குற்றமறத் தோன்றும் என்பதும் கொள்ளப்படும். ‘‘ஓங்கிய ஒள்ளொளி யோலைய தாய்த்தட மாமதின்மேல் பொங்கிய வேந்தர் எரிமுகந் தோன்றின்று போதுகண்மேற் பைங்கயல் பாய்புனற் பாழிப்பற் றாரைப் பணித்ததென்னன் செங்கய லோடு சிலையுங் கிடந்த திருமுகமே". (பாண்டிக்கோவை)

- .செலவிடை அழுங்கல்

தலைவன் போகக் கருதித் தவிர்தல் போகாமையன்று. தலைவியை வற்புறுத்துதலைக் குறித்துத் தவிர்ந்த தவிர்ச்சியாம்.

**‘‘செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே**

**வன்புறை குறித்தல் தவிர்ச்சி யாகும்.’’(45)**

எனவே வினைமேற் செல்லுங்காலத்துத் தலைவி பிரிவினைப் பொறாள் எனப் போகாமை இல்லை. வற்புறுத்திப்போவான் என்பதாகும்.

- தலைவன்தலைமகளோடு பாசறையில் இணையார்.

**‘‘எண்ணரும் பாசறைப் பெண்ணொடும் புணரார்’’.(35)**

இது தலைமகட்குரியதொரு மரபு உணர்த்திற்று. நினைத்தற்கரிய பாசறைக்கண் தலைமகளிரோடும் புணரார் தலைமக்கள் என்பதாம். மாற்றாரை வெல்லுங்கருத்து மேற்கோடலிற்றலை மகளிரை நினைக்கலாகாதாயிற்று. பாசறை என விசே'த்தவனால் ஏனைப் பிரிவுக்குமாமென்று கொள்க.

- வகைபடவந்த கிளவியாவன.

பிரிந்த தலைமகன் வருவனெனக் கூறுதலும், பருவங்கண்டு கூறுதலும், வற்புறுத்தலும், நிமித்தங்கண்டு கூறுதலும், வந்தான் எனக் கூறுதலும், இந்நிகரனவும், மேற்சொல்லப்பட்ட இடங்களிற் கூற்று வேறுபாடாகி வருவனவுங் கொள்க, அவற்றிற் களவுக்குங் கற்பிற்கும் பொதுவாகி வருவன அகத்திணையியலுட்கொள்க.

- தலைவன் தலைவியைப் பிரியலாகாத காலம்

**“பூப்பின் புறம்பா டீரறு நாளும்**

**நீத்தகன் றுறையார் என்மனார் புலவர்**

**பரத்தையிற் பிரிந்த காலை யான.”**(47)

பூப்பினது புறம்பு பன்னிரண்டு நாளும் தலைவன் தலைவியை விட்டு அகன்று உறைவாரல்லர். தலைவன் பரத்தையிற் பிரிந்த காலத்தும் என்பதாம். பரத்தையர் சேரியானாயினும் பூத்தோன்றி மூன்று நாள் கழித்த பின்பு பன்னிரண்டு நாளும் நீங்குதல் அறமன்று.இதனாற் பயன் என்னையெனின் அது கருத்தோன்றுங் காலம் என்பதாம் என்பது இளம்பூரணர் உரையாம்.

- .இருவரும் இணைந்து புனலாடி மகிழ்தலும் உண்டு.

**“யாறுங் குளனுங் காவும் ஆடிப்**

**பதிஇகந்து நுகர்தலும் உரிய என்ப.”**(51)

யாறுங் குளனும் காவும் ஆடி என்பது விளையாட்டு ஆகும். ”அருந்தவ மாற்றியானுகர்ச்சிபோ லணிகொள என்னும் பாலைக்கலியுள், துயிலின்றி யாநீந்தத் தொழுவையம் புனலாடி மயிலியலார் மருவுண்டு மறந்தமைகு வான்மன்னோ”.(கலித். 30) என்று தலைவன் பதியிகந்து நுகர்ந்தமையைத் தலைவி குறித்தாள்.

- மனையாள்மாட்டு விருப்பில்லை

.வினைமுற்றி மீண்ட தலைவன் இடைச்சுர மருங்கில் தங்காது இரவும் பகலுமாக வருவான், அவ்வாறு வாராது தங்குவானாயின் மனையாள்மாட்டு விருப்பில்லை என்பதாகும்.இதனை கீழ்கண்ட நூற்பா உணர்த்தும்.

**“வினைவயின் பிரிந்தோன் மீண்டுவரு காலை**

**இடைச்சுர மருங்கில் தவிர்தல் இல்லை**

**உள்ளம் போல உற்றுழி உதவும்**

**புள்ளியற் கலிமா உடைமையான.''(54)**

இருந்த வேந்தன் அருந்தொழில் முடித்தெனப் -- புரிந்த காதலொடு பெருந்தேர் யானும் ------ மனைக்கொண்டு புக்கனன் நெடுந்தகை விருந்தேர் பெற்றனள் திருந்திழை யோளே". (அகம்.384)

- வாழ்வு சிறந்த பின்பு பயிற்றல் இறந்ததன் பயனாகும்.

**"காமஞ் சான்ற கடைக்கோட் காலை**

**ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி**

**அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**

**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே''(52)**

இது கற்பியலின் இறுதியில் தலைவனுக்கும் தலைவிக்கும் உரியதோர் மரபுணர்த்தும் நூற்பா ஆகும். தலைவனும் தலைவியும் இல்லறம் புரியத் துணையான தோழி முதலான உரிமைச் சுற்றத்தோடு காப்பு அமைந்த மக்களோடு கூடியிருந்து இல்லறம் நடத்தி காமம் தீர்ந்த காலத்து சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனாகும். சிறந்தது பயிற்றல் என்பது அறத்தின்மேல் மன நிகழ்ச்சி ஆகும்.

## பயிற்சி வினாக்கள்:

### குறுவினாக்கள்

1.கரணம் பொருள் விளக்குக

2.கற்பு என்றால் என்ன?

3.கற்பில் தலைவன் கூற்று நிகழும் இடங்கள் யாவை?

4.காமக்கிழத்தியர் என்பார் யார்?

5.வாயில்கள் கூற்று நிகழ்த்தும் இயல்பு யாது?

6.'சொல்லிய கிளவி அறிவார்க்கும் உரிய'– விளக்குக.

7.தலைமகன் புலக்குஇடம் யாது?

8.'வழிபடு கிழமை'– குறிப்பு வரைக.

9.கூத்தர்குரிய திறம் யாது?

10.இளையோர் கூற்று பற்றி விளக்குக.

### கட்டுரை வினாக்கள்

1.கற்பில் தலைவன் கூற்று நிகழும் இடங்களை விரித்துரைக்க.

2.கற்பியல் தரும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

3.கற்பில் தோழி கூற்று நிகழும் இடங்களை விவரி

4.கற்பில் தலைவி கூற்று நிகழும் இடங்களை விவரி.

5.தலைமகனுக்குரிய மரபுகள் யாவை? விவரிக்க.

6.தலைவிக்குரிய மரபுகள் யாவை? விவரிக்க.

7.கற்பியல் வாழ்வில் தலைவியின் செயல்பாடுகள் யாவை? தொகுத்துரைக்க.

8.கற்பியல் வாழ்வில் தோழி பங்கு குறித்து எழுதுக.

9.கற்பியல் வாயில்கள் குறித்து கட்டுரை வரைக.

10.கற்பியல் கூறும் மரபுகளைத் தொகுத்துரைக்க.

# பொருளியல்

பொருளியல் தொல்காப்பியப் பொருள் அதிகாரத்தின் ஐந்தாவது இயலாய் அமைந்தது பொருளியல் ஆகும். பொருளியல் என்பது பொருளின் இயல்பை உணர்த்துவது என்றாலும் மேற்சொல்லப்பட்ட இயல்களில் இனி சொல்லப்போகும் இயல்களிலும் வரும் பொருளினது இயல்பை உணர்த்துகின்றது என்றே பொருள் கொள்ள வேண்டும். இது கூறியது கூறல் என்றும் குற்றத்தின் பாற்படுமே என்ற ஐயம் எழலாம். கூர்ந்து நோக்கினால் அவ்வியல்களில் கூறாத விடப்பட்ட எஞ்சி நின்ற பொருளின் தன்மைகளையே இவ்வியலில் தொல்காப்பியர் கூறுகின்றார் எனலாம்.அதனை ஒழிபியல் எனினும் இழுக்காது,அகப்பொருள் புறப்பொருள் என்பன இரண்டு பொருண்மையினும் எஞ்சி நின்றமை கூறினமையின் என்று விளக்குவார் இளம்பூரணர்.

## தொடர் மொழிக்கண் பொருள் இயைபு

**“இசைதிரிந் திசைப்பினும் இயையுமன் பொருளே**
**அசைதிரிந் திசையா என்மனார் புலவர்.”** (1)

இசைதிரிந்து ஒலிப்பினும் பொருள் இயையும்; அவ்வழி அச்சொற்கு அங்கமாகிய அசை திரிந்தொலியாது. சொல்லொடுசொல் தொடர்வுபடும் வாய்பாட்டால் தொடராது பிறிதோர் வாய்பாட்டால் தொடுப்பினும் பொருள் தொடர்பு உண்டாயின் பொருள் இயையும்வழி அசைச்சொற்கள் திரியாது நின்ற நிலையே பொருள்படுமாடு ஆயிற்று. தொடர்மொழிகளில் பொருள் செய்யுளில் இசை திரிந்தாலும் பொருள் இயைபு திரியாது. எனவே சொற்களுக்கு உறுப்பாகிய அசை திரியாது என்னும் கருத்தினை, கூறுகிறது். “ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின் ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்.” (குறள். 662) இதில் இரண்டு என்னுந் தொகைக்கு ஊறொராமை எனப் பொருள் உரைக்க வேண்டும். பொருள் கொள்ளுமிடத்து அசைகள் முன்பின் மாறுபடாமல் தொடர்கள் இயைந்து பொருள் தருதலைக் காணலாம்.

## காமம் சார்பாக தலைவன் தலைவிக்கு நிகழும் ஒருபாற் கூற்று

**“நோயும் இன்பமும் இருவகை நிலையிற்**
**காமம் கண்ணிய மரபிடை தெரிய**
**எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய**

**உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்**
**மறுத்துரைப் பதுபோல் நெஞ்சொடு புணர்த்துஞ்**
**சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச்**
**செய்யா மரபில் தொழிற்படுத் தடக்கியும்**
**அவரவர் உறுபிணி தமபோற் சேர்த்தியும்**
**அறிவும் புலனும் வேறுபட நிறீஇ**
**இருபெயர் மூன்றும் உரியவாக**
**உவம வாயிற் படுத்தலும் உவமம்**
**ஒன்றிடத் திருவர்க்கும் உரியபாற் கிளவி''(2)**

துன்பமும் இன்பமும் ஆகிய இருவகை நிலங்களை உடைய காமம் தோன்றியபோது நகை முதலாகிய எட்டுவகை மெய்ப்பாடுகள் இணைய தனது நெஞ்சத்தை நோக்கிய உறுப்புடையது போலவும், உணர்வுடையது போலவும், மறுத்துரைப்பது போலவும், கூற்று நிகழ்த்துவர். இந்நிலையில் சொல்வதே இயல்பினையுடைய புள், மரம், மா, கடல், காணல் முதலியவற்றை செய்வதாகப் பாவித்து கூற்று நிகழ்த்தி, அவையும் தம் உள்ளம் அடங்கியிருப்பது போல அடங்கியிருப்பதாகக் கூறுவதும் உண்டு. எ-டு: "பாய்திரை பாடுஓவாப் பரப்புநீர்ப் பனிக்கடல் தூவறத் துறந்தனன் துறைவன் -------- எம்போலக் காதல் செய்து அகன்றாரை உடைமையோநீ" (கலி : 129) என்று அலைகளிடம் தலைவி கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளமையைக் காணலாம். அதுவேயன்றி, அறிவையும் அறியப்படும் பொருளையும் வேறுபட நிறுத்தி உவமைப்பொருளும், உவமிக்கப்படும் பெயரும் பண்பு, தொழில், பயன் என்ற மூவகைப்பட்ட பொருட்களும் உரியதாக உவமை கூறிக் கூற்று நிகழ்த்துதலும் உண்டு.

**"கனவும் உரித்தால். அவ்விடத் தான்"** '(3)

என்றமையால் காமம் இடையீடுபட்ட இடத்து கனவு காண்டலும் உண்டு என்றார். "கேட்டிசின் வாழி தோழி அல்கல் பொய்வலாளன் மெய்யுறல் மரீஇய வாய்த்தகு பொய்க்கனா மருட்ட ஏற்றெழுத்து அமளி தைவந்த தனனே" (குறுந் : 3) என்ற பாடலைச் சான்றாகக் கொள்ளலாம். தன் மகள் உடன்போக்கில் சென்றுவிட்டாள் என்று பேசப்பட்ட காலத்தில் நற்றாய் கனவு காணல் உண்டு. இது தலைமகற்குந் தலைமகட்கும் உரித்து. "இன்னகை இனையமாகவும் எம்வயின் ---- வண்டுபடு மலரிற் சாஅய்த் தமியேன் மன்ற அளியன் யானே." (குறுந். 30) - தலைவி கனாக்கண்டு கூறியது.

**தாய்க்கு உரிய கிளவி**

**''தாய்க்கும் உரித்தாற் போக்குடன் கிளப்பின்.''(4)**

நற்றாய்க் குரியதோர் மரபு உணர்த்திற்று. மேற்சொல்லப்பட்ட கனவு உடன்போக்குக் கிளக்கப்பட்ட விடத்து தாய்க்கும் உரித்து கண்படை பெறேன் கனவ (அகம். 55)

## நால்வர்க்கும் உரிய மரபுகள்

நட்பு கொண்டு பழகும் இயல்புடைய உயர்திணை மக்கள் அல்லாத அஃறிணைப் பொருள்கள் இடத்தும் அன்பின் தன்மை பொருந்திய பால்கெழு கிளவி அல்லது ஒரு கூற்றுச் சொற்கள் தலைவி, தோழி, செவிலி, நற்றாய் ஆகிய நால்வரிடத்தும் தோன்றும். "தருமணல் கிடந்த பாலைஎன் அருமகனே என முயங்கினள் அழுமே" (அகம் :165) நற்றாய் மணற்பாவையை தன் மகளாகக் கொண்டு அழுதல் காட்டப்பட்டது. தலைவி, தோழி, செவிலி, நற்றாய் என்னும் நால்வர்க்கும் உரிய மரபுகளை பின்வரும் நூற்பாக்கள் குறிப்பிடுகின்றன.

**"பால்கெழு கிளவி நால்வர்க்கும் உரித்தே"(5)**

**"நட்பின் நடக்கை யாங்கலங் கடையே.**"(6)

பான்மை கெழுமப்பட்ட கிளவி பெண்பாலாராகிய நால்வர்க்கும் உரித்தாம். நால்வராவார் - தலைவி, தோழி, நற்றாய், செவிலி. அஃதேல் தலைமகளையொழிய மூவர் என்று அமையாதோ எனின் மேல் தலைமகட்கும் உரித்தென்றார் அவரொடு கூட நால்வர் என வகையறுத்தல் என்பது. அஃதாவது, தலைவியொடு தோழி ஒழுகும் ஒழுக்கம் அவ்வழியல்லாத விடத்தென்றவாறு. அவன்மாட்டு நிகழ்வது தலைவன் தோழிக் குணர்த்தாது பிரிந்தவழி என்று கொள்ளப் படும். பாற்கிளவி என்பது பயிலாது வரும் ஒரு கூற்றுச்சொல் எனப்பட்டது. அதனைக் கெழுமிய சொல் பால்கெழு கிளவியாயிற்று. நற்றாய் கூறியதற்குச் செய்யுள்: "கருமணற் கிடந்த பாவை என் அருமகளே என முயங்கினள் அழுமே". (அகம். 165) செவிலி கூறியதற்குச் செய்யுள் :- "தான்தாயாக் கோங்கம் தளர்ந்து முலைகொடுப்ப அவன்வயின் வேட்டல் ஆகிய பொய்கூறினான் என்னுங் கருத்தினளாகிக் கூறுதலின் மடனழிதலாயிற்று.

## அறத்தொடு நிற்றல்

தலைவன் தலைவி என்னும் இருவரும் இயற்கைப் புணர்ச்சியாகிய முதல் காட்சியில் ஒருவரை ஒருவர் சந்தித்த முறை தூய அன்பொடு பொருந்திய அறத்தின் பாற்பட்ட நற்செயலே என்பதை அறிவுறுத்தல் களவு வெளிப்படுத்துதலின் கருத்தாகக் கொள்வர். ஆதலால் அங்ஙனம் வெளிப்படுத்தும் முறையே 'அறத்தொடு நிற்றல்' என்னும் பெயர் பெற்றது. களவு ஒழுக்கம் கற்பு ஒழுக்கமாக மாறுவதற்கு வழி வகுப்பு அறத்தொடு நிற்றல் ஆகும். „அறம்" என்பதற்கு

„தகுதி‟என்பது பொருள். தலைமக்களின் களவொழுக்கம் கற்பொழுக்கமாய் மாறுவதற்குக் காரணமாய் இருப்பது அறத்தொடு நிற்றல் என்பது ஆகும்..தலைவி அறத்தொடு நிற்கும் காலத்தில்தான் தோழி அறத்தோடு நிற்பாள்.தலைவி கூறாமல் தலைவியின் களவொழுக்கத்தினை தோழி வெளிப்படுத்தமாட்டாள்.

தலைமகள் தான் தலைவன்மீது கொண்ட தூய அன்பினைத் தன் உயிர்த் தோழிக்கு அறிவித்தலும் தோழி அதனைச் செவிலித்தாய்க்கு அறிவித்தலுமே அறம் அல்லது தகுதி ஆகும். இந்நிலையில் தலைவி தோழியிடம், தோழி செவிலித்தாயிடம், செவிலி நற்றாயிடம், நற்றாய் தந்தை மற்றும் தன் ஐயர் முதலியோரிடம் எடுத்துக் கூறுதலே அறத்தொடு நிற்கும் முறைமை ஆகும்.இந்நிலையில் தலைவி தன் களவொழுக்க மனநிலையைத் தன் பெற்றோர்க்கு அறிவித்தல் வேண்டும் என்னும் கருத்து கொண்ட காலத்தன்றித் தோழி தானே சென்று அறிவித்தல் முறை அன்று என்பதனை,

**‘‘அறத்தொடு நிற்கும் காலத் தன்றி**

**அறத்தியல் மரபிலள் தோழி என்ப’’** (11)

என்று உணர்த்துகிறார் தொல்காப்பியர், இதனை,“உயர்மலை நாடற்கு உரைத்தல் ஒன்றோ துயர்மருங் கறியா அன்னைக் கிந்நோய் தணியுமா றிதுவென உரைத்தல் ஒன்றோ செய்யா யாதலிற் கொடியை தோழி மணிகெழு நெடுவரை அணிபெற தோழி மணிகெழு நெடுவரை அணிபெற நிவந்த செயலை அந்தளிர் அன்னஎன் மதனின் மாமெய்ப் பசலையும் கண்டே” (நற்:224) என்ற பாடல் வழி அறியலாம்.

தோழி அறத்தொடு நிற்றல் ஏழு வகைகளில் அமையலாம் என்பது தொல்காப்பியர் கருத்து. அவையாவன:

**‘‘எளித்தல், ஏத்தல், வேட்கையுரைத்தல்,**

**கூறுதல், உசாதல், ஏதீடு தலைப்பாடு,**

**உண்மை செப்பும் கிளவி’’**(12)

என்பனவாகும்.இவ்வாறு தோழி அறத்தொடு நிற்கும் காலத்து, தலைவியின் பெருமைக்கும், செவிலியின் அறிவிற்கும், தனது காவலுக்கும் தலைவனது பெருந்தன்மைக்கும் பழி நேராதவாறு களவொழுக்கம் நிகழ்ந்த முறையினை முரண்பாடில்லாத மொழிகளால் எடுத்துரைத்தல் மரபு என்பார் இறையனார் களவியல் உரையாசிரியர். களவியலில் தோழிக்குரிய கிளவியெல்லாம்

தொகுத்துரைக்கும் நாற்றமும் தோற்றமும் என்னும் நூற்பாவில் முன்னிலை அறனெனப்படுதல் என்று இருவகை என்பதனை விளக்குமிடத்து அறத்தொடு நிலையின்கண் தோழிக்கு கூற்று நிகழும். அவ் அறத்தொடு நிலை எளித்தல் முதலா உண்மை செப்பும் கிளவி நற்றாய்க்கும் ஒக்கும். ."அன்னாய் வாழிவேண் டன்னை நின்மகள் பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு நனிபசந் தனளென வினவுதி".(அகம். 48) என்றவழிச் செவிலி குறிப்பினான் உணர்ந்தவாறு காண்க.

## செவிலிக்குரிய மரபு

தலைவிக்கு காமம் மிகுந்தவழி அல்லது சொல் கூற்று நிகழாது. எனவே தலைவியின் உடல் வேறுபாடு கொண்டு செவிலி அதனைக் குறிப்பினால் உணர்ந்து கொள்வாள்.

**"உற்றுழி அல்லது சொல்லல் இன்மையின்**

**அப்பொருள் வேட்கைக் கிழவியின் உணர்ப" (13)**

என்றார். இது நற்றாய்க்கும் பொருந்துவதாகும். "அன்னாய் வாழி வேண்டு அன்னை நின்மகள் பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு நனிபசந் தனள்என வினவதி --------------------" (அகம் : 48) என்பது போல அறிவாள். எனவே தோழி அறத்தொடு நிற்பதற்கு முன்னரே செவிலி அறிவாள்.

## களவுக்காலத்துத் தோழிக்குரியதோர் திறன்

**"இரந்து குறையுற்ற கிழவனைத் தோழி**
**நிரம்ப நீக்கி நிறுத்தல் அன்றியும்**
**வாய்மை கூறலும் பொய்தலைப் பெய்தலும்**
**நல்வகை யுடைய நயத்திற் கூறியும்**
**பல்வகை யானும் படைக்கவும் பெறுமே"(44)**

தனது கருத்தனை நிறைவேற்றத் தருமாறு இரந்து குறையுற்ற தலைமகனைத் தோழி தொலைவில் நீக்கி நிறுத்தலன்றி மெய்ம்மை கூறுதலும் பொய்ம்மை கூறுதலும் நல்வகையுடைய நயத்தினாற் கூறியும் பல்வகையானும் படைத்து மொழிந்து சொல்லவும் பெறும். நல்வகையுடைய நயத்திற்குச் செய்யுள்:- "வெள்ளாங் குருகின் பிள்ளையும் பலவே அவையினும் பலவே சிறுகருங் காக்கை அவையினும் அவையினும் பலவே குவிமடல் ஓங்கிரும் பெண்ணை மீமிசைத் தொடுத்த தூங்கணங் குரீஇக் கூட்டுவாழ் சினையே." இது மடலேறுவல் என்ற தலைவனைப் பழித்து

அருளுடையீராதலான் மடலேறுவது அரிது என நயத்திற் கூறியது. இதுவுமோர் மரபுவழுவமைத்தவாறு.

**உயர்மொழிக் கிளவி**

**“உயர்மொழிக் கிளவியும் உரியவால் அவட்கே.”(47)**

உயர்த்துச் சொல்லுங் கூற்றும் தோழிக்கு உரித்து. “தாமரைக் கண்ணியை தண்நறுஞ் சாந்தினை நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின் மணங்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉம் அணங்கென அஞ்சுவர் சிறுகுடி யோரே” (கலித்.52) - உயர்த்துச் சொல்லியவாறு

**தோழிக்குரியதோர் மரபு வழுக்காத்தல்**

**“உறுகண் ஓம்பல் தன்னியல் பாகலின்**
**உரிய தாகும் தோழிகண் உரனே”(46)**

தலைமகனுக்கு உற்ற துன்பத்தைப் நீக்குதல் தோழி இயல்பாகலின் தோழி அவட்குரியதாகும் அறிவு உடையள் எனக் கூறுதல் அவட்குரியதாகும். “பால்மருள் மருப்பின் உரல்புரை பாவடி” என்னும் பாலைக் கலிப் பாடலுள்,“கிழவர் இன்னோர் என்னாது பொருள்தான் பழவினை மருங்கிற் பெயர்புபெயர் புறையும்” (கலித். 21) எனக் கூறினாள் என்று கொள்க.

**பெண் இயல்பு**

**“செறிவும் நிறைவும் செம்மையுஞ் செப்பும்**
**அறிவும் அருமையும் பெண்பாலான.”(16)**

என்பன. அடக்கம், அமைதி, நேர்மை, வற்புறுத்திக் கூறல், தீதொரீஇ நன்பால் உய்க்கும் அறிவு உள்ளக் கருத்து அறிதல் அருமை என்பன பெண்டிர்க் குரியதோர் இயல்பாகும். செறிவு - அடக்கம் நிறைவு - அமைதி செம்மை - மனங்கோடாமை செப்பு - சொல்லுதல். அறிவு - நன்மை பயப்பனவுந் தீமை பயப்பனவும் அறிதல். அருமை - உள்ளக் கருத்தறிதல் அருமை. இவை எல்லாம் பெண்பக்கத்தின என்றவாறு. இதனாற் சொல்லியது மேற்சொல்லிய அறத்தொடுநிலைவகை. இனிக் கூறுகின்ற வரைவுகடாதற்குப் பகுதியும் உண்மை வகையானும் புனைந்துரைவகையானும் கூறுங்கால் இவை பேதையராகிய பெண்டிர்க்கு இயையுமோ என ஐயுற்றார்க்குக் கூறப்பட்டது.

**களவில் தலைமகள் இயல்பும் திறனும்**

களவில் தலைமகள் இயல்பும் திறனும் குறித்து சில நூற்பாக்கள் குறிப்பிடும்.

**“பொருளென மொழிதலும் வரைநிலை யின்றே**

**காப்புக்கைம் மிகுதல் உண்மையான.”**(21)

**“அன்பே யறனே யின்ப நாணொடு**

**துறந்த ஒழுக்கம் பழித்தன் றாகலின்**

**ஒன்றும் வேண்டா காப்பினுள்ளே.”**(22)

பொருள்வயிற் பிரிதல் வேண்டும் எனக் கூறுதலும் கடியப்படாது, தலைமகளைத் தமர் காக்குங்காவல் மிகுதியுள்ள வழி அன்பு, அறன், இன்பம். நாண் என் பன நீங்கப்பெறும். தலைவி வெளியே செல்லமுடியாதவாறு காப்பு மிகுதல் உண்மையான போது பொருள்வயிற் பிரிதல் என்று கூறுதல் நீக்கப்படாது. சுரமென மொழிதலும் வரைநிலை யின்றே. தலைமகன் பொருள்வயிற் பிரியும்வழி உடன் போக்குக் கருதிய தலைமகட்கு யான் போகின்ற நெறி கல்லுங் கரடுமாகிய சுரம் எனக் கூறுதலும் நீக்கப்படாது. இதனாற் சொல்லியது காப்புமிகுதிக்கண் வருத்தமுறுந் தலைமகளை உடன்கொண்டு போதல் தக்கது என்பார்க்கு நெறியருமை கூறி விலக்கவும் பெறும் என்பதாகும்.

**தலைவிக்குரிய இயல்புகள்**

**“செய்பொரு ளச்சமும் வினைவயிற் பிரிவும்**

**மெய்பெற உணர்த்துங் கிழவி பாராட்டே.”**(39)

தலைமகன் பொருள்வயிற் பிரியும் காலத்து தலைவியைப் பாராட்டும் பாராட்டு தலைமகன் பொருள்வயிற் பிரியும் இடத்து உளதாகிய அச்சத்தையும் வினைவயிற் பிரிவையும் தலைவிக்கு உணர்த்தும். “நெஞ்சு நடுக்குறக் கேட்டுங் கடுத்துந்தாம் அஞ்சியது ஆங்கே அணங்காகும் என்னுஞ்சொல் இன்றீங் கிளவியாய் வாய்மன்ற நின்கேள் புதுவது பன்னாளும் பாராட்ட யானும் இதுவொன் றுடைத்தென எண்ணி ” (கலித்.24) பாராட்டினால் தலைமகள் பிரிவு உணர்ந்திற்று.

**தலைவியின் ஊடல்**

**“கற்பு வழிப் பட்டவள் பரத்தையை ஏத்தினும்**

**உள்ளத் தூடல் உண்டென மொழிப”**(40)

கற்புக் காரணமாகத் தலைவி தலைமகனது பரத்தைமைக்கு உடன்பட்டாளே ஆயினும், உள்ளத்தின்கண் ஊடல் நிகழும்.

**தலைவிக்கு உரிய மரபு**

**“கிழவோள் பிறள்குணம் இவையெனக் கூறிக்**

**கிழவோன் குறிப்பினை உணர்தற்கும் உரியள்''(41)**

தலைவி மற்றொருத்தி குணம் இத்தன்மையள் எனச் சொல்லித் தலைமகன் குறிப்பினை அறிதற்கும் உரியள். "கண்டிகும் அல்லமோ கொண்கநின் கேளே ஒள்ளிழை உயர்மணல் வீழ்ந்தென வெள்ளாங் குருகை வினவு வோளே." (ஐங்குறு.122)

**''தலைமகள் வழுக்காத்தல்**

**பொழுது தலைவைத்த கையறு காலை**

**இறந்த போலக் கிளக்குங் கிளவி**

**மடனே வருத்தம் மருட்கை மிகுதியொடு**

**அவைநாற் பொருட்கண் நிகழும் என்ப.''(42)**

இது பருவம் வந்துழித் தலைமகட்கு உரியதோர் வழுக்காத்தலை உணர்த்திற்று. பொழுது தலைவைத்தல்: - யாதானுமொரு பருவத்தைக் குறித்தவழி அப்பருவம் இருதிங்களை எல்லையாக உடைத்தாயினும் அது தோற்றியவழி என்றவாறாம். கையறு காலை - இது கண்டு செயலற்றகாலை ஆகும். இறந்தபோலக் கிளத்தல்: - அக்காலந் தோன்றிய பொழுது கழிந்தது போலக் கூறுதல். மடனே வருத்தம் மருட்கை மிகுதியொடு அவை நாற் பொருட்கண் நிகழ்தல்: - அவ்வாறு கூறுதல் அறியாமையானாதல் வருத்தத்தானாதல் மயக்கத்தானாதல் அக் காலத்திற்குரிய பொருள் மிகத் தோன்றுதலானாதல் என இந்நான்கு பொருளானும் நிகழும் என்பதாம். சிறுபொழுதாயின் யாமங் கழிவதன் முன்னர்க் கூறுதல். "பொருகடல் வண்ணன் புனைமார்பில் தார்போல் திருவில் விலங்கூன்றித் தீம் பெயல் தாழ வருது மெனமொழிந்தார் வாரார்கொல் வானம் கருவிருந்து ஆலிக்கும் போழ்து." (கார்நாற். 1) - இது பருவங்கண்டவழி வாரார்கொல் என்றமையால் இறந்த போலக் கிளந்தவாறாயிற்று. இதுவும் ஓர் மரபு வழுவமைத்தல்.

## தலைமகனுக்குரிய மரபு

தேரும் யானையுங்குதிரையும் பிறவும் ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப தலைமகன் களவுக்காலத்துத் தேரும் யானையும் குதிரையும் பிறவும் ஊர்ந்து வந்து தலைவியைச் சேறலும் உரியன். "நெடுந்தேர் கடாஅய்த் தமியராய் வந்தோர் கடுங்களிறு காணீரோ என்றீர் - கொடுங்குழையார் யானை அதருள்ளி நிற்பரோ தம்புனத்து ஏனல் கிளிகடிகு வார்."

## களவில் தலைவன் மரபுகள்

களவின்போது தலைவிக்குத் தலைவனுடன் உடன்போதல் குறிப்பும் வரைவுகடாதல் குறிப்பும் தோன்றும் இடங்களைக் கீழ்கண்ட நூற்பா விளக்கும்.

**"ஒருதலை உரிமை வேண்டினும் மகடூஉப்**
**பிரித லச்சம் உண்மை யானும்**
**அம்பலும் அலருங் களவுவெளிப் படுக்குமென்று**
**அஞ்ச வந்த ஆங்கிரு வகையினும்**
**நோக்கொடு வந்த இடையூறு பொருளினும்**
**போக்கும் வரைவும் மனைவிகண் தோன்றும்."**(31)

ஒருதலையுரிமை வேண்டல் - ஒரு தலையாகத் தலைமகள் உரிமை பூண்டலை வேண்டியவிடத்து மென்றவாறாம். மகடூஉப் பிரிதல் எச்சமுண்மை - பிரிதற்கண் வரும் அச்சம் பெண்பாற்கு இயல்பாகும்.. அம்பலும் அலரும் களவுவெளிப்படுக்கு மென்று அஞ்ச வந்த வாங்கிரு வகை - களவொழுக்கத்தை வெளிப்படுக்குமென்று அஞ்சும்படியாக வந்த அம்பலும் அலருமாகிய இருவகையின்கண்ணும் என்றவாறு. நோக்கொடு வந்த இடையூறு பொருள் - தலைமகன் வரவு பார்த்திருந்தவழி வந்த இடையூறாகிய பொருளின்கண்ணும் என்றவாறு. அவையாவன:- தாய் துஞ்சாமை, நிலவு வெளிப்படுதல் முதலியன. மேற்கண்ட நிகழ்வுகளில் தலைமகனுடன் போதற் குறிப்பும் வரைவுகடாதற் குறிப்பும் மனைவிமாட்டுத் தோன்றும். "சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி மறுகிற் பெண்டிர் அம்பல் தூற்றச் சிறுகோல் வலந்தனள் அன்னை அலைப்ப அலந்தனென் வாழி தோழி கானற் புதுமலர் தீண்டிய பூநாறு குரூஉச்சுவற் கடுமா பூண்ட நெடுந்தேர் கடைஇ நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு செலவயர்ந் திசினால் யானே அலர்சுமந் தொழிகஇவ் அழுங்க லூரே." (நற்றிணை.149) இது போக்குக்குறித்தது இரும்பிழி மகாஅர்" என்னும் பாட்டு வரைவு குறித்தது.

**கற்பில் தலைவன் மரபு**

**"மனைவி உயர்வுங் கிழவோன் பணிவும்**
**நினையுங் காலைப் புலவியுள் உரிய."**(33)

தலைமகள் உயர்வும் தலைமகன் தாழ்வும் ஆராயுங் காலத்துப் புலவிக்காலத்து உரியதாம். எனவே ஒழிந்த ஊடல், துனி என்பனவற்றிற்கு உரியவாம். "ஒரூஉக் கொடி யியல் நல்லார் குரனாற்றத் துற்ற -------- ஆயிழாய், நின்கண் பெறினல்லால் இன்னுயிர் வாழ்கல்லா என்கண் எவனோ தவறு" (கலித் . 88 ) 9.25 தலைவியை நலம் பாராட்டல்: நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதியிற் புகழ்தகை வரையார் கற்பி னுள்ளே. களவுக்காலத்து தலைவியின் நலம் பாராட்டிய தலைமகன் கற்புக் காலத்தும் எழில் நலம் பாராட்டுவான் என்பதாம். "அணைமருள்

இன்றுயில் அம்பணைத் தடமென்றோள் ------- அலர்முலை யாகத் தகன்ற அல்குல் சிலநிரை வால்வளைச் செய்யா யோவெனப் பலபல கட்டுரை பண்டையிற் பாராட்டி". (கலித். 14)

**தலைவன் ஐயுறல்**

**"உயர்மொழிக் கிளவி உறழுங் கிளவி**
**ஐயக் கிளவி ஆடூஉவிற் குரித்தே".(44)**

உயர்த்துச் சொல்லுதற்குரிய கிளவி தலைமகற்குந் தலைமகட்கும் ஒத்தகிளவியாகும், ஐயக்கிளவி தலைமகற்கே உரியதாம். தலைவிமாட்டு ஐயக்கிளவி இல்லை என்பதாம். அதனாற் குற்றமென்னையெனின், தெய்வமென்று ஐயுறுங்கால் அதனை முன்பு கண்டறிவாளாதல் வேண்டும். காணாமையின் ஐயமிலள் என்க. இனி உயர்த்துச் சொல்லுதல் உளவாம். "அவன்மறை தேஎம் நோக்கி மற்றிவன் மகனே தோழி யென்றனள்". (அகம்.48) - உயர்த்துச் சொல்லியது. தலைவன் உயர்த்துச் சொல்லியதற்குச் செய்யுள்:- "மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல் காதலை வாழி மதி." (குறள்.1118) - தலைவன் உயர்த்துச் சொல்லியது.

**தலைவனுக்கான சிறப்பு மரபு**

**"தம்முறு விழுமம் பரத்தையர் கூறினும்**
**மெய்ம்மை யாக அவர்வயி னுணர்ந்தும்**
**தலைத்தாட் கழறல்தம் எதிர்ப்பொழு தின்றே**
**மலிதலும் ஊடலும் அவையலங் கடையே"(41)**

பரத்தையர் தாம் உற்ற துன்பத்தினைத் தலைமகட்குக் கூறியவழியும் அவரிடத்துத் துன்பத்தை மெய்ம்மையாக உணர்ந்து வைத்து மகிழ்ச்சியும் புலவியும் அல்லாத காலத்து தலைமகன்மாட்டுக் கழறுதல் தலைவன் எதிர்ப்பட்டபொழுது இல்லை. "நின்னணங் குற்றவர் நீ செய்யும் கொடுமைகள் என்னுழை வந்துநொந் துரையாமற் பெறுகற்பின்" (கலித். 77) - புலவியிற் கூறியது.

**தலைமக்கட்கு ஆகாதன**

**"சினனே பேதைமை நிம்பிரி நல்குரவு**

**அனைநால் வகையும் சிறப்பொடு வருமே" (52)**

வெகுளி, அறியாமை, பொறாமை, வறுமை இவை நான்கும் தலைமக்கட்ப் பொருந்தாதவை ஆகும். ஆயினும் உயர்ந்த பண்புகளில் ஒன்றினைச் சிறப்பிப்பதற்கு வருமாயின் அது தவறில்லை.

சான்றாக,“தொடிய எமக்கு நீ யாரை பெரியார்க்கு அடியரோ ஆற்றாதவா் ------“ (கலித் : 88) எனும் பாடல் சினம் பற்றி வரினும் காமக்குறிப்பு மிகுந்த தலைமகள் கூற்றாதலின் ஏற்றுக்கொளற்கு உரித்து. “பொய்யாதல் யான்யாங்கு அறிகோ மற்றுஐய‟ (கலி : 19) இது பிரிவாற்றாமையைச் சிறப்பிக்க வந்தது. “மகன் அல்லை மன்றஇனி------------“ (கலி : 19) நிம்பிரியாகிய வெறுப்பு காரணமாயிற்று. குறுந்தொகை 265-ம் பாடல் தலைவனின் செல்வக் குறைபாட்டினைக் கூறி, பின்பு தலைவியால் செல்வச் சிறப்புப் பெற்றாள் எனக் கூறுவது நல்குரவு பற்றித் தலைவனைச் சிறப்பிக்க வந்தது.

### தலைமகட்குந் தோழிக்கு உரியதோர் திறன்

**“வருத்த மிகுதி சுட்டுங் காலை**
**உரித்தென மொழிப வாழ்க்கையுள் இரக்கம்.” (32)**

வருத்தமிகுதியைக் குறித்தவழி மனைவாழ்க்கையுள் இரக்கம் உரித்தென்று சொல்லுவர். எனவே, வருத்த மிகுதியைச் சுட்டாதவழி மனைவாழ்க்கையுள் இரக்கம் இன்றெனக் கொள்ளப்படும். “செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின் வல்வரவு வாழ்வார்க் குரை”. (குறள். 1151)

### உண்ணாத பொருளை உண்டன போலக் கூறல்

**“உண்டற் குரிய அல்லாப்பொருளை**
**உண்டன போலக் கூறலும் மரபே”(19)**

இ.்.து ஒருசார் வழுவமைத்தலை நுதலிற்று. உண்ணல் தொழிலுக்கு உரியவல்லாத பொருளை உண்டனவாகக் கூறலும் மரபாகும். “பசலையால் உணப்பட்டுப் பண்டைநீ ரொழிந்தக்கால்” (கலித். 15) எனவும்,“கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே இவையென்னைத் தின்னு மவர்க்காண லுற்று” (குறள். 1244) எனவும் வரும்.

### வரைவு கடாதல்

தலைமக்களின் களவொழுக்கம் கற்பொழுக்கமாய் மாறுதலே சிறப்புடைத்தாம். இவ்வாறு மாற்றுகின்ற வேலையினை தோழி செய்தல் வேண்டும். இச்செயலுக்கு வரைவு கடாதல் என்று பெயர்,

**“பொழுதும் ஆறுங் காப்புமென் றிவற்றின்**
**வழுவி னாகிய குற்றங் காட்டலும்**

**தன்னை யழிதலும் அவணூ றஞ்சலும்**

**இரவினும் பகலினும் நீவா என்றலும்**

**கிழவோன் தன்னை வாரல் என்றலும்**

**நன்மையுந் தீமையும் பிறிதினைக் கூறலும்**

**புரைபட வந்த அன்னவை பிறவும்**

**வரைதல் வேட்கைப் பொருள என்ப.''(16)**

தலைமகன் வருகின்ற பொழுதும் நெறியும் ஊரின்கண்காவலும் என்று சொல்லப்பட்டவற்றின்கண் வரும் தப்பினால் உளதாகுங் குற்றங் காட்டலும். தான் மனனழிந்து கூறலும், தலைமகட்கு வரும் இடையூறு கூறலும், தலைமகளைப் பகற்குறிவிலக்கி இரவுக்குறி நீ வா என்றலும், இரவுக்குறி விலக்கிப்பகற்குறி நீ வா என்றலும், தலைமகனை வாராதொழி எனக்கூறலும், இத்தன்மையவாகிக் குற்றம் பிற பொருளை எடுத்துக் கூறலும், இத் தன்மையவாகிக் குற்றம் பயப்ப வந்த அத்தன்மைய பிறவும் வரைதல் வேண்டும் என்னும் பொருளையுடையன ஆகும். வேட்கை மறுத்துக் கிளந்தாங் குரைத்தல் மரீஇ மருங்கின் உரித்தென மொழிப. இதுவும் தலைமகட்குந் தோழிக்கும் உரியதோர் இயல்புணர்த்திற்று. கமாவது களவொழுக்கம் நீட்டித்த இடத்து வரைதல் வேட்கைப் பொருளாற் கூறுதலை மறுத்துப் பட்டாங்கு கூறிச்சொல்லுதல் உரித்தாம். “கொடிச்சியின்குரல் கிளைசெத்தடுக்கத்துப் பைங்குரல் ஏனற் படர்தருங் கிளியெனக் காவலுங் கடியுநர் போல்வர் மாமலை நாடவரைந்தனை கொண்மே”(ஐங்குறு.289)

**புலனெறி வழக்குகள்**

**“உயர்ந்தோர் கிளவி வழக்கொடு புணர்தலின்**

**வழக்குவழிப் படுதல் செய்யுட்குக் கடனே.''(23)**

உயர்ந்தோர் கூற்று வழக்குவழிப்படுதலின் வழக்குப்படுதல் செய்யுட்குக் கடன் என்பதாகும். எனவே, வழக்கழியவருவன செய்யுட்கண் வரப்பெறாது. இதனானே மேலதிகாரத்திற் கூறிய சொல்லும் இவ் அதிகாரத்திற் கூறுதற்கு இயன்ற பொருளும் வழக்கொடு புணர்ந்தனவே, புணராதன செய்யுட்கண் வரப்பெறாது. இன்னும் இந் நூலகத்து அகப்பொருளாகவும் புறப்பொருளாகவும் எடுத்தோதப்பட்டதன்றி உயர்ந்தோர் வழக்கொடு பொருந்தி வருவன எல்லாம் செய்யுட்குப் பொருளாகப் புணர்க்க என எஞ்சியது உணர்த்திய வாறுமாம். உயர்ந்தோர் வழக்கென்றமையானும் பொருளும் இன்பமும் கெடாமல் முன்றினுளொன்று பயப்பக் கூறுதல் கொள்க என்பது இளம்பூரணம்.

**வழக்கெனல் ஆகாதன**

**“அறக்கழி வுடையன பொருட்பயன் வரினே**

**வழக்கென வழங்கலும் பழித்த தென்ப.''(24)**

அகப்பொருளும் அறத்திற் கழிவுடையன புறப்பொருளும் வழக்கு எனல் ஆகாது. பொருளாவது அகப்பொருளும் புறப்பொருளும். அறத்திற் கழிவு வரும் அகப்பொருளாவது பிறன்மனைக் கூட்டம். பொருட்பயன் வருதலாவது அவராலே பொருள் பெறுதல். அவ்விடத்து இன்பமும் பொருளும் பயப்பினும் அதனை வழங்குதலும் பழிக்கப்பட்டதன்று என்பதாம். எனைத்துணைய ராயினும் என்னாந் தினைத்துணையுந் தேரான் பிறனில் புகல். (குறள். 144) புறப்பொருட்கண் அறக்கழி வுடையன பகைவர் தளத்து நிரைகோடலும் அழித்தலும் போலப் பொருட்பயன் காரணத்தான் நட்டோர் தேஎத்துஞ் செயல். இவையும் பொருள் பயப்பினும் வழக்கென வழங்குத லாகாது. "பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர் கழிநல் குரவே தலை". (குறள். 657) மிக்க பொருளினுட் பொருள்வகை புணர்க்க நாணுத்தலைப் பிரியா நல்வழிப் படுத்தே. மேற்கூறப்பட்ட அகப்பொருள் அப்பொருட்கண்ணும் நாண் நீங்காத நல்வழிக்கட் படுத்துப் பொருள்வகை புணர்க்க. என்பது நூற்பாவின் பொருளாம்.அறம் முதலியன வழுவின்று ஆயினும் நாண் அழியும் வரும் பொருண்மை புணர்த்தற்க என்பார் உரையாசிரியர். "பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின் அறன் நாணத் தக்க துடைத்து". (குறள். 1018)

**சொல் வழுவும் மரபு வழுவும்**

**''முறைப்பெயர் மருங்கினற் கெழுதகைப் பொதுச்சொல்**

**நிலைக்குரி மரபின் இருவீற்றும் உரித்தே.''(26)**

முறைப்பெயராவது இயற்பெயர் முதலிய பெயரான் அன்றி முறைமைப்பற்றி வருவது. அது தந்தை மகனைக் கூறும்பொழுது தம்முன், தம்பி என்பனவும் கிழவன், தோழன் என்பனவும் போல வருவன. "எல்லா, இ∴தொத்த னென்பெறான் கேட்டைக்காண்" (கலித். 61) என்றவழிப் பெண்பால்மேல் வந்தது. "எல்லா, தமக˙கினி தென்று வலிதிற் பிறர்க்கின்னா செய்வது நன்றாமோ மற்று." (கலித். 62)- தலைமகன்மேல் வந்தது. தாயத்தின் அடையா என்தோள் எழுதிய தொய்யிலும் யாழநின் மைந்துடைமார்பிற் சுணங்கும் நினைத்துக்காண்". (கலித்.18) தலைமகள் தோளைத் தோழி தன்னையும் உளப்படுத்தி எனதெனக் கூறியது

**பொருள் கொள்ளும் மரபு**

**''ஒருபாற்கிளவி ஏனைப்பாற் கண்ணும்**

**வருவகை தாமே வழக்கென மொழிப''(28).**

ஒருபக்கத்துக் கூறிய பொருண்மை ஒழிந்த பக்கத்துக் கண்ணும் வருவகைதாம் வழக்கு நெறி. அதாவது மனையோள்மாட்டும் காமக்கிழத்தி மாட்டும் நிகழும் புணர்ச்சியும் பிரிவும் ஊடலும்

பரத்தையர்மாட்டு நிகழும். அன்னை கடுஞ்சொல் அறியாதாள்” (கலித். 97) என்னுங் கலியுள்,“சிறுகாலை யிற்கடை வந்து குறியெய்த அவ்வழி என்றும்யான் காணேண்” - என்பது புணர்வு குறித்து வந்தது.

**இன்பத்தின் பொதுமை**

**“எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது**

**தான் அமர்ந்து வரூஉம் மேவற்றாகும்”(.29)**

எல்லாவுயிர்க்கும் இன்பமென்பது தான் மனம் பொருந்திவரு விருப்பத்தையுடைத்து என்பதாம். எனவே மனம் பொருந்தியவழிப் பரத்தையர் மாட்டும் இன்பம் உளதாகும் எனவும், பொருந்தாதவழி மனைவியர்மாட்டும் இன்பமின்றாம் என்பதும் கொள்க.

**வாயில்கள் மரபு**

**“வாயிற் கிளவி வெளிப்படக் கிளத்தல்**

**தாவின் றுரிய தத்தங் கூற்றே”(47)**

வாயில்கட்குரியதோர் மரபு உணர்த்துதல் நுதலிற்று. அவரவர் சொல்லத்தகுங் கூறுபாடு வாயில்கள் கூறுங் கிளவி வெளிப்படக் கிளத்தல் கேடின்றி யுரிய என்பது இதன் பொருளாகும். எனவே, வாயில்களல்லாத தலைமகளும் நற்றாயும் மறைத்துச் சொல்லப்பெறுவர் என்பது பெறப்படும்.

**பரத்தையர் பிரிவிற்குரியோர்**

**“பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே**

**நிலத்திரி பின்றஃ. தென்மனார் புலவர்”(30)**

பரத்தையர்மாட்டு வாயில் விடுதல் நான்கு வருணத்தார்க்கும் உரித்து; அவ்வழிப் பிரியும் பிரிவு நிலம் பெயர்ந்து செல்லுதல் இல்லை என்பார் தொல்காப்பியர். எனவே, தன்னூரகத்துஞ் சார்ந்தவிடமுங் கொள்க. நால்வர்க்கும் உரித்து என்றமையான் நான்கு வருணத்துப் பெண்பாலாரும், அவளொடு ஊடப்பெறும் என்பதாம். “யாரிவன் எங்கூந்தல் கொள்வான் இதுவுமோர் ஊராண்மைக் கொத்த படிறுடைத்து”. (கலித். 89) - என்பது பார்ப்பனி கூற்று. “பெரியார்க், கடியரோ ஆற்றா தவர்”. (கலித். 88) - என்பது கூற்று

**இறைச்சி**

அகப்பொருள் ஒழுகலாற்றில் தலைவன், தலைவி, தோழி போன்றோர் உரையாடுவதற்கான சொல்லமைதிகளையும் அமைத்தற்குரிய பொருள் வகையினையும் பொருளியலில் தொல்காப்பியர் கூறுகின்றார். அவை இறைச்சி, உள்ளுறை, உள்ளுறை உவமம் என மூன்று நிலைகளில் அமைகின்றன. இறைச்சி பொருள் பற்றிய செய்திகளை மூன்று நூற்பாக்களில் தருகின்றார்.

**"இறைச்சி தானே உரிப்புறத்ததுவே"(35)**

என்பதால் இறைச்சி உரிப்பொருளின் புறத்தாகித் தோன்றும் பொருள் என்பது பெறப்படுகிறது. அதாவது கருப்பொருளாகிய நாட்டிற்கும் ஊர்க்கும் துறைக்கும் அடையாகி வருவது என்பது இளம்பூரணர் கருத்து. "நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று நீரினுள் ஆரள வின்றே சாரல் கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே" (குறுந் : 3) என்ற பாடலில் நாட்டிற்கும் அடையாகி வந்த குறிஞ்சிப் பூவும் தேனும் இறைச்சிப் பொருளாகும்.

**"இறைச்சியில் பிறக்கும் பொருள் மாருளவே**
**திறத்தியல் மருங்கின் தெரியு மோர்க்கே"(36)**

என்பதால் இறைச்சியில் பிறக்கும் பிறிதுமோர் பொருளும் உண்டு என்பது குறிப்பிடப்படுகிறது. எனவே பிறிதுமோர் பொருள் கொள்ளக் கிடப்பன. கிடவாதன என இறைச்சி பொருள் இருவகைப்படும். "ஒன்றேன் அல்லென ஒன்றுவென் குன்றத்து பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை குறவர் மகளிர் கூந்தல் நாடனொடு ஒன்றேன் தோழி ஒன்றினாளே" (குறுந் : 208) இது உடன்போதல் குறிப்பினளாய தலைவி தோழியிடம் கூறியது.இதனுட் பொருகளி றென்றமையால் தலைமகள் தமர் தலைமகன் வரைவிற் குடன்படுவோரும் மறுப்பாருமாகி மாறுபட்ட தென்பது தோற்றுகின்றது. "பொருகளிறு மிதித்த வேங்கை‟ யென்றதனாற் பொருகின்ற விரண்டு களிற்றினும் மிதிப்ப தொன்றாகலின் வரைவுடன்படாதார் தலைமகனை யவமதித்தவாறு காட்டிற்று. „வேங்கை நின்று கொய்ய மலரும்‟ என்றதனான் முன்பு ஏறிப்பறித்தல் வேண்டுவது இப்பொழுது நின்று பறிக்கலாயிற்று என்னும் பொருள்பட்டது. இதனானே பண்டு நமக்கரியனாகிய தலைமகன் தன்னை யவமதிக்கவும் நமக்கெளியனாகியருள் செய்கின்றானெனப் பொருள் கொளக்கிடந்தது. தலைவி தலைவனது பிரிவால் ஆற்றாது வருந்திய காலத்து, இறைச்சி பொருள்களுள் தலைவன் அன்பு செய்தற்குத் தகுதியுள்ளவற்றைக் கருதிக் கூறுதல் தலைவனின் அன்பை வற்புறுத்திக் கூறுதல் பொருட்டாம் என்பதனை,

**"அன்புறு நகுவன இறைச்சியிற் சுட்டலும்**
**வன்புறையாரும் வருந்திய பொழுதே"(37)**

என விளக்கியுள்ளார். “அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையால் கடியனே கணங்குழாய் காடென்றார்: அக்காட்டுள் தடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப் பிடியூட்டிப் பின்உண்ணும் களிரெனவும் உரைத்தனரே” (கலித் : 11) என்று கூறி தலைவன் இக்காட்சியினைக் கண்டு விரைவில் திரும்ப வருவான் எனத் தோழி உரைப்பதாகும். தலைவன் பொருள் காரணமாகப் பிரியும் இடத்து ஆறு(வழி) இன்னாமையால் உளதாகிய அச்சமும், தலைவியைப் பாராட்டுதலும் தனது பிரிவைக் குறிப்பால் உணர்த்துவதாகும். கற்பின் வழிப்பட்ட தலைமகள் பரத்தயைப் புகழ்ந்து பாராட்டினாள். ஆயினும் அவளது மனத்தினுள்ளே ஊடல் குறிப்பு நிலைபெற்றிருக்கும்.மேலும் வேறொருத்தியின் குணம் இத்தன்மையது என்று தலைவி தலைவனிடத்துக் கூறி அதன் வழியாகத் தலைவனது உள்ளக்குறிப்பினை அறிதலும் தலைவிக்குரிய இயல்பாகும் என்று குறிப்பிடுகிறார்.

**உள்ளுறை உவமை**

உவமம் இரண்டு வகைப்படும். 1. உள்ளுறை உவமம். 2. ஏனை உவமம் .உள்ளுறை என்பது பிறிது ஒரு பொருள் புலப்படுமாறு நிற்பது. அது கருப்பொருள் பற்றி வருமென்பது அகத்திணையியலுள் (அகத்திணை.50) கூறப்பட்டது.உள்ளுறை ஐந்து வகைப்படும். அவையாவன. 1. உடனுறை 2. உவமம் 3. சுட்டு 4. நகை 5. சிறப்பு என்பன.

**“உடனுறை உவமம் சுட்டுநகை சிறப்பெனக்**

**கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே”. (48)**

**1.உடனுறை**: உடனுறையாவது உடனுறைவ தொன்றைச் சொல்ல, அதனாலே பிறிதொரு பொருள் விளங்குவது. “விளையா டாயமொடு வெண்மணல் அழுத்தி மறந்தனம் துறந்த காழ்முறை யகைய நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப நும்மினும் சிறந்த நுவ்வையாகும் மென்று அன்னை கூறினள் புன்னையது சிறப்பே அம்ம நாணுதும்” இப்பாடலில் தம்முடன் உறைவதாகிய புன்னையைக் கூறினாள். தான் வளர்த்த புன்னை என்றும் அன்னை பலகாலும் இங்கு வருவாள் என்பதும் குறிப்பினால் உணர்த்தப்பட்டது.

**2.உவமம்**: உவமையைச் சொல்ல உவமிக்கப்படும் பொருள் தோன்றுவது. “வெறிகொள் இனச்சுரும்பு மேய்ந்தோர் காவிக் குறைபடுதேன் வேட்டும் குறுகும் நிறைமதுசேர்ந் துண்டாகும் தன்முகத்தே செவ்வி உடையதோர் வண்டா மரைப் பிரிந்த வண்டு” எனும் பாடலில் வண்டின் செயலை உவமையாகக் கூறுவது தலைவனின் பரத்தமையைச் சுட்டிக் காட்டுவதாக உள்ளது. தலைமகன் பரத்தையிற் பிரிவு கூறுதலின் உள்ளுறையுவமம் ஆயிற்று (தண்டி. 53 உரை).

**3.சுட்டு:** ஒரு பொருளைச் சுட்ட அது பிறிதோர் பொருள்படுதல். “தொடி நோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி அ.்.தாண்டவள் செய்து” இதில் தலைவி தன் தொடி நோக்கிப் பின் தோளை நோக்கி அதன்பின் தன் பாதங்களை நோக்கினாள் என்று சுட்டுவது. தலைவர் பிரிந்தால் என் தொடி தோள் மெலிதலால் அங்கு நில்லாது. எனவே என் பாதங்களே! நீங்கள் தலைவனுடன் உடன்போக்கில் செல்க என்பதனைக் குறிப்பாச் சொல்வதை எடுத்துரைக்கிறது.

**4.நகை:** நகையினால் பிறிதொரு பொருள் உணர நிற்றல்: “அசையியற் குண்டாண்டோ ரெள்யான் நோக்கப் பசையினள் பைய நகும்” (குறள் : 1098) இதில் தலைவியின் நகையினால் (சிரிப்பு) புணர்ச்சி விருப்பம் பற்றிய பிறிதோர் குறிப்புத் தோன்றியமை உணரலாம்.

**5.சிறப்பு:** இதற்குச் சிறந்தது இது என்று கூறுவதால் பிறிதொரு பொருள் உணர வருவது “பனியொரு தளைவிடூஉம் தண்டுரை நல்லூர்” இதில் „தாமரை‟ என்ற கருப்பொருளுக்குச் சிறப்பு அளிக்கப்பட்டுள்ளது. இவையே அன்றி முடிவில்லாததாகிய சிறப்பினால் ஆகிய அகப்பொருள் ஒழுக்கமாகிய இன்பம் அனைத்தும் இத்தகைய உள்ளுறைப் பொருண்மையில் விளங்கித் தோன்றும் என்பதை

**“அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்**

**தன்வயின் வருதலும் வகுத்த பண்பே” (49)**

என்று கூறியுள்ளார். இதனை அடுத்த

**“மங்கல மொழியும் அவையல் மொழியும்**
**மாறில் ஆண்மையில் சொல்லிய மொழியுங்**
**கூறிய மருங்கிற் கொள்ளும் என்ப.”(50)**

மங்கலமொழி, அவையல் மொழி, மாறிலாண்மையில் சொல்லிய மொழி போன்றனவும் உள்ளுறையின் பாற்படும் என்பதை, கூறியுள்ளார். **மங்கலமொழி**: அமங்கலச் சொற்களை மங்கலச் சொற்களால் உணர்த்தல். செந்தாமரைத் துஞ்சினார் எனல். **அவையல் மொழி:** அவையில் கூறத்தகாதவற்றை இடக்கர் அடக்கிக் கூறுதல். **மாறிலாண்மை மொழி**: ஒருவனைச் „சிங்கம் வந்தது‟ என்று கூறுதல்.அந்தமில் சிறப்புஉள்ளுறைப் பாற்படுவதோர் பொருள் உணர்த்திற்று. இதற்குச் சிறந்தது இது என்று கூறுவதினாலே பிறிதோர் பொருள் கொள்ளக் கிடப்பது. அந்தமில் சிறப்பு - மேன்மேலுஞ் சிறப்புச் செய்தல். “நுண்எழில் மாமைச் சுணங்கணி ஆகம்தம் கண்ணொடு தொடுத்தென நோக்கியும் அமையார்என் ஒண்ணுதல் நீவுவர் காதலர் மற்றவர் எண்ணுவ தெவன்கொ லறியேன் என்னும்”.(கலித். 4) இன்பத்தின்கண்ணும் பிறிதோர் பொருள் உண்டென்பது தோற்றுகின்றது.

**சிறப்பொடு வரல்**

**"சினனே பேதைமை நிம்பிரி நல்குரவு**
**அனைநால் வகையுஞ் சிறப்பொடு வருமே."(51)**

மெய்ப்பாட்டியலுள் நடுவண் ஐந்திணைக்குரிய தலைமக்கட்காகாதன எடுத்தோதுகின்றாராகலின், அவற்றுள் ஒருசாரன ஒரோவிடத்து வருமென்பது உணர்த்திற்று. சினமும் பேதைமையும் நிம்பிரியும் நல்குரவும் என்று சொல்லப்பட்ட அந்நான்கு வகையும் யாதானும் ஒரு பொருளைச் சிறப்பித்தல் காரணமாக வரும். "கொடியியல் நல்லார் குரல் நாற்றத் துற்ற முடியுதிர் பூந்தாது மொய்ம்பின வாகத் தொடிய வெமக்குநீ யாரை பெரியார்க்கு அடியரோ ஆற்றா தவர்." (கலித். 88) இதனுள் தொடிய எமக்கு நீ யாரை" என்பது சினம்பற்றி வரினும் காமக் குறிப்பினாற் புணர்ந்த தலைமகள் கூறுதலின் அவள் காதலைச் சிறப்பிக்க வந்தது."அகனகர் கொள்ளா அலர்தலைத் தந்து பகல்முனி வெஞ்சுரம் உள்ளல் அறிந்தேன் மகனல்லை மன்ற இனி" (கலித். 19) தலைவி மகனல்லை" எனல் நிம்பிரியாகிய வெதுப்புப்பற்றி வந்தது. இதுவும் பிரிவாற்றாமையைச் சிறப்பிக்க வந்தது,"உடுத்தும் தொடுத்தும் பூண்டுஞ் செரீஇயுந் தழையணிப் பொலிந்த ஆயமொடு துவன்றி விழைவொடு வருதி நீயே இ∴தோ ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கைப் பெருநலக் குறுமகள் வந்தென இனிவிழ வாயிற் றென்னும் இவ்வூரே" (குறுந். 295) இதனுள் ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை" எனத் தலைமகன் செல்வக் குறைபாடு கூறிப் பெருநலக் குறுமகள் வந்தென விழவாயிற் றென்னுமவ்வூர்" என ்றமையான் நல்குரவு பற்றித்தலைமகனைச் சிறப்பிக்க வந்தது. இச் சூத்திரத்தினுள் வரைந்து கூறாமையின் தலைவியுந் தலைவனுந் தோழியுஞ் செவிலியுங் கூறப்பெறுவர் என்று கொள்க.

**அன்னை எனல்**

**"அன்னை என்னை என்றலும் உளவே**
**தொன்னெறி முறைமை சொல்லினும் எழுத்தினுந்**
**தோன்றா மரபின என்மனார் புலவர்."(52)**

அன்னை என்னை என்று சொல்லுதலும் உள; அவை முன்புள்ளார் சொல்லிப்போந்த முறைமையாகும். அவை தாம் சொல்லினானும் சொல்லிற்கு அங்கமாகிய எழுத்தினானும் பொருள் தோன்றாத மரபினையுடைய என்பர் புலவர்,"ஒரீஇ ஒழுகு மென்னைக்குப் பிரியலென் மன்யான் பண்டொரு காலே". (குறுந். 203) - தலைமகள் தலைமகனைக் கூறியது. "அன்னாய் இவனோர் இளமா ணாக்கன்" (குறுந். 33) - தோழிக்குக் கூறியது. "என்னை முன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை முன்னின்று கன்னின் றவர்". (குறள். 771) "என்னை புற்கை யுண்டும் பெருந்தோ ளன்னே." (புறம். 84) - இவை புறப்பொருள் பற்றி வந்தன.

**காட்டலாகாப் பொருள்**

**“ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா**
**கற்பும் ஏரும் எழிலும் என்றா**
**சாயலும் நாணும் மடனும் என்றா**
**நோயும் வேட்கையும் நுகர்வும் என்றாங்கு**
**ஆவயின் வரூஉங் கிளவி எல்லாம்**
**நாட்டியல் மரபின நெஞ்சுகொளிள் அல்லது**
**காட்ட லாகாப் பொருள என்ப”(53)**

ஒப்புமுதலாக நுகர்ச்சி யீறாக அவ்வழி வருஞ் சொல்லெல்லாம் நாட்டின் வழங்குகின்ற மரபினானே பொருளை மனத்தினான் உணரினல்லது மாணாக்கர்க்கு இது பொருள் என வேறுபடுத்தி ஆசிரியன் காட்டலாகாத பொருளையுடைய என்பதாம். ஒப்பு: ஒப்பாவது தந்தையையொக்கும் மகன் என்பது. அவ்விருவர்க்கும் பிறப்பு வேறானவழி ஒப்பாகிய பொருள் யாதென்றார்க்கு இதுவெனக் காட்டலாகாமையின், அவ்விருவரையுங் கண்டான். அவ்வொருவ ரொருவரை ஒக்குமது பிறனொருவன் மாட்டுக் காணாமையிற்றானே யப்பொருண்மையை உணரும் என்பது. உரு - உட்கு. அது பயிலாத பொருளைக் கண்டுழி வருவதோர் மன நிகழ்ச்சி. இவருட்கினார் என்றவழி மனத்தினான் உணரக் கிடந்தது. வெறுப்பு - செறிவு. அது அடக்கங்குறித்து நின்றது; அவரடக்கமுடையர் என்றவழி அதுவும் மனத்தினான் உணரக் கிடந்தது. கற்பு - மகளிர்க்கு மாந்தர்மாட்டு நிகழும் மன நிகழ்ச்சி. அதுவும் மனத்தான் உணரக் கிடந்தது. ஏர் - தளிரின்கண் தோன்றுவதோர் பொலிவுபோல எல்லா வுறுப்பினும் ஒப்பக்கிடந்து கண்டார்க் கின்பத்தைத் தருவதோர் நிறவேறுபாடு. அது எல்லா வண்ணத்திற்கும் பொதுவாகலின் வண்ணம் அன்றாயிற்று. இது வண்ணம் பற்றி வரும். இவன் ஏருடையன்“ என்றால் அதுவும் மனங்கொளக் கிடந்தது. எழில் - அழகு. அது மிக்குங் குறைந்தும் நீடியும் குறுகியும் நேர்தி உயர்ந்தும் மெலிதாகியும் வலிதாகியும் உள்ள உறுப்புக்கள் அவ்வளவிற் குறையாமல் அமைந்தவழி வருவதோர் அழகு. இதுவும், அழகியன்“ என்றவழி அழகினைப் பிரித்துக் காட்டல் ஆகாமையின் மேற்சொல்லப்பட்ட பொருளில்லாத காலம் இன்மையான் உள் பொருளென்றே கொள்ளப்படும்.

**பயிற்சி வினாக்கள்**

குறு வினாக்கள்

1. பொருளியல் என்ற பெயர்காரணம் கூறுக.
2. காட்டலாகாப் பொருளகள் குறித்து எழுதுக
3. அன்னை எனல் என்னும் மரபினைச் சுட்டுக.
4. தலைமக்கட்கு தோழிக்குரிய திறன் பற்றி எழுதுக.
5. களவில் தலைவன் மரபுகளைத் தருக.
6. மங்கல மொழி அவையல் மொழி குறித்து எழுதுக
7. சொல் வழுவும் மரபு வழுவும்-விளக்குக.
8. நால்வர்க்கும் உரிய மரபுகள் குறித்து எழுதுக.
9. வாயில் மரபு குறித்து எழுதுக
10. கற்பில் தலைவன் மரபு குறித்து எழுதுக.

கட்டுரை வினாக்கள்

1. .பொருளியல் தரும் செய்திகளைத் தொகுத்துரைக்க.
2. உள்ளுறை உவமம் குறித்துக் கட்டுரைக்க
3. உள்ளுறையின் வகைகள் குறித்துத் தொகுத்துரைக்க.
4. பொருளியல் காட்டும் தோழி, செவிலி மற்றும் வாயில்கள் பண்புகளைத் தொகுத்துரைக்க.
5. பொருளியல் ஒழிபியல் எனவும் பெயர் பெறும்" - இக்கூற்றை நிறுவுக.
6. பொருளியல் உணர்த்தும் சொல், மரபு வழுவமைதிகளை விளக்குக
7. தோழி அறத்தொடு நிற்றல் குறித்து விவரி
8. தலைவன் தலைவிக்கு உரிய ஒருபாற் கூற்று குறித்து எழுதுக
9. தலைவன் மரபுகளைத் தொகுத்துரைக்க.
10. தலைவிக்கு உரிய மரபுகளைத் தொகுத்துரைக்க.

அலகு:3

# புறத்திணை இயல்

புறம் என்பது போர், வீரம், கொடைப்பண்பு, புகழ், ஆற்றல் போன்ற புறத்தார்க்கு வெளிப்படையாகப் புலனாகின்ற பண்புகளைப் பாடுபொருளாகக் கொண்டது. வீரம் நிறைந்த ஒருவனே சான்றோன் எனப் பாராட்டப்பட்டான். தலைவனாகவும் போற்றப்பட்டான். இது சங்க கால மதிப்பீடு. ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் புகுவது அன்று: அது உலகத்து இயற்கை என்ற கருத்து நிலைப்பெற்றிருந்தது. ஒவ்வோர் ஆடவனும் போரில் இறப்பதையே பெரும் புகழாய்க் கருதினான். போரின் காயம் புகழின் காயமாக வரவேற்கப்பட்டது. போரில் ஏற்பட்ட வடுக்கள் விழுப்புண்கள் எனப்பட்டன. விழுப்புண் படாத நாட்களெல்லாம் வீண்நாட்களென ஒதுக்கப்பட்டன. போரில் உயிர்துறக்கும் வீரர்கள் எளிதில் துறக்கமடைவதாக எண்ணப்பட்டது. மார்பிற் சென்ற அம்பு முதுகைத் துளைத்துப் புறப்புண் போலச் செய்தமைக்காக வருந்தி நாணி வடக்கிருந்த வரலாற்றைப் புறநானூறு புகழ்கிறது. போர் புகழப்பட்டாலும் அது அறங்கலந்த மறநெறியாகவே செயல்பட்டது என்பது குறிப்பிடத்தகுந்தது. வீரர்கள் நடுகல் செய்து வழிபடப்பட்டனர். இத்தகைய நடுகல் வழிபாடே காலப்போக்கில் ஊர்த்தெய்வ வழிபாடுகள் மற்றும் சிறுதெய்வ வழிபாடுகளாக அமைந்துவிட்டன. ஆடவர் மட்டுமன்றிப் பெண்டிரும் சங்ககாலத்தில் மறத்தில் சிறந்து விளங்கினர் என்பதை மறக்குடி மகளிர்தம் செயல்களை எடுத்துரைக்கின்ற மூதின் முல்லை என்ற துறை வாயிலாக அறிகின்றோம். அகத்திணையில் சங்க கால மக்களின் அகவாழ்வின் ஒழுகலாற்றினை உணர்த்திய தொல்காப்பியர் அடுத்து அமைந்துள்ள புறத்திணையியலில் வீரம் பற்றிய ஒழுகலாற்றினை மற்றும் சங்ககாலப் போர் நெறிமுறைகளைத் தெளிவுபட உணர்த்துகின்றார். புற ஒழுக்கம் உணர்த்தும் இயலாதலால் புறத்திணையியல் என்ற பெயர் பெற்றது.

## புறத்திணை உணர்த்துகின்ற முறை

முதல் உரையாசிரியரான இளம்பூரணர் “பொருள் என்பது யாதோ எனின், மேற் சொல்லப்பட்ட சொல்லின் உணரப்பட்டவை. அது முதல் கரு உரிப்பொருள் என மூவகைப்படும்” (1998: 15), ”உரிப்பொருளாவது. மக்கட்கு உரிய பொருள் அ.்.து அகம், புறம் என இருவகைப்படும். அகமாவது புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் உளவும் கைக்கிளை பெருந்திணை எனவும் எழுவகைப்படும் எனவும் “புறமாவது, நிரைகோடற் பகுதியும் பகைவயிற் சேறலும் எயில் வளைத்தலும் இருபெரு வேந்தரும் ஒரு களத்துப் பொருதலும் வென்றிவகையும் நிலையாமை வகையும் புகழ்ச்சிவகையும் என

எழுவகைப்படும் அ.ஃ.தேல் புறப்பொருளை உரிப்பொருள் என ஓதிற்றிலரால் எனின்” எனவும் விளக்கம் அளித்துள்ளார்.“அகத்திணைகள் ஏழினை விளக்கி, அவற்றின் புறத்து நிகழ்வதாகிய ஏழு திணைகளை இவ்வியலில் விளக்குகின்றார் தொல்காப்பியர். மலைநிலமாகிய குறிஞ்சித்திணைக்கு நிரை கோடலும், நிரை மீட்டலுமாக நிகழ்வு வேறுபாடு பற்றி வெட்சி, கரந்தை என இரு திணை நிகழ்வுகள் வகுத்தார். காடுறை நிலமாகிய முல்லை மண்ணாசை குறித்து பகைஎடுத்துச் சென்ற அரசன்மேல் உள்நாட்டரசன் போர் குறித்து வர, அவ்விருபெருவேந்தரும் ஒரு வினையாகிய போர் புரிதலால் அது வஞ்சி என வகுக்கப்பட்டது. புனலுமாகிய மருதம் எயில் அழித்தல், எயில் காத்தல் என இருவேறுபட்ட நிகழ்வு அடிப்படையில் உழிஞை, நொச்சி என இரு திணைகளாக அமைந்துள்ளன. மணலுமாகிய நெய்தலில் இருபெறு வேந்தரும் ஒரு சேர போரிடுதலால் ஒரு தொழிலே கருதி அது தும்பை என ஒரு திணையாயிற்று. நடுநிலைத் திணையாகிய பாலை என்பது வேந்தராயினும், ஏனையோராயினும் தமது மிகுதியாகிய வெற்றியைக் குறித்தலால் அது வாகை என்னும் ஒரு திணையாயிற்று. பெருந்திணை நிலையாமையாகிய காஞ்சியைத் தனக்குப் புறமாகக் கொண்டது. அதுபோல கைக்கிளை செந்திறமாகிய பாடாண் திணையைப் புறமாகக் கொண்டு அமைந்துள்ளது எனலாம். எனவே, குறிஞ்சி - வெட்சி, முல்லை - வஞ்சி, மருதம் - உழிஞை, நெய்தல் - தும்பை, பாலை - வாகை, பெருந்திணை - காஞ்சி, கைக்கிளை - பாடாண் என 7 அகத்திணைகளுக்கு ஏற்ப 7 புறத்திணைகள் வகுக்கப்பட்டுள்ளன. வெட்சியின் பகுதியாகக் கரந்தையும், உழிஞையின் பகுதியாக நொச்சியும் அமைக்கப்பட்டுள்ளதே அல்லாமல் அவை முறையே தனித்திணைகளாகத் தொல்காப்பியரால் கொள்ளப்படவில்லை. இனி புறத்திணைகளுக்கான தொல்காப்பியர் தரும் விளக்கம் பற்றி விரிவாகக் காணலாம்.

## வெட்சித்திணை

அகத்திணை ஒழுகலாறுகள் தத்தம் நிலத்திற்குச் சிறப்புரிமையுடைய குறிஞ்சி முதலிய பூக்களால் பெயர் பெறுவது போன்றே, புறத்திணை ஒழுகலாறுகளும் அவற்றை மேற்கொள்வோர் அடையாளமாகச் சூடிச்செல்லுகின்ற வெட்சி முதலிய பூக்களால் பெயர் பெற்றுள்ளன. வெட்சி என்பது புறத்திணைகளுள் முதல் திணை. பகைவர்தம் ஆநிரைகளைக் கவர்தல் என்பதே இத்திணையின் செயல்பாடு. இச்செயல் பண்டைத்தமிழர்தம் போர்முறை அறப்போர்முறை என்பதனைத் தெளிவு செய்துள்ளது. பகைவர் நாட்டின் மீது போர் செய்யக் கருதும் வேந்தன், அந்நாட்டில் வாழும் அறவோராகிய அந்தணர், பெண்கள், பிணியாளர், பசுக்கூட்டங்கள் போன்ற தீங்கு செய்யத் தகாதவர்களைப் போரால் ஏற்படும் துன்பத்தினின்று பாதுகாக்க வேண்டிய கட்டுப்பாட்டினை மேற்கொள்வார். அப்போது போர் குறித்த முன்னறிவிப்பினை நிகழ்த்துவர். அதாவது,“யாம் போர் கருதி நுமது நாட்டிற் புகுகின்றோம்.

நீங்கள் உங்களுக்குப் பாதுகாவலான இடங்களை நாடிச் சென்று விடுங்கள்” என்று அறிவிப்பர். இவ்வறிவிப்பினை உணர்ந்து வெளிச்சென்று விடும் பகுத்துணர்வு இல்லாத பசுக்கூட்டங்களை(ஆநிரைகள்)ஒருவரும் அறியாவண்ணம் நள்ளிரவில் தன்படை அனுப்பிக் களவில் கவர்ந்து வரச் செய்வது பண்டைத் தமிழர் போர் மரபாகும். அம்மரபுப்படி வேந்தனால் அனுப்பப்பட்ட வீரர்கள் பகைவர் நாட்டினுள் புகுந்து அங்குள்ள ஆநிரைகளைகக் கவர்ந்து வந்து பாதுகாக்கும் செயல் வெட்சி என்னும் புறத்திணையாகும். இந்த வெட்சித் திணை குறிஞ்சி என்னும் அகத்திணைக்கும் புறமாகும் என்பதனை,

**“வெட்சி தானே குறிஞ்சியது புறனே”** (1)

என்ற நூற்பா உணர்த்துகின்றது. வெட்சி குறிஞ்சிக்கு புறமாக அமைவது எங்ஙனம் என்பதனை இளம்பூரணர் இவ்வாறு விளக்குகின்றார். 1. நிரைகோடல் குறிஞ்சிக்குரிய மலைநிலத்தின்கண் நிகழ்தலானும். 2. ஆநிரையைக் களவில் கொள்ளுதல் குறிஞ்சிக்குரிய களவொழுக்கத்தோடு ஒருபுடை ஒத்தலானும், சூடும்பூ குறிஞசிக்குரிய பூவாக இருந்தாலும் அதற்கு இது புறனாம் என்பர். நச்சினார்கினியர் விளக்கும்போது, களவொழுக்கமும் கல்குல்காலமும் காவல் கடுகினும் (விரைந்துவரினும்) தாம் செய்யக் கருதிய பொருளை, செயலை இரவின்கண் முடித்து மீளலும் போல்வன வெட்சி குறிஞ்சிக்குப் புறனாயிற்று என்று உரைப்பர்.

### வெட்சியின் இலக்கணம்

**“வேந்து விடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்**
**ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும்.” (2)**

என்ற நூற்பா வெட்சிக்குரிய இலக்கணம் உரைக்கிறது. வேந்தனது ஆணைவழி வீரர்கள் சென்று பகைவரது ஆநிரைகளைக் கவர்ந்து வருவர். எனவே வேந்தனது ஆணையின்றியும் வீரர்கள் செல்வர் என்பதும் பெறப்படுகின்றது.

#### வெட்சித்துறைகள்

துறை என்பது நிகழ்வு என்று பொருள்படும். எனவே வெட்சிப்போரின் நிகழ்வுகளாக 14 நிகழ்ச்சிகளைச் சுட்டி அவற்றை துறைகள் என வகுக்கின்றார்.

1.ஆநிரை கவர்தல் கருதிப் படைகள் புறப்படும்போது எழுப்பப்படும் ஆரவார ஒலி,

2.புறப்பட்ட வீரர் ஊரின் புறத்தே நற்சொல் (விரிச்சி) கேட்டல்,

3.பகைவர் நாட்டின் ஒற்றர் அறியாவண்ணம் செல்லுதல்,

4.அந்நாட்டின் நிலைமைகளை அங்குள்ள தம் ஒற்றர் வாயிலாக அறிதல்,

5.பகைவர் ஊரின் புறத்தே சென்று தங்குதல்,

6.தம்மை வளைத்துக் கொண்ட பகைவீரர்களைக் கொல்லுதல்,

7.ஆநிரைகளை கைப்பற்றிக் கொள்ளுதல்,

8.ஆநிரையை மீட்பதற்காக வந்து வீரர்களின் போர்ச்செயலை விலக்கி மீளுதல்,

9.கைப்பற்றிய ஆநிரைகளை வருந்தாமல் கொண்டு வருதல்,

10.எதிர்பார்த்து நிற்கும் தம்மவர் மனம் மகிழத் தோன்றுதல்,

11.பசுக்களைத் தம் ஊர்ப் பொதுமன்றத்தில் கொண்டு வந்து நிறுத்துதல்,

12.பங்கு வைத்தல்

13.அந்நிரைகளைப் போரில் வினைமுடிந்த மகிழ்ச்சியால் கள்ளுண்டு மகிழ்தல்,

14.இரவலர்க்குப் பரிசாக அப்பசுக்களைக் கொடுத்தல்

என 14 துறைகளைக் கொண்டது வெட்சித் திணை ஆகும்.

இப்பதினான்கிற்கும் நிரைகோடல், நிரைமீட்டல் என்னும் இருநிலைகளையும் உளவாக்கி இருபத்தெட்டுத் துறைகளாகக் கணக்கிடுவார் நச்சினார்க்கினியர். எடுத்துக்காட்டாகச் சில் மேற்கோள் பாடல்களைக் காணலாம். ஆநிரை கவரப் புறப்படும்போது துடியும், காரியும் முழங்க விரைந்து செல்வர் என்பதனை,“நெடிபடு கானத்து நீளவேல் மறவர் அடிபத்து ஆர்அதர் செல்வான் - துடிபடுத்து வெட்சி மடலைய விசைவார் மணிநிரைக் கட்சியுள் காரி எழும்” என்ற புறப்பொருள் வெண்பாமாலைப் பாடல் உணர்த்துகிறது. “எழுவணி சீறார் இருள்மாலை முன்றில் குழுவினம் கைகூப்பி நிற்பத் - தொழுவில் குடக்கள்ளுக் கொண்டவா என்றாள் குனிவில் தடக்கையாய் வென்றி தரும்” என்னுமிடத்து குடக்கள் கொண்டுவா என்பதனை நற்சொல்லாக ஏற்றது பெறப்பட்டது. “கூற்றினத்து அன்னார் கொடுவில் இடனேந்திப் பாற்றினம் பின்படர முன்படர்ந்து – ஏற்றினம் நின்ற நிலைகருதி ஏகினார் நீள்கழைய குன்றம் கொடுவில் அவர்” என்னும் பாடல் ஒற்றர் அறியாமல் சென்ற நிலை காட்டியது. ஊர் அழித்தலை,“கொலைவில்லார் வீழத் தொடுகழல் ஆர்ப்பக் கொலைவில்லார்

கொண்டார் குறும்பு” என்ற பாடல்வழி அறியலாம். “சூழ்ந்த நிரைபெயரசு சுற்றித் தலைக்கொண்டார் வீழ்ந்தனர் வீழ்ந்தார்” எனும் புறப்பொருள் வெண்பாமாலை அடிகள் இருவர்க்கும் இடையில் நிகழ்ந்த போர் நிகழ்வை உணர்த்துகின்றன. “மாறுபட்ட வென்றி மறவர் தம்சீறூரில் கூறிட்டார் கொண்ட நிரை” (புறப்.வெட்சி.14) எனும் அடிகள் கூறிடுதலைக் காட்டுகின்றன. இவ்வாறு ஏனையவற்றிற்கும் காண்க. இவையேயன்றி வீரன் பிறந்த குடிநிலைக் கூறலும் வெற்றி தரும் கொற்றவை நிலை புகழ்தலும் வெட்சியின் துறைகளாகும் என்பதனை,“மறங்கடை கூட்டிய குடிநிலை சிறந்த கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே” (புறத்: 4) என்று தொல்காப்பியம் சுட்டுகிறது. இவற்றுள் குடிநிலைக் கூறல் என்பது ஆடவர், பெண்டிர் இருவருக்கும் பொதுவானது. ஆடவர் பற்றி வருமாயின் இல்லாண் முல்லை என்றும் பெண்டிர் பற்றி வருமாயின் மூதின் முல்லை என்றும் பெயர்பெரும். புறம் 279-ம் பாடல் குடிநிலை புகழ்ந்துரைக்கும் பாடல்களாகும். “ஆளி மணிக்கொடிப் பைங்கிளிப் பாய்தலைக் கூளி வலிபடைக் கொற்றவை மீளி அரணமுருங்க ஆகோள் கருதின் அடையார் முரண்முரங்கத் தான்முந் துறும்” (புறம்.வெட்சி.20) என்ற பாடல் கொற்றவையைப் புகழ்வதாக உள்ளது.

வெட்சியார் ஆநிரைகளைக் கவர முற்படும்போது பகைவர் அவர்களைத் தடுக்க முற்படுவர். மீட்க முயல்வர். இத்தகைய எதிர்வினையினைத் தொல்காப்பியர் வெட்சியின் செயலாகவே கருதுகின்றார். இதனைக் கரந்தை என்ற தனித் திணையாகக் கொள்ளவில்லை. எனவே கரந்தையார் நிகழ்வுகளாயினும் ஆநிரை மீட்டல் காரணமாக அத்திணைக்கண்(நிலம்) நிகழ்வதால் இதுவும் வெட்சித் திணையாகவே கொள்ளப்பட்டுக் குறிஞ்சிக்குப் புறன் ஆனது. “வெளிஅறி சிறப்பின் வெவ்வாய் வேலன் வெறியாட்டு அயர்ந்த “காந்தள்” முதலாக “வாழ்த்தல்”வரை காந்தள் மலர்மாலையினைச் சூடி, தம் அரசனுக்கு வெற்றி உண்டாகும்படி வேண்டி தெய்வத்திடம் வழிபடுவது. இவ்வெறியாட்டு காமவேட்கையின் ஆற்றாளாகிய பெண்பாற் வெறியாட்டு, வெற்றி வேண்டி வீரர் ஆடும் ஆண்பாற் வெறியாட்டு என இருவகைப்படும். “அயன்மனைப் பெண்டிரோடு அன்னைசொல் அஞ்சி வியன்மனையுள் ஆடும் வெறி” என்பது தலைமகள் தானே முருகன் ஏறப்பெற்று ஆடியது.

உறு பகை வேந்து இடை தெரில் வேண்டிய ஏந்துபகழ்ப் போந்தை வேம்பே ஆரென வரும் மாபெருந் தனையார் மலைந்த பூ” என்பது போரிடும் அரசர்தம்முள் வேறுபாடு தெரிதற்காகப் பெரும்படையை உடைய மூவேந்தர் தம் அடையாளப் பூக்களாக அணிந்த பனம்பூ, வேப்பம்பூ மற்றும் அத்திப்பூ ஆகியவற்றைப் புகழ்ந்து பாடுதல். ...... படைதிகழும் தே அதிரப் பொங்கும் திருந்துவேல் வானவன் போர் எதிரில் போந்தையாம் பூ” இது சேரனது பனம்பூ மாலையைப்

புகழ்ந்தது. “காத்தல்சால் செங்கோல் கடுமான் நெடுவழுதி எந்தல்சால் வேம்பின் இணர்” இது பாண்டியனது வேப்பம்பூ மாலையைப் புகழ்ந்தது. “கலங்கல் ஒலிபுனல் காவிரி நாடன் அலங்கல் அமர்அழுவத் தார்” இது சோழனது அத்திப்பூ மாலையைப் புகழ்ந்தது.

“வாடா வள்ளி” என்பது வாடுதல் இல்லாத வள்ளிக்கூத்து. தம் நாட்டின் வெற்றியினை உள்ளத்தில் நினைத்து மகளிர் முருகனைப் பரவி ஆடும் கூத்து வள்ளிக்கூத்து. “மண்டு அமர் அட்டமறவர் குழாத்திடைக் கண்ட முருகனும் கண்களித்தான்-பண்டே குறமகள் வள்ளிதன் கோலம்கொண்டு ஆடப் பிறமகள் தோற்றாள் பெரிது” என்ற பாடல் வழி உணர்க.“வயவர் ஏத்திய ஓடாக் கழல்நிலை” என்பது போரில் புறமுதுகிட்டு ஓடாமைக்கு ஏதுவாக வீரர்கள் அணியும் வீரக்கழலின் சிறப்பினைப் புகழ்தல் “வாள் அமரின் முன்விலக்கி ………… கிண்கிணிக்கால் காளை கலங் கழல் வாயில் கடுத்தீற்றி அற்றால் பொலங்கழல் கான்மேல் புனைவு” என வரும். “ஓடா உடல்வேந்து அடுக்கிய உன்னநிலை” என்பது வீரர்களின் வெற்றியை உள்ளத்தே எண்ணி உன்ன மரத்தின் நிலையை நிமித்தமாகக் கொள்வது. உன்னம் என்பது ஒருவகை மரம். சிற்றிலையும் பொற ் பூவும் கொண்டது. நாட்டிற்குக் கேடு வருமானால் இம்மரம் வாடி நிற்கும் ஆக்கம் வருமானால் தழைத்து நிற்கும். “ அக்காயாம் பூவின் மலர்ச்சியைக் கண்டோர் மலர் வண்ணனாகிய மாயோனைப்(திருமால்) போன்று மன்னனது புகழ்சிறக்க வாழ்த்தி வேண்டுதல். இது “பூவை நிலை” எனச் சுட்டப்பெறும்.

“ஆர் அமர் ஓட்டல்” என்பது அரியப்போரின் கண் பகைவரை புறம் காட்டி ஓடச் செய்தல் ஆகும். “அருமுளை நெஞ்சுரத்து ஆன்பூசல் கோடிச் சருமலைந்தார் சீற்றம் சிறந்து” என்னும் பாடலடிகள் இதனை உணர்த்தும். “ஆ பெயர்த்து தருதல்” என்பது பகைவர் கவர்ந்து சென்ற பசுக்கூட்டங்களை மீட்டுத் தருதல் ஆகும். “தாரார் கரந்தை தலைமலைத்து தாங்கொண்டார் நேரார் கைக்கொண்ட நிரை” என்பதனால் அறிக. சீர்சால் வேந்தன் சிறப்பு எடுத்து உரைத்தல்” என்பது சிறப்பு மிகுந்த வேந்தனின் புகழை எடுத்துக் கூறுதல் ஆகும். புறம் 259ம் பாடலில் ‘‘செல்லல் செல்லல் சிறக்க நின் உள்ளம் முருகுமெய்ப் பட்ட புலைத்தி போலத் தாவுபு தெறிக்கு மான்மேற் புடையிலங்கு ஒள்வாள் புனைகழ லோயே’’ என வரும் அடிகளைக் காண்க. தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தல்’’ என்பது கொடுஞ்சொற்களையுடைய வஞ்சினம் கூறுதல் ஆகும். ‘‘ஆளமர் வெள்ளம் பெருகின் அதுவிலக்கி வாளோடு வைகுவேம் யாமாக நாளும் கழிமகிழ் வென்றிக் கழல்வெய்யோய் இத்துறை வருதார்தாங்கல், வாள்வாய்த்துக் கவிழ்தல் என்று இருவகைப்படும். வருதார் தாங்கல் என்பது தன்னை எதிர்த்து வருகின்ற தூசுப்படையைத்(முன்னனிப்படை)தனித்து

நின்று எதிர்த்தல் வாழ்வாய்த்துக் கவிழ்தல் என்பது பகைவரது வாளால் இறத்தல். ‘‘பொருதுஅழிந்து மீளவும் பூங்கழலான் மீளான் ஒருதனியே நின்றான் உளன்’’ என்பார் வாள்வாய்த்துக் கவிழ்தல் ஆகும்.

வாள்மலைந்து எழுந்தோனை நாட்டுமக்கள் பறை முழங்க, அவனுக்கு துறக்கமாகிய அரசு அளித்துப் பாராட்டுதல். ‘‘கான்கெழு நாடு கொடுத்தார் கருதார்க்கு வான்கெழு நாடு வர’’ என்பதனால் அறியலாம். காட்சி என்பது போர்க்களத்தில் உயிர்துறந்த வீரருக்கு நடுகல் அமைப்பதற்கான காணுதல். ‘‘வீளைக் கடுங்கணையால் வேறாகி விண்படர்ந்த காளைக்குக் கண்டமைத்ததார் கல்’’ என்ற வரிகள் உணர்த்தும். ‘‘கால்கோள்’’ என்பது கல்லைத் தேர்ந்தெடுத்துக் கொணர்தல் ‘‘அழுன்மறம் காற்றி அவிந்தாற்கொண் ரேத்திக் கழன்மறவர் கைக்கொண்டார் கல்’’ என்பதானால் அறியலாம். ‘‘நீர்ப்படை’’ என்பது அக்கல்லை நீராட்டித் தூய்மை செய்தல் ‘‘நயத்தக்க மண்ணி நறுவரை கொண்டாட்டிக் கயத்தகத்து உய்த்திட்டார் கல்’’

‘‘நடுகல்’’ என்பது தூய்மை செய்த அக்கல்லை ஓரிடத்து நடுதல். ‘‘ஆண்டக நின்ற அமர் வெய்யோற்கு இ∴தென்று காண்டக நாட்டினார் கல்’’ எனவரும் வரிகளால் உணரலாம். சீர்தகு மரபின்பெரும்படை என்பது நாட்டிய கல்லிற்குக் கோயில், மற்றும் கோட்டம் எடுத்து சிறப்பு செய்தல். ‘‘வாட்புகா ஊட்டி வடிமணி நின்றியம்பக் கோட்புலி அன்ன குரிசில் - ஆட்கடிந்து விற்கொண்ட வென்றி வியன்மறவர் எல்லாரும் இற்கொண்டு புக்கார் இயைந்து’’ என்பதனால் அறியலாம். ‘‘வாழ்த்து’’ என்பது அக்கல்லை வாழ்த்துதல். ‘‘கைவண் குரிசில் கைதொழுது செல்பாண தெய்வமாய் நின்றான் திசைக்கு’’ எனக் கூறுவதனால் அறியலாம். இந்த இருபத்தொரு துறைகளுள் ஆர் அமர் ஓட்டல் முதல் ஏழு துறைகள் கரந்தைத் துறைகள் என்பது இளம்பூரணர் கருத்து. இந்நிகழ்வுகளின் போது வீரர்கள் கரந்தைப் பூ சூடுதல் மரபு. பிற துறைகள் 14ம் மறத்துறை ஏழிற்கும் பொதுவானவை ஆகும்.

## வஞ்சித்திணை

**‘‘வஞ்சிதானே முல்லையது புறனே’’(5)**

முல்லைக்கு வஞ்சி புறன் ஆவது எவ்வாறு? என்ற வினாவிற்கு இளம்பூரணர் பின்வருமாறு விளக்கம் தருகிறார். காடுறை உலகாகிய முல்லைக் காடும் கார் காலமும் ஆகிய முதற்பொருளும், அந்நிலத்திற்கேற்ற கருப்பொருளும், வேந்தன் பாசறைக்கண் தலைவியைப் பிரிந்திருத்தலும் ஆகிய உரிப்பொருளும் ஒத்திருத்தலால் வஞ்சி முல்லைக்குப் புறனாயிற்று என்பர்.

**வஞ்சித்திணை இலக்கணம்**

**"எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்**

**அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித்தன்றே" (6)**

என்ற நூற்பாவில் தெளியலாம். இவ்வஞ்சித் திணைக்கு உரிய துறைகள் 13 ஆகும். அவற்றைப் பின்வருமாறு காணலாம்.

1.இயங்கு படை அரவம் - வஞ்சி வேந்தன் போருக்குப் புறப்படும்பொழுது எழும் ஆரவார ஒலி. இது படை இயங்கு அரவம் என்றும் பெயர் பெறும். புறநானூறு 36ம் பாடலில் சோழன் நலங்கிள்ளியின் படைகள்,"போரெனில் புகழும் புனைகழல் மறவர் காடிடைக் கிடந்த நாடுநனி சேய செல்வேம் அல்லேம் என்னார்" என்று ஆரவாரத்துடன் புறப்பட்டுச் செல்வர் என்று புகழப்பட்டது.

2.எரிபரந்து எடுத்தல் ஆரவாரத்தோடு சென்ற படை பகைவர்நாட்டைத் தீயிட்டுக் கொளுத்துதல். புறநானூறு 16ஆம் பாடலில் பெருங்கிள்ளியின் படைகள். "எல்லுப்பட இட்ட சுடுதீ விளக்கம் செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரின் தோன்றும் ஏமநன் னாடு ஒள்ளரி ஊட்டின" என்று செய்தி பாடப்பெற்றுள்ளது.

3.வயங்கல் எய்தி பெருமை பகைவரை அழித்துப் புகழ் பெறும் நிலை --------------------- சிறைஅரும் சீற்றத்து நளியிரும் பரப்பின் மாக்கடல் முந்நீர் நீர் துணைந் தன்ன செலவின் நிலந்திரைப் பன்ன தானையோய் நினக்கே" என்று பதிற்றுப்பத்தில் சேரனின் புகழ் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

4.கொடுத்தல் எய்திய கொடைமை –வீரர்களுக்கும், பரிசிலர்க்கும் கொடை செய்தல். "பாணர் தாமரை மலையவும் புலவர் பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும் இன்னாவாகப் பிறர்மண் கொண்டு இனியசெய்தி நின் ஆர்வலர் முகத்தே" (புறம் : 12) என்று மன்னனின் கொடைச்செயல் புகழப்படுகிறது.

5.அடுத்து ஊர்ந்து அட்ட கொற்றம் பகைவரை மேற்சென்று அழித்து வெற்றி பெறும் மன்னனின் வீரச்செயல். புறநானூறு 93இல் அதியமானின் இத்தகைய வீரம் புகழப்படுவதை காண்க.

6.மாராயம் பெற்ற நெடுமொழி அம்பு தைக்கினும், யானை தாக்கினும் அடிபிறக்கிடர் ஆண்மையினைத் தன்னுள் வளர்த்து நெஞ்சுரம் பெற்று அந்த உவகையினால் பேசும்

நெடுமொழிகள் அல்லது வீரமொழிகள். இதனைப் புறநானூறு 287ஆம் பாடல் எடுத்தோதுகிறது.

7.பொருள் இன்று உய்த்த பேர் ஆண் பக்கம் எதிர்த்து வருகின்ற பகைவரை ஒரு பொருளாக மதியாமல் படை செலுத்தும் பேராண்மை. இக்காட்சி பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடும் பாடல் 9ல் படம்பிடிக்கப்படுகிறது. ‘‘எம் அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின்என அறத்தாறு நுவலும் பூட்கை மரம்’’

8.வருவிசைப் புனலைக் கற்சிலை போல ஒருவன் தாங்கிய பெருமை விரைந்து வரும் நீர்பெருக்கைத் தடுத்து நிறுத்தும் கற்றூண் போல, எதிர்த்து வரும் பகைவரைத் தான் ஒருவனாக எதிர்த்து நின்று போரிடும் நிலை. புறம் 330:1-4 அடிகளில் வீரனின் இத்தகைய செயல் பாராட்டப் பெறுவதைக் காணலாம்.

9.பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலை வீரர்களுக்கு விருந்து படைக்கும் நிலை. பாரதப்போரில் பாண்டவர் படைக்குப் பெருஞ்சோறு அளித்த சேரன் ‘‘பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்’’ என்று புகழப்படுவதைப் பதிற்றுப்பத்து – 30ம் பாடலில் காணலாம்.

10.வென்றோர் விளக்கம் - வென்றவர் பெருமை பேசப்படல்

11.தோற்றோர் தேய்வு - தோற்றவர் தம் குறைவு பேசப்படல் பதிற்றுப்பத்து 80ஆம் செய்யுள் இத்துறை விளக்கமாக அமைகிறது. ‘‘பலி கொண்டு பெயரும் பாசம் போலத் திறைகொண்டு பெயர்தி வாழ்துநின் ஊழி உரவரும் மடவரும் அறிவுதெரிந்து எண்ணி அறிந்தனை அருளாய் ஆயின் யாரிவண் நெடுந்தகை வாழு மோரே’’ (பதிற்றுப்-71)

12.குன்றாச் சிறப்பின் கொற்றவள்ளை தோற்ற மன்னன் அளிக்கும் நிறைப்பொருளினைக் கொற்றவள்ளை எனக் குறிப்பிடுகிறார் இளம்பூரணர். ஆனால் வெண்பாமாலை ஆசிரியர் பகைநாட்டின் அழிவிற்காக இரங்குவதும் மன்னவன் புகழ்பாடுவதுமே கொற்றவள்ளை என்கிறார்.

13.அழிபடை தட்டோர் தழிஞ்சி – பகைவர் ஏவிய படைக்கருவியைத் தம் உடலில் ஏற்றதால் இறந்துபட்ட வீரர்களை மன்னன் நேரில் சென்று பேணித் தழுவுதல். இதனைப் புறநானூறு 284ஆம் பாடலால் அறியலாம்.

ஆக மேற்குறிப்பிட்ட 13 துறைகள் கொண்டது வஞ்சி.

## உழிஞைத் திணை

**‘‘உழிஞை தானே மருதத்துப் புறனே’’**

உழிஞை என்னும் புறத்திணை மருதம் என்னும் அகத்திணைக்குப் புறமாக அமைந்தது உழிஞை என்பது மதிற்போர். பகை மன்னனின் அடிப்படைப் பாதுகாவலான மதிலைக் கைப்பற்றுதலாகும். மதில் எனினும் அரண் எனினும் ஒக்கும். அரண் முழுவதையும் முற்றுதலும் உள்ளிருக்கும் வேந்தன் அதனைக் கோடலும் இத்திணையின் செயல்பாடுகள் ஆகும். ‘‘முழுமுதல் அரணம்’’ என்றமையால் தலை, இடை, கடை என்ற மூவகை அரண்களில் தலை அரண் கைப்பற்றுதல் என்று கூறுகிறார் உரையாசிரியர். அரண் கோடலை ‘‘நொச்சி’’ என்ற தனித் திணையாகக் கொள்ளவில்லை. உழிஞைக்குள்ளாக நொச்சி அடக்கப்பட்டிருப்பது வெளிப்படை.

**உழிஞைத் திணை இலக்கணம்**

**‘‘முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்**

**ஆனைநெறி மரபிற்று ஆகும் என்ப’’ (8)**

என்பது தொல்காப்பியம். **‘‘அதுவே தானும் இருநால் வகைத்தே’’ (புறத்:9)** என்பதால் உழிஞை எட்டுவகைகளைக் கொண்டது என்பது அறிய வருகிறது. இவற்றுள் முதல் நான்கும் மதிலின் வெளியிலிருந்து முற்றுகையிடுவார் செயல்கள். பின்னைய நான்கும் உட்புறத்திலிருந்து மதிலைக் காக்க முற்படுவர் செயல்கள் என்பர் நச்சினார்க்கினியர்.

1.கொள்ளார் தேஎங் குறித்த கொற்றம் - தன்னை இறை(தலைவன்) எனக் கொள்ளாரும் தன் ஆணையைக் கொள்ளாரும் ஆகிய பகைவரது நாட்டை வெல்லக் கருதுகின்ற எண்ணம். ‘‘புலவர் எல்லாம் நின்நோக் கினரே நீயே, மருந்தில் கணிச்சி வருந்தவட் டித்துக் கூற்று வெகுண்டு அன்ன முன்பொடு மாற்று இருவேந்தர் மண்நோக் கினையே’’ (புறம் : 36) எனவரும் பாடல் சான்று காட்டப்பட்டுள்ளது.

2.உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பு நினைத்ததை முடிக்கலாகும் வேந்தனது சிறப்பு. எண்ணியது எண்ணியவாறு முடிக்கும் வேந்தனது வலிமைச் சிறப்பினை,‘‘அடுநை ஆயினும் விடுநை ஆயினும் நீ அளந்து அறிதி ……….’’ (புறம் : 36)

3.தொல் எயிற்று இவர்தல் - மதில்மேல் ஏறிப் போர்புரிதல். ‘‘புல்லால் புகழொடு போக்கு ஒழியப் பொங்கினனாய்ப் பல்லார் மருளப் படைபரப்பி-ஒல்லார் நிறுத்திறுத்த வாள்தானை நேரார் மதிலின் புறத்து இறுத்தான் பூங்குழலி னான்’’ (புறப்பொருள் : 10) என்ற வெண்பாவினால் உணரலாம்.

4.தோலது பெருக்கம் - தோல்படை(கேடயம்) ஏந்திய படையினா் சிறப்பு. இதனை வெண்பாமாலை தோல் உழிஞை என விளம்புகிறது. (தோல்படை – கிடுகுப்படை)

5.அகத்தோன் செலவு – அரண் அகத்து உள்ள வேந்தனது செல்வ மேம்பாட்டினைப் புகழ்தல், மூவேந்தா் பறம்பு மலையை முற்றுகையிட, கபிலா் அவா்களிடத்து பாரியின் பரம்புமலை வளத்தைப் பின்வருமாறு எடுத்துரைத்தலைக் காணலாம். ‘‘உழவா் உழாதன் நான்குபயன் உடைத்தே ஒன்றே சிறியிலை வெதிரின் நெல்விளையும்மே இரண்டே தீஞ்சுளை பலவின் பழம் ஊழ்க்கும்மே மூன்றே கொழுங்கொடி வள்ளிக்கிழங்கு வீழ்க்கும்மே நான்கே அணிநிற ஓரி பாய்தலின் மீது அழிந்து திணிநெடுங் குன்றம் தேன் சொரியும்மே’’ (புறம் : 109) என வருவதைக் காண்க.

6.முரணிய புறத்தோன் அணங்கிய பக்கம்-அரணை முற்றுகையிடும் அரசனும் வீரரும் அடையும் துன்பம்,‘‘களையாக் கழல்கால் கருங்கண் ஆடவா் உருகெழு வெகுளியா் செறுத்தன ஆர்ப்ப மிளையோ யின்று நாளை நாமே உருமிசை கொண்ட மயிர்க்கண் திருமுரசு இரங்க ஊர்க்கொள் குவமே’’ (தகடூர்யாத ் திரை) எனக்கூறுவதில் போா் செய்த துன்பம் தரும் நிலை சுட்டப்படுகிறது.

7.திறல்பட ஒருதான் மண்டிய குறமை-வலிமையோடு ஒருவன் தன்னந்தனியாகப் புறத்தே வந்து போா் செய்யும் குற்றுழிஞை. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் கிண்கிணிகூட களையாத பருவத்து ‘‘உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை விழுந்தன்றும் இழிந்தன்றும் இலனே, அவரை அழுந்தப் பற்றி அகல்விசும்ப ஆர்ப்பெழக் கவிழ்ந்து நிலஞ் சேர அட்டதை’’ புறம்: 77 ஆம் பாடலில் வியந்து பாராட்டுகின்றது.

8.உடன்றோா் வருபகை பேணாா் ஆரெயில் சினம்கொண்டு தன்னைத் தாக்க வருகின்ற புறத்தோரை ஒரு பொருட்டாக எண்ணாமல் அவா்களை இகழ்ந்திருத்ததற்கேற்ற அரிய மதிலின் வன்மை. ‘‘வியப்போா் செய்தாலும் வென்றி அரிதரோ மாயப்போா் மன்னன் மதில்’’ (புறம்:உழிஞை:11) என்று கூறப்பட்ட எட்டுவகைகளையுடையது உழிஞைத்திணை.

உழிஞைப் போரின் நிகழ்ச்சிகளாகிய பனிரெண்டு துறைகள் இடம் பெற்றுள்ளன. அவை நொச்சி முதலிய பிற பகுதிகள் ஆகும்.

1.உழிஞைப் போருக்குச் செல்லும் மன்னன் நல்ல நாளும் பொழுதும் பார்த்துப் போா் மரபுப்படி வெண்கொற்றக் குடையினைப் போர்த்திசை நோக்கி அனுப்பி வைக்கிறான்.

2.இதேபோன்று போர்வாளையும் அனுப்புகிறான்.

3.போரிடத்தை அடைந்த வீரர்கள், மதிலின் மேல் நன்கு பொருந்துமாறு சார்த்தி வைத்த ஏணி மீது ஏறி மதில் மேல் நின்று போர் செய்கின்றனர்.

4.புறத்தோரும் அகத்தோரும் மதிற்போரினைக் கைவிட்டு அப்புறமதிலைக் கைக்கொண்ட வினைமுதிர்ச்சி நிலையில் உழிஞைப் போரை முடிக்கின்ற மன்னர் நிலை.

5.மதிலின் உள்ளிருந்த போரிட்ட மன்னனின் நொச்சி நிலை(மதிலைப் பாதுகாக்கும் முயற்சி)

6.உழிஞையான் வீழ்ந்த புதுமை நிலை.

7.கிடங்கின் உளதாகிய நீரரணாகிய கிடங்கில் இருதிறத்தாருக்கும் பாசி பரவிக் கிடந்தது போன்ற போர் புரிகின்ற நிலை.

8.உள்ளிருந்தோர் மீண்டும் மதிலைத் தமதாக்க எண்ணி,

9.மதிலின் மேல் நின்று போரிடுகின்ற நிலை.

10.இம்மதிற்போரில் வென்ற மன்னன் இறந்த மன்னனின் மணிமுடியைக் கைப்பற்றி நீராடித் தூய்மைபடுத்துகின்ற மண்ணுமங்கல விழாநிலை.

11.அதேபோன்று நடைபெறுகின்ற வாள்மண்ணுமங்கல் விழா நிலை.

12.மதிலரண் கொண்ட மற்ற மன்னர்களும் தொகையாகப் பகைமை நீங்குதல்

என்ற பனிரெண்டு நிகழ்வுகளும் உழிஞையின் துறைகளாகக் கொள்ளப்படுகிறது.

## தும்பைத் திணை

வலிமை அடிப்படையில் நடைபெறுவது தும்பைப்போர். எப்போர்க்கும் தும்பையின் உணர்வு இன்றியமையாதது. தும்பைக்கு எதிர்வினை சுட்டாமல் பாடியிருப்பது சிந்தனைக்கு உரியது. உடல்வலிமை அடிப்படையில் இருபெரு வேந்தரும் ஒரே நேரத்தில் போரிடுவர் என்பதே அதற்கான காரணம் ஆகும்.

## ‘‘தும்பை தானே நெய்தலது புறனே’’

தும்பை நெய்தலுக்குப் புறமாவது: இருபெரு வேந்தரும் ஒருகளத்துப் போரிட தகுந்த இடம் காடு, மலை. கழனி (வயல்) ஆகாமையாலும் களரும் மணலும் நிறைந்த வெளி நிலத்துப் பொருதல் வேண்டுதலாலும், அந்நிலம் கடல்சார்ந்த வழியல்லது வேறு இன்மையாலும்,

நெய்தலுக்கு வரையறுக்கப்பட்ட எற்பாடு என்னும் சிறுபொழுது போர்தொழிற்கு முடிவாதலானும் நெய்தற்குத் தும்பை புறனாயிற்று என்பர் இளம்பூரணர்.

## தும்பைத் திணை இலக்கணம்

**''மைந்து பொருளாக வந்த வேந்தனைச்**

**சென்று தலை அழிக்கும் சிறப்பிற்று என்ப'' (12)**

என்று தொல்காப்பியம் உணர்த்துகிறது. தும்பைத்திணையின் சிறப்பியல்பினை,''கணையும் வேலும் துணையுற மொய்த்தலின் சென்ற உயிரின் நின்ற யாக்கை இருநிலம் தீண்டா அருநிலை வகையொடு இருபாற்பட்ட ஒருசிறப் பின்றே'' (புறத்: 13) என்கிறார். அதாவது பகைவர் செலுத்திய அம்பும் வேலும் வீரனது உடலில் நெருங்கிச் சென்று தைக்கும். அந்நிலையில் உடலினின்று உயிர் நீங்கும். உயிர் நீங்கிய உடம்பு நிலத்தில் சாயாது நேர் நிற்கும். வீரனது உடலாயினும் தலையாயினும் நிலத்திற்படாது எழுந்து ஆடும். இது எது போன்றது எனின் இரு துண்டங்களாக வெட்டப்பட்ட நீர்வாழ் அட்டை இணைந்து ஒன்றாகி ஆடுவது போல என்று விளக்குகிறார் இளம்பூரணர். இத்தகைய சிறப்பு வாய்ந்தது தும்பைத்திணையாகும்.

தும்பை தார்நிலை, இருவரும் தபுநிலை, பாழிகொள்ளும் ஏமநிலை, எதர்ந்தோர் பாடு, வாளோர் ஆடும் அமலை, தொகைநிலை, நல்லிசை நிலை, நூழில் போன்ற 12 துறைகளைக் கொண்டது.

1,2,3 . தானை,யானை.குதிரைப்படைகள்

4.வேந்தனைப் படையாளர் பலர் நெருங்கிய போது, அந்நெருக்கடி நிலையை நீக்க விரும்பிய வீரன் ஒருவன் தனது இடம் விட்டு நீங்கி வேந்தர்க்குத் துணையாகிப் பகைவரை வெற்றி கொள்ளும் திறம் தார் நிலை ஆகும்.

5.தன்படையை அழிவுநிலைக்கு ஆளாக்கிய மாற்றார் படையை எதிர்த்து நிற்கும் திறம் கூழைதாங்கிய பெருமை

6.பகையறுத்துப் பாழிகொள்ளும் ஏமம் எனப்பட்டது.

7.பகை வேந்தனோடு அவன் ஊர்ந்து வந்த களிற்றினையும் வீழ்த்திய நிலையே ''எதிர்ந்தோர் பாடு'' ஆகும்.

8.எதிர் வரும் யானை மேல் ஏறுதல்.

9.வெற்றி பெற்ற வேந்தனை அவனது படையாளர், சூழ்ந்து நின்று ஆரவாரம் செய்வது ‘‘வாளோர் அமலை’’.

10.வாட்போருக்கு பின்னர் போர்க்குரிய அனைவரும் தொகையாக மாளுதல் தொகைநிலை எனும் துறையாகும்.

11. வேந்தனை அழிவுநிலைக்கு ஆளாக்கிய அனைவரையும் எதிர்த்தல்.

12.நூழில் என்னும் துறை பலரைக் கொன்று குவித்தல் எனப்படும்.

தும்பை வீரர்கள் தம் மன்னன் தேர்முன் ஆடுவது முன்தேர்க்குரவை எனவும், தேர்ப்பின் ஆடுவது பின் தேர்க்குரவை எனவும் சொல்லப்படுகிறது. முன்தேர்க்குரவையில் மறவரும், பின் தேர்க்குரவையில் மறவரும், விறலியரும் இணைந்து ஆடுவர் என்பர். தேரின் முன்னும் பின்னும் பேயாடுதல் பேய்க்குரவை எனப்படும். புறம் 180,275 மற்றும் பதிற்றுப்பத்து 6 ஆகிய பாடல்கள் முறையே தார்நிலை: கூழை தாங்கிய பெருமை மற்றும் வாளோர் ஆடும் அமலை ஆகிய துறைகளை விளக்கும் பாடல்களாகும்.

## வாகைத்திணை

வாகை என்பது வெற்றியைக் குறிக்கும் பொதுச்சொல். இது தனிமனித வெற்றி மற்றும் குழுவினர் தம் வெற்றியை உணர்த்துகிறது.

**‘‘வாகை தானே பாலையது புறனே’’**

போரில் விளைகின்ற வெற்றிகளும் மனிதவாழ்வில் அகநிலையில் விளங்குகின்ற வெற்றிகளும் வாகை என்றே சிறப்பிக்கப்பெறும். குற்றமற்ற கொள்கையினால் தத்தமக்குரிய அறிவு, ஆண்மை, பெருமை முதலிய பண்புகளில் ஏனையோரினும் வேறுபட்டு மேம்படுதல் வாகைத்திணையின் ஒழுக்கமாகும். ,

## வாகைத்திணை இலக்கணம்

இதனை

**‘‘தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்**

**பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப’’ (புறம்:15)**

என்ற தொல்காப்பிய நூற்பாவால் உணரலாம். பாலைக்கு புறத்திணையாவது வாகை என்று கூறி அதற்கான காரணங்களைப் பின்வருமாறு உரைக்கின்றார் இளம்பூரணர்.

1.பாலையாவது தமக்கென ஒரு குறிப்பிட்ட நிலம் இன்றி எல்லா நிலத்திலும் காலம் பற்றிப் பிறப்பது போல வாகையும் எல்லா நிலத்திலும் எல்லாக் குலத்திலும் காலம் பற்றி நிகழ்வது.

2.ஒத்தார் இருவர் புணர்ச்சியினின்றும் புகழ்ச்சி காரணமாகப் பிரிவது போலத் தன்னோடு ஒத்தாரினின்றும் நீங்கிப் புகழப்படுவதால் அதற்கு இது புறனாயிற்று என்பர். வாகைத் திணையினை விளக்கவந்த தொல்காப்பியர் முதலில் அதன் வகைகளை விளக்கி பின்னர் துறைகளை எடுத்துரைக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வாகையின் வகைகள் பாகுபாடுகள்:

1.அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்: பக்கம் என்பது ஒழுக்கம் அல்லது செயல் எனப் பொருள்படும். ஓதல், ஓதுவித்தல், வேட்பித்தல், ஏற்றல் என்னும் அறுவகைத் தொழிலுடையோராகிய பார்ப்பனக்குரிய ஒழுக்க மேம்பாடு வாகை ஆகும்.

2.ஐவகை மரபின் அரசர் பக்கம்: ஓதல், வேட்டல், படைவழங்குதல், குடியோம்புதல் என்னும் அரசர்தம் ஐவகைத் தொழில், ஒழுக்க மேம்பாடு

3.இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்: ஏனோர் என்பவர் வணிகர், வேளாளர், வணிகர்க்கு ஓதல், வேட்டல். உழவு, வாணிகம், நிரையோம்பல் உரியது. வேளாளர்க்கு உழவு, உழவு ஒழிந்தவை. விருந்தோம்பல், பகடு காத்தல், வழிபாடு, வேதம் அல்லாத கல்வி உரியது.

4.மறுவில் செய்தி மூவகைக் காலமும்

5.அறியும் அறிவின் தேயம்: இறப்பு, நிகழ்வு, எதிர்வு என மூவகைக் கால நிகழ்வுகளைப் பகலிலும் இரவிலும் இடைவிடாமல் ஆகாயத்தைப் பார்த்து ஆண்டு உள்ள வில், மின், கோள், தூமம் பிறவும் பார்த்துப் பயன்கூறும் அறிவன் அல்லது கணியன் பக்கம்.

6..தாபதப் பக்கம்: எட்டுவகைத் தொழிலுடைய முனிவர்கள். அவையாவன : நீராடல், நிலத்திடைக் கிடத்தல், தோல் உடுத்தல், சடை வளர்த்தல், எரி ஓம்புதல், ஊர் அடையாமை, காட்டில் உள்ள உணவு உண்ணல், கடவுள் வழிபாடு, என்ற எண்வகைப்பட்ட ஒழுக்கங்கள்.

7..பொருநர் வீரர் பக்கம்: போர்த்துறைகளை அறிந்த வீரர்தம் செயல்பாடுகள் ஆகிய ஒழுக்க மேம்பாடுகளைப் புகழ்ந்து கூறுதல் வாகையின் வகைகள் ஆகும். ஒருசில எடுத்துக்காட்டுகளைக் காணலாம். ஓதல் என்பது கல்வி: ‘‘இம்மை பயக்குமால்

தனிமனித வீர மதிப்பீடுகள்.

1.வேனில் ஆகிய இருகாலத்திலும் போரின் மீது கொண்ட காதலினால் பாசறைகளில் தங்கிப் போர்புரிந்தமையை இத்துறைகள் உணர்த்துகின்றது.

2..ஏரோர் களவழி மற்றும் தேரோர் தோற்றுவித்த வெற்றி: இது களம்பாடுதல் மற்றும் களவேள்விப் பாடுதலாகும். இளம்பூரணர் இதனை ஏரோர் களவழி, போரோர் களவழி, களவேள்வி என மூவகைப்படுத்துகின்றார். புறம் 369-ஆம் பாடலில். யானை மேகமாகவும், வாள் மின்னலாகவும், முரசு முழக்கமாகவும், குதிரை வேகம் வீசும் காற்றாகவும், குருதி சிந்திச் சேறாகக் கிடக்கும் போர்க்களமாகிய வயலிடத்துத் தேரினை ஏராகப்பூட்டி, வேல் முதலிய கணைகளை விதைத்துப் போருழவு செய்வதாக உருவகித்துப் பாடியிருப்பதனைக் காணலாம். இது ஏரோர் களவழி ஆகும்.

3.தேர்முன் ஆடும் முன்தேர்க்குரவை:371-ஆம் புறப்பாடலில் தலையானங்கானத்துச் செருவென்ற பாண்டியனைக் காணப் பாசறைக்கு வருகின்ற பாடினி,‘‘உருகெழு, பேய்மகள் அயரக் குருதித் துகள் ஆடிய களம்’’ கண்டதாகப் பாடுகின்றாள்.

4. அதேபோன்று தேர்ப்பின் ஆடும் குரவையும் இத்திணையின் துறை நிகழ்வுகளுள் ஒன்று ஆகும்.

5. பெரும்பகை தாங்கும் வேல்: வேல் போரினை நடத்திய வேந்தனும், அவனது வெற்றிக்கு ஆதாரமாகிய வேலும் புகழப்படுகின்றது. வஞ்சப்புகழ்ச்சியாய ஔவையார் பாடிய ‘‘இவ்வேல், பீலி அணிந்து…..’’ எனத் துவங்கும் புறம் 15ம் பாடல் இதற்குச் சான்று ஆகும்.

6. அரும்பகை தாங்கும் ஆற்றல்: ஆள்வினை வாய்ந்த மறவனின் ஆற்றல் புகழப்படுதல் ஆகும். ‘‘களம்புகல் ஓம்புமின் தெவ்விர் போரெதிர்ந்து எம்முளும் உளனொரு பொருநன் வைகல் எண்தேர் செய்யும் தச்சன் திங்கள் வலித்த காலன் னோனே’’ (புறம ்:87) என்ற பாடல் பகைவர்க்கு எச்சரிக்கை விடுப்பதாக உள்ளது.

7.புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கம்: பகைவருடன் பொருந்தாத வலிய ஆண்மைத் தன்மையைப் புகழ்தல். ‘‘அரசு வரின் தாங்கும் வல்லா ளனே’’ என்ற புறம் 327 :

8.‘‘அவிப்பலி’’ என்பது தான் முன்பு சொன்ன வஞ்சின மொழியைக் காப்பதற்காக மரபுப்படி உயிரை வழங்குதலாகிய அவிப்பலியின் சிறப்பாகும்.

9. ஒல்லார் இடவயின் புல்லியபாங்கு: பகைவர் இடத்தைக் கைப்பற்றி அவ்விடம் சேரலாகிய

நிகழ்வு.

இனி, சமுதாய அறம் மதிப்பீடுகள்

10.துகள்தரு சிறப்பின் சான்றோர் பக்கம்: எருதுகளைப் பாதுகாக்கும் வேளாளரைச் சிறப்பித்தல் மற்றும்

11.குற்றம் தீர்ந்த வணிகரைச் சிறப்பித ் தல,''புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனில் உலகுடன் பெறினும் கொள்ளலரி'' என புறம் 18 பாராட்டும் சான்றோரே மேற்குறிப்பிட்டவர்.

12.கடிமனை நீத்த பால் என்பதும் வாகைத்துறை. இது பிறர்மனை நயவாமையாகிய அறத்தில் சிறந்தாரைப் புகழ்வது ஆகும். ''பிறர்மனை நோக்காத பேராண்மை சான்றோருக்கு அறன்அன்றோ ஆன்ற ஒழுக்கு'' என்ற குறளைக் காண்க.

13.குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவுநிலைமை, அழுக்காறாமை, அவாவின்மை என்ற எட்டுவகை ஒழுக்கங்களில் சிறந்த சான்றோர் நிலையினைப் புகழ்தலும் வாகைத் துறை ஆகும்.

14.மேலும் அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, நடுவு நிலைமை, வெ∴காமை, புறங்கூறாமை, தீவினையச்சம், அழுக்காறாமை, பொறையுடைமை போன்ற இல்லத்திற்கு உரியதாக நான்கு வருணத்தார்க்கும் வரையறுக்கப்பட்ட ஒழுக்கங்களில் சிறந்து நிற்கும் இல்லற மாண்புகள் புகழப்படுதல் ஆகும். 129,134,118,172,181,256,164,158 ஆகிய குறட்பாக்களை எடுத்துக்காட்டாக கொள்க.

15.இவற்றுடன் கொடுத்தற்கு அரியன கொடுக்கும் கொடைத்திறன்.

16.தம்மிடத்துத் தவறு செய்தவர்களை ''அகழ்வாரைத் தாங்கும் நிலம்'' போலப் பொறுக்கும் ஆற்றலும் மற்றும் மெய்ப்பொருள் அத்துடன் பொருள் எனப்படும் படை, நாடு, அரண், அமைச்சு, நட்பு இவற்றைப் போற்றிய திறனும் வாகையின் துறைகளாக மதிப்பிடப்படுகின்றன. ''படைகுடி கூழ் அச்சு நட்பரண் ஆறும் உடையான் அரசுருள் ஏறு''

17.இவை அனைத்திற்கும் மேலாக அருளுடைமை, கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, புணர்ச்சி விழையாமை, கள்ளுண்ணாமை, துறவு விரும்புதல் போன்ற ஒழுக்கங்களைப் பொருத்தி வாழ்தலும் வாகை ஆகும். எடுத்துக்காட்டாக குறள் 241,321,291,287,928,341,360 ஆகிய பாக்களை இணைத்துக் காண்க.

18.காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்றினை நீக்கி வாழ்கின்ற சிறப்பும் வாகைத் துறையாகும் என சமுதாயம் அறங்களை வகுத்தோதியுள்ளார் தொல்காப்பியர்.

## காஞ்சித் திணை

காஞ்சி என்னும் துறை பெருந்திணை என்னும் அகத்திணைக்குப் புறன் ஆகும்.

**‘‘காஞ்சி தானே பெருந்திணை புறனே’’**

நிலையாமை மூன்று வகைப்படும். அவை செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை என்பனவாகும். இதனை நாலடியார் போன்ற அறநூல்கள் நன்கு உணர்த்தும். காஞ்சி பெருந்திணைக்குப் புறமாவது எவ்வாறு? ஏறிய மடல்திறம் முதலிய துன்பப்படும் காமப் பகுதியாகிய பெருந்திணை அகன் ஐந்திணைக்கும் புறன் ஆவது போலப் போர்திணைகள் ஐந்திற்கும் பொதுவான நிலையாமை பற்றிப் பேசுவதால் பெருந்திணைக்கு காஞ்சி புறமாயிற்று என்பர் இளம்பூரணர். மேலும் பெருந்திணை அகப்புறம் போல இக்காஞ்சி புறப்புறம் ஆயிற்று என்பர்.

இத்திணை உலகத்தில் நிளையாமை என்னும் கொள்கைப் பல்வேறுபட்ட நெறிகளாலும் எடுத்து உணர்த்துவதாக அமைகிறது என்பதனை

**‘‘பாங்கரும் சிறப்பின் பல்லாற்றானும்,**

**.நில்லா உலகம் புல்லரிய நெறித்தே’’ (17)**

என்ற நூற்பாவால் உணர்த்துகிறது.

**காஞ்சி திணையின் நோக்கம்:** தனக்கு ஒப்பில்லாத சிறப்பு என்னும் செம்பொருளதாகிய வீடுபோற்றினைப் பெறுதல் காரணமாக இளமை, யாக்கை, செல்வம் என்பனவற்றால் நிலைபேற்றில்லாத இவ்வுலகியலைப் பற்றிக் கொண்டு அதனால் ஏற்படும் பலவகைத் துன்பங்களையும் பொறுத்து நிற்றலாகிய ஒழுகலாறினை உணர்த்துதல் ஆகும். உலகியல் நேரும் பலவகைத் துன்பங்களையும் எதிர்த்து நிற்றல் காஞ்சி ஆகும் என்னும் கருத்தினை அடிப்படையாகக் கொண்டே ‘‘எதிரூன்றல் காஞ்சி’’ என்னும் கொள்கை பிற்காலத்தில் உருவானது. ‘‘இத்திணை, மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமை’’ முதலாக் ‘‘காடுவாழ்த்து’’ இறுதியாக 20 துறைகளைக் கொண்டுள்ளது. இவற்றுள் முதல் 10 துறைகள் பாங்கரும் சிறப்பினைப் பெறுதல் வேண்டும் என்னும் விருப்பத்தைப் புலப்படுத்துவன. இறுதி 10 துறைகள் நில்லாத உலகியலைப் பல்லாற்றானும் பற்றியொழுகும் துன்பியலைப் புலப்படுத்துவன. முதற்பத்து ஆண்பாற்றுறை பல்லாற்றானும் பற்றியொழுகும் துன்பியலைப் புலப்படுத்துவன. முதற்பத்து ஆண்பாற்றுறை மற்றும் விழுப்பவகை எனவும், பிற்பத்து

பெண்பாற்றுறை மற்றும் விழுப்பவகை என இருதிறமாக எண்ணப்பெறும். இனி இத்துறைக்களுக்கான விளக்கங்களைக் காண்போம்.

1.பெருங்காஞ்சி: எவராலும் தடுத்து நிறுத்த இயலாத கூற்றுவன் எமன் வருவான் எனல். ‘‘அன்று கொல் இன்றுகொல் என்றுகொல் என்னாது பின்றையே நின்றது கூற்றம்’’ என எடுத்துரைத்தல்

2.இளமை கழிந்து வயதிலும் அறிவிலும் முதிர்ந்தோர் அவை அல்லாதார்க்கு அறிவுரை கூறலாகிய முதுகாஞ்சி ‘‘நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான் எல்லாரும் உவப்பது அன்றியும் நல்லாற்றுப் படூஉம் நெறியுமா றதுவே’’ (புறம்:169) என்று கணியன் பூங்குன்றனார் கூறுவதைக் காணலாம்.

3.வீரன் ஒருவன் தன் வீரமிகுதியால் தன் உடற்புண்ணைக் கிழித்துக் கொண்டு இறப்பது மறக்காஞ்சி. இது விழுப்புண் சிறப்பு உணர்த்தியது.

4. போர்களத்திலா் தன்னைப் பாதுகாக்கின்ற சுற்றத்தினா் இல்லாமையால் புண்பட்ட வீரனைப் பேய்கள் காக்கின்ற பேய்க்காஞ்சி.

5.இப்படிப்பட்ட நற்குணங்களை உடையவன் இறந்துவிட்டானே என்று உலகத்தார் புலம்புகின்ற மன்னைக்காஞ்சி. (மன்னுதல்-இரங்குதல்) அதியமான் இறந்த போது ஔவையார், சிறியகள் பெறினே எமக்கீயும் மன்னே --------என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கீயும் மன்னே ----------- ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ ---------இனிப் பாடுநரு மில்லைப் பாடுநர்க்கு ஒன்று

6.வஞ்சினக்காஞ்சி-இன்னது செய்யாவிடில் இது நடக்கட்டும்

7.தொடாக்காஞ்சி-பேய் நெருங்காமல் தடுத்தல்

8.ஆஞ்சிக்காஞ்சி- மனைவி வேலினால் தன்னை மாய்த்து கொள்ளல்

9.மகட்பால் காஞ்சி-மகளைப் பெற நினைத்த அரசனை எதிர்த்தல்

10முதுகாஞ்சி-கணவனோடு தனது மார்பை,முகத்தை அணைத்து கொண்டு இறத்தல்

11.மயக்கக் காஞ்சி-இறந்த மறவனை சுற்றி நின்று அரற்றுதல்

12.துன்பக்காஞ்சி-மறவா் தாமே ஏங்கி வருந்தும் நிலை.

13.சிறைப்பட்டவர் தாம் அடைந்த பொறுத்ததற்கரிய துன்பநிலையினை எடுத்துக் கூறும் நிலை கணைக்கால் இரும்பொறை சிறையிலர் நீர்கேட்டுப் பெறாத நிலையில் வருந்திப் பாடிய பாடல் இத்துறைக்குத் தக்க சான்றாகும்.

14.கொடுமை மிக்க பாலைநில வழியில் கணவனை இழந்த மனைவி தனியளாக நின்று வருந்துகின்ற முதுபாலை நிலை. புறம்: 255ல் வரும் ‘‘ஐயோ எனின்யான் புலியஞ்: சுவலே அனைத்தனன் கொளினே அகன்மார்பு எடுக்கவல்லேன் என்போல் பெருவிதிர்ப்பு உறுக நின்னை இன்னா செய்த அறனில் கூற்றே’’ என்ற வரிகள் இக்காட்சியை படம்பிடிக்கின்றன.

15.இறந்தோரை எண்ணி இறவாதார் வருந்திப் புலம்பிய கையறுநிலை

16.காதலியை இழந்து தனிமையில் வாடும் ஆடவன் கூறும் தபுதார நிலை

17..கணவனை இழந்த மனைவியின் கைம்மை நிலை கூறும் தாபத நிலை

18.கணவன் இறக்க அவனோடு உடன்கட்டை ஏறத் துணிந்தவளின் கூற்றாகிய பாலைநிலை
19.அரும்பெரும் மகனை இழந்த தாய் மகனைச் சேரும் தலைப்பெயல்நிலை

20.மற்றும் உலகில் நிலையாமைப் பண்பை விளக்குமாறு பலர் இறந்தாலும் தான் மட்டும் அழியாமல் நிற்கின்ற சுடுகாட்டை வாழ்த்துதலாகிய காடு வாழ்த்து என்பனவே இப்பத்துத் துறைகளாகும். ‘‘---------எல்லார் புறனும் தான்கண்டு உலகத்து மன்பதைக் கெல்லாம் தானாய்த் தன்புறம் காண்போர்க் காண்பறி யாதே’’ (புறம்:356) எனும் பாடல் சுடுகாட்டின் ஆற்றலைப் பாடுவதைக் காணலாம்.

## பாடாண்திணை

புறத்திணையுள் ஏழாவதாக அமைவது பாடாண்திணை ஆகும். புலவர் பாடும் புகழினை உடையதலைவனது அறிவு, தரு, ஆற்றல்,

**‘‘பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே**

**நாடுங் காலை நாலிரண் டுடைத்தே’’ (20)**

என்ற நூற்பாவழி அறியலாம். பாடாண் கைக்கிளைக்குப் புறனாவது: கைக்கிளையாவது ஒரு நிலத்திற்கு உரியதன்று – ஒரு தலைக் காமமாகி வருவது. அதுபோலப் பாடாணும் ஒருபாற்கு உரித்தன்றி, ஒருவனை ஒருவன் யாதானும் ஒரு பயன் கருதிய வழி மொழிந்து நிற்பது. கைக் கிளையாகிய காமப் பகுதியில் மெய்ப்பெயர் கூறப்பெறும் கைக்கிளை போலச் செந்நிறத்தால் கூறப்பெறுவது என்பர் இளம்பூரணர்.(நோந்திறமாவது மிகுதியான பேரிரக்கம்: செந்நிறமாவது அ.ஃ.து அல்லாதன)

**பாடாண் திணையின் வகைகள்**

பாடாண் எட்டு வகைப்படும். அவையாவன

1.கடவுள் வாழ்த்து வகை

2.ஆற்றுப்படைவகை

3.வாழ்த்தியல் வகை

4.பரிசில் துறை வகை

5.மங்கல வகை

6..கைக்கிளை வகை

7.செவியறிவுறுத்தல்

8.வசைவகை

என்பன பாடாண்திணை எண்வகைப் பொருண்மைகளைக் கொண்டது என்பர் தொல்காப்பியர். அவையாவன அமரகத்து அஞ்சாது போர்புரியும் மறவர்களின் தொழிலாய் அமையும் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி என்பனவற்றைப் பொருளாகக் கொண்டு பாடப்பெறும் அறுவகைப் பகுதிகளும் குற்றமற்ற அகத்திணை ஒழுகலாற்றைப் பொருளாகப் பாடப்பெறும் காமப்பகுதியும், செந்துறை வண்ணப் பகுதியுமாக எட்டு ஆகும். இவற்றுள் செந்துறை வண்ணப்பகுதி,

1.படர்க்கைக்கண் முன்னோர் கூறிய புகழ்தல்

2.முன்னிலைக்கண் முன்னோர் கூறிய புகழ்தல்

3.நற்பொருளை அறிவுறுத்தல் என மூவகையில் அமையும் இச்செய்திகளை

**“அமரர்கண் முடியும் அறுவகை யானும்**

**புரைநீர் காமம் புல்லிய வகையானும்**

**ஒன்றன் பகுதரி ஒன்றும் என்ப” (21)**

என்ற நூற்பா உணர்த்துகிறது.

**“காமப்பகுதி கடவுளும் வரையார்**

**ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்” (23)**

என்று தொல்காப்பியம் சுட்டுவதால் மக்கள் பேரில் பாடுதற்குரிய காமப் பகுதியினைக் கடவுள் பேரில் பாடினும் அதனை ஏற்றுக் கொள்வர் என்பது புலனாகியது.

இது மூவகையில் அமையலாம் என்பர்.

1.கடவுளரைத் தெய்வம் பெண்டிர் விரும்பியமை.

2.கடவுளரை மானிடப் பெண்டிர் விரும்பியமை

3.கடவுளர் மானிடப் பெண்டிரை விரும்பியமை

இனி, குழவிப் பருவத்தும் காமப்பகுதி கூறப்பெறும் என்பதனை,

**“குழவி மருங்கினும் கிழவதாகும்” (24)**

என்ற நூற்பா உணர்த்துகிறது. இதுவே பிள்ளைத்தமிழ் எனும் சிற்றிலக்கிய வகைக்கு வித்திட்டது எனலாம்.

மேலும்,

**“ஊரோடு தோற்றமும் உரித˙தென மொழிப**

**வழக்கொடு சிவணிய வகைமை யான்” (25)**

என்பதால் ஊரின்கண் காமப்பகுதி நிகழ்தலும் உண்டு என்பதை அறியலாம். இதனைப் பேதை முதல் பேரிளம்பெண் கந்தழி, வள்ளி என்ற மூன்று ஆகும். அதாவது பாடப்படுகின்ற ஆண் மகனைப் புகழ்ந்து பாடும் போது அப்புகழ்ச்சி கடவுள் வாழ்த்தோடு இணைந்து வரப்பெறும் என்பது தொல்காப்பியர் கருத்து. மன்னனைக் கொடிநிலையில் வாழ்த்துதல்: ''பூங்கண் நெடுமுடிப் பூவைப ் பூ மேனியான் பாம்புஉண் பறவைக் கொடிபோல ஓங்குக --------கொல்யானை மன்னன் கொடி'' கந்தழியில் வாழ்த்துதல்: (கந்தழி-திருமால் சோ என்னும் அரணத்தை(மதிலை) அழித்த வெற்றியைச் சிறப்பிப்பது) ''அன்றுஎறி தானும் இவனால் அரண்வலித்து இன்றுஇவன் மாறாய் எதிர்வார்யார் கன்றும் அடையார் மணிப்பூண் அடையாதார் மார்பின் சுடராழி நின்றெறியச் சேர'' என்பன போன்று வரும் பாடல்களைக் கண்டு உணரலாம். ஆனால் கொடிநிலை என்பது ஞாயிறு: கந்தழி என்பது தத்துவம் கடந்த பொருள் வள்ளி என்பது திங்கள் எனப் பொருள் கொண்டு இயற்கைப் பொருள் வாழ்த்து என்ற நோக்கில் காண்பர் நச்சினார்க்கினியர். கொற்றவள்ளை என்பதும் பாடாண்பொருண்மைக்குரியது என்பர் தொல்காப்பியர் (புறம்: 28) கொற்றவள்ளை என்பதனைத் துறையாகக் கொண்டாலட அது வஞ்சித்துணையாகும். புகழ்தல் கருத்தாயின் அது பாடாண்திணையாகும் என்பர் இளம்பூரணர். இதற்கு நன்மாறனைப் புகழ்ந்தது பாடுகின்ற புறம் 57ம் பாடல் உரல் பாடலாகிய வள்ளைப் பாடலாக அமைந்துள்ளது. இத்துணையும் கூறப்பட்டது பாடாண் திணையின் பொருண்மைகளாகும். பாடாண் திணையின் துறைகள்:

1.கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தல்: இது கொடுப்போர் ஏத்தல், கொடாதார்ப் பழித்தல், கொடுப்போர் ஏத்திக் கொடாதார்ப் பழித்தல் என மூவகைப்படும் என்பர் இளம்பூரணர். மற்றும் வாழ்த்து, இயல்மொழி வாழ்த்து என மூவகைப்படும் என்பர். இயல்மொழி: ''------- இனியை பெரும எமக்கே ----------- இன்னார்ப் பெருமநின் ஒன்னாதோர்க்கே'' (புறம்:94) இயல்மொழி வாழ்த்து: ''பார்ப்பார்க்கு அல்லது பணிபு அறி யலையே ----------நட்டோர்க்கு அல்லது கண்அஞ் சலையே வணங்குசிலை பொருநின் மணங்கமழ் அகலம் மகளிர்க்கு அல்லது மலர்புஅறி யலையே'' என்று வாழ்த்துவது. வாழ்த்து என்பது: ''செல்வக் கோவே சேரலர் மருக ---------ஆயிர வெள்ள ஊழி வாழி யாத வாழி பலவே'' என நீடுழி வாழுமாறு வாழ்த்துவதாகும்.

2.சேய்வரல் வருத்தலம் வீட வாயில்காவலர்க்கு உரைத்த கடைநிலை: சேய்மைக் கண்ணின்று வருகின்ற வருத்தம் தீர வாயில் காவலர்க்கு உரைப்பதாகும்.

புறம்:206ல், பரிசிலர்க்கு அடையா வாயிலோயே'' என அதியமான் நெடுமான் அஞ்சியின் வாயிற்காவலனை அழைத்து, உங்கள் தலைவன் ''தன்னறியலன் கொல் என்னறி யலன்கொல் எத்திசைச் செலினும் அத்திசை சோறே'' என்று கூறுவதை உணரலாம்.

3. அரசன் இனிது துயின்றலைக் கூறுதலாகிய கண்படைநிலை

4.அந்தணர்க்கு அரசன் தானமாகக் கொடுக்கக் கருதிய ஆவினது தன்மை கூறும் கவிலை கண்ணிய வேள்விநிலை

5.விளக்கு எரியும் திசை நோக்கி வேலின் வெற்றியைக் கூறும் விளக்குநிலை.

6.பின்னால் நன்மை பயக்கும் எனக்குருதிப் பாதுகாவலான உண்மை நிறைந்த அறிவுரைச் சொற்களை வேம்பும் கடுக்காயும் போல எடுத்துக் கூறுதலாகிய வாயுறை வாழ்த்து. ‘‘காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே’’ எனத்துவங்கும் புறம்:184ம் பாடலில் பாண்டியனுக்கு வரி வாங்கும் முறை பற்றிப் புலவர் கூறுவது வாயுறை வாழ்த்து ஆகும்.

7.செவியறிவுறூஉ: உயர்ந்தோரிடத்துப் பணிந்து வாழ வேண்டும் என்று அறிவுரை கூறுதல் என்பது,‘‘செவியுறைதானே பொங்குதல் இன்றிப் புரையோர் நாப்பன் அவிதல் கடனெனச் செவியுறுத் தற்றே’’ என்ற தொல்காப்பிய செய்யுளியல் நூற்பாவழி அறியலாம்.

8..புறநிலை வாழ்த்து: ‘‘வழிபடு தெய்வம் நின்புறம் காப்பப் பழிதீர் செல்வமோடு சிறந்து பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே’’ (செய்யுளியல்160) என்ற நூற்பா கூறுவதற்கேற்ப,‘‘சீர்சால் செல்வமோடு பொலிமதி சிறந்தே’’ என்பன போன்று மன்னனை வாழ்த்துதல் ஆகும்.

9.கைக்கிளை வகை: இது ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று என இருவகைப்படும். ‘‘துடிஅடித் தோற்செவித் தூங்குகை நால்வாய்ப் பிடியோன் நின்னை இரப்பல் கடிகமழ்தார்ச் சேலேக வண்ணனொடு சேரி புகுதலும் எம் சாலேகம் சார நாம்’’ (முத்தொள்: 50) என்பன போன்று வரும். இப்பதினோடு முன்னர்க் கூறிய கொடிநிலை, கந்தழி, வள்ளி, கொற்றவள்ளை என்பனவும் பாடாண் துறைகளாகும் என்பது தொல்காப்பிய நூற்பாக்கள் வழி அறியவரும் செய்தி. இவையேயன்றித் துயிலெடைநிலை, கூத்தர், பாணர், பொருநர், விறலியர் என்ற நால்வகைப் பரிசிலர்களை ஆற்றுப்படுத்தும் ஆற்றுப்படை, பெருமங்கலம், குடைநிழல் மரபு கூறுதல், வாள் மங்கலம், மண்ணு நீராடு மங்கலம், பரிசில் கடைஇய கடைகூட்டுநிலை,பரிசில்விடை, நிமித்தம் பார்த்தல் ஆகியனவும் பாடாண் திணைக்கான துறைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. துயிலெடை நிலையாவது நற்புகழ் உண்டாகும் பொருட்டுச் சூதர் என்பார் இசை பாடித் துயில் எழுப்புதல் ஆகும். ஆற்றுப்படையாவது கூத்தர், பாணர், பொருநர், விறலியர் ஆகிய நால்வகையினரும் பரிசில் பெற்று மீண்டு வரும் வழியில் வறுமையால் வாடும் தம்இனத்தாரிடம் தாம் பெற்ற பெரு வளத்தைக் காட்டி, அத்தகைய வளத்தை அவரும் பெறும் வண்ணம் வழிகாட்டி அனுப்புவது ஆகும். இவை முறையே கூத்தராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை,சிறும்பாணாற்றுப்படை,

பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை என இலக்கிய வகையாகத்தோன்றி வளர்ந்தமை காண்க. மன்னனின் பிறந்தநாள் விழா பெருமங்கலம் எனப்பட்டது. சான்றாக ''அந்தணர் ஆவோடு பொன்பெற்றார் நாவலர் மந்தாம்போல் மாண்ட களிறுஊர்ந்தார் எந்தை இலங்கு இலைவேல் கிள்ளி இரேவதிநாள் என்னோ சிலம்பிதன் கூடிழந்த வாறு'' எனவரும் முத்தொள்ளாயிரம் 83வது பாடலைக் காண்க. பகைவரைக் கொன்ற வாளைப் புகழ்வது வாள்மங்கலம் பகைவரிடமிருந்து பெற்ற பொருள்களைத் தூய்மை செய்வது மண்ணு நீராடு மங்கலம். பரிசிலன் பரிசில் வேண்டுவதும், மன்னன் அவன் வேண்டும் பொருட்களை அளித்தலும் பரிசில் கடைஇய கடைகூட்டு நிலையாகும். பரிசில் பெற்ற புலவன் மன்னனை வாழ்த்திப் போகவிடை கேட்பதும், அரசன் வழிவிட்டனுப்ப போதலும் பரிசில் விடை எனும் துறையாயிற்று. நாள் மற்றும் புள் நிமித்தம் கண்டு வருங்காலம் பற்றிய உவகையும் அச்சமும் கொள்ளல் நிமித்தம் என்னும் துறையாயிற்று. இதனை, புறம் 229:13-17,20:18-21 ஆகிய அடிகளில் காணலாம். இவ்வாறு பல்வேறுப்பட்ட பொருண்மைகளைத் துறைகளாகக் கொண்டு அமைந்துள்ளது பாடாண்திணை.

**பயிற்சி வினாக்கள்**

**குறு வினாக்கள்**

1.ஏழுவகையான புறத்திணைகள் குறித்து எழுதுக.

2.வெட்சி குறிஞ்சிக்குப் புறனாவது எவ்வாறு?

3.வெட்சிப் போர் அடையாளப் போர் -நிறுவுக.

4.வெட்சி அறப்போர் முறை ஆவது எங்ஙனம்?

5.கொடிநிலை, குடிநிலை விளக்குக.

6.மண்நசைப் போர் எது? அது எதற்கு புறம்?

7.உழிஞையின் துறைகள் யாவை?

8..பாடாண் திணையின் பொருண்மைகள் குறித்து எழுதுக.

9.கடவுள் வாழ்த்தோடு பொருந்தி வருபவை எவை?

10.பாடாண் திணை விளக்குக

**கட்டுரை வினாக்கள்:**

1.சங்ககால போர்முறைகளைப் புறத்திணையியல் வழி ஆய்க.

2.வெட்சியின் துறைகளைத் தொகுத்துரைக்க.

3.வஞ்சிப் போர் நிகழ்வுகள் குறித்து விரித்துரைக்க.

4..தும்பை போர் நிகழ்வுகளைத் தொகுத்துரைக்க.

5.உழிஞையின் துறைகளை எடுத்துரைக்க.

6.நிலையாமை உணர்த்தும் காஞ்சித்திணை குறித்து ஒரு கட்டுரை வரை

7.பாடாண் திணை குறித்து விவரிக்க.

8.வாகையின் வகைகள் பாகுபாடுகள் குறித்து விரித்துரைக்க.

**அலகு : 4**

## அகத்திணை

உலக மொழி வரலாற்றில்மேனாட்டு இலக்கண மரபுகளாகிய கிரேக்க இலத்தீன் மரபுகளும் வடமொழி இலக்கண மரபும், தமிழ் இலக்கண மரபும் மிகப் பழமையானவைகளாகும்,. இப்பழமையான மூன்று மரபுகளின் தன்மை, வளர்ச்சி, வரலாறு ஆகியவற்றை ஆராயும் போது தமிழ் மரபு மற்ற இரு மரபுகளினின்றும் தனித்து நிற்கும் சிறப்புடையது என்பது புலனாகின்றது. தமிழ் இலக்கண மரபு பொருளதிகாரத்தின் பால் சிறப்பு பெற்றுள்ளது. பொருளதிகாரத்தில் பொருள் ,பொருளைப்புலப்படுத்தும் வடிவம், பொருளைப்புலப்படுத்தும் முறை ஆகிய மூன்றும் இலக்கியஆய்வுக்குத் தேவை. பொருளதிகாரம் அம்முறையில் மலர்ந்த பொது இலக்கணமாகும். பொருளே அகம் புறமாய், களவு கற்பாய் நிற்கும். செய்யுளியல் வடிவை நினைவுபடுத்தும் உவமை மெய்ப்பாடு பொருளியல் என்பன பொருள் புலப்பாட்டு முறைகளை அறிவிக்கும் இவ்வாறு மூன்று நிலைகளில் இலக்கியக் கூறுகளைப் பொருளதிகாரத்தில் காணலாம்.அகப்பொருள் பற்றிய இலக்கணநெறி தமிழுக்கே உரியது அகம்என்ற சொல்லின் பொருள் உள் - உள்ளே - உள்ளிருப்பது - அகத்துள் இருப்பது எனவிரியும். தலைவனும் தலைவியும் தம் உள்ளத்துள் உணர்ந்து அனுபவிக்கும் இன்பம் இத்தன்மையுடையது எனப் பிறர்க்கு விளக்க இயலாததாக இருப்பது. தம்முள்ளும் ஒருவர்க்கொருவர் விளக்க இயலாததாக இருப்பது. ஆகவே காதல் ஒழுக்கத்தை “அகம்“ என்றது மிகவும் பொருத்தமாகும். “அகம்’என்பதை ஆகுபெயர் என்றார் நச்சினார்க்கினியர். அகம் என்பது அகத்தே நிகழும் இன்பத்திற்கு ஆகிவந்தது என்பது அவர் கருத்து. காதலுக்கு உள்ளமே முதன்மை காதலில் மொழியும் செயலும் உள்ளத்தின் வழிச் செல்லும் உள்ளத்துள் நினைக்கும் நினைவும் காதல் நுகர்ச்சிக்குச் சமம். இவையாவும் காதலை -அன்புணர்ச்சியை “அகம்“ என்று வழங்கும் சொல்லாட்சியின் பொருத்தத்தைப் புலப்படுத்துவன. தலைமக்கள் தத்தம் உள்ளத்து உள்ளேயே எண்ணிமகிழும் ஏற்றத்தைக் குறிப்பது அகம்.

பொருள் இலக்கணம் தொடர்பாகத் தோன்றிய நூல்களில் அகப்பொருள் பற்றிய நூல்களே மிகுதி. இறையனார்அகப்பொருள். தமிழ்நெறிவிளக்கம், நம்பியகப்பொருள், களவியல்காரிகை, மாறன்அகப்பொருள் என்னும் ஐந்துநூல்கள் அகப்பொருள் இலக்கணத்தை மட்டுமே கூறுவன.தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கணவிளக்கம், தொன்னூல்விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம் ஆகியநூல்களில் பிறஇலக்கணங்களோடு அகப்பொருள் இலக்கணமும் ஒருபகுதியாக இடம்பெறுகிறது. தொன்மைத் தமிழ்நூலான தொல்காப்பியம் பொருளதிகாரத்தின் ஒருபகுதியாகஅகப்பொருளை விரிவாக விளக்கியுள்ளது. அடுத்துத் தோன்றிய இறையனார் அகப்பொருள் களவு - கற்பு எனும் இருபிரிவுகளில் அகத்திணை குறித்த விளக்கம் வழங்குகிறது. அதன்பின் தமிழ்நெறிவிளக்கம் என்னும் நூலொன்று சிறிய அளவில் அகப்பொருள் இலக்கணத்தைக் கூறுகின்றது. தொடர்ந்து கி.பி. 13ஆம்நூற்றாண்டில் தோன்றிய

நம்பி அகப்பொருள் என்ற நூலே அகப்பொருள் இலக்கணத்துக்கென்று உள்ள ஒருதனிப்பெரும் நூலாகத்திகழ்கிறது.

இந்நூலின்ஆசிரியர்நாற்கவிராசநம்பிஆவார். இவர்புளிங்குடிஎன்றஊரினர். உய்யவந்தான்என்பாரின்மைந்தர். சமணசமயத்தவர். தமிழ், வடமொழிஇரண்டிலும்வல்லவர். ஆசுகவி - மதுரகவி - சித்திரக்கவி - வித்தாரக்கவிஎன்னும்நால்வகைப்பாக்களும்புனையும்ஆற்றல்பெற்றவர். அதுகருதியே "நாற்கவிராசன்எனஅழைக்கப்பட்டவர். நம்பி, என்பதே இவரது இயற்பெயர். நம்பி தம் அகப்பொருள்நூலுக்கு ''அகப்பொருள்விளக்கம்" என்றுபெயரிட்டுள்ளார். இவரே நூலுக்கு உரையும் எழுதியுள்ளார். தமது உரையில் பொய்யாமொழிப்புலவர் இயற்றிய தஞ்சைவாணன் கோவைச் செய்யுட்களை உதாரணம் காட்டியுள்ளார். அரங்கேற்றியுள்ளார். தம் நூலைப் பாண்டியன் குலசேகரன் அவையில் தொல்காப்பியர் வகுத்துரைத்த அகப்பொருள் இலக்கணத்தை மனத்தில் கொண்டு, சங்கப்புலவர் செய்யுட்களில் காணப்பட்ட சுற்றுகளையும் சேர்த்துச் சிந்தித்துச் சூத்திரம் யாத்து உரையும் வகுத்தார் நாற்கவிராசநம்பி என்று, இந்நூலின் சிறப்புப்பாயிரம் கூறுவது குறிப்பிடத்தக்கது. இந்நூல் சிறப்புப்பாயிரத்தோடு தொடங்குகிறது. அகத்திணையியல், களவியல் ,வரைவியல், கற்பியல், ஒழிபியல் என்னும் 5 பகுதிகளைப் பெற்றுள்ளது. 252 நூற்பாக்களைக் கொண்டது.

தொல்காப்பியப் பொருளதிகாரம் சொல் உணர்த்தும் சொற்பொருண்மை பற்றியதல்ல இது பண்டைத்தமிழரின் வாழ்வியல் ஒழுகலாறுகள் பற்றியது. அகம், புறம் எனும் இருவேறு வாழ்க்கை நெறிகள் பற்றியதும் அவ்வாழ்க்கை நெறிகள் வழி உருப்பெற்ற இலக்கியம் பற்றியதும் ஆகும். பொருள் பொருளதிகாரம் என்பனவற்றுக்குப் பல்வேறு நிலைகளில் பல்வேறு விளக்கங்களை உரையாசிரியர்களும் ஆய்வாளர்களும் அளித்துள்ளனர்.முதல் உரையாசிரியரான இளம்பூரணர் ''பொருள் என்பது யாதோ எனின், மேற் சொல்லப்பட்ட சொல்லின் உணரப்பட்டவை. அது முதல் கரு உரிப்பொருள் என மூவகைப்படும்" "உரிப்பொருளாவது. மக்கட்கு உரிய பொருள் அ.்.து அகம், புறம் என இருவகைப்படும். அகமாவது புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் உளவும் கைக்கிளை பெருந்திணை எனவும் எழுவகைப்படும் எனவும் ''புறமாவது, நிரைகோடற் பகுதியும் பகைவயிற் சேறலும் எயில் வளைத்தலும் இருபெரு வேந்தரும் ஒரு களத்துப் பொருதலும் வென்றிவகையும் நிலையாமை வகையும் புகழ்ச்சி வகையும் என எழுவகைப்படும் அ.்.தேல் புறப்பொருளை உரிப்பொருள் என ஓதிற்றிலரால் எனின்" எனவும் விளக்கம் அளித்துள்ளார்.

அறம் பொருளின்பமும் அவற்று நிலையின்மையும் அவற்றினீங்கிய வீடுபேறுமாம் பொருளெனப் பொதுப்படக் கூறவே அவற்றின் பகுதியாகிய முதல் கரு உரியும் காட்சிப்பொருளும் கருத்துப்பொருளும் அவற்றின் பகுதியாகிய ஐம்பெரும்பூதமும் அவற்றின் பகுதியாகிய

இயங்குதிணையும் நிலைத்திணையும் பிறவும் பொருளாம்” எனவும் மூன்று பொருளும் உணர்த்துப இது வழக்கு நூலாதலிற் பெரும்பான்மையும் நால்வகை வருணத்தார்க்கும் உரிய இல்லறம் உணர்த்திப் பின் துறவறமுஞ் சிறுபான்மை கூறுப் பொருள்கள் இவ்வதிகாரத்துட் காணமுடிகிறது. பிரிதனிமித்தங் கூறி இன்பநிலையின்மையுங் கூறிக் “காமஞ்சான்ற”எனும் கற்பியற் சூத்திரத்தான் துறவறமுங் கூறினார்” எனவும் நச்சினார்க்கினியர் வடமரபுவழி நின்று பொருளதிகாரத்தின் பாடுபொருளை விளக்கியுள்ளார்.

ஆரியர் செய்யுள் அனைத்தும் அறம் பொருள் இன்பம் வீடு என்பனவற்றுள் ஒன்றும் பலவும் பொருளாகக் கொண்டே அமைதல் வேண்டுமென்பர் தமிழ்ப்புலவர் மக்கள் பொருளாக மதிப்பன எல்லாம் செய்யுளுக்குரியனவாகும் கொள்வர் அப்பொருளெயெல்லாம் மக்கள் வாழ்வொடு அகமும் புறமுமென இரண்டிடைங்குவதாகலானும் பொருளை அகமும் புறமும் என இருகூறாய் வகுத்துக் கூறுவதே தமிழ் மரபாகும். மரபு போற்ற தொல்காப்பியரும் தமிழ்ச் செய்யுட் பொருளை அகப்பொருளும் புறப்பொருளுமாக இருகூறாக்கி அவற்றின் பொது இயல்புகள் அல்லது இலக்கணங்களைப் பொருட்படலத்தில் முதற்கண் அகத்திணையியல் புறத்திணையியல் என முறையே வருத்தமைத்து விளக்கிப் போந்தார். வாழ்வின் இருவேறு கூறுகளாகிய அகம் புறம் இரண்டையும் விளக்கி அவற்றுக்குரிய கருவியாகிய செய்யுள் இயல்புகளையும் உணர்த்துவதே தொல்காப்பியப் பொருளதிகார இயல்பு என்கிறார் சோமசுந்தர பாரதியார்

மூவரின் உரைவிளக்கங்களையும் மறுத்துரைக்கும் உ.பாலசுந்தரம் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் பொருள் என்பதற்கு அறம் முதலாய நான்கும் எனக் கூறிப் பலபட விளக்கிச் சென்றனர். “அந்நிலை மருங்கின் அம்முதலாகிய மும்முதற் பொருட்கும் உரிய என்ப’’ அவற்றைச் செய்யுட்குரிய பொருளாக ஆசிரியர் ஓதினமை அன்றி அச்செய்யுளை யாத்தற்குரிய கருவிகளாக இதாமையான் அவர்தம் விளக்கம் மற்றொன்று விரித்தலாயும் மயங்குதலைமாயும் அமைந்தன.சோமசுந்தரபாரதியார் “பொருள் ஒன்றே மக்க குறிக்கோளாதலானும் அப்பொருள் பற்றியும் அப்பொருளுரைக்கும் கருவியாம் செய்யுள் பற்றியும் அவற்றிற்கு உறுப்பும் துணையுமாவள பற்றியும் கூறுவனவற்றின் தொகுதி தொல்காப்பியரின் பொருட்படலமாகும் என்பார் இன்னது என்பதனை அவர் விளக்கினாரில்லை. துணையாவன இவை என்பதையும் புலப்படுத்தாமையின் அவர் விளக்கம் கவர்படுபொருளாக உள்ளது” எனக் கருத்துரைத்துள்ளார்.

இளம்பூரணர் எழுதிணை என்பதற்கு எழுபொருள்“ எனப் பொருளுரைத்துள்ளார். திணை என்பதற்கான பொருள்விளக்கம் பற்றி ஆராயும் கார்த்திகேக சிவத்தம்பி ”மிக முத்திய உரையாசிரியரான இளம்பூரணர் இந்தச் சொல்லுக்குப் பொதுக்கருத்து அல்லது உள்ளடக்கம் என்று விளக்கம் கூற முற்படுகிறார்” என விளக்கமளித்துள்ளார். ‘‘முற்படக் கிளந்த என்றமையான் அவை ஏழும் அகப்பொருள் என்று கூறிவாரும் அகம் புறம் எனப் பொருளை வரையறுத்தல் இவர்

கருத்தாக்கங்ககளின் “முற்படக் இளந்த எழுதிணை” எனவே பிற்படக் கிளக்கப்படுவன எழுதிணை உள என்பது பெறுதும் அவையாவன வெட்சி முதலாகப் பாடாண்டிணை ஈறாகக் கிடந்த எழுதிணையும். இவ்வகையினால் இவ்வதிகாரத்தில் கூறப்பட்ட பொருள் பதினான்கு என்பதூஉம்” எனும் இளம்பூரணரில் கூற்று குறிஞ்சி முதனிய ஏழும், வெட்சி முதலாகிய எழுப் பொருள் என்பதை வெளிப்படுத்துகிறது. எனவே ”பாடுபொருள்” என்பதே இளம்பூரணர் திணை என்பதற்குக் கொண்ட பொருள் என்பது தெளிவாகின்றது.

திணையாவது ஒழுக்கம். இயல் இலக்கணம் அகத்திணையியலென்றது. இன்பமாகிய எனவே ஒழுக்கத்தினது இலக்கணமென்றவாறாயிற்று” எனும் நச்சினார்க்கினியர் முதல் நூற்பாவுக்கு உரை எழுதுகையில் ‘‘கைக்கிளை யெனப்பட்ட ஒழுக்கம் முதலாகப் பெருந்திணை யென்னும் ஒழுக்கத்தினை இறுதியாகவுடைய” எனக் கைக்கிளை பெருந்திணை என்ற இரண்டையும் சேர்த்துத் திணை என்பதற்கு “ஒழுக்கம்” என்றே பொருள் கொண்டுள்ளார். ‘‘பொருளதிகாரத்துள் திணை என்பது மக்களின் ஒழுகலாற்றையும் அவ்வொழுகலாற்றிற்குரிய தொழிலுமாகிய செயல்களையும் அவற்றிற்கு அடிப்படை துணைப் பொருள்களையும் ஒருங்குகட்டும் இலக்கணக் குறியீடாகும். அ.்.து இலக்கண முறைமையார் கூறுமிடத்து முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் ஆகிய மூன்றற்கும் உரிமையுடையதொரு தொகுதிப்பெயராக அமைவதாயினது எனத் திணை என்பதற்கு விளக்கம். உ.பாலசுந்தரம் மக்கள் ஒழுகலாறு அதற்கு அடிப்படையான முதல் கரு உரி இவற்றின் ஒட்டுமொத்தமே அவற்றின் குறியீடே திணை என்கிறார்.

திணைப்பெயர் திணைநிலைப்பெயர் ஆதியில் குடியிருப்பைக் குடும்பமும் குழுவும் குடியிருப்புடன் குறித்த இச்சொல் பொருத்தியலை காலவளர்ச்சியில் சொற்பொருள் மாறுதலடைந்து விருப்பில் உள்ள மக்களின் ஒழுக்க வடிவங்களைச் சுட்டுவதாக மாறியிருப்பதும் சாத்தியமே எனவும் அதன் பொருள் வளர்ச்சியையும் கார்த்திகேசு சிவத்தம்பி குறிப்பிட்டுள்ளார். மேலும்‘‘ நடத்தைமுறைகளோடு தொட்ர்புடைய திணைக் கருத்துக்கள் மனசிந்தனைகளின் விளைவாகத் தோன்றிய நிலையாகக் காணப்படுகின்றன இந்நிலையில் “திணை’ என்ற சொல்லின் துலப் பொருளான குடும்பம். குடியிருப்பு ஆகியவை முக்கியத்துவம் பெறுகின்றன பலநிலப்பகுதிகளின் நடத்தை முறைகளை விளக்கும் சொற்களாக அவை பரிணமித்த குறிப்பிடுகின்றன” என வரலாற்று ரீதியான வளர்ச்சிப்போக்கில் திணை என்ற சொல் பெற்ற பொருள் மாற்றத்தை விளக்கிக் கூறியுள்ளார். நிலந்தோறும் பின்பற்ற பட்ட ஒழுக்க வடிவங்களைச் சுட்டும் பொதுக்குறியீடாக ஆளப்பெற்றதான பொருள் வளர்ச்சி, நடைமுறை சார்ந்த நிலையிலிருந்து இலக்கிய உருவாக்க காலத்தில் அடைத்த பொருள் மாற்றத்தை இக்கூற்று வெளிப்படுத்துகிறது.

திணை, அகத்திணை, புறத்திணை என இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவ்விருதிணைகளுக்கும் ஏழு, ஏழு திணைகளாக மொத்தம் 14 திணைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அகத்திணைகள் ஏழும் புறத்திணைகள் ஏழிற்கும் புறனாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆக திணைக்கோட்பாடு என்பது அகம், புறம், புறனாதல் ஆகியவை உள்ளடக்கியதாகும். அகம் என்னும் சொல்லின் பொருண்மையை விளங்கிக் கொள்வதற்கு அகத்திணையியல் குறித்த பொதுமையாக்க மரபினைப் பயன்படுத்தியே விளங்கிக் கொள்ள முடியும். அகத்திணை என்பது இன்பம் எனும் அகப்பொருண்மையை அடிப்படையாகக் கொண்டு கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை ஆகிய ஏழு திணைகளாக அமைக்கப்பட்டு ஒரு கோட்பாட்டு முறையை விளக்குவதாக அமையும். மக்களின் வாழ்வியலானது பாலியத்தாலும், வன்முறையாலும் கட்டமைக்கப்படுகின்றது. ஆகவே அகமும்,புறமும் ஒன்றின் இரண்டு பக்கங்களாக அமைகின்றன. ஆக அகத்திணை, புறத்திணை, புறனாதல் ஆகிய மூன்றும் இணைந்து திணைக்கோட்பாடாகிறது.

திணைக்கோட்பாடானது அகம், புறம், புறனாதல் ஆகிய மூன்றனையும் உள்ளடக்கியது ஆகும். ஆனால் ஐந்திணையானது குடும்பம் சார்ந்த அமைப்புக்களை விளக்குவனவாக அமையும். இதில் குடும்பம் என்ற கட்டமைப்பிற்குள் தலைமக்கள் எவ்வாறு இணைகின்றனர் என்பதை விளக்குவதாக அமையும். திருமணத்திற்கு முந்தைய ஆண், பெண் உறவானது திருமணத்தில் இணைந்து திருமண வாழ்வியல் நெறிகளை இலக்கியங்களில் பதிவு செய்வதாக அமைகின்றது.அதனால் ஐந்திணைகள் அகத்திணை ஏழிலும் சிறப்புப் பெறுகின்றது. ஆகவே இது ‘அன்பொடு புணர்ந்த ஐந்திணை’ (தொல்.கள.1) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐந்திணைகளில் பாலை எனும் திணை நடுவணது எனும் சொல்லாலேயே அகத்திணையியலில் குறிக்கப்படுகிறது. அகத்திணையியலில் பாலை எனும் சொல் குறிப்பிடப்படவில்லை.மேலும் நடுவணது பாலை என்பதை உரையாசிரியர்களின் உரைகளின் வழி அறிய முடிகிறது. ‘‘பாலை என்னும் குறியீடு எற்றாற் பெறுதும் எனின் வாகை தானே பாலையது புறனே (புறத்.15) என்பதனாற் பெறுதும்” என்று இளம்பூரணர் கூறுகின்றார்.

தொல்காப்பியத்தில் ஐந்திணையே அகத்திணை என்பது போல ஐந்திணையின் இலக்கணக் கூறுகளைப் பலபட விரித்துரைப்பக் காணலாம். அகத்திணையியல் 55 நூற்பாக்களைக் கொண்டது. அகத்திணை எனப் பொதுப்பெயர் பூண்டிருந்தும் இதன் 50 நூற்பாக்கள் ஐந்திணையின் நெறிகளையே விரித்து மொழிதல் காண்க. களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல் எனப்படும் பிற நான்கு இயல்களும் கூட ஐந்திணை நுவலும் அமைப்பினவாகவே உள. ஐந்திணைக் காதல் அற நலத்தது, உலகம் நன்னயங்களை நோக்கிச் சங்கப் புலமையினோர் ஐந்திணைத் துறைகளையே பெரிதும் பாடினர். ஐந்திணையானது இயற்கைப் பின்னணியோடும், நிலப்பின்னணியோடும் இணைந்த மக்களின் பாலியல் சார்ந்த உணர்வுகளைப்

பிரதிபலிப்பனவாகும். ஐந்திணைகளில் நடுவில் உள்ள பாலையைத் தவிர பிற நான்கு திணைகளுக்கும் நிலப்பாகுபாடு வகுத்தமைக்கப்பட்டுள்ளது.

**“மாயோன் மேய காடுறை உலகமும்**

**சேயோன் மேய மைவரை உலகமும்**

**வேந்தன் மேய பெருமணல் உலகமும்**

**முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச்**

**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே” (தொல்.பொ.5)**

என இவ்வாறு முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகியவற்றிற்கு நிலப்பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. பாலைக்கு தனிநிலம் குறிப்பிடப்படவில்லை. ஆயினும், பொழுதுகளாக ஆண்டின் பருவமான வேனிலும், நாளின் பொழுதான நண்பகலும் குறிப்பிடப்பட்டுள்ளது.ஐந்திணைகளுக்கும் முதல், கரு, உரி என முப்பொருள் பாகுபாடு கூறப்பட்டுள்ளது. முதல் என்பது நிலமும், பொழுதும் ஆகும். கரு, தெய்வம், உணவு, விலங்கு, பறவை, பறை, செய்தி, யாழின் பகுதி என்னும் வகைக்குள் அடங்கும் இயற்கைச் சூழலை மையமாகக் கொண்டவற்றைக் குறிக்கும்.ஐந்திணை இலக்கியத்தின் அடிக்கருத்து உரிப்பொருள் ஆகும். அதாவது ஐந்திணைப் பாடல்களில் இடம்பெறும் தலைமக்களின் பாலிய ஒழுக்கங்களைக் குறிப்பது. உரிப்பொருள் இன்றி பாடற் பொருண்மை அமையாது. உரிப்பொருள்களாவன

**“புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்**

**ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை**

**தேருங்காலை திணைக்குரிப் பொருளே” (தொல்.பொ.அகத்.14)**

என்று கூறப்பட்டுள்ளது. புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் ஆகியனவும், அவற்றின் தொடர்பான சூழலின் காரணங்களும் திணைக்கு உரிப்பொருளாகும். இன்ன திணைக்கு இன்ன உரிப்பொருள் என்பதை உரையாசிரியர்களின் உரைகளின் வழி அறியலாம். இளம்பூரணர், மரபியல் நூற்பா மொழிந்த பொருளோடு ஒன்ற வைத்தல்’ (மரபு.110) எனும் நூற்பாவினைக் கொண்டு, புணர்தல் என்பது குறிஞ்சித்திணைக்கும், பிரிதல் என்பது பாலைத் திணைக்கும், இருத்தல் என்பது முல்லைத் திணைக்கும், இரங்கல் என்பது நெய்தல் திணைக்கும், ஊடல் என்பது மருதத்திணைக்கும் எனக் குறிப்பிடுகின்றார். இந்த ஐவகை உரிப்பொருள்களும், அவற்றின் தொடர்பான நிகழ்வுகளும் பாடலின் அடிக்கருத்தாக அமைகின்றன.

ஐந்திணைக் கோட்பாட்டினை உரிப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டே உருவாக்க முடியும். பிரிதல் என்பது எல்லாத் திணைக்கும் உரியனவாயினும் பாலைக்கு சிறப்புறக் கூறப்பெற்றுள்ளமையால் பாலைத்திணைக்கு உரிய உரிப்பொருளாகும். இவ்வுரிப் பொருள்களோடு தலைமகளை உடன் கொண்டு பெயர்தலாகிய கொண்டு தலைக்கழிதலும், தலைமகன் தலைமகளைப் பிரிந்த இடத்து இரங்குதலாகிய பிரிந்தவன் இரங்கலும் அடங்கும். ஒரு பாடலை என்ன திணைக்கு உரியது என்பதை அந்த திணைக்குரிய உரிப் பொருள்களைக் கொண்டே இனங்காணலாம். முதற் பொருளும் கருப்பொருளும் அதற்குரிய துணைமைக் கருவிகளாக விளங்குகின்றன.நிலமும், பொழுதும் ஐந்திணைகளுக்கும் வகுத்துச் சொல்லப்பட்டுள்ளது. பாலைத்திணைக்கு நிலம் சொல்லப்படவில்லை ஆயினும் பொழுது குறிப்பிடப்பட்டுள்ளது. குறிஞ்சி, முல்லை முதலிய ஐந்திணைகளையும் முதலாசிரியர் குறியாகப் பயன்படுத்தியுள்ளார் என்று இளம்பூரணர் கூறுகின்றார்.

முல்லை, குறிஞ்சி என்பன இடுகுறியோ காரணக் குறியோ எனின் ஏகதேச காரணம் பற்றி முதலாசிரியர் இட்டதோர் குறி என்று சொல்லப்படும். பாலை என்பதற்கு நிலம் இன்றேனும், வேனிற்காலம் பற்றி வருதலின் அக்காலத்துத் தளிரும் சினையும் வாடுதலின்றி நிற்பது பாலை என்பதோர் மரம் உண்டாகலின், அச்சிறப்பு நோக்கி பாலை என்று குறியிட்டார். இந்தக் குறிகள் உணர்த்தும் உரிப்பொருள்கள் காலந்தோறும் இருந்து வரக் கூடியது. எனவே காலத்தை மீறியது. ஆகவே குறிஞ்சித் திணை என்றால் கூடலை மட்டும் குறிப்பது. குறிஞ்சித் திணை என்பது குறியீட்டாக்கத்தின் மூலம் கூடலைக் குறிக்கிறது. ஏனெனில் கூடல் பொருண்மை எல்லா நிலத்திலும் உண்டு. ஆனால் திணை அமைப்பில் குறிஞ்சியில் மட்டும்தான் உண்டு.இதுவே குறியீட்டமைப்பு ஆகும். இவ்வாறு ஐந்திணைகளும் குறியாகப் பயன்படுத்தப்பட்டு கோட்பாடாகக் கட்டமைக்கப்படுகிறது. புவியியல் அடிப்படையில் (தமிழ்நாடு) காடு, மலை, மிகுதியான நீர் வளம் நிறைந்த வயல் பகுதி, பெருமணல் நிறைந்த கடல் சூழ்ந்த பகுதி என நான்காகப் பிரித்து, அவற்றிற்குரிய பழக்க வழக்கம், தொழில், உணவு முறை ஆகிய வாழ்வியல் நெறிகளை வகுத்தமைத்து, உரிப் பொருள்களின் மூலம் பாலிய நடத்தை ஒழுகலாறுகள் பதிவு செய்யப்படுகின்றது. எல்லாத் திணைகளுக்கும் உரியதாக அனைத்து உரிப்பொருள்களும் இருப்பினும், அவை குறியீட்டமைப்பின் மூலம் ஒரு திணைக்கே சிறப்புடையனவாக இருக்கின்றது.

ஐந்திணை என்பது மக்களின் பாலிய ஒழுக்கங்களை எடுத்தியம்புவது ஆகும். இப்பாலிய ஒழுக்கமானது களவு, கற்பு வாழ்க்கையினை அடிப்படையாகக் கொண்டு அமையும் போது கைகோள் கோட்பாடாகிறது. களவு, கற்பு ஆகிய இரண்டிலும் ஐந்திணைகளின் பங்கு முக்கியமானது. திருமணத்திற்கு முன், பின் ஓர் ஆண்மகனும், ஒரு பெண்ணும் கொள்ளும் உறவுகளின் அடிப்படையில் ஐந்திணைகள் கட்டமைக்கப்படுகின்றது.

''திணை மயக்குறுதலும் கடிநிலை இலவே
நிலன் ஒருங்கு மயங்குதல் இன்றென மொழிப
புலன் நன்குணர்ந்த புலமையோரே'' (தொல்.பொ.12)

ஐந்திணைகளுக்கும் வகுக்கப்பட்டுள்ள முதல், கரு, உரி ஆகிய முப்பொருள்களில் முதற் பொருளில் நிலம் மயங்காது. பொழுது மயங்கும். கருப்பொருள் மயங்கி வருதலும் உண்டு.

''எந்நில மருங்கின் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா ஆயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும்'' (தொல்.19)

என்பதன் மூலம் கருப்பொருள் மயக்கங்கள் ஏற்படும் என்பதை அறியலாம். கருப்பொருளுக்குரிய பூவும், பறவைகளும் மயங்கி வரும் ஆயினும் எந்த நிலத்தில் கருப்பொருள் மயங்கி வருமோ அந்நிலத்திற்கு உரிய கருப்பொருளாகவே கருதப்பெறும்.

''உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே''(தொல்.பொ.அகத்.13)

உரிப்பொருள் அல்லாத முதற்பொருளும், கருப் பொருளும் மயங்கும். இந்நூற்பாவிற்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகிய இருவரிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. இளம்பூரணர் முதற்பொருளும், கருப்பொருளும் மயங்கும் என்கிறார். நச்சினார்க்கினியர் உரிப்பொருள் அல்லாத கைக்கிளையும், பெருந்திணையும் மயங்கும் என்கிறார். முதற்பொருளும், கருப்பொருளும் மயங்கும் என்று கொள்வதே பொருத்தமாகத் தோன்றுகின்றது.ஐந்திணைக் கோட்பாடுகளில் முக்கியமான கூறு, பாடல்களில் குறிக்கப்பெறும் தலைமக்களின் இயற்பெயர்கள் சுட்டப்பெறக்கூடாது என்பதாகும். ஏனெனில் அனைவருக்கும் பொதுவான உணர்வுகளைப் பதிவு செய்யும் அகப்பாடல்களில் இயற்பெயர்கள் தேவை இல்லை. தலைவன், தலைவியரைக் குறிக்க கிழவன், கிழத்தி எனவும், தலைவியின் பெற்ரோரை தமர், தாயர், நற்றாய், செவிலி, தோழி ஆகிய பொதுச் சொற்களாலும் குறிப்பிடப்பட வேண்டும். இதனை,

''மக்கள் நுதலிய அகனைந்திணையும்
சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறாஅர்''(தொல்.பொ.அகத்.54)

எனும் நூற்பாவின் மூலம் அறியலாம்.திணைக்குரிய மக்களின் பெயர்களைச் சுட்டும் போது, குலப்பெயர்கள், தொழில் சார்ந்த பெயர்களால் குறிக்கலாம் என்பதை,

**‘‘பெயரும் வினையும் என்று ஆ இருவகைய**

**திணைதொறும் மரீஇய திணைநிலைப் பெயரே’’(தொல்.பொ.அகத்.20)**

எனும் நூற்பாவின் மூலம் அறியலாம். மேலும் முல்லைத் திணையின் ஆண்மக்களின் பெயர்களாக,

**‘‘ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்**

**ஆவயின் வரும் கிழவரும் உளரே’’ (தொல்.பொ.அகத்.21)**

என்பதன் மூலம் ஆயர், வேட்டுவர் என்போர் அவர்கள் செய்யும் தொழிற்பெயர்களால் குறிப்பிடப்படுவர் என்பதை அறியலாம்.

**‘‘திணையினை உணர உதவும் கருவிகள்**

**உள்ளுறை உவமம் ஏனை உவமம் எனத்**

**தள்ளாதாகும் திணைஉணர் வகையே’’(தொல்.பொ.அகத்.46)**

திணையினை உணர்ந்து கொள்வதற்குரிய கருவிகளாக உள்ளுறை உவமமும், ஏனை உவமமும் பயன்படுகிறது. உவமிக்கப்படும் பொருள் புலப்படாமல் உள்ளுறையாகச் சொல்லப்படுவது உள்ளுறை உவமமாகும். உவமிக்கப்படும் பொருள் வெளிப்பட உணரப்படுவது ஏனை உவமமாகும். திணையினை உணரும் வகையாக உள்ளுறை உவமமும், ஏனை உவமமும் பயன்படுகிறது.

ஐந்திணையின் ஒழுக்கமானது இன்பம், பொருள், அறம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட காமக் கூட்டமானது கூறப்பட்டுள்ள எண்வகை மணங்களின் அடிப்படையில் கந்தர்வம் போன்றது என்பதாகும்.

**‘‘இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**

**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**

**காமக்கூட்டம் காணும் காலை**

**மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்**

**துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே’’ (தொல்.பொ.கள.1)**

என்பதன் மூலம் அறியலாம்..ஐந்திணைக் கோட்பாடானது நிலங்களை ஐந்தாகப் பிரித்து, அவற்றிற்குரிய முதல், கரு, உரிப்பொருள்கள் ஆகியவற்றை வகுத்தமைத்து, அந்நிலங்களில் வாழும் மக்களின் வாழ்வியல் நெறிகளை விளக்குவதாக அமைகின்றது. நிலங்களைக் குறியீடாக்கி அவற்றை திணை ஆக்குவதன் மூலம் ஐந்திணைக் கோட்பாடு கட்டமைக்கப்படுகிறது.ஆணும் பெண்ணும் சமூகத்தில் கொள்ளும் உறவானது திருமண வாழ்வோடு பின்னிப்பிணைந்து இன்பம், பொருள், அறம் ஆகிய அனைத்தையும் அடிப் படையாகக் கொண்டு இயங்க வேண்டும். ஆகவே ஐந்திணையானது பிற கைக்கிளை, பெருந்திணைகளை விடச் சிறப்புப் பெறுகின்றது. ஏனெனில் அவை ஒத்த அன்புடைய இருவரிடம் நிகழும் உறவினை எடுத்தியம்புவதாக அமைகின்றது. இதனையே ஐந்திணைக் கோட்பாட்டின் வழி தொல்காப்பியம் நிறுவுகிறது

## அகத்திணை முப்பொருள்கள்

தொல்காப்பியரின் அகத்திணைக்கோட்பாடு ஏழு திணைகளைக் கொண்டது அகத்திணைகள் எழும் ஏழு புறத்திணைகளோடு தனித்தனியே தொடர்புடையவை ஏழு புறத்திணைகளுள் வகைப்பாடுகள் இல்லை ஆனால் ஏழு அகத்திணைகளும் மூன்றாக வகைப்பட்டுள்ளன. கைக்கிளை, பெருந்திணை, நடுவண்ஐந்திணை என்பன அந்த மூன்று வகைகள் இவற்றுள் நடுவண்ஐந்திணையில் நடுவணது எனப்படும் நடுவுநிலைத் திணையாகிய பாலை தனித்தன்மை உடையதாகக் கருதித் தனியே வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படைப் பாகுபாட்டுடன் தொல்காப்பியம் அகத்திணைக் கூறுகளாக முதல், கரு, உரி என்ற முப்பொருள்களை முன்வைத்துள்ளது. இவை பற்றிய புரிதலே அகத்திணைக் கோட்பாட்டின் இயல்பான விளக்கத்துக்கு அடிப்படை

**“முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே**

**நூவலூங் காலை முறை சிறந்தனவே**

**பாடலுட் பயின்றவை நாடுங்காலை”**

என அகத்திணைப் பாடல்களுக்கான முப்பொருள்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல் என்பது இலக்கணவரையறை ஆதலின் பாடலுட் பயின்றவற்றை ஆராயும் இடத்து எனத் தரவு அடிப்படையில் முப்பொருள் வகைப்பாடு குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த முப்பொருள் அகப்பாடல்களுக்கா அல்லது அகம் புறம் என்ற இரண்டுக்குமா என்பது பற்றிய கருத்துவேறுபாடுகளும் உரையாசிரியர் மத்தியில் நிலவுகின்றன.அகத்திணைக்கான

தொல்காப்பியரின் முப்பொருள் கோட்பாட்டை அதற்கான வரையறையை அவர்வழிநின்று விளங்கிக் கொண்டால்தான் இந்த நூற்பாவிற்கான கருத்தை உணரலாம்.

பருவகாலங்கள் என்பன எல்லா நாட்டவர்க்கும் எல்லா மக்களுக்கும் பொதுவானவை எல்லாத் திணைகளிலும் திணைவாழ்விலும் இயல்பாக இடம்பெறுவை குறிப்பிட்ட நிலம் குறிப்பிட்ட நிலம் சார்ந்தோருக்கு அவர்தம் வாழ்க்கைக்கு ஏற்றதாக இருப்பதைப்போல அன்றிக் காலம் குறிப்பிட்ட நிலம் சார்ந்தோருக்கென இல்லாமல் எல்லாக் காலங்களும் எல்லா நிலத்தவர்க்கும் பொதுவானவையாக இருப்பது உலகியல் வழக்கு இந்த உலகியல் வழக்காற்றினின்றும் வேறுபட்டுத் தொல்காப்பியர் காலத்தைப் புலனெறி வழக்காகக் கவிதைமரபு பற்றிப் பாகுபடுத்திக் கூறியுள்ளார். குறிப்பிட்ட காலங்களை, காலக்கூறுகளைக் குறிப்பிட்ட திணைகளுக்கு உரிமைப்படுத்திக் கூறியிருப்பது ஆண் பெண் உறவில் எழும் காதலை, காமத்தை முதன்மைப்படுத்தியதாகவே, மையப்படுத்தியதாகவே உள்ளது. காம உணர்வு சிறந்து இருவரும் இணைந்து இருப்பதற்கான காலப்பகுதியைக் கவிதைமரபாகக் காட்டியுள்ளார் தொல்காப்பியர்,

“உள்ளத்தோடு இயைந்த தொடர்பெல்லாம் காதல் எனப்படுகின்றது. எனவே காதல் உள்ளப்புணர்ச்சி, மளவிசைவு என்று பொருள் கொள்ளலாம். இப்பொருள் அகத்திணைத் தலைமக்களுக்கும் பொருந்தும் உள்ளப்புணர்ச்சி அகத்திணை பயின் தலையாய இலக்கணமாதலின் காதலன் காதலி என்ற சொற்கள் பாலுறவுடையவர்களையே குறிக்கும். இதனால் காதற்சொல் உள்ளன்பை உணர்த்துவது எனவும் முதலாவதாகப் பாலுறவைக் காட்டிநிற்பது எனவும் அறியலாம்” என வ. சுப. மாணிக்கம் பாலுறவே அகத்திணைப் பாடல்களின் தலையாய உணர்வு என்கிறார் இந்தக் காதலுணர்வு சிறத்தற்குரிய பருவங்களே முதற் பொருளாகத் தொல்காப்பியரால் வரையறுத்து உரைக்கப்பட்டுள்ளன.

இளமைக் காலமே ஐந்திணைக்குக் காலமாகும். ஐந்திணையாவது காமம் அதலுவது, புணர்தல் பிரிதல் ஏன்? இருத்தல் இரங்கல் ஊடல் என்ற காமவினைகளைக் கொண்டது. ஐந்திணையிலக்கியத்திற்குக் காமக்காலமே, அக்காலச் சென்னியில் தோன்றும் காதல் விளைவுகளே பொருளாம்”ஏன வ. சுப. மாணிக்கம் அணித்தரமாய்க் கூறும் காலமே அகப்பாடலின் அடிப்படை இந்தக் காமம் சிறக்கும் காலமே இத்திணைக்கு முதற்பொருளாக வரையறுக்கப்பட்டுள்ளது. இதனால்தான் பருவகாலங்கள் பொழுதுகள் அனைத்தும் அனைத்துத் திணைகளுக்கும் பொதுவில் உரியனவாகக் கருதப்படுகின்றன.

நிலம் இயற்கையானது தனக்குரிய நிலைத்த இயல்புகளை உடையது இந்நிலம் வெவ்வேறுபட்ட பருவர் சூழல்களுக்கு ஏற்ற மாற்றங்களை உடையது. நிலமும் பொழுதும் இயைந்த இயைவில் ஏற்படும் சூழல் குறிப்பிட்ட தாவரங்கள் வளருவதற்கும் குறிப்பிட்டவகை

விலங்குகள் வாழ்வதற்குமான வாய்ப்பானதாக அமைகின்றது இந்த இயற்கைச் சூழலைப் பயன்கொண்டு மக்கள் தங்களுக்குரிய வாழ்வியல் ஆதாரங்களைக் கட்டமைத்துக்கொள்ளும் இயல்புடையவராக உள்ளனர். தெய்வம், யாழ். பறை போன்றவை அவ்வவ் நிலச்சூழலுக்கு ஏற்பப் படைத்துக் கொள்ளப்பட்டவையாக உள்ளன. அந்தந்த நில இயல்புக்கு ஏற்ற உணவுப்பொருட்களும் உற்பத்தி செய்துகொள்ளபட்டுள்ளன வாழ்க்கைக்கு ஆதாரமான இந்தப் பொருட்களே கருப்பொருட்களாக வரையறுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இந்தக் கருப்பொருட்களே மக்களின் வாழ்வியல் பாங்கை வெளிப்படுத்துவனவாக உள்ளன என்று வ. சுப. மாணிக்கம் கூறுவது நானிலத்தின் இயற்கைச் குழல் வாழ்வுக்கு ஆதாரமாக அமைவதைக் காட்டுகின்றது. இயற்கையாகக் கிடைத்தவற்றுடன் அவ்வந் நிலத்திற்கேற்ற விளைபொருட்களும் விளைத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இந்நிலையில் வேளாண்மை வளர்ந்தது சமுதாயத் தேவைக்கான உற்பத்தியைப் படைக்க வேளாண்மை பெரிதும் கைகொடுத்துள்ளது. இயற்கையாய்க் கிடைந்த உணவுப் பொருட்கள் வாழ்க்கை ஆதாரமாக இருந்ததைக் கபிலர் எடுத்துக்காட்டியுள்ளார் மூங்கில் நெய், பலாப்பழம், வள்ளிக் கிழங்கு தேன் எனும் நான்கும் உழவர் உழாது விளைந்தனவாக அவரால் குறிப்பிடப்பட்டுள்ளன கபிலரில் இந்தக் கூற்று வேளாண் உற்பத்திவழி பெறப்பட்ட உணவுப் பொருட்களும் குறிஞ்சியில் இருந்தன என்பதையும் குறிப்பாக வெளிப்படுத்தியுள்ளது. நானிலமக்களும் அந்தந்த நிலத்தின் இயற்கைச் சூழலுக்கு ஏற்ற விளைபொருட்களை உற்பத்தி செய்துகொண்டனர். இந்த உற்பத்திப் பொருட்களுடன் செயற்கையாகப் படைத்துக்கொள்ளப்பட்ட பொருட்களையும் உரையாசிரியர்கள் பட்டியலீட்டுக் காட்டியுள்ளனர்.

உரிப்பொருள் எனக் கூறி முதற்பொருளே திணைவகுப்பதில் முக்கியத்துவம் பெறுவதை எடுத்துக்காட்டியுள்ளார். திணைகளில் கலந்துவரும் இயல்பினது எனவே அது நில சிறப்புடையதல்ல என்கிறார், வகுப்பதற்கு முதன்மையானது என்றாய திணைப்பகுப்பில் அது மூன்றாவது இடத்தையே பெறுவதை அகப்பாடல் வெளிப்படுத்துகிறது.

முதலிற் கருவும் கருவின் உரிப்பொருளும் சிறந்து வரும் எனும் நச்சினார்க்கினியர். இளம்பூரணர் கருத்துக்கு முதலைவிட கருவும் கருவைவிட உரியும் சிறப்புறம் என்கிறார். இதே கருத்தை, சோமசுந்தரபாரதியாரும் குறிப்பிட்டுள்ளார்.அகப்பாட்டுக்களில் உரிப்பொருளே தலையாயதென்பதும் அதற்கு முதலுங் கருவும் சிறப்புதவு சார்ந்து வருபொருள்களா மென்பதும் என்பது அவர் விளக்கம் ”திணை துறை வகுக்க உரிப்பொருள் ஒன்றே சிறந்ததாகும்” என்ப ஆ.சிவலிங்கனார். கருத்து இவ்வாறு இருவேறு கருத்துகள் நிலவுகின்றன இளம்பூரணரும் பாவவர் பாலசுத்தரனாரும் முதற்பொருளுக்கே சிறப்பிடம் தந்துள்ளனர். அதுவே திணை வகுப்பதற்கு அடிப்படை என்றுள்ளனர்.

‘‘முறைசிறத்தல் என்பதற்கு இளம்பூரணர், பாலசுந்தரம் ஆகியோர் கொண்டது போல் மேலிருந்துகீழ் என்ற நிலையில் முப்பொருள்கள் சொல்லப்பட்ட வரிசைமுறையில் அவற்றிற்கான

சிறப்பைத் தருவதே முறை அவ்வாறு தருகையில் நிலமும் பொழுதும் எனப்பட்ட முதற்பொருளே முதன்மை பெறுகின்றது எனவே கருப்பொருள்களுக்கு ஆதாரமாக இருப்பதும் உரிப்பொருள் எனப்பெறும் ஒழுக்கம் நிகழ்வதற்கு ஆதாரமாக இருப்பதும் நிலமே ஆகும். ஆதலின் அதுவே திணைவகுந்தற்கு அடிப்படை எனக் கொள்வது பொருத்தம் உரிப்பொருள் இத்திணைக்கு இது என்னும் தனிஉரிமை இன்றிப் பொதுப்பட வருவது. ஆதலால் திணைவகுப்பில் அது முக்கியத்துவம் பெறுவதில்லை. எனும் கருத்து ஏற்புடையதாகவே உள்ளது'' என்ற ப.அருணாசலத்தின் கூற்று அகத்திணைப்பாடல்களுக்கான நிலை வகுப்பில் முதற்பொருளும் கருப்பொருளுமே இடம்பெற்று அடிப்படைகளாக இருப்பதை வெளிக்காட்டுகிறது. முக்கிய எல்லாப் பாடங்களிலும் முப்பொருளும் வரவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. உரிப்பொருளை மட்டுமே கொண்ட பாடல்களுக்குரிய திணை அதன் அடிப்படையில் மட்டுமே வகுக்கப்பட்டுள்ளது. இதனையும் ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.முதல் கருப்பொருள்களைச் சிறிதும் கூறாதே உரிப்பொருள் மட்டுமே கூறும் அகப்பாடல்களும் பல.காரணம் திணையாவது உரிப்பொருளே பற்றியது. முதலும் கருவுமோ அப்பொருட்குத் துணைமையாம்" அத்துணையே" எனும் வ.சு.ப மாணிக்கம் சுற்று உரிக்கு முக்கியத்துவம் தருபவர் கருத்தை வலியுறுத்துவதாக உள்ளது.

கைக்கிளையும் பெருந்திணையும்

**"காமஞ் சாலா இளமை யோன்வயின்**

**ஏமஞ் சால இடுப்பை எய்தி''**

நன்மையும் தீமையும் என்றிரு திறத்தால் தன்னொடு அகனொடுத் தருக்கிய புணர்த்தும் சொல்லெதிர் பெறாஅள் சொல்லி பின்புறல் புலவித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே என வரையறுத்து உரைக்கப்பெற்ற கைக்கிளை, காமப் எய்தாத இளம் பெண்ணிடம் ஆணுக்குத் தோன்றும். அவளிடமிருந்து மறுமொழி எதையும் பெறாதது. ஆணை மட்டுமே அடிப்படையாகக் கௌனீர் அவனிடம் மட்டுமே பிறப்பதாகக் கூறப்பட்டுள்ளது. ஒருபாற்படுத்திக் கூறியதன் காரணத்தைக் கைக்கிளையாகிய கண்ணன்றித் தலைவிகண் நிகழாதென்பது பெறப்படும் நிகழாமை புலனெறி ஒழுகலாறு இவ்வாறு உவரைந்த வழக்கென அறிக" கூறியுள்ளார் ச .பாலசுந்தரம் ஒருதலைக்காமம் எண்ணி திகழும் சாத்தியப்பாடு உண்டென்கின்ற கவிதைமரபாகப் பாடுதல் இல்லை.

காட்சி முதலியவற்றைக் கொள்ளாமல் காமக்குறிப்பாம் ஐந்திணை உரிப்பொருள் கைக்கிளை தணின் பாற்படுத்தித் தொல்காப்பியர் இவ்வந்திணையியலிலும் களவியலிலும் கூறுதலானும் களவு இருமருங்கொத்த அன்பினைத்திணையின் பாற்பட்டடங்குதலானும் அவற்றின் வேறுபட்ட பெருந்திணையைப் போலவே கைக்கிளையும் அவற்றுள் அடங்காத வேறு

திணையாய்ப் பிரித்துக் கூறப்படுதலானும் களவியலிற் கூறப்படும் எதுவும் அன்பின் ஐந்திணையன்றிக் கைக்கிளைத் திணை ஆகாமை ஒருதலை என்பது ச சோமசுந்தர பாரதியார் கருத்து ஆகக் களவியற் செய்திகள் அனைத்தும் அன்பின் ஐந்திணைக்கு உரியன, கைக்கிணைக்கோ பெருந்திணைக்கோ உரியன அல்ல என்பது இக்கூற்றின்வழி பெறப்படும் கருத்து காட்சி, ஐயம், அணிவு, குறிப்பறிதல் என நம்பியகப்பொருளாசிரியர் உரைத்ததைப் போல் காட்சியைத் தொல்காப்பியர் கைக்கிளையுள் அடக்கிக் கூறலின்மை என்பதும் இக்கூற்றால் வலியுறுத்தப்பட்டுள்ளது.''திணை என்பது ஒழுக்கம் இங்குப் "பெருந்திணை என்பது குறிப்பால் சிறிய ஒழுக்கம் எனப் பொருள்படும். கழிகாமத்தைச் சிறுமை. எனக் கூறும் மரபு "செருக்கும் சினமும் சிறுமையும்" எனும் காமக் குற்றத்தைச் சிறுமை அறிக அறிவுடை மக்கட்டன்மைக்கமையாத இப்புரையொழுக்கத்தைப் பெரிய ஒழுக்கம் என்றது, அது முழுக்கத்தொடு டாதென்பது குறிக்கும் அவையல் கிளவியாகும் .

பெருந்திணை ஆண் பெண் என்ற வேறுபாடின்றிப் பொதுநிலையில் கூறப்பட்டுள்ளது. "இந்நான்கு குறிப்புகளையும் பொதுப்படக் கூறியமையால் இருபாற்கும் ஏற்குமெனினும் மடற்றிறம் மகளிக்குவிக்கப்பட்டமையான் அ.ஃ.தொழிய ஏனையவை என விளக்கம் தாப்பட்டுள்ளது. ''மடலேறுதலும் விரும்பாரை வலிந்து ஆண்களுக்கு மட்டுமே உரியது" என்பது சோமசுந்தர பாரதியார் கருத்து "மடன்மாகூறு இடனுமா ருண்டே'' (தொல். பொ. கள 11) என மடலேறுவே எனச் சொல்வது களவியலில் தலைவன் செயற்பாட தோழியிற்கூட்டத்துப் பகுதியாய் இடம்பெற்றுள்ளதையும் இங்கே இணைந்து நோக்கவேண்டும்.

உரிப்பொருளல்லன மயங்கவு பெறுமே என்ற நூற்பாவில் நச்சினார்க்கினியர் எனக் கூறி கைக்கினையும் பெருந்திணையும் கலித்தொகையில் வந்துள்ளதை எடுத்துக்காட்டித் தனிநிலம் பெறா இவற்றின் பொதுத்தன்மையை விளக்கியுள்ளார். முன்னைய நான்கும் முன்னதற் கென்ப எனும் நூற்பா கைக்கிளைக்கு உரிய பிறிதொரு மான உணர்த்துவதாக உரையாசிரியர்களால் கருதப்பட்டுள்ளன. இதற்கு ''ஏறிய மடல்திறம் முதலான நான்கிற்கும் முற்பட்ட நிலைமை"என சோமசுந்தரபாரதியார். நச்சினார்க்கினியர் எஞ்சிய உரையாசிரியர்கள் பொருள் கூறியுள்ளனர்."அவையாவன ஏறாமடற்றிறம் இளமை தீராத்திற தேறுத லொழித்த காமத்து மிகாத் திறம், மிக்க காமத்தி மாறாகாத்திறம் என்பான ஏறாமடற்றிறம் வெளிப்பட இரத்தலாம், இளமை தீராத்திறம் நலம் பாராட்டலாம். தேறுதலொழிந்த தாமத்து மிகாத்திறம் புணராவிரக்கமாம் மிக்க காமத்தின் மாறாகாத்திறம் தயப்புறுத்தலாம் என முன்னைய நான்கையும் விளக்கியுள்ளார் இளம்பூரணர் இவரின் வழிநின்று, இந்தப் பெருந்திணைக் கூறுகளின் எதிர்மறைகளையே பாலசுந்தரமும் குறிப்பிட்டுள்ளார்.இவர் இந்நூற்பாவில் வரும் முன்னையது என்பது பாலையை நடுவுநிலைத்திணை என்றது போல் கைக்கிளையைக் குறிப்பிட ஆளப்பட்ட குறியீடு என்கிறார்.இதற்கு நச்சினார்க்கினியர் "இயற்கைப் புணர்ச்சிக்கு முன்னிகழ்ந்த காட்சியும் ஐயமுந்

தெரிதலும் தேறலும் என்ற குறிப்பு நான்கும் தற்காமத்துக்கு இன்றியமையாது வருதலின் முற்கூறிய சிறப்புடைக் கைக்கிளையாதற்கு உரியவென்று கூறுவர் ஆசிரியர்"என்கிறார்.இந்த உரை பொருத்தமற்றது. எனக்கூறும் ச சோமசுந்தரபாரதியார் "தொல்காப்பியர் காட்சி, ஐயம், தெளிவு என மூன்றே குறிக்கக் காண்கிறோம். நச்சினார்க்கினியர் கூறுமாறு காட்சி ஐயம் இரண்டைத் தவிரத் தெரிதல் தேறம் என வேறிரண்டைக் காட்டி நான்கு பகுதிகள் இயற்கைப் புணர்ச்சிக்கும் தலைவன் தலைவியர் இருவரின் உள்ள வுடம்பாடு அறிய நாட்டம் இரண்டும் கூட்டியுரைக்கும் குறிப்புரைக்கும் முன் நிகழ்வனவாகத் தொல்காப்பியர் மூன்றே இன்றியமையா நற்காம முற்குறிப்பாகக் கூறினாராதலால் அவற்றை இங்குக் கைக்கிளைக் குறிப்பாமெனச் சுட்ட நினைப்பின் முன்னைய மூன்று மென்னாது நான்கும் என முறையிறந்து கூறியிரார் ஈண்டு நான்கெனத் தெளியக் கூறுதலால் இந்நான்கும் பின் களவியலிற் பேசப்படும். மூன்றல்லாத வேறாதல் வெளிப்படை"எனக் குறிப்பிட்டுள்ளார். தெரிதல் என்ற ஒன்றைக் குறிப்பிடவில்லை. எனவே தொல்காப்பியர் நற்காமக் குறிப்பாகச் சுட்டுவன மூன்றே அவை களவியலில் ஐந்திணைக்காதலின் முற்குறிப்புகளாகக் கூறப்பட்டுள்ளன அவற்றை இங்குக் கைக்கிளையில் அடக்கிக் கூறுவது முறையல்ல எனவே அவை அல்லாதவற்றையே இங்குக் கைக்கிளைக் குறிப்பாகக் குறிப்பிட்டுள்ளார்.

## களவியலும் கற்பியலும்

களவியல், கற்பியல் எனும் இரு இயல்களும் எழுதிணைகளுக்கான பொது இயல்புகளைப் பேசுகின்றன. அகத்திணையியலின் தொடர்ச்சியாய் நடுவணைந்திணைகளுக்கான பல்வேறு பொதுநிலைச் செயற்பாடுகளையும், குறிப்பிட்ட திணை சார்ந்த செயற்பாடுகளையும் விவரிப்பனவாக இவ்விரு இயல்களும் அமைக்கப்பட்டுள்ளன. எனவே இவ்விரு இயல்கள்தான்" களவு, கற்பு எனும் இருவகைச் கைகோள்களில் இடம்பெறும் அகத்திணை மாந்தர்களின் ஒழுகலாறுகளை முழுமையாகப் பேசுவனவாக அமைந்துள்ளன. எனவே இவை அகத்திணைக் கோட்பாட்டில் முக்கிய இடம் பெறத்தக்கனவாக உள்ளன.

## களவியல்

களவு என்பதற்கு "இருமுது குரவரான் கொடை பெதிர்ந்த தலைவியை அவர் கொடுப்பக் கொள்ளாது. இருவருங் கரந்த உள்ளத்தோடு எதிர்ப்பட்டுப் புணர்ந்த களவாதலின் இது பிறர்க்குரிய பொருளை மறையிற்கொள்ளுங் களவாயிற்று. இது வேதத்தை மறைநூல் என்றாற்போலக் கொள்" என விளக்கம் தருகின்றார் நச்சினார்க்கினியர்.பிறர் பொருளை அவர் அறியாமல் எடுத்துக்கொள்ளும் களவு (திருட்டு) என்பதைப் போலன்றி மனமொத்த இருவரும் தத்தம் தாய்தந்தையர் அறியாதபடி மறைந்து நடக்கும் நடத்தை என்பதால் இது களவு எனப்பட்டது என்கிறார் நச்சினார்க்கினியர் எனவே களவு என்பதற்குப் பிறர் அறியாதபடி மறைந்து

ஒழுகும் ஒழுக்கம் என்பது பொருளாகின்றது.களவு என்பது காதலர் இருவர் தாமே அன்புகொண்டு பிறர் அறியாமல் காதலிக்கும் ஒழுக்கம் என்கிறது. தொல்காப்பியச் சிறப்பகராதி ‘‘மறைந்த ஒழுக்கம் என்று அவர் கனவைக் கூறுவதைக் கொண்டு பெற்றோர்கள் அறியாமல் காதலர்களாக ஒழுகுவது எனக் கூறலாம்” என்கிறார் ப. அருணாசலம்.

**‘‘மறைந்த வொழுக்கத் தோரையும் நாளும்**

**துறந்த வொழுக்கம் கிழவோற் கில்லை’’**

எனும் நூற்பாவில் தொல்காப்பியரே ”மறைந்தவொழுக்கம்” எனக் களவைக் குறிப்பிட்டுள்ளார் இதற்குக் “களவொழுக்கம்” என உரை கூறப்பட்டுள்ளது. கைகோள் பற்றிய செய்யுளியலில் “காமப் புணர்ச்சியும்’’ எனும் நூற்பாவில் வரும் “மறையென மொழிதல் மறையோராறே“ எனும் வரியில் வரும் மறை என்பதற்கு இளம்பூரணர் ‘‘இதனுள் களவென்னாது மறை என்றதனான் இது தீமை பயக்கும் களவன்மை கொள்கிறது எனக் குறிப்பிட்டுள்ளார். இதனால் மறை என்பதும் களவு என்பதும் ஒன்றே எனவே பிறர் அறியாதவாறு ஒழுகும் காதல் ஒழுக்கமே ஈண்டுக் களவு எனப்பட்டுள்ளது. இதனால் மறை என்பதும் களவு என்பதும் ஒன்றே எனவே பிறர் அறியாதவாறு ஒழுகும் காதல் ஒழுக்கமே களவு எனக் கூறப்பட்டுள்ளது.

**‘‘காமக்கூட்டத் தனிமையிற் பொயிதலின்**

**தாமே தூதுவராதலு முரித்தே’’(28)**

எனும் களவியல் நூற்பாவில் இச்சொல்லைக் கையாண்டுள்ளார் தொல்காப்பியர் “காமத் திணையில் கண்ணின்ற வரூஉம்“எனும் நூற்பாவில் இதுவே காமத்திணை எனவும் குறிப்பிடப்பட்டு இதற்குக் காமவொழுக்கம் எனப் பொருள் கூறப்பட்டுள்ளது.

**‘‘இன்பமும் பொருளும் அறனு மென்றாங்கு**

**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**

**காமக்கூட்டர் காணுங்காலை**

**மறையோர் தேயத்து மன்றல் எட்டனும்**

**துறையமை நல்வாழ்த்துணைமையோர் இயல்பே’’(1)**

எனும் களவியலின் முதல் நூற்பாவில் காமக்கூட்டம் எனப்பதிம் கனவை வேதம் கூறும் பிரமம் முதலான மணங்கள் எட்டனுள் கந்தருவத்தோடு ஒப்புமைப்படுத்திக் கூறியுள்ளார்.தொல்காப்பியர்காந்தருவமானது கந்தருவ குமாரருங் கன்னியருத்தம்னுன் எதிர்ப்பட்டுக் கண்டு இயைந்தது போலத் தலைவனுத்தலைவியும் எதிர்ப்பட்டுப் புணர்வது என்பது நச்சினார்க்கினியரின் விளக்கம் இந்தக் களவை விளக்கும் முகத்தான் ஒத்த தலைவனும் தலைவியும் பாலது ஆணையாம் கூடுவதாகக் கூறும் அடுத்த நூற்பாவில்

**“ஒன்றே ஈறே என்றிரு பால்வயின்**

**ஒன்றி உயர்ந்த பால்தாணையின்**

**ஒத்த கிழவனும் கிழத்தியுங் காண்ப**

**மிக்கோன் ஆயினும் கடிவரை யின்றே”(களவியல்:2)**

எனக் குறிப்பிட்டுள்ளார் தொல்காப்பியர் இது பிறர் அறியாது அறைந்து ஒழுகும் ஒழுக்கம் என்பதை வெளிப்படுத்தியுள்ளார் தொல்காப்பியர் களவு இருவேறு நிலைகளில் திருமணமாக மாறும் என்பதை இங்குக் குறிப்பிட்டுள்ளார் .களவு வெளிப்பட்டபின் வரைதல், வெளிப்பாடமுன் வரைதல் என்பன அவை இங்கு ஆளப்பட்டுள்ள வெளிப்படுதல் வெளிப்படாமை என்ற சொற்களே களவு பிறர் அறியாத ஒழுக்கம் என்பதை வெளிப்படுத்துகின்றன இதை அடுத்த நூற்பாவில்

**“வெளிப்படைதானே கற்பினோடுஒப்பினும்**

**ஞாங்கர்க்கிளந்த மூன்று பொருளாக…”(50)**

என்று வெளிப்பட வரைதல் கற்பினோடு ஒத்தது என்றாகும் எனக் குறிப்பிடும் குறிப்பு களவு, கற்பு எனும் இரண்டின் வழிவந்த திருமணத்தையும் வேறுபடுத்தி காட்டும் இயல்பினதாக உள்ளது. இதனால்தான் கற்பியலில் பெற்றோர் கொடுக்கப் கொள்வதே கற்பு எனப்பட்டுள்ளது. இதனோடு, தாமே கூடி வரைந்துகொள்ளும் களவு வழிப்பட்ட மணமுறை ஒத்தது.அல்ல எனக்கொள்ளப்பட்டுள்ளது. மறையோர் தேளத்து மன்றலுடன் இணைத்துப் பேசப்பெறும் களவு பற்றிய முதல் நூற்பா குறித்து எழுதுகையில் களவு பற்றிய இந்நூற்பா, பிறிதோர் உண்மையினையும் புலப்படுத்துகிறது அந்நாளைய அறிஞர்உலகம் வைதிக மணங்களைப் பற்றிய தெளிவான அறிவைப் பெற்றிருந்தது. அவற்றை ஏற்றுப் பாராட்டவும் செய்தது என்பதே அவ்வுணமை பண்டைத் தமிழர்களின் களவுமணத்தை அவ்வறிஞர் கூட்டம் இகழ்ந்துவிடக் கூடாதே என்ற குறிப்பும் இந்நூற்பாவில் அடங்கிய கிடப்பதாகத் தோன்றுகிறது என, ப. அருணாசலம் குறிப்பிடுவதும் கவனிக்கத்தக்கதாக உள்ளது எனவே களவு என்பது தனித்தன்மை

வாய்ந்ததாகக் கற்பு எனப்படும் கைகோளோடு இணையாக வைத்து கருதப்படாததாக இருந்ததைத் தொல்காப்பிய இயல்பகுப்பே தெளிவுபடுத்துகிறது வெளிப்படை சுற்போடு ஒத்தது. என்றாலும் எனும் தொல்காப்பியர் கூற்றும் இதை வெளிப்படுத்துகிறது. களவின் வழிவந்த கற்பு, களவின் வழிவாராக் கற்பு எனும் இரண்டும் வெவ்வேறு என்பதைக் கற்பியலிலும் தொல்காப்பியர் வெளிப்படுத்தியுள்ளார்.

**“கொடுப்போ ரின்றியும் கரணம் உண்டே.**

**புணர்ந்துடன் போகிய காலையான”**(2)

எனும் நூற்பா உடன்போக்குத்திருமணம் பற்றியது காமக் கூட்டம் எனப்பட்ட களவுக்காதலர்களாகிய தலைவனும் தலைவியும் உடன்போக்கை மேற்கொண்டு மணம் செய்ற கொண்டாலும் அங்கும் பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்த கரணம் உண்டு என்பதை இந்நூற்பா தெளிப்படுத்துகிறது.

**“பூண்டு வருவதும் ஆமென்றவாது இனி**

**ஆண்டு வரையாது மீண்டுவந்து**

**கொடுப்பக் கோடலும் உளதேய்**

**அது மேற்கூறியதன்கண் அடக்கும்**

**இனிப் போயவழிக் கற்புப் பூண்டவே**

**காரணம் என்பாரும் உளர்”**

எனவே கற்பிற்குக் கரணம் ஒருதலையாயிற்று எனக் குறிப்பிடுகின்றார் நச்சினார்க்கினியர். பெற்றோர் உடன்படாத நிலையில் உடன்போய் மணந்துகொள்வதைப் பெற்றோர் கொடுப்பக் கொண்டு மணத்தலொடு ஒன்றாய்க் கருகாத நிலையை நச்சினார்க்கினியரின் இவ்விளக்கம் வெளிப்படுத்துகிறது. உடன்போய் மீண்டுவந்து மணத்தல் கொடுப்பக் கொள்வதோடு ஒத்தது என்று நச்சினார்க்கினியர் குறிப்பிட்டிருந்தாலும் தொல்காப்பிய வரையறைக்கு அது பொருந்தாது. ஏனெனில் கொடுப்பக்கொள்ளும் திருமணத்தை அவர் தனிநிலையில் வைத்தே பேசுகிறார்.

**“வறையெளிப் படுதலும் தயரிர் பெறுகுதலும்**

**இவைமுதனாகிய வினெறி திரியாது**

…பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படும்''

எனும் நூற்பாவில் கற்பு. மறை எனப்படும் களவு வழிப்பட்டது தமர்தரக் கொள்வதாகிய கற்பு வயப்பட்டது என இரண்டாகப் பிரித்தே கூறப்பட்டுள்ளது. கைகோளைக் களவு கற்பு என இரண்டாகப் பிரிக்கும் அவர் கற்பையும் அவ்வீரண்டின் வழிப்பட்டதாக இருவேறுபட்டதாகக் கொண்டுள்ளார்.வேட்கை யொருதலை யுள்ளுதல் மெலிதல் ஆக்கஞ் செப்பல் நாணுரை இறந்தல் நோக்குவ எல்லாம் அவையே போறல் தம்பக்கஞ் சாக்காடு என்றுர் சிறப்புடை வாயினவை களவென் மொழிப எனும் நூற்பா களவின் கூறுகளைத் தொகுத்துரைத்துள்ளது. இதற்கான கருத்துரையில் ''இது முதலாகக் களவிலக்கணங் கூறும். இதனான் இயற்கைப்புணர்ச்சி முதற் களவு வெளிப் இத்துணையும் இருவர்க்கும் உளவாம் இலக்கணம் இல்லொன்பதுமெனப் பொதுவிலக்கணங் கூறுகின்றார்'' எனக் குறிப்பிட்டுள்ளார் நச்சினார்க்கினியர்.

சாக்காடு என்பதற்கு மடவேறுதலும் வரைபாய்தலும் போல்வன என்பது பொருளாகக் கூறப்பட்டுள்ளது. எனப்படும் கிளவி பற்றி குறிப்பிடுகையில் அவத்தைகள்.''இவ் அவத்தைகளை வெளிப்படுத்தும் நிலையில் எல்லாம். அகப்பாடல்கள் அமையலாம். என்பதே தொல்காப்பியர் கருத்தாதல் வேண்டும் இவ்வனத்தைகள் வடமொழி நூற்களிலும் காண்பன இவற்றை விளக்கும் அறிஞர் ஒருவர் இவை வாத்சாயனர் காமகுத்திரத்தால் அறிலாகும் என்பர் தொல்காப்பியர் நூற்பா அடிப்படையில் பாதர் கூறும் கருத்துக்களை எதிரொலிப்பதாக வேறுசிலர் கூறுவர் தொல்காப்பியர் ஆவதற்கும் இவர்கள் கூறுவதற்கும் சிறிது வேறுபாடிருக்கலாம் அதனைக் கொண்டே இவ்வீரண்டும் இருவேறு அடிப்படையில் எழுந்தவை என்று கூறிவிட முடியாது. இந்திய அறிஞர்களின் பொதுக் கருத்துக்களாகவே இவற்றைக் கொள்ளவேண்டும் இவை தமிழ் வழக்கே என நிறுவி முடியாது.எனக் கருத்துரைத்துள்ளார் ப .அருணாசலம்.வேட்கை ஒருதலை எனும் நூற்பா பத்து அவத்தைகளைப் பேசுவது இந்தப் பத்து அவத்தைகளும் மொழிப எனப் பிறர் கருத்தாகக் குறிப்பிடப்பட்டிருப்பதால் இவ் அவத்தைகள் தொல்காப்பியர் தாமே படைத்துக் கொண்டன அல்ல என்பது தெளிவு. இவற்றை தசாவஸ்தை என்பர் வடநூலார் இந்த அவத்தைகள் வாட்ஸாயாயனரது காமசூத்திரத்தில் ஐந்தாம் அத்தியாயத்தில் முதல் அத்தியாயத்தில் காணப்படுகின்றன. இக்காமச்சூத்திரம் கி.பி 4ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தென்பது வடமொழியாராய்ச்சியாளர் கருத்து தொல்காப்பியர் காலமாக நாம் மேலே கண்ட முடிவு வலியுறுதல் காணலாம் என்கிறார்.எஸ் வையாபுரிப்பிள்ளை இவ்விருவர் கருத்துகளும், இந்திய மரபை நிலைநாட்டல், தொல்காப்பிய நிர்ணயத்தை நிலைநாட்டல் என்ற எழுத்தளவாக உள்ளன. இவற்றுடன் இவ்விரு ஆய்வாளரும் கால வடமொழி மரபுச் சார்பையும் வெளிப்படுத்தியுள்ளனர். அடிப்படைகளில் இவர்கள் கருத்து எதுவாயினும் தொல்காப்பியர் களவை இந்நூற்பாவில் உரைத்துள்ளார் எனக் கொள்ளலாம். இவ்வாறு களவியலில் ஒன்பது வகை அவத்தைகள் காட்சியோடு சேர்த்துப் பத்து பற்றிப் பேசும் தொல்காப்பியர் செய்யுளியலில்

**“காப்புணர்ச்சிய மிடந்தளைப் படலூம்**

**பாங்கொடு தோழியிற் புணர்வுயென்…”**

எனும் நுற்பாவில் களவு நிகழ்வுறும் களங்கள் நான்கினைக் குறிப்பிட்டுள்ளார். இதை இங்குத் தொல்காப்பியர் மறையோர் ஆறு என்று வேதநெறியுடனேயே இணைத்துக் காட்டியுள்ளார்.களவைக் கந்தருவமாகக் காட்டும் அவர்தம் பின் வெளிப்பாடே இது களவியலில் இடம்பெறும் நூற்பாக்களும் முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியனவாக உள்ளன. முதலாவது அத்தியாயத்தீல் காட்டப்பெறும். பன்னிரண்டும். பிரமம். பிரசாபத்தியம் ஆகிடத் தெய்வம் எனவும் முல்லை. குறிஞ்சி, பாலை மருதம் நெய்தம் எனவும் அகரம் இராக்கதம் பேய் எனவும் பன்னிரண்டாம் என நச்சினார்க்கினியரால் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தப் பன்னிரண்டில் அடங்கும் முறைகளும் அடுத்த நூற்பாவில் பாகுபடுத்தி உரைக்கப்பட்டுள்ளன. காந்தருவம் எனப்படும் களவுமணமே முதலான ஐந்தாக விரித்துக் கூறப்பட்டுள்ளது இந்த இந்து எஞ்சிய ஏழொடுங் கூட்டிப் பன்னிரண்டு எனப்பட்டுள்ளது. இங்கு வாழோர் கட்டம் எனப்படும் சுந்தருவ மணமுறையை நிவந்தோறும் விரித்து ஐந்தாகக் கூறும் சானியாரோர் கூட்ட அத்திணையை இரண்டாகப்பாடுதற்கான செய்யுட்களங்களையே இந்நூற்பாவில் உரைத்துள்ளார் எனக் கொள்ளலாம்.

இவ்வாறு களவியலில் ஒன்பது வகை அவத்தைகள் காட்சியோடு சேர்த்துப் பத்து பற்றிப் தொல்காப்பியர் செய்யுளியலில்

**“காப்புணர்ச்சிய மிடத்தலைப் படறும்**

**பாங்கொடு தோழியிற் புணர்பென்**

**தாங்கதால் வகையிது படைத்த சார்வொடு…”**

பறையென் பொழிதன் மறையோ “எனும் நூற்பாவில் களவு நிகழ்வுறும் களங்கள் நான்கிளைக் குறிப்பிட்டுள்ளார். இதை இங்குத் தொல்காப்பியர் “மறையோர் ஆறு” என்று வேதநெறியுடனேயே இணைத்துக் காட்டியுள்ளார். காந்தருவமாகக் காட்டும் அவர்தம் மரபின் வெளிப்பாடே இது களவியலில் இடம்பெறும்

**“பாங்கன் நிமித்தம் பன்னிரண்டென்ப”**

எனும் நூற்பா முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியனவாக உள்ளன.

யாழோர்கூட்டத்துள் ஐந்திணையுமாயிற் பாடலூட் பயின்ற வகையானே முதன் ஒரு உரிப்பொருள் வரையறையற்ற முறை சிறந்து வருதலும் பெயர்கொளப் பெறாமையும் உடையவன்றே அவ்வாறன்றி ஈண்டுக் கொள்கின்ற யாழோ கூட்டத்து ஆந்திணையுமாயின் அவ்வந்நிலத் தியல்பானும் பிறபாடையொழுக்கத்தானும் வேறுபட்ட வேறுபாடு பற்றியும் கட்டியொருவர்ப் பெயர் கொடுத்தும் வழங்குகின்ற உலகியலான் எல்லாரையும் இடைநின்று புணர்ப்பாருள்வழி அவ்வவ் நிமித்தங்களும் வேறுவேறாகி வரும் பாங்கன் நிமித்தங்களையுடைய எனப்பட்டன எனக் குறிப்பிட்டு யாழோர் கூட்டத்து ஐந்திணையை முதல்கரு உரியுடன் பெயர் கட்டாமல் முறைசிறந்து வருவது பெயர்கூட்டி வருவது என இரண்டாய் வகைப்படுத்திக் காட்டியுள்ளார்.

அகத்திணையியலுள் கூறப்படும் கைக்கிளை பெருந்திணைகள் எண்வகை மணப் பாகுபாடுகளை உடையனவாகக் குறிப்பிடப்படும் களவியலைக் கைக்கிளை பெருந்திணைகளோடு இணைத்துக் கூறாமல் வேறுபடக் கருதி இரண்டையும் வெவ்வேறாகக் காட்டியுள்ளார். நச்சினார்க்கினியர். அங்குச் சொல்லப்பட்ட கைக்கிளை சிறப்புடையது, இங்குச் சொல்லப்பட்ட சிறப்பில்லாதது, இதேபோல் அகத்திணையியலில் சொல்லப்பட்ட பெருந்திணை சிறப்புடையது களவியலில் பட்ட பெருந்திணை சிறப்பற்றது எனக் காட்டியுள்ளார். கந்தருவம் எனப்படும் களவு குறிஞ்சி முதலான ஐந்திணையிலும் வரும் என்கின்றது. இவ்வகையில் குறிஞ்சிக்களவு, முல்லைக்களவு என்றாற் போன்று களவு ஐந்திணையிலும் வரும் என்பதே கருத்து.

”இவையும் ஒருவன் ஒருத்தி யெதிர்நின்று உடம் படுத்தலொப்புகை யுடைய கெடலருஞ் சிறப்பெனவே முதல் கரு உரிப்பொருளானுங் களவென்னுங் கைகோளானும் பாங்கியுணர்த லின்மையானும் இலக்கணங் குறைப் பட்டதேனுஞ் சுட்டியொருவர்ப் பெயர்கொள்ளப்பட்டுக் கற்பியலாகிய இல்வாழ்க்கையும் பெற்றுவருதற் சிறப்புடைய இவையும் ஐந்நிலம் பெறுதலேயன்றி யென்றானாம் எனவும் வகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு கைக்கிளை முதலான எழுதிணையையும் அகத்திணையியல் களவியல் எனும் இரண்டன் அடிப்படையில் இருவேறு வகைப்பட்டனவாக நச்சினார்க்கினியர் வகைப்படுத்திக் காட்டியுள்ளார். அங்குக் கொள்ளப்பட்டுள்ள இலக்கண வரையறைகளான **‘‘சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறார்“** என்பன போன்றவற்றை இவை மீறி வரும் என்பது நச்சினார்க்கினியர் கருத்து. இதற்கு எங்குமே அவர் பாடல் சான்றுகளைக் காட்டவில்லை எனவே இவர் உரையின் பொருத்தப்பாடு மேலாய்வுக்கு உட்பட்டதாகவே உள்ளது. மேலும் ”இது புலநெறியன்றி உலகியலாகலின் உலகியலாற் பாலை நிலனும் ஆண்டு வாழ்வார்க்கு மன்றலும் உளதாகலிற் பாலையுங் கூறினார். எனவே ஐம்புலத்து வாழ்வார் மணமுஞ் செய்யுளுட் பாடியக்கால் இழுக்கின்றென்றார்” எனும் நச்சினார்க்கினியர் கூற்று எந்த அளவிற்குப் பொருத்தப்பாடு உடையது என்பது புலனாகவில்லை. பாலைநிலம் குடியிருப்பை உடையது. அங்கு வாழ்வார்க்கும் மணம் உண்டு, இது உலகியல் பற்றியது என்பதெல்லாம் தொல்காப்பிய

அகத்திணைக் கோட்பாட்டுக்குப் பொருத்தமானதாகப் படவில்லை. பாலை என்பதோர் நிலம் தமிழகத்தில் இல்லை. கோடையால் நிலை மாறிய நிலப்பகுதியாகிய பாலை செல்லும் வழியே அன்றி வாழ்விடப் பகுதி அல்ல எனவே அங்கும் திருமணம் உண்டென்பது பொருத்தமாக இல்லை.இளம்பூரணர் பாங்கன் நிமித்தம் பன்னிரண்டு என்பதற்கு ”பிரமம் முதலிய நான்கும் கந்தருவப்பகுதியாகிய களவும் உடன்போக்கும் அதன்கண் கற்பின் பகுதியாகிய இற்கிழத்தியும் காமக்கிழத்தியும் காதற்பரத்தையும் அசுரம் முதலாகிய மூன்றுமெள இவை” எனப் பொருள் கூறியுள்ளார். மேலும் நிமித்தம் என்பதற்கு “நிமித்தமாகக் கூடுங் கூட்டம் எனக் கூறியுள்ளார். இவர் களவு முதல் காதற்பரத்தை கூறாக உள்ள ஐந்தையே இடவகையான் ஐந்து வகைப்படும் காந்தருவநெறி என்கிறார் இது ஒத்த காதலர்களுக்கு உரியது எனவும் குறிப்பிடுகின்றார்.

பாலசுந்தரனார் பாங்கன்நிமித்தம் பற்றிய நூற்பாவை இதற்கு முன் உள்ள தலைவன் கூற்று பற்றிய நூற்பாவோடு இணைத்துப் பிரிந்தனழிக் கலங்கல் முதல் மடன்மாறுதல் வரையிலான பன்னிரண்டு கிளவிகளையும் பாங்கன்நிமித்தம் எனக்கொண்டுள்ளார். இந்தப் பன்னிரண்டைத்தான் முன்னைய மூன்றும் கைக்கிளைக்கு பின்னைய நான்கும் பெருந்திணைக்கு இடையில் நின்ற ஐந்தும் ஐந்திணைகளுக்கு எனப் பகுத்துரைத்துள்ளார்.இது நச்சினார்க்கினியரும் இளம்பூரணரும் கொண்ட உரைக்கு முற்றிலும் மாறாகத் தொல்காப்பியர் கூறும் நூற்பாகளையே பாங்கன் கூட்டத்துக்குப் பகுத்துரைக்கும் இயல்புடையதாக இருப்பது சற்றுப் பொருத்தமானதாக உள்ளது.தமிழ் மொழியில் தொல்காப்பித்திற்கு அடுத்து வந்துள்ள இலக்கண நூல்களில் நம்பியகப் பொருளும் ஒன்று, இந்நூலில் உள்ள களவியல் பகுதியோடு ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழர்களின் களவியல் சிந்தனை எந்த அளவில் தொல்காப்பியர் காலத்தில் இருந்து வந்துள்ளது என்பது புலப்படும்.

## தொல்காப்பிய அகம்

தொல்காப்பியக் களவியல் பகுதியில், களவு ஒழுக்கத்தின் இயல்பு, காதல் முன்னைய நல்வினையால் விளைவது முதற்சந்திப்பின் விளைவு, மானுடமகளே எனத்துணிதல், தலைவன்கூற்று, தலைவன் தோழியிடம் பேசுதல், களவுப்புணர்ச்சிக்கு நிமித்தக் காரணங்கள், கைக்கிளைப் பெருந்திணை, அன்பின் ஐந்திணைக்கு உரிய உணர்வு நிலைகள், களவு ஒழுக்கத்தில் தலைவன் கூற்றுக்கள், தலைவியின் வேட்கைக் குறிப்பு, கண்களே உணர்த்தும் மகளிர் அல்ல நடையில் பேசுதல், களவுக் காலத்தில் தலைவி கூற்றுக்களும் மெய்ப்பாடுகளும், தலைவி சினந்து பேசும் இடம், தோழி கூற்று, செவிலிக் கூற்று, நற்றாய் கூற்று, ஐயம் தெளிதல் காதலர்கள் தாமே சந்தித்துக் கொள்ளுதல், தலைவி குறியிடம் கூறுதல் தோழியும் களஞ்சுட்டல், தாய் என்பது செவிலியைக் குறித்தல் தோழி செவிலியின் மகள், தோழி உதவுங்காலம்,

தோழியின் உதவி பகற்குறி, இரவுக்குறி இடங்கள், தந்தை தமையன் அறிதல், இருவகைத் திருமணம் போன்ற நிகழ்வுகள் தொல்காப்பியரின் களவியல் பகுதியில் இடம்பெற்றுள்ளன.

இன்பம், பொருள், அறம் மூன்றும் இணைந்தது வாழ்க்கை. அன்பின் வழியில் அமையும் இதனை ஐந்து திணையொழுக்கங்களாக எண்ணிப் பார்ப்பது தமிழர் நெறி. இதனைக் காமக்கூட்டம் என்பர். இது யாழோர் கூட்டம் எனப்படுகிறது. ஊழ்வினையால் காதல் காட்சி நிகழும். உண்டு. காதல் நினைவுகள் ஆசை மிகுதல், ஒருவர் மட்டும் நினைத்தல், நினைவால் உடலும் உள்ளமும் மெலிதல், இன்னது செய்தால் இன்னது நேருமோ என எண்ணுதல், நாணம் வரம்பைக் கடத்தல், பார்க்கும் பொருள்களிலெல்லாம் காதலர் நினைவே வருதல், தன்னையே மறந்து பித்தாதல், எண்ணச் சோர்வால் மயங்கி விழுதல், காதல் நிறைவேறாதபோது சாகத் துணிதல் முதலான நினைவலைகள் களவுக் காலத்தில் காதலர் உள்ளத்தில் மோதிக்கொண்டே இருக்கும். களவியல் செய்திகளைக் “காதலர் செய்திகள்“ எனப் புரிந்துகொள்ள வேண்டும். காதலன் காதலியிடம் பேச்சு கொடுத்தல், தன் சொல்லுக்கு அவளைக் கட்டுப்படுமாறு செய்தல், கட்டுப்பட்டால் இன்ன நன்மை என விளக்குதல், அவளது புன்னகையின் பொருளை உணர்ந்துகொள்ளுதல், அவளை நினைத்துத் தான் மெலிவதை உரைத்தல், அவள் இல்லாவிட்டால் தனக்கு நிகழப்போகும் தீங்கை எடுத்துரைத்தல், தன் கைவிடாத் தன்மையை அவளுக்குத் தெளிவுபடுத்துதல் முதலான பேச்சுகளால் காதலன் காதலியை வயப்படுவான்.

காதலன் காதலியைத் தொட்டுக் காதலைப் பயிலுதல்

காதலியைத் தொடுதல். அவள் அழகைப் பொய்யாகப் பாராட்டுதல். அவள் ஒப்புதலுடன் அணைத்துக்கொள்ளல். அவளிடம் வருவதற்குத் தனக்கு நேர்ந்த இடையூறுகளை எடுத்துரைத்தல். அவள் உறவு கிடைக்கவில்லையே எனப் பெருமூச்சு விடுதல். உடலுறவு கொள்ள முயல்தல், காதலியைத் துய்த்தல், ஆசை அடங்காமை என்னும் இவை எட்டும் ஒரு வகை.

பெற்றவழி மகிழ்தல், அவள் பிரிந்து செல்லும்போது கலங்குதல், நிகழவேண்டியதை எடுத்துரைத்தல், தன்னைக் குறைகூறும் பாங்கனுக்கு எடுத்துரைத்தல், பாங்கன் உதவியை வலியுறுத்தல், தன் ஊர், பேர், அவள் இல்லாவிட்டால் தனக்கு நேரும் கெடுதி முதலானவற்றைக் கூறித் தோழியின் உதவியை நாடல், தோழி தன் தலைவியை இணங்கச்செய்தல், தலைவி இணங்காவிட்டால் மீண்டும் மீண்டும் கெஞ்சுதல், இணங்கியபின் அரவணைத்தல், அவள் தயங்கும்போது தனக்கு நேரும் கெடுதியையும், தன் பெருமைகளை எடுத்துரைத்தல்,பெறுதல் பற்றி நினைவூட்டுதல் முதலானவை அப்போது பேசப்படும். செல்லும் வழியில் நிகழும் சிலவும் உண்டு

கைக்கிளை, பெருந்திணை

உறவு 4 என்றும், மண உறவுகளில் ஏழு வகைகளைப் பகுத்துக் காட்டி, யாழோர் கூட்டம் 5 என விரித்துரைக்கிறார்..

சில முறைமைகள்

1.கிழவோள் (அவள்) தன்னால் அளக்கமுடியாத அறிவினை உடையவள் எனக் கிழவோன் (அவன்) ஐயுற்று உரையாடுவான்.

2.அவன்முன் அவள் தன் விருப்பத்தைச் சொல்லமாட்டாள். எனினும் அவளது உடலில் நீர் போல வெளிப்படும்.

3.அவன் தனக்குத் தானே தூதுவனாகி அவளிடம் செல்வதும் உண்டு.

4.அவன் எங்கு வேண்டுமானாலும் வரமுடியும் ஆதலால் கூடும் இடத்தை அவள்தான் சொல்வாள்.

5.தோழி தூதும் உண்டு.

6.அவள் தோழி இல்லாமல் தனிமையில் மூன்று நாளுக்கு மேல் செல்லமாட்டாள்.

7.அவள் மட்டுந்தான் தோழி துணையுடன் வருவாள்.

8.அவளுக்குத் தாய் எனச் சொல்லப்படுபவள் அவளைப் பேணி வளர்க்கும் செவிலித்தாயே. (பெற்றவள் நற்றாய்)

9.அவளுக்குத் தோழி அவளை வளர்க்கும் செவிலியின் மகள்.

10.கேட்டறிதலும் உண்டு.

11.தோழியும் செவிலியும் அவன்-அவள் உறவை அறிதலை ‘மதியுடம்படுதல்’ என்பர். இது முன்னுற உணர்தல், குறையுற உணர்தல், இருவரும் இருக்கும்போது உறுதியாக உணர்தல் என மூன்று வகைப்படும்.

12.தெளிவாக உணர்ந்த பின்தான் தோழியும் செவிலியும் செயல்படுவர்.

13.அவள் முயலும்பொது அவர்கள் உதவுவர்.

14.இனி கூடுவது பகலிலா இரவிலா என அவள் குறிப்பாள்.

15.இரவுக்குறி மனை எல்லைக்குள் இருக்கும்.

16.பகற்குறி இல்லத்துக்குப் புறத்தே அவள் அறிந்த இடமாக இருக்கும்.

17.அவன் வந்தான் என்று அவள் அல்ல-குறி’ப் படுதலும் உண்டு.

18.குறியிடத்தில் கூடுவதும் களவொழுக்கம்.

19.குறிப்பிட்ட நேரம், குறிப்பிட்ட நாள் அல்லாமல் அவனும் அவளும் கூடார்.

20.அவன் வழியில் நேரும் இடையூறுகளுக்கு அஞ்சாமல் குறித்தபடி வருவான்.

21.அவளைப் பெற்ற தாய்தந்தையர் குறிப்பால் உணர்ந்துகொள்வர்.

22.தாய் அறிந்தால் செவிலி போல் நடந்துகொள்வாள்.

23.களவு வெளிப்பட்டு அம்பல், அலர் தூற்றப்படுவது அவன் நடத்தையால்தான்.

24.களவு வெளிப்படுவதற்கு முன்னரும் களவு அம்பல், அலரால் வெளிப்பட்ட பின்னரும் என இருவேறு காலங்களிலும் திருமணம் நடைபெறும்.

25.களவு வெளிப்பட்ட பின்னர்த் திருமணம் நடந்தால் அது கற்புமணம். (களவுக்கு முன்னர் எனின், அவன் அவளை அழைத்துக்கொண்டு செல்லும் கொண்டுதலைக் கழிதல்’) எப்படியோ அவளைத் திருமணம் செய்துகொள்ளாமல் கைவிடமாட்டான்.

பொதுவாக களவு என்பது இன்ப உணர்வின் அடிப்படையில் நிகழக் கூடியது.

1.காமப் புணர்ச்சி: இஃது அன்புடைய இருவர் நல்வினையால் எதிர்ப்பட்டு, காதல் கொள்வது. காம வேட்கை மிகுதியால் தான் இக்காதல் உருவாகிறது.காதல் எவ்வாறு உண்டாகும் என்பதைத் தொல்காப்பியர் களவியல் நூற்பாவில் (2) விளக்குகிறார்.ஒருவனும் ஒருத்தியும் கூடிவாழும் இல்லறத்தின் பயனால் அவ்விருவரையும் ஒவ்வொரு பிறவியிலும் சேர்த்தும், பிரித்தும் வைப்பதுமான இருவகை ஊழ்வினை உண்டு. அவற்றுள் நல்லூழின் ஆணையால் ஒத்த பிறப்பு, குடி, ஆண்மை, ஆண்டு, அழகு, அன்பு, நிறை, அருள், உணர்வு, திரு என்னும் பத்துப் பண்புகளுடன் இருக்கும் ஓர் ஆணும், பெண்ணும் கண்டு காதல் வயப்படுவர். இதில் தலைவன் தலைவியுடன் ஒத்த பண்புடையனாகவோ தலைவியின் மிக்கோனாகவோ இருத்தல் வேண்டும்.தலைவி தன்னுடன் ஒத்த நலன்களால் சிறந்து தோன்றிய வழி தலைவனுக்கு இவள் தெய்வ மகளோ?’ என்ற ஐயம் தோன்றும். ஆனால் அவள் அணிந்துள்ள மாலை, அணிகலன் ஆகியவற்றைக் கண்டு அவள் மானிட மகளே எனத் தெளிவான்.பிறகு அவள் தன்மேல் விருப்பம் கொண்டிருக்கிறாளா என அறிய அவள் கண்களை நோக்குவான். காம வேட்கையினால் அந்நான்கு கண்களும் தாம் கொண்ட காதலை உரைக்கும்.ஒருவரை ஒருவர் காணும் முதற்காட்சியிலேயே மெய்யுறு புணர்ச்சிக்கு உடன்படாது, உள்ளப் புணர்ச்சி அளவிலேயே ஒழுகி மணந்து கொண்ட பின்னரே கூடி மகிழ்வர்.

2.இடந்தலைப்பாடு: இயற்கைப் புணர்ச்சி எனப்படுகின்ற இருவரும் கூடி மகிழ்கின்ற நிலையை நாள்தோறும் நிகழ்த்த வேண்டும் என்ற எண்ணம் இருவருக்கும் ஏற்படும். முதல்நாள் சந்தித்த அதே இடத்திற்கு ஒவ்வொரு நாளும் தலைவன் சென்று காதலியைச் சந்தித்து மகிழ்வான். இதுவே இடந்தலைப்பாடு ஆகும்.

3.பாங்கொடு தழாஅல் இடந்தலைப்பாடு: இடையூறு இன்றி நிகழ்தல் அரிது. ஆதலால் தலைவியோடு தனக்குள்ள உறவினைப் பாங்கனுக்குக் (தோழனுக்கு) கூறுவான். பிறகு அத்தோழன் அப்பெண் எவ்விடத்தைச் சேர்ந்தவள்? எத்தன்மை உடையவள்? என வினவி, அவள் இருப்பிடம் அறிவான். அவளிடம் சென்று அத்தலைவியைக் கண்டு வருவான். கண்டு வந்து அவள் நிலையைத் தலைவனுக்குக் கூறுவான்.

4.தோழியில் புணர்வு தலைவியை நீண்ட நாட்களுக்குத் தொடர்ந்து கூட விழையும் தலைவனுக்குப் பாங்கற் கூட்டம் பயன்தராது. அதனால் தலைவியோடு பழகிவரும் உயிர்த்தோழியை நட்பாக்கிக் கொண்டு அவளை இரந்து, அவள் பின் நிற்பான். பிறகு அவள் வாயிலாகத் தலைவியைக் கூடுவதே தோழியிற் புணர்வாம். இது தோழியிற் கூட்டம் எனவும் உரைக்கப்படும்.

5.இருவகைக் குறிகள் தலைவியைத் தோழி குறிப்பிட்ட ஓரிடத்தில் இருக்கச் செய்து, பின்னர்த் தலைவனிடம் சென்று தலைவி தலைவனுக்காகக் காத்திருக்கும் இடத்தைக் குறிப்பிடுவாள். தலைவன் அவ்விடம் சென்று தலைவியுடன் கூடி மகிழ்வான். இக்கூட்டம் பகலில் நிகழ்ந்தால் பகற்குறி என்றும் இரவில் நிகழ்ந்தால் இரவுக் குறி என்றும் அழைக்கப் பெறும்

கற்பு என்பது திருமணத்துக்குப் பின்னர் ஆணும் பெண்ணும் உறவு பூண்டு வாழும் வாழ்க்கை. திருமணத்துக்கு முன்னர் வாழும் வாழ்க்கையைக் களவு என்றும், திருமணத்துக்குப் பின்னர் வாழும் வாழ்க்கையைக் கற்பு என்றும் கொள்வது தமிழ்நெறி. களவையும் கற்பையும் கைகோள் என்பர். இத் தொடரில் கை என்பது கைப்பற்றி வாழும் ஒழுக்கத்தைக் குறிக்கும். இந்த ஒழுக்கம் பற்றிய செய்திகளைத் தொல்காப்பியம் பொருள் அதிகாரத்தில் கற்பியல் என்னும் தலைப்பில் விளக்குகிறது.

**கற்பியல் செய்திகள்**

பெண்ணைக் கொடுப்பதற்கு உரிமை உடைய மரபினர் சடங்குகளுடன் தலைவனுக்குத் தருவது கற்பு எனப்படும். தலைவனுடன் தலைவி செல்லும்போது கொடுப்பவர் இல்லாச் சடங்குடனும் கற்பு நிகழும். நான்கு வகையான குலத்தொழில் நிலைகளில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் சடங்குடன் பெண்ணைக் கொடுப்பவர் மேல் மூவரே. இந்தச் சடங்கு முறையை வேளாளரும் பின்பற்றுவது உண்டு. சடங்கைப் பெற்றோர்களும், மற்றவர்களும் கூடிச் செய்வது வழக்கம்.

இதில் பொய்யும் குறைபாடுகளும் தோன்றிய பின்னர் ஐயர் சடங்குகளைச் செய்துவைத்தனர். ஆகியோரின் பங்கும் உரையாடல்களும் இப்பகுதியில் தொகுத்தும் தனித்துச் சுட்டியும் காட்டப்படுகின்றன.

**குறித்துச் சொல்லப்பட்டவை**

1.அவன்பின் சென்ற தலைவி வழியில் கண்டனவும், நேர்ந்தனவும் ஆகிய அச்சம் தரும் செய்திகளை அவனிடமும், வாயில்களிடமும் பேசமாட்டாள்.

2.கற்பு, காம இன்பம் தந்து பெறுதல், பெண்பாலார்க்கு உரிய ஒழுக்க முறைமைகள், பொறையுடைமை, நிறையுடைமை, பொறுமையுடன் விருந்தினரைப் பேணுதல், சுற்றத்தாரைப் பாதுகாத்தல், போன்றவை தலைவிக்கு உரிய மாண்புகள் (சிறப்புகள்).

3.தலைவனிடம் முகம் கொடுத்துப் பேசுதல்

4.அறிவர் தலைவனையும் தலைவியையும் இடித்துரைப்பர்.

5.தலைவி ஊடல் தணியவில்லை என்றால் தலைவனும் ஊடுவான்.

6.அப்போது தோழி தலைவனை ஆற்றுவிப்பாள்.

7.தலைவனைக் கொடியன் என்னும் உரிமை தோழிக்கு உண்டு.

8.அலர் களவுக் காலத்திலும், பரத்தைமை பற்றிக் கற்புக் காலத்திலும் நிகழும்.

9.இதனால் காம இன்பம் சிறக்கும்.

10.கிழவன் விளையாட்டிலும் இன்பம் மிகும்.

11.வாயில்கள் தலைவியிடம் தலைவனைப்பற்றிக் கோள் மூட்டமாட்டார்கள். நான் என்ன செய்வேன் என்று நழுவிக்கொள்வர்.

12.போர்ப்பாசறையில் பெண் அனுமதிக்கப்படுவதில்லை. போர்க்காலத்தில் வேறோர் இடத்தில் பெண்ணைக் கூடுவது உண்டு.

13.போர்க்காலத்தில் தலைவி நிலையைத் தலைவனிடம் பேசமாட்டார்கள். வேற்றிக்குப் பின்னர்தான் சொல்வார்கள்.

**பிரிவின் கால அளவு**

1.தலைவியின் பூப்பிலிருந்து 12 நாள் கரு தோன்றும் காலம். அப்போது தலைவியைத் தலைவன் பிரியமாட்டான்.

2.கல்விப் பிரிவு மூன்று ஆண்டைக் கடப்பதில்லை

3.தூது, போர்ப் பிரிவு ஓர் ஆண்டுக்குள் இருக்கும்

4.பிற பிரிவுகளும் ஓர் ஆண்டுக்கு உட்பட்டனவே

5.ஆறு, குளம் ஆகியவற்றில் நீராடச் செல்லும் பிரிவும் உண்டு.

இறத்தல் என்னும் துறவு

இல்லற எல்லையைக் கடப்பதை இறத்தல் என்றும், துறத்தல் என்றும் கூறுவர். காம இன்பம் நிறைவு பெற்ற காலத்தில், மக்களுக்குப் பாதுகாவலாக இருந்துகொண்டு, அவர்களும், சுற்றத்தாரும் அறநெறியைக் கடைப்பிடிக்கச் சிறந்த வழி இன்னது எனப் பயிற்றுவித்துக்கொண்டு வாழ்வதுதான் இல்லறத் துறவு.

## நம்பியகப்பொருளிள் அகம்

நம்பியகப் பொருளில் களவின் இலக்கணம், கைக்கிளையின் பாகுபாடு, காட்சி , ஐயம், துணிவு, குறிப்பறிதல், களவிற்கு உரிய கிளவித்தொகை இயற்கைப்புணர்ச்சி, தலைவியின் எய்தும் புணர்ச்சி வகை, தெய்வத்தின் எய்தும் புணர்ச்சியின் விரி, தலைவியின் எய்தும் புணர்ச்சியின் விரி, வன்புறையின் வகை, வன்புறையின் விரி, தெளிவு இன்னதென்று, பிரிவு வழி மகிழ்ச்சி , பிரிவு வழிக் கலங்கல், பிரிவுவழிக் கலங்களின் விரி, இடந்தலைப்பாடு, இடந்தலைப்பாட்டின் வகை, இடந்தலைப்பாட்டின் இலக்கண விரி, பாங்கன் கூட்டத்தின் வகை, பாங்கன் கூட்டத்தின் விரி, பாங்கி மதி உடன்பாட்டின் வகை, முன்னுற உணர்த்தலின் திறம், குறையுற உணர்த்தலின் திறம், இருவரும் உள்வழி இவன் வரவு உணர்த்தலின் திறம், பாங்கி மதியுடன்பாட்டின் விரி, பாங்கியின் கூட்டத்தின் வகை, இரந்து பின் நிற்றலும் சேட்படையும், மடற்கூற்றும் மடல்விலக்கும், குறை நேர்தலும் மடற்கூற்றுஒழிதலும், குறை நயப்பித்தலும் மறுத்தலும், குறை நயப்பித்தலும் நயத்தலும், கூட்டல் கூடல் ஆயங்கூட்டல், வேட்டல், பாய்கியிற் கூட்டத்து விரி இவை எனல், பகற்குறியின் வகை, பகற்குறியின் விரி, ஒருசார் பகற்குறியின் வகை, ஒருசார் பகற்குறியின் விரி, பகற்குறி இடையீட்டின் வகை, பகற்குறி இடையீட்டின் விரி, இரவுக்குறியின் வகை, இரவுக்குறியின் விரி, இரவுக்குறி இடையீட்டின் வகை, அல்லகுறி வருந்தொழிற்கு அருமை, இரவுக்குறி இடையீட்டின் விரி, இவை எனல் வரைதல் வேட்கையின் வகை, வரைதல் வேட்கையின் விரி, வரைவு கடாதலின் விரி, ஒரு வழி தணத்தல், ஒரு வழி தணத்தலின் விரி, வரைவிடைவைத்துப் பொருள்வயின்பிரித்தலின் விரி, என்று நம்பியகப் பொருள் களவியல் பகுதிகள் அமைந்துள்ளன.

## பொருளதிகார வளர்ச்சி

தொல்காப்பியத்தின் மையத்தைக் கொண்டு பின் வந்த இலக்கண ஆசிரியர்கள் பொருளதிகாரத்தை, தேவையானக்கூறுகளை விரித்து இலக்கணம் செய்துள்ளனர். அந்த வகையில் தொல்காப்பியர் கூறிய நூட்பாக்களைக் கொண்டு அதனைச் சற்று விரித்து நம்பியகப்பொருள் இலக்கணம் தோன்றியுள்ளது. எனவே நாற்கவிராச நம்பி என்பார் அருகனது சரணம் பொருந்திய உத்தமனும் புளியங்குடியில் வாழ்ந்தானும் முத்தமிழ் ஆசானும் ஆகிய உய்ய வந்தான் என்பானின் மைந்தர், வடமொழி, தென்மொழி ஆகிய இரு கலைகளிலும் வல்ல குரிசில், அகத்தியனிடம் இயற்றமிழ் உணர்ந்த பன்னிருமாணாக்கரில் தலைவனாகிய தொல்காப்பியனால் செய்யப்பட்ட அகப்பொருள் இலக்கணத்தைத் தழுவியும், சாண்றோரின் இலக்கியங்களை ஆராய்ந்தும், கிளவிகளைத் தொகுத்து முறைப்படுத்திச் சூத்திரம் வகுத்து அகப்பொருள் விளக்கம் என்னும் நூலை இயற்றியவர். மற்றும் அந்நூலுக்கே மயக்கமறப் பொருளை விரித்தும் எழுதியுள்ளார். என்று நூலாசிரியர் குறிப்பு விளக்கம் தருகின்றது. அந்த வகையில் தொல்காப்பித்தைத் தழுவித் தான் நம்பியகப் பொருள் எழுதப்பட்டுள்ளது. ஆனால் அது தொல்காப்பியத்தை விட வளர்ச்சி பெற்று எழுதப்பட்டுள்ளது.

**நம்பி ∴ தொல் - ஒற்றுமை**

தொல்காப்பியம் நம்பியகப்பொருள் இரண்டு நூல்களுக்குமிடையே களவியலில் அதிகளவில் ஒற்றுமை காணமுடிகின்றது. அதாவது தொல்காப்பியர் கூறிய கருத்தினை அப்படியே எடுத்துக் கொண்டு அதற்கு சொற்களை மாற்றி நூற்பா எழுதியுள்ளதை நம்பியகப்பொருளில் காணமுடிகின்றது.

தொல்காப்பியர் களவொழுக்கத்தின் இயல்பினைக் கூறும்போது

**“ இன்பமும் பொருளும் அறனும்என்றாங்கு**
**அன்பொடுபுணர்ந்த ஐந்திணை மருங்கின்**
**காமக் கூட்டம் காணுங் காலை**
**மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்**
**துறையமை நல்யாழ்த்த துணைமையோர் இயல்பே”**

என்று நூட்பா அமைத்துள்ளார். இங்கு ‘மறையோர்தேஎத்து மன்றம் எட்டனுள்’ என்பது உரையாசிரியர்கள் பார்வையில் பல்வேறு பொருளைத் தருகின்றது. இளம்பூரனார் மறையோர் தேஎத்துமன்றல் என்ற தொ்டரில் மறையோர் என்பதனை ஒரு சொல்லாகக் கொண்டு அந்தணர் என்றும் தேஎம் என்பதனை அவர்களது நூல் என்றும் கருத்துரைக்கின்றார். நச்சினார்கினியர்

மறையோர் என்பதனை மறைஓர் எனப்பிரித்து மறை ஓரிடத்துக் கூடிய மணம் எட்டு எனக் கூறுகிறார். ஆக மொத்தத்தில் தொல்காப்பியர் கூறிய மறை என்பது யாது? ஏனத் தெரியவில்லை, ஆனால் அனைத்து உரையாசிரியர்களும் இளம்பூரணரை அடியொற்றி வேதம் என்னும் பொருளைக் கொண்டு அந்நூலில் கூறப்பட்டுள்ள எட்டு வகையான திருமண முறைகளைக் கூறியுள்ளனர். அதாவது 1.பிரமம் 2. பிரசாபத்தியம் 3. ஆரிடம் 4. தெய்வம் 5. கந்தருவம் 6. அசுரம் 7. இராக்கதம் 8.பைசாசம் என்பதாகும்.

இவ்வாறு உரையாசிரியர்கள் கூறிய கருத்துக்கள் பல்வேறான சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது, ஆனால் நம்பியகப்பொருள் களவின் இயல்பு என்பதை களவின் இலக்கணம் எனக்கொடுத்து மறை என்பதன் குழப்பத்தைப் போக்கும் விதமாக

**“உளமலி காதற் களவெனப்படுவது**
**ஒரு நான்கு வேதத்து இருநான்கு மன்றலுள்**
**யாழோர்கூட்டத்துஇயல்பினதுஎன்ப”** - 117 **நம்பி**

எனக்கூறியுள்ளது. இங்கு’ஒரு நான்கு வேதம்’ என்னும் போது எந்தச் சிக்கலும் இல்லாமல் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்று நான்கு வேதங்களையும், அந்நூல்கள் கூறுகின்றது. இருநான்குமன்றல் என்பதால் எட்டு திருமணங்களையும் குறிக்கிறது. அதாவது தொல்காப்பியர் கூறிச் சென்ற மன்றல் மறை போன்ற சொற்களை விளக்கும் விதமாக நாற்கவிராயர் தெளிவாக‘ஒரு நான்கு வேதத்து இரு நான்கு மன்றம்’ என்கிறார். இது தொல்காப்பியர் தழுவல் என்பது தெரிகிறது.

## முதல் சந்திப்பின் விளைவு

முதல் தலைமகனும் தலைமகளும் சந்திக்கின்றபோது ஐயம் தோன்றும் என்கின்றது தொல்காப்பியம்

**“சிறந்துழி ஐயம் சிறந்தது என்ப**
**இழிந்துழி இழிபேசுட்டலான”**

அதாவது தலைவன் தலைவியர் பேரழகுடையராய் அவர்கள் சந்திக்குமிடமும் கனவுலகம் போன்ற சிறப்புடையது, எனவே தலைவன் ‘இவள் தெய்வமகளோ’ என ஐயுறுவாள். என்று நூட்பா விளக்கமளிக்கிறது. இது போன்று பொருளியலில் உள்ள நூட்பாவும் தலைமகன் ஐயுறும் நிகழ்வு எடுத்தாளுகின்றது.

**“உயர்மொழிக் கிளவி உறழுங் கிளை**
**ஐயக் கிளவி ஆடூஉவிற்குஉரித்தே” (பொரு - 42)**

இங்கு உரை தருகின்ற இளம்பூரணர். ஐயப்படுபவன் தலைவன் என்று கொள்க தலைமகள் ஐயப்படக்கூடாது. என்னையெனின் அவள் ஐயப்படுங்கால் தெய்வமோ வென்று ஐயுறுதல் வேண்டும் அவ்வாறு ஐயுற்றால் அச்சம் வரும் அ.்.து ஏதுவாகக் காம நிகழ்ச்சியுண்டாகாது. என்கின்றார்.

நம்பியகப்பொருள் ஐயம் பற்றிக் கருத்துரைக்கும் போது தலைமகள் வடிவும் அவளைத்தான் கண்ட இடமும் சிறப்புடைய ஆயகாலத்துத் தலைமகன்பால் ஐயம் நிகழும் என்றவாறு என்கிறது.

**“மடமான் நோக்கி வடிவங் கண்ட**
**இடமும் சிறந்துழிஎய்துவது ஐயம்” - 120 நம்பி**

இங்கு தொல்காப்பியர் கருத்துடன் இயைந்து போவது காண முடிகின்றது. இங்கு தொல்காப்பியர் பயன்படுத்தியுள்ள சிறந்துழி ஐயம் என்னும் சொல் அப்படியே கையாளப் பெற்றுள்ளது. ‘சிறந்துழி எய்துவது ஐயம்’ என்று நம்பியகப்பொருளில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

**துணிவு**

தலைமகன் ஐயப்பட்டு பின்பு தலைவி இவள் இந்த உலகத்து சாதாரணப் பெண் என்கின்ற துணிவினைஅடைகின்ற செய்தியை தொல் நம்பி இரண்டுமே ஒன்று போல நூட்பா அமைத்துக்காட்டுகின்றன.

**“வண்டேஇழையே வள்ளி பூவே**
**கண்ணே அலமரல்இமைப்பேஅச்சமென்று**
**அன்னவைபிறவும் ஆங்கு அவன் நிகழ**
**நின்றவைகளையும் கருவி என்ப” -1041 தொல்**
**“எழுதிய வல்லியும்தொழில்புனைகலனும்**
**வாடிய மலரும் கூடிய வண்டும்**
**நடைபயில்அடியும்புடைபெயர்கண்ணும்**
**அச்சமும்பிறவும்அவன்பால் நிகழும்**
**கச்சமில் ஐயம் கடிவனவாகும்” - 121 நம்பி**

இங்கு இரண்டு நூல்களுமே ஒரே கருத்தினைக் கூறுகின்றன. அதாவது ‘தலைவி சூடிய பூவில் வண்டு மொய்க்கும் அணிகலன்களை அணிந்திருப்பாள்’ வள்ளி என்பது தலைவியின் மார்பு

மற்றும் உடலில் எழுதப்படும் ஓவியம், பிற மாலை முதலியவற்றுள் பூ வாடியிருக்கும் கண்கள் மருட்சியால் சுழலும், இமைக்கும், முகத்தில் அச்சம் தோன்றும் இவ்வுலகமகளேஎனத்துணிவதும் என்று கருத்துரைக்கின்றன. இது இரண்டு நூல்களுக்கிடையே இருக்கின்ற ஒற்றுமையைக்காட்டுகின்றன.

## குறிப்பறிதல்

குறிப்பறிதல் என்பதும் தொல்காப்பித்தைத்தழுவித் தான் நம்பியகப்பொருள் கருத்துரைத்துள்ளது.

**"நாட்டம் இரண்டும் அறிவு உடம்படுதற்குத்**
**கூட்டி உரைக்கும் குறிப்புரை ஆகும்" -1042 தொல்**

இந்நூட்பாவில் உள்ள குறிப்புரை என்பது நம்பியகப்பொருளில் நூட்பாவின் தலைப்பாக அமைந்துள்ளது. இங்கு

**"அரிவை நாட்டம் அகத்து நிகழ் வேட்கை**
**தெரிய உணர்த்தும்குரிசிற்குஎன்ப" –(122 நம்பி)**

இரண்டு நூற்பாக்களுமே காதலர்களின் கண்கள் இரண்டும் அவர்களது உள்ளக்குறிப்பை அறிவிக்கின்றன என்பதாக அமைந்துள்ளன. இவ்வாறு இருக்க நம்பியகப்பொருள் ஐயம் என்பதை கைக்கிளையின் பாகுபாடு என்கிறது.

## நம்பி

**"காட்சி ஐயம் துணிவு குறிப்பு அறிவென**
**மாட்சி நான்கு வகைத்தே கைக்கிளை"**

இங்கு கைக்கிளையாவது காட்சி, ஐயம், துணிவு, குறிப்பறிதல் சொல்லப்பட்ட நான்கும்உடையதாம் என்கிறது. இது சற்று மயக்கத்தைத் தருகின்றது. இவ்விடம் தொல்காப்பியத்தோடுபொருந்திப் போகவில்லை.

### ஊழ் பற்றிய கருத்து

பொதுவாக சங்க இலக்கியங்களில் தலைவனும் தலைவியும் சேர்ந்து காதல் புரிவது ஊழினால் வந்தது என்கின்ற செய்தி உண்டு. அந்தக் கருத்து தொல்காப்பியத்திலும் நம்பியகப்பொருளிலும் இடம்பெற்றுள்ளது.

**"ஒன்றே வேறேஎன்றிரு பால் வயின்**
**ஒன்றி உயர்ந்த பாலதுஆணையின்**

ஒத்தகிழவனும் கிழத்தியும்காண்ப
மிக்கோன் ஆயினும் கடிவரையின்றே”   -1039 தொல்

இந்நூற்பாவிற்கு உரையெழுதிய அனைத்து உரையாசிரியர்களும் ஒன்றுபடுத்தவல்ல, உயர்ந்த ஊழின்ஆணையால்தம்முள் உரு, திரு, பண்பு, போன்றவற்றால் ஒப்புமையுடைய தலைவனும் தலைவியும் எதிர்பாராது சந்தித்துக் கொள்வர் என்கின்றனர். தலைவன் தலைவியின் சந்திப்பு முன்பிறவியின் நல்வினை தீவினையால் வருவது என்பதாகக்கூறுகின்றனர். நம்பியகப் பொருளும் இக்கருத்தில் உடன்படுவது போன்று தெரிகின்றது, அதாவது நூட்பா 119 இல்

“புணர்ப்பதும்பிரிப்பதும் ஆகிய பால்களுள்
புணர்க்கும் பாலில் பொருவு இறந்து ஒத்த
கறைவேற்காளையும்கன்னியும்காண்ப
இறையோன் உயிரினும்குறைவின்றுஎன்மனார்”

என்கின்றது. முற்பிறப்பினும் காமம் நுகர்ந்தார் இருவரையும் மறு பிறப்பினும் கூட்டுவதும் பிரிப்பதுமாகிய நல்வினை தீவினை என்னும் இரண்டனுள் நல்வினை வயத்தால்தனியிடத்து எதிர்ப்படுவர் என்கிறது. இதில் தொல்காப்பியரின் கருத்து நம்பியகப்பொருள் கருத்து இரண்டும் ஒன்றுபட்டுக் காணப்படுகின்றன.

**தலைமகன் கூற்று**

தொல்காப்பியர் களவியல் தலைமகன் கூற்றில் கூறிய கருத்துக்களை நம்பியகப்பொருள் ஆசிரியர் பல்வேறு நூட்பாக்களாகப் பிரித்துள்ளார்.

“மெய்தொட்டுப்பயிறல் பொய் பாராட்டல்
இடம்பெற்றுத்தழாஅல் இடையூறு கிளத்தல்
நீடுநினைந்து இரங்கல் கூடுதல் உறுதல்
சொல்லிய நுகர்ச்சி வல்லேபெற்றுழித்
தீராத் தேற்றம் உளப்படத் தொகைக்கும்
பேராச்சிறப்பின்இருநான்குகிளவியும்
பெற்றவழிமகிழ்ச்சியும்பிரிந்தவழிக்கலங்கலும்
நிற்பவைநினைஇநிகழ்பவைஉரைப்பினும்
குற்றம் காட்டிய வாயிற்பெற்பினும்
பெட்ட வாயில் பெற்று இரவு வலியுறுப்பினும்” - 1048 தொல்

இந்நூற்பாவில் இடம்பெற்றுள்ள கருத்துக்கள் தலைவன் கூற்றாகத் தொல்காப்பியர் கூறியுள்ளார். அதாவது தலைவியின் உடலைத் தொட்டு கூச்சத்தைப் போக்குதல், நெற்றிக் கூந்தல் போன்றவற்றைப் புனைந்து பாராட்டுதல், அவளை நெருங்கித் தழுவுதல் கூடி மகிழ்தல் இது போன்றவை இயற்கைப் புணர்ச்சியாகும் என்பர் ஆசிரியர்.ஆனால் நம்பியகப்பொருள் இயற்கைப்புணர்ச்சி என்பதற்கு அதன் இலக்கணம் கூறிய அதாவது

**‘‘தெய்வம் புணர்ப்பச்சிந்தையேறாகி**

**ஏய்துங்கிழத்தியை இறையோன் என்ப” - 124**

என்று கூறி அதன் விரியையும் 125, 126, 127, என்று மூன்று நூட்பாக்களில் கூறியுள்ளார், இவை விரிவாகக் கருத்துரைத்துள்ளதைக் காட்டுகிறது. இவை தவிர

**‘‘ தீராத் தேற்றம் உளப்படத் தொகை இப்’**

என்னும் தொல்காப்பியர் கூறும் ஒரு வரி நூட்பாவிற்கு நம்பியகப்பொருள் தனிநூட்பாவையே அமைத்துக் கொடுத்துள்ளது.

**வன்புறை வகை**

**‘‘ஐயந் தீர்த்தல் பிரிவு அறிவுறுத்தலென்று**

**எய்தியவன்புறைஇருவகைத்ததகும்” - 128**

இங்கு வன்புறை என்பது வற்புறுத்தல் எனப்படும் ஐயந்தீர்த்தலும் பிரிவு அறிவுறுத்தலும் என்பதாக அமையும் என்கிறார். தொல்காப்பித்தில் தலைவியிடம் இன்பம் நுகர்ந்த பின்பு அவளது அச்சத்தைத் தீர்த்து உறுதி கூறித் தேற்றுதல் என்பதாக உள்ளது. ஏறத்தாழ இரண்டு கருத்துமே ஒன்றாக உள்ளன.

**இடந்தலைப்பாடு** என்னும் பகுதியில் நம்பியகப்பொருள் கூறியுள்ள கருத்து

**‘‘தெய்வம் தெளிதல் கூடல் விடு;த்தல் என்று**

**இவ்வோர்மூவகைஇடந்தலைப்பாடே” - 134**

என்கிறது இந்நூட்பா தொல்காப்பியரின் தலைவன் கூற்றில் உள்ள

**‘‘பெற்ற வழி மகிழ்ச்சியும் பிரிந்த வழி கலங்கலும்”**

என்னும் வரிக்கு விளக்கம் போல அமைந்துள்ளது. இது நம்பியகப்பொருள் பின்னாளில் கிடைத்த சான்றுகளை வைத்து இடந்தலைப்பாட்டினை தொல்காப்பியத்தில் இருந்து சற்று விளக்கிக் கருத்துரைத்துள்ளது தெரிகிறது.அது போலவே தொல்காப்பியர் தலைமகள் கூற்றில் கூறியுள்ள

**‘‘நிற்பவைநினைகிநிகழ்பவைஉரைப்பினும்**

**குற்றம் காட்டிய வாயிற்பெற்பினும்" - 1048**

என்பதற்குப் பாங்கற் கூட்டம்' என்னும் தனித் தலைப்பில் நம்பி பெரிய நூட்பாக்கள் இரண்டினைத் தந்துள்ளது. பாங்கன்கூட்டத்தின் வகை, அதன் விரி என்பதாக

**"சார்தல் கேட்டல் சாற்றல் எதிர்மறை**
**நேர்தல் கூடல் பாங்கிற் கூட்டல் என்று**
**ஆங்கெழுவகைத்தேபாங்கற் கூட்டம்**
**சார்தல் முதலாகப்பாங்கிற் கூட்டல் ஈறாக எழுவகை" -136**

இரண்டாவது இதனுடைய விரிவாக

**"தலைவன் பாங்கனைச்சார்தலும்பாங்கன்**
**தலைவனை உற்றது வினாதலும் தலைவன்**
**உற்றது உரைத்தலும்கற்றறிபாங்கன்**
**கழறலும்கிழவோன்கழற்றெதிர்மறுத்தலும்**
**கிழவோற்பழித்தலும்கிழவோன் வேட்கை**
**………..**
**காட்டிய பாங்கற்கூட்டத்துவிரியே" - 137**

என்கிறது நம்பி, இது நம்பியகப்பொருளின் ஆசிரியர் பிற்காலத்தில் இயற்றியதால் சங்க இலக்கியங்களில் உள்ள பாடல்களைக் கொண்டு அதில் உள்ள கருத்துக்களை மையமாக வைத்து அதற்கு இலக்கணம் எழுதியுள்ளது போன்றுதெரிகின்றது, இங்கு சொல்லப்படுகின்ற பாங்கன்கூட்டச் செய்திகள் இலக்கியத்தில் உள்ள செய்திகளே ஆகும். இந்த வகையில் தொல்காப்பிர் கூறிச்சென்றுள்ள ஒரு கூற்று பல நூட்பாக்களாக நம்பியில்இடம்பெற்றுள்ளது.

## குறி

குறியிடம் பற்றிய செய்தி தொல்காப்பியத்தில் 7 நூட்பாக்களில் மிகக் குறுகிய செய்திகளுடன் இடம்பெற்றுள்ளன. அதாவது தலைவி தான் குறியிடம் கூறும் தன்மையர் என்பதை தொல்காப்பியம் கூறுகிறது.

**"அவன் வரம்பு இறத்தல் அறம் தனக்கு இன்மையின்**
**களம் சுட்டுக் கிளவி கிழவியதாகும்**
**தான் செலற்கு உரிய வழி ஆகலான" - 1066**
**"தோழியின் முடியும் இடனுமாருண்டே" - 1067**

இவ்வாறான குறி சுட்டும் தலைமக்கள் யார் என்று நம்பியகப்பொருள் கருத்துரைக்கவில்லை ஆனால் தொல்காப்பியர்

**“குறியெனப்படுவதுஇரவினும்பகலினும்**

**அறியத் தோன்றும் ஆற்றதுஎன்ப” - 1076**

என்னும் நூட்பாவைக் கூறியுள்ளார். அதற்கு விளக்கம் தரும் வகையில் பகற்குறி, பகற்குறியின் வகை, அதன் விரி போன்ற கருத்துக்களில் நம்பி நூட்பா வரைந்துள்ளது.

**“கூட்டல் கூடல் பாங்கிற் கூட்டல்**

**வேட்டல் என்று ஒருநால்வகைத்தேபகற்குறி” - 151**

என்கிறது. ஆனால் தொல்காப்பியம் இரவுக்குறி, பகற்குறிக்கு ஏற்ற இடம் மட்டும் குறிப்பிடுகிறது. அல்லகுறிப்படுதலும் கூறப்பட்டுள்ளது. ஆனால் நம்பியகப்பொருள் இரவுக்குறியின் வகை இடையீடு போன்றவற்றைக் கூறியுள்ளது. இது சங்கப்பாடல்களில் இடம்பெறும் கருத்துக்களைக் கொண்டு அமைத்துள்ளதாகத் தெரிகிறது.

தொல்காப்பியம் நம்பியகப்பொருள் இரண்டும் களவியலைப் பொருத்த வரையில் ஒற்றுமையுடன் காணப்படுகின்றன. நம்பி அவர்கள் சங்கப்பாடல்களைக் கொண்டும், களவியலுக்கு நூட்பா அமைத்துள்ளதைக் காணமுடிகிறது. ஆனாலும் தொல்காப்பித்தில் உள்ள தெளிவு நம்பியகப்பொருளில் காணமுடியவில்லை.

## கற்பியல்

ஒருவனுக்கு ஒருத்தி எள வாழும் பெண்ணின் மனப் பாங்கு என்று வழக்கமாகக் கருதப்படும் பொருளில் தொல்காப்பியர் கற்பியலில் குறிப்பாக முதல் நூற்பாவிலும் இயல் தலைப்பிலும் கற்பு என்ற சொல்லைக் கையாளவில்லை. இதைக் கற்பியலின் முதல் நூற்பாவே வெளிப்படுத்துகிறது.

**“கற்பெனப் படுவது கரணமொடு புணரக்**

**கொளற்குரி பாயிற் கிழவன் கிழத்தியைக்**

**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே”**

இந்நூற்பாவில் பெண்ணைக் கொடுக்கும் இயல்பினை உடையவராகிய தாயும் தந்தையும் சடங்கோடு பொருந்திய நிலையில் பெண்ணைக் கொடையாகக் இயல்பினை உடைய தலைவனுக்குத் தலைவியைக் கொடுப்பது கொடுக்கும் என்பதே கற்பு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது எனவே இது களவு என்பதுடன் எவ்விதத் தொடர்பும் இல்லாததாக ஓத்த கிழவனும் கிழத்தியும்

எதிர்ப்பட்டுக் கற்புவழிப்படும் முறை இதில் அடக்கிக்கொள்ளப்படவில்லை. நாம் முன்பே பார்த்த போல் வெளிப்படவரைதல், படாமைவரைதல் என்பதனும் களவு அடக்கிக் கொள்ளப்பட்டுள்ளது செய்யுளியலில் 174ஆம் நூற்பாவில் மறை வெளிப்படுதலும் கற்பு என்பது குறிப்பிடப்பட்டுள்ளது இவ்வாறே கற்பியலில் இரண்டாவது நூற்பாவிலும் கொடுப்போர் இல்லாத நிலையில் நிகழும் உடன்போக்குக் கரணம் குறிப்பிடப்பட்டுள்ளது அது கற்பு எனவும் ஏற்கப்பட்டுள்ளது. இந்த இரண்டிலுமே உடன்போக்கு என்பதற்கு இணையாகக் கற்பு கருதப்படவில்லை.

”கொண்டானிற் சிறந்த தெய்வம் இன்றெனவும் அவனை இன்னவாறே வழிபடுகவெனவும் இருமுதுகுரவர் கற்பித்தலானும் “அந்தணர் திறத்துந் சான்றோர் தேஎத்தும்“ “ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும்“ (தொல். பொ 146) ஒழுகும் ஒழுக்கந் தலைமகன் கற்பித்தலானுங் கற்பாயிற்று இனித் தலைவனுங் களவின்கண் ஓரையும் நாளும் தீதென்று அதனைத் துறந்தொழுகினாற்போல ஒழுகாது ஒத்தினுங் கரணத்தினும் யாத்த சிறப்பிலக்கணங்களைக் கற்பித்துக் கொண்டு துறவறத்திற் செல்லுந்துணையும் இல்லற நிகழ்த்துதலிற் கற்பாயிற்று’’என நச்சினார்க்கினியர் பெற்றோர் தலைவன் ஆகியோர் கற்பித்த வழி தலைவி ஒழுகுவதும் தலைவன் இல்லறம் நடத்துதலும் கற்பு விளக்கியிருந்தாலும் இவை என தொல்காப்பிய வரையறைகளோடு பொருந்தி வரவில்லை. ‘‘கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்“(152) எனக் குறிப்பிடும் இடத்தில் கற்பு எனும் சொல்லைக் கையாண்டதற்கும் கற்பியலின் முதற் நூற்பாவில் கையாண்டதற்கும் வேறுபாடு உள்ளது பெற்றோர் கொடுப்பக் கொள்வதையும் மறைவெளிப் பட்டபின்னர் மணம் செய்து கொள்வதையுமே கற்பு எனக் குறிப்பிட்டுள்ளார் தொல்காப்பியர்.

**‘‘அம்பலும் அலரும் களவுவெளிப் படுத்தலின்**

**அங்கதன் முதல்வன் கிழவனாகும் ‘‘**

என அம்பல் அலர் என்பன களவை வெளிப்படுத்தும் கருவிகளாகக் காட்டப்பட்டுள்ளன

**‘‘களவும் கற்பும் அவர்வரை வின்றே’’**

என அலர் கற்பிற்கும் களவிற்கும் உரியதாகக் காட்டப்பட்டுள்ளது இவ்வலர் தலைவன் தலைவியரின் காமம் சிறத்தற்குக் காரணமாக அமைவது என்பதையும் குறிப்பிட்டுள்ளார் தொல்காப்பியர் எனவே அலர் களவு கற்பு எனும் இருவகைப் பாடல்களிலும் பேசப்படுவதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன. எனவே அலரை மட்டுமே கொண்டு பாடலின் கைகோளைத் தீர்மானித்துவிட முடியாது.

**‘‘பின்முறை யாக்கிய பெரும்பொருள் வதுவைத்**

**தொன்முறை மனைவி எதிர்ப்பா யாயினும்**

**இன்னிப் புதல்வனை வாயிக்கொண்டு**

**புயினுர் கிழயோ விறந்தது**

**நினைஇ யாங்கட் லங்கமுரியன"**

என்பனார் புலவர் எனும் இது கற்பிகளில் இடம்பெறும் ஒரு முக்கிய நூற்பாவாக உள்ளது. இது பின்முறை வதுவை தொன்முறை மனைவி என இரு மனையியரைப் பற்றிப் பேசும் நூற்பாவாக அமைந்துள்ளது தலைவன் பரத்தைமையிலிருந்து நீங்குதற்கு உரிய ஆழம் இதில் கூறப்பட்டுள்ளது.

மூவகை வருணத்தாரும் முன்னர்த்தத்தம் வருணத் தெய்நிய மதுயை மனைவியர்க்குப் பின்னர் முறையாத் செய்துகொள்ளப்பட்ட பெரிய பொருளாகிய துணை மனையியரைப் பழையதாகிய முறைமையினையுடைய மனையள் விளக்கு முதலிய மங்கலங்களைக்கொண்டு எதிசேற்றுக் கோடத் சிறப்பினும் எனக் கூறப்பட்டுள்ள. உரைப்பகுதி இருதாரமணமுறையை முன்வைக்கின்றது தொல்முறை மனைவி, பின்முறை வதுவை மனையிரை உடன்பட்டு எதிரேற்றுக்கொள்ளும் இங்குப் பேசப்பட்டுள்ளது. இதற்குரிய விளக்கவுரையில் சூழன் நச்சினார்க்கினியிர் தமக்கே உரிய முறைப்படி "வேகடுவ் அந்தணர்க்குப் பின்முறைனதுவை மூன்றும், அரசாக்கிரண்டும் வணிகர்க்கொன்றும் நிகழ்தல் வேண்டுமெனக் கூறிற் றென்பது உணர்த்துதக்கு இனி மகப்பேறு காரணத்தாற் செய்யும் வதுவை மென்றுமாம். "ஆக்கிய" வென்றதனாலே வேளாளர்க்கும் பின்முறைவதுவை கொள் எனத் தந்துள்ள விளக்கம் இதை வேதநூல் மரபெனக் குறிப்பிட்டுள்ளது நால்வகை வருணத்தாருக்கும் பின் முறை வதுவை உண்டு என்பதை இவை வெளிப்படுத்துகின்றது மல்ல பேறு இல்லாத சூழலில் பின்முறை வதுவைமுறை. அதாவது பிள்ளைப்பேற்றிற்காக வேறொரு திருமணம் செய்துகொள்வார் உண்டு என்பதை இவ்வுரைக்குறிப்பு வெளிப்படுத்துகின்றது.

தொல்காப்பியர் பிரிவு பற்றி அகத்திணையியவில் பேசினாலும் களவியலில் இப்பிரிவுகள் பற்றி எங்கும் பேசவில்லை. அவற்றைக் கற்பியலிலேயே பேசியுள்ளார்.

**"எண்ணரும் பாசறைப் பெண்ணொடும் புணரர்.**

**செலவிடை வழங்கப் செய்யாமை யன்றே'**

வன்புறை குறித்தல் தவிர்ச்சி யாகும் கிழவி நிலையே வினையிடத் துரையார் வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்

**‘‘வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது**

**வேந்துறு தொழிலே யாண்டின தகமே**

**ஏனைப் பிரிவும் அவ்வயின் நிலையும்**

**வினைவயிற் பிரிந்தோன் மீண்டுவருங் காலை**

**இடைச்சுர மருங்கில் தவிர்தல் இல்லை’’**

என்பன கற்பியலில் இடம்பெறும் பிரிவு பற்றிய நூற்பாக்கள்.

அகத்திணையியலில் பிரிவு பற்றிப் பேசாது ஓதல் பகை தூது பொருள் காரணமான பிரிவுகள் பற்றிப் பேசிய தொல்காப்பியர் கற்பியலில் மட்டுமே பரத்தையர் பிரிவைப் பேசியுள்ளார் முந்நீர் வழக்கம் பற்றி அகத்திணையியலில் பேசினாலும் பாசறையில் பெண்ணோடு இருந்தல் இல்லை என்பதைக் கற்பியலில் பேசியுள்ளார் பாசறைப் புலம்பல் பற்றி அகத்திணைபியல் 41ஆம் நூற்பாவில் குறிப்பிட்ட தொல்காப்பியர் கற்பியலீல் வேந்துவிடுதொழில்மேற் சென்ற காலத்து அந்த வினையைச் செய்யும்போது தலைவியை நினைத்து இருப்பது போல் செய்யுள் செய்தல் இல்லை என்று கூறியுள்ளார் எனவே வேந்துவிடுதொழில் களவு கற்பு எனும் இருவகைக் கைகோள்களிலும் பொருள்வயிற்பிரிவைப் போலநிகழலாம். வினையிடத்துரையார். வினைவயிற்பிரித்தோன் எனக் குறிப்பிட்டுள்ள இடங்களில் வரும் வினை என்பதை வேந்துவிடுதொழில் எனவே கொள்ளவேண்டியுள்ளது.

கைக்கிளை.முல்லை. குறிஞ்சி மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என எழு திணைகள் முற்படக் கிளந்தனவாகக் குறிப்பிடப் பட்டுள்ளன. இந்த எழுதிணைகளுள் நடுவணைத்திணைகள் பற்றிய அகஒழுக்கம் களவு கற்பு எனும் இருவகைக் கைகோள் களிலும் திகழும் நிலைமைகள் களவியல் கற்பியல் எனும் இரு இயல்களில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

அகத்தைக் களவு என்றும் கற்பு என்றும் பாகுபடுத்தி விளக்குவது போல் கைக்கிளை. முல்லை. குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை பெருந்திணை எனப் பாகுபடுத்தி ஆராய வில்லை கைக்கிளை பெருந்திணை என்னும் இரண்டையும் ஒவ்வொரு நூற்பாவில் விளக்கிவிட்டு, ஏனைய ஐந்து திணைகளையும் முதல் கரு உரிகளில் அடிப்படையில் விளக்கு கிறார் ஒவ்வொரு திணையிலும் நிகழும் நிகழ்ச்சிகளை விளக்கவில்லை. காதல் நாடகத்தில் பங்குகொள்ளும் மக்கள் கூற்றுக்களைத் தனித்தனியாகக் கூறுவதுபோல், இன்ன இன்ன திணையில் இன்ன இன்ள

சுற்றுக்கள் நிகழும் எனவும் தொல்காப்பியர் கூறவில்லை” என, அருணாசலம் கூறுவது கவனத்தில் கொண்டு ஆராயப்பட வேண்டியதாக உள்ளது. தொல்காப்பியரின் திணைக் கோட்பாடு இந்த அடிப்படையில் அணுகப்பட வேண்டியதன் அவசியத்தை இந்தக் கருத்து முன்னிறுத்துகின்றது. இந்த உண்மைகளை விளங்கிகொள்ளும் போதுதான் உரிப்பொருள் சார்ந்தனவாக வரும் கூற்றுகளின் பொதுத்தன்மையையும் உரிப்பொருள் எந்தெந்தத் திணைக்கு உரியது என வரையறுத்து உரைக்கப்படாததற்கான நிலையையும் தம்மால் விளங்கிக்கொள்ள இயலும் உரிப்பொருள் பற்றிய பகுதியில் இதை விரிவாகக் காணலாம்.

பொருள் உரைக்கும்போது பாடலில் உள்ள சொல்லிசைவைப் பிரித்துச் சொன்னாலும் பொருளிசைவு பிரியாதிருக்க வேண்டும் கொண்டுகூட்டிச் சொல்லலாம்.

நோயும் இன்பமும் வாழ்வில் வரும். எட்டு வகை மெய்ப்பாடுகளால் அவை வெளிப்படும். அப்போது பிறவும், பிறரும் தம்மைப்போல் உறுப்பும், நினைவும், செயல்பாடும் உடையனவாகக் கருதி அவற்றோடு உள்ளத்தாலும், மொழியாலும் பேசுதல் உண்டு.

கனவிலும் இச்செயல்கள் நிகழும்

மகளை அவளது காதலனுடன் அனுப்பிவைத்த காலத்தில் தாய்க்கும் இவை நிகழும்.

அகத்திணை மாந்தர்களில் ஆகிய நால்வரும் பாலால் (பிறப்பால்) கெழுமியவர்கள் (இணைந்தவர்கள்) இவர்களுக்கும் இவை நிகழும். நண்பர்களுக்கு இப்படிப்பட்ட உணர்வுகள் வருவதில்லை. இவர்கள் நால்வரிடமும் ஒத்த உயிரோட்டம், நாணம், மடம் கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை ஆகியன இருக்கும் அப்போது பொருள்கள் தம்மை உணர்ந்துகொண்டது போலப் பேசுவார்கள்

தலைவன் பிரிந்த காலத்தில் தலைவியின் உடம்பும் உயிரும் வாடினாலும் அவற்றைப் பழித்தல் அல்லது தலைவி தலைவன் இருக்குமிடத்துக்குச் செல்லமாட்டாள். தனிப்பட்ட நெஞ்சழுத்தத்தால் தலைவனிடம் செல்லுதலும் உண்டு. உள்ளதை மறைத்தல், அவனை வேட்டல் ஆகியவை தலைவியின் மடம்தோழி தலைவியின் உறவை அறத்தொடு நிற்கும் காலத்தில்தான் செவிலிக்கும் தாய்க்கும் வெளிப்படுத்துவாள்

எளித்தல், ஏத்தல், வேட்கை உரைத்தல், கூறுதல், உசாதல், ஏதீடு, தலைப்பாடு ஆகிய ஏழு காலநிலைகளில் தோழி உண்மையை உரைக்கும் அறத்தொடுநிலை நிகழும். துன்பம் வந்தபோது அறத்தொடுநிலை சொல்லால் வெளிப்படுத்தப்படும்

செறிவு, நிறைவு, செம்மை, செப்பல், அறிவு, அருமை என்னும் (ஆறு) பாங்குகள் பெண்பாலார்க்கு உரியவை

உறவுக்கு இடையூறாக இருக்கும் காலம், அவன் வரும் வழி, தான் காப்பு செய்யப்பட்டிருக்கும் நிலை ஆகியவற்றில் குற்றம் சொல்லல், தன்னைத்தானே நொந்துகொள்ளுதல், அவனுக்குத் துன்பம் நேருமோ என அஞ்சுதல், இரவில் வருபவனைப் பகலில் வா என்றும், பகலில் வருபவனை இரவில் வா என்றும் சொல்லித் தட்டிக் கழித்தல், அவனை இனி வராதே எனக் கூறுதல், நன்மை தீமைகளை மாற்றிப் பேசுதல், போன்றவை தலைவனைத் திருமணம் செய்துகொள்ள விரும்புதலை வெளிப்படுத்தும் பேச்சுகள். எனக்கு ஆசை எனக் கூறுவதும் அது. உண்ணாப் பொருளை உண்டன போலப் பேசுவதுண்டு.

தலைவன் யானை, குதிரை, தேர் முதலானவற்றில் ஏறியும் வருவான்.தலைவி காப்புச்சிறையில் இருக்கும்போது தலைவன் தனக்குப் பழி நேரும் என்றாலும் அன்பு, அறம், இன்பம், நாண் ஆகியவற்றைக் கைவிட்டுவிடுவான். தலைவி உடன் வருதாகச் சொல்லும்போது தான் செல்லும் பாலைநில வழியைப்பற்றிப் பேசுவான்.

வழக்கம் என்பது உயர்ந்தோர் நெறி. பொருளுக்காகத் தலைவியுடன் வாழவேண்டிய அறத்தைத் துறத்தலும் ஒரு வாழ்க்கைநெறி. இது பழிக்கப்படும். பிரியினும் தலைவன் பழிக்காக நாணுதலைக் கைவிடக் கூடாது

தந்தை, தம்பி, தம்முன் அண்ணன் போன்ற முறைப்பெயர்கள் அகத்திணையில் வரும். நான், நீ, எம் என அகத்திணையில் வருவன உரிமைப்பொருளை உணர்த்தும். பால் மயங்கிய சொற்களும் அகத்திணையில் வரும்

இன்பம் என்பது எல்லா உயிர்களுக்கும் பொது பரத்தையிடம் செல்லல் நானிலத்தாருக்கும் உரியதுநான்கு வருணத்தாருக்கும் உரியது என்பது  உரை. தன் மகனை எண்ணியும், தன் கணவனை ஊர் தூற்றும் என எண்ணியும் தலைவி தன் தலைவனின் பரத்தைமையை வெளிப்படுத்த மாட்டாள். தன் வருத்தம் மிகும்போது வெளியில் சொல்வதும் உண்டு. மனைவி உயர்வும், கணவன் அவளைப் பணிதலும் ஊடல் காலத்தில் நிகழும். கணவன் மனைவியைப் பலவாறாகப் புகழ்வான்.

பொருள் உய்த்துணரப்படும்

பொருளீட்டவும், போருக்கும் தலைவன் பிரிவானே எனத் தலைவி அஞ்சுவாள்

தலைவி பரத்தையைப் புகழ்ந்தாலும் அது ஊடல்தான். இந்தப் புகழ்ச்சி தலைவனின் உள்ளக் கிடக்கையை உணர்வதற்காகத்தான்

மகிழ்ச்சியிலும், ஊடலிலும் தலைவனும் தலைவியும் பிதற்றுவர்

இன்ன காலத்தில் வருவேன் என்று சொன்னவர் வரவில்லையே எனத் தலைவி மடம், வருத்தம், மருட்கை, மிகுந்த கற்பனை ஆகிய நான்கு நிலைகளில் பிதற்றுவாள்.

தலைவன் தலைவியிடம் கெஞ்சும்போது தோழி இருவருக்கும் அறிவுரை கூறுவாள்

தன்னை உயர்த்திப் பேசுதல், தலைவியோடு எப்பிட்டுப் பேசுதல், ஐயுறப் பேசுதல் மூன்றும் ஆண்மகன் செயல்.இதற்குத் தோழி ஒத்தூதுவாள். தலைவி தன்னை உயர்த்திப் பேசதலும் உண்டு. வாயில்கள் வெளிப்படையாகப் பேசுவர்.

பாட்டின் பொருளை உணர்ந்துகொள்ள ஐந்து வகையான  பயன்படும். இது எல்லையில்லாத இன்பத்தைக் காட்டும். மங்கல மொழி, அவையல் கிளவி, மாறில் ஆண்மை என்பனவும் உள்ளுறை உவமைகளே

தனக்கு முறைமை இல்லாத்வளை அன்னை என்றலும், தனக்கு முறைமை இல்லாதவனை என்னை (என் தலைவன்) என்பதும் சொல்லாமல் தோன்றும் மரபு.

ஒப்பு, உரு (கற்பனை), வெறுப்பு, கற்பு, ஏர் (பெருமித அழகு), எழில் (கச்சிதமான அழகு). சாயல், நாண், மடம், நோய், வேட்கை, நுகர்வு - என்பன போன்ற சொற்களின் பொருளைக் காட்டமுடியாது. உணர்ந்துகொள்ளத்தான் முடியும் எனினும், இவை மண்ணுலகிலும் வானுலகிலும் இல்லாமல் இல்லை.

## பயிற்சி வினாக்கள்

## குறு வினாக்கள்

1.அகஇலக்கண நூல்கள் எவை? எவை?

2.தொல்காப்பியம் - குறிப்பு வரைக.

3.நம்பிஅகப்பொருள் - குறிப்பு வரைக.

4.அன்பின் ஐந்திணை விளக்குக.

5.கூத்தர்க்குரிய செயல்களைப் பட்டியலிடுக

6.பாலைத்திணையின் கருப்பொருள்களைக் குறிப்பிடுக

7.அல்லகுறியின் வகைகளை எடுத்துரைக்க

8.வரைவு கடாதல் -விளக்கி வரைக.

9.வாயில்களின் மரபுகளை நூற்பாவுடன் விளக்குக

10.உள்ளுறையின் வகைகளைக் கூறி விளக்குக.

## கட்டுரை வினாக்கள்

1.தலைவன் தலைவிக்குரிய பொது மரபுகள் யாவை?

2.பிரிவின் வகைகளும் பிரிவிற்குரியோரும் குறித்து ஆராய்க.

3.களவொழுக்கத்தில் தலைவன் கூற்று நிகழுமிடங்களைத் தொகுத்துரைக்க

4.களவொழுக்கத்தில் இடம்பெறும் தோழியின் கூற்றுகளைக் கட்டுரைக்க

5.இறைச்சியும் உள்ளுறையும் குறித்துத் தொகுக்க.

6.களவின் போது தலைவனின் இயல்பும் திறனும் குறித்து ஆராய்க .

7.தலைவன் மரபு நிலைகள் குறித்து விளக்குக.

8.தலைவன், தலைவி பண்பினைச் சான்றுடன் விளக்குக

9.இல்வாழ்க்கையின் சிறப்பைக் கற்பியல் வாயிலாக ஆய்ந்துரைக்க.

10.அகத்திணை மாந்தர்கள் பற்றிக் கட்டுரைக்க

## அலகு:5

## புறத்திணை

"திணை அகம்புறம் எனும் இருவகைப்பட்டது அகப்பொருளானது போகநுகர்ச்சியாமானும் அதனான் ஆய பயன் தானே அகம் என்றார் புறப்பொருளாவது அறஞ்செய்தலும் அஞ்செய்தலும் ஆகலான் அவற்றால் ஆய் பயன் பிறர்க்குப் புலனாதலின் புறம் என்றார் என இளம்பூரணர் அகம் புறம் எனப்பட்ட கலைச்சொற்களுக்கானப் பொருளைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

"ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்தின்பின்னர். அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாதிருந்ததெனக் கூறப்படாததாய், வாண்டும் உள்ளத் துணாலே அகர்த்து இன்பமுறுவதொரு பொருளாதலின் அதனை அகம் என்றார். எனவே அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு யென்றது ஓர் ஆகுபெயராம்.இதனை ஒழிந்தன ஒத்த அன்புடையார் தாமேயன்றி எல்லார்க்குத் துய்த்துணாப் படுதலாலும். இவை இவ்வா றிருந்தவெனப் பிறர்க்குக் கூறப்படுதலானும், அவை புறமெனப்படும் என அகத்தைப் பிறர்க்கு வெளிப்படா உள்ளத்துணர்வெனவும் புறத்தை எல்லோருக்கும் இன்னதெனக் கூறப்படுவதும் புலப்படுவதும் எனவும் விளக்கியுள்ளார் நச்சினார்க்கினியர்.

தமிழ்மொழியில் கிடைக்கப்பெறும் முதல் முழுமையான இலக்கண நூல் தொல்காப்பியமாகும். தொல்காப்பியரால் இயற்றப்பெற்ற தொல்காப்பியம் கி.மு. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தாகக் கருதப்பெறுகிறது. எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களையும் 27 இயல்களையும் கொண்டுள்ளது. பொருளதிகாரத்தில் அகப்பொருள், புறப்பொருள் இரண்டையும் கூறியுள்ளார். அத்துடன் அணிக்கும் யாப்பிற்கும் சேர்த்தே இலக்கணம் வகுத்துள்ளார். 1610 நூற்பாக்களையும் இரண்டு பாயிரங்களையும் கொண்ட தொல்காப்பியம், இளம்பூரணர் முதலான பழையவர் அறுவர் உரையினையும் சிவஞான சுவாமிகள் முதலான புதியவர் நால்வர் உரையினையும் கொண்டுள்ளது.

நம்பிஅகப்பொருள் ஐயனாரிதனார் இயற்றிய நூல். கி.பி.8ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற புறநூலாகும். இந்நூல் 13 பிரிவுகளையும், 19 நூற்பாக்களையும் கொண்டுள்ளது. சாமுண்டி தேவ நாயகர் உரை எழுதியுள்ளார். புறப்பொருள் வெண்பாமாலை கூறும் அகப்பொருள புறப்பொருள் எனும் இரு பொருளிலக்கண வகைகளுள் புறப்பொருள் இலக்கணம் கூற எழுந்த நூலாகும். இதன் காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.உரைதருநூல்

இ.்.து இதில் இலக்கணம் கூறும் நூற்பா "கொளு" என்னும் தலைப்பில் அளவு ஒத்த இரண்டடிப் பாடலாக உள்ளது. இந்த இலக்கணத்துக்கு மேற்கோளாக ஆசிரியரே

இயற்றியதரப்பட்டுள்ளது.தொல்காப்பியத்துக்குப் பின் புறப்பொருள் இலக்கணம் பற்றி எழுதப்பட்ட ஒரே நூல் இஃதெனக் கூறப்படுகிறது.

வெண்பாமாலை புறத்திணை பன்னிரண்டும் புறம், புறப்புறம், அகப்புறம் என மூன்று வகையாகப் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் 342 கொளுக்கள் 341 துறைகள் காணப்படுகின்றன. அத்துறைகளை விளக்க நூலாசிரியர் 361 எடுத்துக்காட்டு பாடல்களைக் கையாண்டுள்ளார். அவற்றில் கைக்கிளைத் திணை நீங்கலாக ஏனைய திணைகள் அனைத்திலும் காணப்படும் எடுத்துக்காட்டுப் பாடல்கள் வெண்பா யாப்பில் அமைந்திருக்கின்றன. பாடல்களில் பெரும்பான்மை எனவே இதனை வெண்பாமாலை என்று அழைக்கலாயினர். அகத்தியரின் மாணாக்கர் 12-பேர். 12-திணைகளுக்குரிய இலக்கணம் பாடித் தொகுத்ததாகச் சொல்லப்படும் நூல் பன்னிருபடலம், இந்தப் புறப்பொருள் வெண்பாமாலைக்கு முதல்நூல் என்றும் கருதப்படுகிறது.

புறப்பொருள் விளக்கும் நூல்கள் அரிதாக இருந்ததினாலோ என்னவோ, 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிற்காலத்து உரையாசிரியர்கள் புறப்பொருள் வெண்பாமாலையில் இருந்து பெருமளவு பாடல்களை மேற்கோள்களாக எடுத்தாண்டுள்ளனர்.நன்னூல் எழுத்து, சொல் இலக்கணங்களைக் கூறுகிறது. இதனைப் பயின்றபின் தொல்காப்பியத்திலுள்ள எழுத்தும் சொல்லும் பயிலப்படுகிறது. அதுபோலத் தொல்காப்பியத்தில் உள்ள பொருளதிகாரத்தைப் பயில்வதற்கு முன் அகத்திணை இலக்கணத்துக்கு நம்பியகப்பொருள் நூலையும், புறத்திணை இலக்கணத்துக்கு இந்தப் புறப்பொருள் வெண்பாமாலை நூலையும் பயிலச் செய்யும் பழக்கம் இருந்துவருகிறது.

மக்களின் வாழ்வியலைத் தமிழ்நூல்கள் என இரண்டு நிலைகளில் பகுத்துப் பார்த்தன. அகம் என்பது திருமணத்துக்கு முந்தைய களவுநிலையிலும், திருமணத்துக்குப் பிந்திய கற்புநிலையிலும் நிகழும் ஆண்-பெண் உறவு பற்றியது. இது நெஞ்சகத்தில் வைத்து மறைக்கப்படும் வாழ்க்கை. புறம் என்பது புறத்தார்க்குப் புலனாகும் வாழ்க்கை.

**பாகுபாடு**

தொல்காப்பியர்,

1.அகத்திணை - 7

2.புறத்திணை - 7

எனப் பாகுபடுத்திக் காட்டினார். புறப்பொருளைப் புறப்பொருள் வெண்பாமாலை 12 திணைகளாகப் பகுத்துள்ளது. அந்த 12 திணைகளையும் அந்நூலின் ஆசிரியர் ஐயனாரிதனார் 3 பிரிவுகளாகப் பாகுபடுத்தி உள்ளார். ஆவை:

1. புறம் - 7 (வெட்சி முதல் தும்பை ஈறாக)

2. புறப்புறம் - 3 (வாகை, பாடாண, பொதுவியல்)

3. அகப்புறம் - 2 (கைக்கிளை,பெருந்திணை)என்பனவாகும்.

திணைகளின் அடிப்படையில் 12 படலங்களாகப் பகுத்து அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு திணையும் பல துறைகளாகப் பகுத்துக் காட்டப்பட்டுள்ளன. இந்தத் துறைகளைத் தொகுத்துக் காட்டும் பாடல் ஒன்று ஒவ்வொரு திணைக்கும் உள்ளது. இதனைச் சூத்திரம் என்கின்றனர். இப்படி 19 சூத்திரங்கள் உள்ளன. ஒவ்வொரு துறையும் ஈரடி நூற்பா ஒன்றால் விளக்கப்படுகிறது. இதனை இதன் உரையாசிரியர் கொளு என்று குறிப்பிடுகிறார். இந்நூலில் 342 கொளுக்கள் உள்ளன. மேலும் ஒழிபு என்னும் தலைப்பின்கீழ் 19 வென்றி-துறைகள் உள்ளன. இந்நூலில் கைக்கிளைத் திணை பாடல்கள் மட்டும் மருட்பாவின் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஜயங்கொண்ட சோழமண்டலத்து மேற்கானாட்டு மாகறலூர் கிழார் சாமுண்டி தேவ நாயனார் எழுதியதாகச் சொல்லப்படும் உரை ஒன்று இந்நூலுக்கு உள்ளது. கிழார் என்பதால் இவர் உழவர் எனத் தெரிகிறது.ஒவ்வொரு கொளுவுக்கும் விளக்கம், அந்தத் துறையை விளக்கும் வெண்பா அல்லது ஆசிரியப்பா ஒன்று, அதற்கு உரை என்னும் பாங்கில் அந்த உரை அமைந்துள்ளது.

நூலின் ஒழிபியலில் சேர்க்கப்பட்டுள்ள புதுமையான துறைகள்

- மகளிர் விளையாட்டு

ஆடல்-வென்றி, பாடல்-வென்றி, யாழ்-வென்றி, பூவை-வென்றி, கிளி-வென்றி, சூது-வென்றி, பிடி-வென்றி,

- காளையர் விளையாட்டு

மல்-வென்றி, ஏறுகொள்-வென்றி (சல்லிக்கட்டு) குதிரை-வென்றி, தேர்-வென்றி

- வேடிக்கை விளையாட்டு -

கோழி-வென்றி (கோழிப்போர்), சிவல்-வென்றி (கவுதாரிப்போர்), பூழ்-வென்றி, (காடைப்போர்), தகர்-வென்றி (ஆட்டுக்கடாச் சண்டை), யானை-வென்றி (குன்றேறி யானைப்போர் கண்டற்றால்' - திருக்குறள்)

- வணிகன் பெருமை - வணிக-வென்றி
- உழவன் பெருமை - உழவன்-வென்றி
- புலவன் பெருமை - கொடுப்போர் ஏத்திக் கொடார் பழித்தல்.

நூலில் சொல்லப்படும் இலக்கணமும்ஈ மேற்கோள் பாடலும் எவ்வாறு உள்ளன என்பதற்கு **எடுத்துக்காட்டு**

கைக்கிளைப் படலம்.பெண்பாற் கூற்று, நெஞ்சொடு மெலிதல்,

**‘‘அருஞ்சொல் வஞ்சி அல்லிருட் செலீஇய**

**நெஞ்சொடு புகன்ற நிலையுரைத் தன்று.’’** பாடல் எண் 304

(இது கொளு என்னும் இலக்கண நூற்பா) இதற்குச் சாமுண்டி தேவர் தரும் உரை - ”அழகிய சொல்லினையுடைய வஞ்சிக்கொம்பை ஒப்பானவள் இரவுப்பொழுது இருளின்கண் செல்வான் வேண்டி மனத்தோடு விரும்பிய நிலையைச் சொல்லியது.”

**‘‘மல்லாடு தோளான் அளியவாய் மாலிருட்கண்**

**செல்லாம் ஒழிக செலவென்பாய் நில்லாய்**

**புனையிழை இழந்த பூசல்**

**வினையினும் நினைதிழோ வாழியென் நெஞ்சே.’’**

(இது ஆசிரியரே இயற்றித் தந்த மேற்கோள் பாடல்) இதற்குச் சாமுண்டி தேவர் தரும் உரை - மல்லின் செய்தி உலாவும் புயத்தினையுடையான் தன் அளியை ஆசைப்பட்டு மயக்கமுடைய இருளிடத்துச் செல்லக்கடவேம் இல்லேம். நீ தவிர்வாயாக போக்கை என்று சொல்லுவாய். நீ நில்லாய், அணிந்த ஆபரணம் சோர்ந்த ஆரவாரத்தை உள்ளுவையோ, உள்ளாயோ,வாழ்வாயாக எனது நெஞ்சே.

**தொல்காப்பியம் புறப்பொருள் வெண்பாமாலை வேறுபாடு**

அகத்திணையியல், புறத்திணையியல், என இரு திணைகளுக்கான இயல்களை வகுத்து அவற்றுள் அகத்திணையியலுள் அகப்பாடல் மரபுகளையும் புறத்திணையியலுள் புறப்பாடல் மாபுகளையும் தொல்காப்பியர் கூறியுள்ளார். முற்படக்கிளந்த எழுதிணை எனப்படும் அகத்திணை, கைக்கினை முதலாகப் பெருந்திணை யிறுவாய் “முற்படக் கிளந்த எழுதிணை என்ப கைக்கிளை முதலாகப் என ஏழாகக் கூறப்பட்டுள்ளது பெருந்திணை இறுதியாக உள்ள வைப்புமுறையில் நடுவில் நிற்பவை அவற்றுள்

**‘‘நடுவ ணைந்திணை நடுவணது ஒழியப்**

**படுதிரை வையம் பாத்திய பண்பே''**

என நடுவணைத்திணை எனப்பட்டுள்ளன. நடுவணைந்திணை எனப்பட்ட இவற்றுள்ளும் நடுவணது என்பது உண்டு என்பதும் இந்நூற்பாவிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பொதுப்படக் கூறப்பட்ட திணைகளின் பெயர், குறிப்பாக நடுவணது எனப்பட்ட திணை ஒழிந்த நான்கு திணைகளின் பெயர்கள்

**''மாயோன் மேய காடுறை யுலகமும்**
**வேந்தன் மேய தீம்புன லுலகமும்**
**வருணன் மேய பெருமண லுலகமும்**
**சேயோன் மேய மைவரை யுலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே''**

எனும் நூற்பாவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

நடுவணது எனப்பட்ட திணையின் பெயர் இடத்தும்

**நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு**
**முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே**

என்றவாறு நடுவுநிலைத்திணை எனக் குறிப்பிடப்பட்டுள்ளதே அன்றி அதற்குரிய பெயர் அகத்திணையியலில் எங்கும் குறிப்பிடப்படவே இல்லை புறத்திணையியலில் வாகைத்திணை பற்றிப் பேசுகையில், இது எந்த அகத்திணையின் புறம் என்பதைச் சுட்டுகையில்

**வாகை தானே பாலையது புறனே**

எனப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆக, கைக்கிளை. முல்லை. குறிஞ்சி மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என எழு திணைகள் முற்படக் கிளந்தனவாகக் குறிப்பிடப் பட்டுள்ளன. இந்த எழுதிணைகளுள் நடுவணைத்திணைகள் பற்றிய அகஒழுக்கம் களவு கற்பு எனும் இருவகைக் கைகோள்களிலும் திகழும் நிலைமைகள் களவியல் கற்பியல் எனும் இரு இயல்களில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன.அகத்தைக் களவு என்றும் கற்பு என்றும் பாகுபடுத்தி விளக்குவது போல் கைக்கிளை. முல்லை. குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை பெருந்திணை எனப் பாகுபடுத்தி ஆராய வில்லை கைக்கிளை பெருந்திணை என்னும் இரண்டையும் ஒவ்வொரு நூற்பாவில் விளக்கிவிட்டு, ஏனைய ஐந்து திணைகளையும் முதல் கரு உரிகளில் அடிப்படையில் விளக்குகிறார் ஒவ்வொரு திணையிலும் நிகழும் நிகழ்ச்சிகளை விளக்கவில்லை. காதல் நாடகத்தில் பங்குகொள்ளும் மக்கள் கூற்றுக்களைத் தனித்தனியாகக் கூறுவதுபோல், இன்ன இன்ன திணையில் இன்ன இன்ள சுற்றுக்கள் நிகழும் எனவும் தொல்காப்பியர் கூறவில்லை" என, அருணாசலம் கூறுவது கவனத்தில் கொண்டு ஆராயப்பட வேண்டியதாக உள்ளது.

திணை என்பது ஒழுக்கம் என்பர். திணை என்பது நிலம் என்பர். இரண்டு கருத்தும் நடைமுறையில் உள்ளன. ஆனால் திணை என்பது நிலம் என்பது சங்க காலத்தைப் பொருத்தவரையில் உண்மையானதாக உள்ளது. ஆனால் தொல்காப்பியர் அகத்திணை, புறத்திணை என்று இரண்டு இயல்களுக்குத் தலைப்பு வழங்குவது பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது. தொல்காப்பியர் அகம் புறம் குறித்து இலக்கணம் கூறும்போது புறப் பொருள்கட்கு திணை துறைகளை வகுத்துப் பேசுகிறார். “அன்பினால் நிகழும் அகத்திணை யொழுகலாற்றைக் குறிஞ்சி முதலான ஐந்திணையாகவும், கைக்கிளை பெருந்திணைகளாகவும் சேர்த்து ஏழு திணைகளாகப் பகுத்துரைத்தல் பண்டைத் தமிழர் கண்டுணர்த்திய பொருளிலக்கண மரபாகும். வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்னும் ஏழையும் புறத்திணைகளாகக் கூறுவர். இத்திணைகள் பண்டைக்காலத்தில் தமிழ்நாட்டில் வழங்கிய போர் முறைகளையும் அம் முறையில் காட்டப்பெறும் வீரச் செயல்களையும், பெரும்பான்மையாகவும், ஏனைய அரசியல், கொடை, புகழ் நிலையாமை முதலியவற்றைச் சிறுபான்மையாகவும் உணர்த்துகின்றன“ என்பர் ந.சுப்புரெட்டியர் (தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, பக்.215-216).

இங்கு மூன்று கருத்துக்களை ஆராய வேண்டும்.

1.அகத்திணை, புறத்திணை - இதில் வருகின்ற திணை என்பது பெரும் பிரிவு - இயல் - எனலாம்.

2..ஐந்திணை - நிலம் என்று கூறலாம்.

3. புறப்பொருளில் வரும் 7 திணைகளும் செயல் என்று கூறலாம்.

அதாவது புறப்பொருளில் கூறப்படுகின்ற வெட்சி முதலான திணைகள் மன்னர்களின் செயல்பாட்டைக் குறிக்கும் சொல் என்று கூறவேண்டும். இவ்வாறு திணையைப் பகுத்துப் பார்ப்பது நலம்.

ஆநிரை கவர்வோர் வேந்தனால் ஏவப்படுவர் என்கிறது தொல்காப்பியம். வேந்தனால் ஏவப்பட்டும், ஏவலின்றியும் ஆநிரை கவரப்பெற்றதாக புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது. காஞ்சித் திணை தொல்காப்பியத்தில் உலகியல் நிலையாமையைப் பற்றி காஞ்சித்திணையில் கூற, தன் நாட்டின் மீது படையெடுத்து வந்த மாற்றாரை எதிர்த்துப் போரிடல் என்கிறது புறப்பொருள் வெண்பாமாலை.கைக்கிளை, பெருந்திணை கைக்கிளை, பெருந்திணை இரண்டும் அகம் என்பது தொல்காப்பியர் கொள்கை. ஆனால் புறப்பொருள் வெண்பாமாலையில் கைக்கிளை, பெருந்திணை வருகிறது. பன்னிருபடல மேற்கோள் நூற்பாக்கள் இவற்றை அகத்தின்புறம் அதாவது அகப்புறத்திணை என்று கூறுகிறது. கைக்கிளை என்றாங்கு பெருந்திணை என்றாங்கு அகத்திணை இரண்டும் அகத்திணைப் புறனே

**திணைக்குப் புறன் அகத்திற்குப் புறம்**

காதல் தவிர, பிறவற்றைக் கூறும் புறத்திணைப் பகுதியில் ஏழு திணைகள் உள்ளதாகத் தொல்காப்பியர் கூறுவார். அவை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் எனப் பெயர் பெறும். அன்பின் ஐந்திணை எனப் பெறும் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை போலவே, இப்புறத்திணைகளும் பூக்களின் பெயரைக் கொண்டு பெயர் பெற்றிருப்பதைக் காணலாம். "பாடாண்" மட்டுமே பூப்பெயரைக் கொள்ளவில்லை. ஏழு அகத்திணைகளுக்கு இணையாக ஏழு புறத்திணைகளைத் தொல்காப்பியர் கூறுகிறார்.

தொல்காப்பியர் அகன் ஐந்திணைகளை அகத்திணையில் கூறிவிட்டு புறத்திணையில் அதனைப் புறனாகக் கூறுகிறார்.இங்கு வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை வாகை, மட்டுமே முதன்மையான செயல்பாடாக மன்னர்களுக்கு இருந்திருக்க வேண்டும். புறத்திணை என்பது மன்னர்களின் வீரத்தை மையமிட்டப் பகுதி. அதில் வெட்சி என்பது குறிஞ்சி நிலத்தை மையமாகக் கொண்ட செயல் என்று கூறலாம். அது போலவே வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, முறையே முல்லை, மருதம், நெய்தல், பாலை, முதலான நிலத்தின் அரசர்களுக்குரிய செயல்பாடாகும். எனவே தான் தொல்காப்பியர் புறனாகக் கூறியுள்ளார்.

தொல்காப்பியர் புறத்திணையியலின் முதல் நூற்பாவில்

**''அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்**

**புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்**

**வெட்சி தானே குறிஞ்சியது புறனே**

**உட்குவரத் தோன்றும் ஈர்ஏழ் துறைத்தே''**

என்பதன் மூலம் அகத்திணை இலக்கணத்தை முழுமையாக உணர்ந்தோர் மட்டுமே புறத்திணை இலக்கணத்தைச் சிறப்பாக அறிய இயலும் என்ற கருத்தினைக் கூறுகிறார். புறத்திணைகள் என்பன பொதுநிலையில் உரைக்கப்பட்ட அகத்திணைகளைப் போலன்றி உரிய துறை வரையறைகளுடன் விளக்கி உரைக்கப்பட்டுள்ளன.

**''வெட்சிதானே குறிஞ்சியது புறனே"**

**''வஞ்சிதானே முல்லையது புறனே"**

**''உழிஞைதானே மருதத்துப் புறனே''**

**‘‘தும்பைதானே நெய்தலது புறனே’’**

**‘‘கைக்கிளைதானே பாலையது புறனே’’**

**‘‘காஞ்சிதானே பெருந்திணைப் புறனே’’**

**‘‘பாடாண்பகுதி கைக்கிளைப் புறனே’’**

என ஒவ்வொரு புறத்திணையும் எந்த அகத்திணையின் புறத்திணை என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. வெட்சி முதலாய புறத்திணைகள் குறிஞ்சி முதலாய எவ்வாறு புறமாயின என்பது குறிப்பிடப்பெறவில்லை. இதை உரையாசிரியர்களே செய்துள்ளனர். தங்களால் இயன்ற அளவில் அகம் புறம் இரண்டின் பொருத்தப்பாட்டை விளக்கிக்காட்டியுள்ளனர்.

அகத்திணைகளுக்கு தொல்காப்பியரால் எங்குமே ‘‘இனி வெட்சி குறிஞ்சிக்குப் புறனாயவாறு யாங்ஙனம் எனின்? கங்குவாய சிறுபொழுதும் ஆனிரைகளைச் களவிற்கோடலாகிய செயலும் உறங்காது தாம் கருதியது முடித்தலும் சூளுரைத்தலும் ஆனிரையை நோயின்றுய்த்தலும் பிறவும் குறிஞ்சிக்குரிய முதற்பொருளொடும் உரிப்பொருளொடும் ஒத்தலானும் வரைபொருட்பிரிவு குறுகிய காலப் பிரிவாகலானும் அவ்வாறே இதுவும் குறுகிய காலத்தின தாகலானும் தந்துநிறை, பாதீடு முதலியவை பொருளீட்டமாக அமைதலானும் நிரைமீட்டலாகிய வினை மீட்டலுமாகிய வெட்சித்திணை குறிஞ்சித்திணைக்குப் புறனாயிற்றென்க” ( ச பாலசுந்தரம், 1989:133),வேந்தன் கோடலும் பணிப்பின்றியும் நிகழுமாதலானும் நிரை ”வெட்சி குறிஞ்சிக்குப் புறனாயது எவ்வாறெனின், நிரைகோடல் குறிஞ்சிக்குரிய மலைசார்ந்த நிலத்தின்கண் நிகழ்தலானும், அந்நிலத்தின் மக்களாயின் ஆநிரையைக் களவிற் கோடல் ஒருபுடை குறிஞ்சிக்கு பிறநாட்டு உரித்தாகிய களவோடு ஒத்தலானும், அதற்கு அது புறனாயிற்று என்க .சூடும் பூவும் பூவாதலானும் அதற்கு அது புறமாம்” (இளம்பூரணர், 2003) என்றெல்லாம் அவரவர்க்குத் தோன்றிய கருத்தை முன்வைத்துள்ளனர் இவ்வாறே வாகையும் பாலையும் பின்வருமாறு இயைபுபடுத்திக் காட்டப்பட்டுள்ளன.

”எழுமைக்கும் ஏற்புடைய கல்வி பற்றியும் இன்பமும் அறனும் ஒருங்கு எய்துவதற்குக் காரணமாகிய பாடாண்பகுதி கைக்கிளைப் புறனே என ஒவ்வொரு புறத்திணையும் எந்த அசுத்திணையின் புறத்திணை என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. வெட்சி முதலாய புறத்திணைகள் குறிஞ்சி முதலாய எவ்வாறு புறமாயின என்பது குறிப்பிடப்பெறவில்லை. இதை உரையாசிரியர்களே செய்துள்ளனர். தங்களால் இயன்ற அளவில் அகம் புறம் இரண்டின் பொருத்தப்பாட்டை விளக்கிக்காட்டியுள்ளனர். **“வெட்சி தானே குறிஞ்சியது புறனே“** என்பார் தொல்காப்பியர். ஆநிரை கவர்தல் வெட்சி. ஆநிரை கவர்தல் அவை மேயும் குறிஞ்சி நிலத்தில்

நிகழும். குறிஞ்சிக்குரிய உரிப்பொருள் புணர்தலும் புணர்தல் நிமித்தமும் ஆகும். இது மற்றோர் அறியாமல் நிகழும். நள்ளிரவில் யாரும் அறியா வண்ணம் ஒருவனும் ஒருத்தியும் தமக்குள் நிகழ்த்தும் காதல் ஒழுக்கமே குறிஞ்சிக்குரியது. அதே போல் மாற்றான் நாட்டில் யாரும் அறியாமல் ஆநிரைகளைக் கவர்ந்து வருதல் வெட்சியாகும். வெட்சித் திணையின் ஒரு பகுதியாகவே கரந்தையைக் கூறுவார் தொல்காப்பியர். அவர் ஏழு திணையே கொண்டார். கரந்தையை ஒரு தனித் திணையாகக் கொள்ளவில்லை. வெட்சிப் படையினர் தம் ஆநிரைகளைக் கவர்ந்து செல்வதைக் கண்டு இடைமறித்துப் போரிடுதல் கரந்தைத் திணையாகும்.

ஏதமில் புகழ் பயக்கும் தூது பற்றியும் அறப்புறம் முதலாய காவற்கடன் பற்றியும் பிரியும் பிரிவுகட் குரியதாகிச் சிறக்கும் பாலைத்திணை போல இவ் வாகைத் திணையும் தலைமகற்குப் பெருமையும் புகழும் சேர்த்தலானும் அது கருதி ஆற்றியிருந்து தலைவன் மீண்டகாலை ஆயத்தாரும் பிறரும் தனலவனை எத்துதல் கண்டு தலைமகள் பெருமிதமுற்று உவத்தலானும் அவ்வாறே தலைவனும் தன்னை ஒத்தாரொடு உறழ்ந்து மேம்பட்டு வெற்றிப் பெருமித முறுதலானும், பாலை ஏனை நானிலத்தும் அவற்றின் திரிபாக அமைந்து திகழுமாறு போலப் பெரும்பான்மையும் வெட்சி முதலிய திணைகளிடமாக அவற்றின் பயனாக நிகழ்தலானும் ஓதலும் தூதும் பிறவுமாகிய கடப்பாட்டாண்மை புரிதற்குப் பின்பனியும் இருவகை வேனிலுமாகிய பெரும் பொழுதும் நண்பகலாகிய சிறுபொழுதும் ஏற்புடைய காலங்களாக அமைதலானும் பாலைக்குரிய முதலும் கருவும் ஒத்துச் சிறத்தவானும் **‘வாகை பாலையது புறனாயிற்றென்க’** எனப் பிரிவு எனும் அடிப்படையில் வாகையும் பாலையும் ஒத்திருக்கும் இயைபு ச.பாலசுந்தரனாரால் காட்டப் பட்டுள்ளது

ச.பாலசுந்தரனார் வஞ்சி முல்லைக்குப் புறமாவதை விளக்கும் இளம்பூரணர் **”மாயோன் மேய காடுறை யுலகமும் (அகத். 5)** கார்காலமும் முல்லைக்கு முதற்பொருளாதலானும் பகையிற் சேறலாகிய வஞ்சிக்கு நிழலும் நீருமுள்ள காலம் வேண்டுதலானும் பருமரக்காடாகிய மலை சார்ந்த இடம் ஆகாமையானும் அதற்கு இது சிறந்த தென்க”(2003:250) என்கின்றார். இத்திணைகளின் இயைபுக்கான காரணத்தை ”வேந்தன் தன் தலைவியைப் பிரிந்து சென்று பாசறைக்கண் இருத்தல் வேண்டுதவானும் பாசறை அமைப்பிற்கு ஏற்ற நிலம் நீரும் நிழலும் உணவும் பெற வாய்ப்புடைய முல்லை நிலமாகலானும் அந்நிலவளம் செழித்தற்குரிய காலம் கார்காலமாகலானும் தனது மண்ணைக் காத்துக் கொள்ளுதல் அரசியற் கற்பாதலானும், அது குறித்துச் சென்ற தலைவன் தன் கடமை முற்றுமளவும் தலைவியைப் பிரிந்து ஆற்றியிருத்தலானும் முல்லைக்குரிய முதற்பொருளும் கருப்பொருளும் ஒத்து அமைதலானும் தலைவி ஆற்றியிகுப்பதற்குக் காரணமாக நிகழும் வஞ்சி ஒழுக்கம் முல்லைக்குப் புறனாயிற்றென்க” (1989:154) எனக் கூறியுள்ளார். இதில் கார்கால இயைபு கூறப்பட்டுள்ளது பாசறை அமைவது முல்லை நிலம் என்பதும் கார்காலம் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால்

பகைமேற்சென்ற முற்பட்ட தலைவன் திரும்பி வருவதாகக் கூறப்படும் காலம் கார்காலமாகவே அமைந்திருத்தலை முல்லைப்பாடல்கள் வெளிப்படுத்துகின்றன எனவே கார்காலத்திலேயே போர் திகழும். போர் நிகழுவதும் கார்காலம், தலைவன் போர்வினை முற்றித் திரும்பி வருவதும் கார்காலம் என்பது பொருந்துவதாக அமையவில்லை. ஒரே காலத்தில் இரண்டும் நடக்கும் வாய்ப்பு இல்லை என்பதைக் கருத்தில் கொண்டு அக புறத்திணைகளின் வேண்டியுள்ளது. இயைபை ஆராய ‘‘அகத்திற்கும் புறத்திற்கும் இலக்கணரீதியிலான ஒரு தருக்கப் பொருத்தத்தைத் தொல்காப்பியம் செய்துள்ளது இம்முயற்சி வியக்கத்தக்கதான அறிவியல் முயற்சியாகக் காணப்படுகிறது. அகத்திணைகளையும் புறத்திணைகளையும் இணைத்து ஒப்பாய்வுசெய்து ஒற்றை மரபுக்குள் கொண்டுவரும் முயற்சி தொல்காப்பியத்துக்கு முன்பே தொடங்கியிருக்க வேண்டும். என்ன காரணங்களால் ஒரு குறிப்பிட்ட அகத்திணையும் ஒரு குறிப்பிட்ட புறத்திணையும் ஒத்துள்ளன என்ற விளக்கங்கள் தொல்காப்பியத்தில் இல்லை. அவை அன்று கற்றோரிடையே நன்கு அறியப்பட்டிருந்த காரணத்தால் தொல்காப்பியம் சுருக்கம் கருதிச் சொல்லாமல் விட்டிருக்கலாம். இவ்விளக்கங்களை மத்திய தொல்காப்பிய உரையாசிரியர்கள் முந்திய மரபை ஒட்டியும், தத்தம் மேதாவிலாசத்தைக் காட்டியும் தந்துள்ளார்கள். திணைகளைப் பற்றிய இந்த விதமான விமர்சனப்பாங்கான நடவடிக்கையானது வெளிப்படையாக வேறுவேறு பொருள்களைப் பற்றிய சங்க அக, புறப்பாடல்களை ஒரு வலுவான தருக்கத்தின் அடிப்படையில் இணைக்க மேற்கொள்ளப்பட்ட ஒரு கோட்பாட்டு உருவாக்கச் செயல்பாடென்பதில் ஐயமில்லை” மேலும், ”சங்கப்பாடல்களில் இவ்வாறு இணை சேர்ப்பதற்கான வெளிப்படையான தடயங்களோ தரவுகளோ இல்லாதபோது தொல்காப்பியம் இம்முயற்சியில் ஈடுபட்டதற்குக் காரணம் சங்கப்பாடல்கள் இல்லை. சங்கப் பாடல்களை அக புறத்திணைகளாக ஏற்கனவே வகுத்த இலக்கணங்கள் காரணமாகும் முன்னம் மொழியப்பட்ட திணைகளைச் சமணதருக்கத்தின் அடியொற்றித் தொல்காப்பியம் மறுவாசிப்புச் செய்துள்ளது என்பது விளங்கும்’’எனவும் ராஜ்கௌதமன் கூறியிருப்பது இலக்கண உருவாக்கத்தின் ஒரு கூறே அன்றிச் சமுதாய நடைமுறையின் பகுதியன்று எனும் கருத்தை முன்வைத்துள்ளது அகத்திணை புறத்திணை இயைபு தனித்து விரிவாக ஆராயப்பட வேண்டிய பொருண்மையாக உள்ளது இத்தகைய ஆவ்வு எனவே இருதிணைக் கோட்பாட்டின் சமுதாய அடிப்படைகளை உணரப் பெரிதும் பயன்படும்.

தொல்காப்பியரின் செயற்பாடுகளை, குறிப்பாக ஆற்றியிருத்தலைப் பற்றியனவாகவே உள்ளன முல்லைப் பாடல்கள் இருத்தல் என்ற உரிப்பொருள் பற்றியனவாகவே இருப்பதற்கான காரணத்தை இவை வெளிப்படுத்துகின்றன அகப் பாடல்கள் மட்டுமல்ல முதின்முல்லை, வல்லாண்முல்லைத் துறைகள் சார்த்த புறப்பாடல்களும் வேந்துவிடுதொழில் இருப்பது முல்லையின் மேற்சுட்டிய பொருளாதாரச் செயற்பாட்டை வலியுறுத்துகின்றது. பற்றியனவாக உள்ளன.

**மருதமும் உழிஞையும்**

“உழிஞை தானே மருதத்துப் புறனே

முழு முதல் அரணம் முற்றலும் கோடலும்

அனைநெறி மரபிற்று ஆகும் என்ப”(புறத்திணையில்,8)

என்று தொல்காப்பியர் உழிஞைத் திணையை மருதத்துக்குப் புறத்திணையாகக் கூறுவார். அரண் என்பது இயற்கையான, மற்றும் செயற்கையான அரண்களாகும். உழிஞைத் திணை மருதத்திற்குப் புறமாதற்குரிய காரணம் வருமாறு வஞ்சியில் போரிட்டுத் தோற்ற வேந்தன், தன் நாடு சென்று அரண்மனைக்குள் புகுந்து தாளிட்டுக் கொண்டிருப்பான். போரிட்டு வென்ற வேந்தன் அவன் நாட்டில் புகுந்து இரவில் முற்றுகையிடுவான். போரிடும் காலம் விடியற்காலமாகும். மருதத் திணையில் ஊடல் கொண்ட மகளிர், கணவன் மார்களுக்குக் கதவடைத்துத் தனிமையில் இருப்பர். தலைவனும் விடியற்காலையில் வந்து கதவினைத் திறந்து உள்புக நினைப்பது மருத ஒழுக்கமாகும். இதனால் உழிஞையும் மருதமும் இணையாயின. சங்க அகப்பாடல்களிலும் புறப்பாடல்களிலும் வள மான மருதநில வாழ்வுச் சூழல்களும் மருதநிலப் பெருக்க வலியுறுத்தலும் இடம்பெற்றிருப்பதோடு மருதவளம் அரசு உருவாக்கத்தோடு தொடர்புடையதாக இருப்பதும் சங்கமருவியப் பாடல்களில் விரிவாகக் காட்டப்பட்டுள்ளது. நீர்வளத்தை ஆதாரமாகக் கொண்ட வேளாண்மையை மையப்படுத்திய மருதநிலமே அரசர்களின் கவனத்தைக் கவர்ந்த கவர்ச்சி நிலப்பகுதியாக அமைந்துள்ளது மருததிலமே நிலைத்த ஆட்சிக்கான வருவாய் ஆதாரமாகக் கருதப்பட்டுள்ள இதனால்தான் சங்ககாலத்தில் மருதநிலத்தைக் கவர்வதற்கா போர்களே பரவலாக நடைபெற்றுள்ளன. வயல் அழிப் பகைவர் நாட்டின் வள அழிப்பாகச் செயற்படுத்தப்பட்டுள்ள மருதவளமே நாட்டின் வளமாகக் காட்டப்பட்டுள்ளது. மரு நிலத்தின் இந்த வளம் அபரிமிதமான வருவாய்க்கு அடிப்படையாக அமைய அது அந்நில மக்களைப் பொருளீட்டு முயற்சிக்கு இட்டுச் செல்லவில்லை. மருதநிலத்தின் செல் வளம் மிக்க நகரப்பகுதிகளில் பரத்தையர் குடியிருப்பு உருவாகியுள்ளன. மதுரைக்காஞ்சி இதற்கான சிறந்த சான்றாக உள்ளது. இதனால்தான் மருதப்பாடல்கள் பெரும்பாலானவ பரத்தையர்பிரிவு, வாயில்மறுத்தல், வாயில்நேர்தல் பற்றியவாகவே உள்ளன. இந்தப் பரத்தையர்பிரிவே ஊடல் எனும் உரிப்பொருளுக்கான அடிப்படையாக அமைந்துள்ளது. “உழிஞை தானே மருதத்துப் புறனே“ என்பார் தொல்காப்பியர். போரிட்டுத் தோற்ற வேந்தன் தன் நாடு சென்று அரண்மனைக்குள் புகுந்து தாளிட்டுக் கொண்டிருப்பான். போரிட்டு வென்ற வேந்தன் அவன் நாட்டில் புகுந்து இரவில் முற்றுகையிடுவான். போரிடும் காலம் விடியற் காலமாகும். மருத நிலத்தில் ஊடல் கொண்ட மகளிர் கணவன்மார்களுக்குக் கதவடைத்து விடுவர். தலைவன் விடியற்காலை வந்து ஊடல் தீர்த்து வீட்டில் நுழைவான். எனவே உழிஞை மருதத்துக்குப் புறனாயிற்று.

**நெய்தலும் தும்பையும்**

தும்பை என்னும் புறத்திணை நெய்தல் என்னும் அகத்திணைக்குப் புறமாகும். இருபெரும் வேந்தரும் ஒரு களத்தில் போரிடுவர். அதற்கு, களரும் மணலும் பரந்த நிலமே போரிடும் களமாக அமையும். அவ்வாறு போரிடுவதற்குப் போதிய இடம் கடலைச் சார்ந்த மணல் பகுதியாக இருப்பது சிறப்புடையது கதிரவன் மறையும் காலம் போர் முடியும் நேரமாகும். எனவே நெய்தலுக்கு உரிய எற்பாடு நேரமே தும்பைக்கும் உரியதாயிற்று. மேலும் போர்க்களம் சென்ற காதலன் உயிருடன் திரும்பி வருதல் அவ்வளவு உறுதியில்லை. எனவே நெய்தலின் உரிப்பொருளாகிய இரங்கலும் இரங்கல் நிமித்தமும் தும்பைக்குப் பொருந்துவதாயின.இதனைத் தொல்காப்பியரும்

> **"தும்பை தானே நெய்தலது புறனே**
>
> **மைந்து பொருளாக வந்த வேந்தனைச்**
>
> **சென்று தலை அழிக்கும் சிறப்பிற்று என்ப"(புறத்திணையில், 12)**

என்று உரைப்பர்.

**பாலையும் வாகையும்**

வாகை தானே பாலையது புறனே தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப் பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப (புறத்திணையில், 15) என்று தொல்காப்பிய நூற்பா கூறும். வாகை என்பது வெற்றியைக் குறிக்கும். வாகைத் திணை பாலை என்னும் அகத்திணையினது புறமாகும். பாலைக்கு வாகை எவ்வாறு புறமானது என்பதற்குக் கீழ்வரும் காரணங்களைக் கூறலாம்.

1 பாலை தனக்கென ஒரு நிலமின்றி எல்லா நிலத்திலும் வறட்சிக் காலத்தில் உருவாகும். அதுபோல வாகையும் எல்லா நிலத்திலும் நிகழ்வது.

2.காதலுற்ற தலைவனும் தலைவியும் புணர்ச்சியினின்று நீங்கி இல்லறம் நிகழ்த்தி, பொருள் தேடுவதற்காகப் பிரிவது பாலைத் திணை யாகும். வாகையில் புகழ் எய்துவதற்காக, வெற்றி பெற்ற வேந்தன் துறக்கம் (வீடுபேறு) பெறும் கருத்தினால் பிரிவான். எனவே இரண்டிலும் பிரிவு உண்டு.

3.பாலை அறக் காதலை வளர்த்து, மீண்டும் இன்பத்தை மிகுவிப்பது போல, வாகை மறக் காதலை வளர்த்து வெற்றி இன்பம் விளைவிப்பதாலும், பாலை போல வாகையும் குறிப்பிட்ட நிலம் என்ற வரையரையின்றி எங்கும் நிகழுவதாதலாலும் இரண்டும் ஒப்புமையாயின.

4.பாலைக்குரிய பெரும்பொழுதும், சிறுபொழுதுமே போர் நிகழ்ச்சி முடிவு பெறுதற்குச் சிறந்தனவாதலின் நிலம், பொழுது என்னும் இரண்டு முதற்பொருள்களால் வாகை பாலைக்குப் புறமாயிற்று. எத்துறையிலும் வெற்றி காண வேண்டுமாயின் தலைவியைப் பிரிந்தே ஆதல் வேண்டும். எனவே உரிப்பொருளாலும் புறமாயிற்று.

**கைக்கிளையும், பாடாண் திணையும்**

பாடாண் திணையானது கைக்கிளைக்குப் புறத்திணையாகும். கைக்கிளையாவது ஒரு நிலத்திற்கோ, ஒரு பொழுதுக்கோ உரியதாகாமல் எல்லா நிலத்திற்கும், எல்லாப் பொழுதுக்கும் உரிய ஒருதலைக் காமமாகும். அதுபோல இதுவும் ஒரு பாலுக்கு உரியது அன்று. ஒருவனை ஒருவன் ஏதேனும் காரணம் பற்றிப் பாராட்டி நிற்பது பாடாண் திணையாகும். வெட்சி முதல் வாகை ஈறாக உள்ள திணைகள் போர் தொடுப்போரும் எதிர்ப்போருமாகிய இருவருக்கும் உரியது; காஞ்சியாவருக்கும் உரியது ;அவ்வாறு இல்லாமல் பாடாண் திணை பாடப்படுபவர், பாடுபவர் என்னும் இருவருள் பாடுவோர் விருப்பம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருத்தலின் கைக்கிளை போல இதுவும் ஒருவர் விருப்பமாயிற்று. இதனைத் தொல்காப்பியர்,

**‘‘பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே**

**நாடுங் காலை நாலிரண்டுடைத்தே’’(புறத்திணையில், 20)**

எனக் கூறுவார்.

**பெருந்திணையும் காஞ்சியும்**

காஞ்சி என்பது நிலையாமையைக் குறிக்கும். காஞ்சித் திணை அகத்திணையாகிய பெருந்திணைக்குப் புறத்திணையாகும். அது நன்று அல்லாத சிறப்பினை உடையது; மேலும் நிலைபேறில்லாத இவ்வுலகத்தைப் பற்றிய வழியினைக் கூறுவது ஆகும். நன்றல்லாத சிறப்பாவது செயலால் நன்றல்லாதது போல் தோன்றி, கொள்கையால் சிறந்திருத்தல். அன்பின் ஐந்திணைகளில் பெருந்திணையாகிய மடல் ஏறுதல் போல்வன வரின் அவற்றிற்குப் புறமாக ஒதுக்கப்படுதல் போல, வெட்சி முதலிய புறத்திணைகளில் நிலையாமை உணர்வு வெறுக்கப்பட்டு ஒதுக்கப்படுதலின், காஞ்சி பெருந்திணைப் புறமாயிற்று. இதனைத் தொல்காப்பியர்,

**‘‘காஞ்சி தானே பெருந்திணைப் புறனே**

**பாங்கரும் சிறப்பின் பல்லாற் றானும்**

நில்லா உலகம் புல்லிய நெறித்தே.''(புறத்திணையியல், 18)

எனக் கூறுகிறார்.

**புறத்திணைகளின் எண்ணிக்கை**

புறத்திணைகளை அகத்திணைகளுக்கு இணையாக வைத்து ஏழு என்று தொல்காப்பியர் வகுத்தாலும், பிற்கால இலக்கண நூலாகிய புறப்பொருள் வெண்பாமாலை புறத்திணைகளைப் பன்னிரண்டு என்று கூறுகிறது. தொல்காப்பியர் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்று ஏழு திணைகளாகக் கூறுகிறார். தொல்காப்பியருக்குப் பின் வந்த இலக்கண ஆசிரியர்கள் புறத்திணைகளைப் பன்னிரண்டாகப் பிரித்தனர். அவை வெட்சி, கரந்தை,வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை எனப்பட்டன. பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை போன்ற புற இலக்கண நூல்கள் பன்னிரண்டு திணைகளாக விளக்கியுரைக்கின்றன. எனவே தொல்காப்பியருக்குப் பிறகு புறப்பொருள் மேலும் பிரிக்கப்பட்டதை உணருகிறோம். ஆனால் உரையாசிரியர் இளம்பூரணர் அகங்கை ஐந்து உடையாருக்குப் புறங்கை ஐந்தாற்போல அகத்திணை ஏழு என்றால் புறத்திணையும் ஏழுதான் என்றுரைப்பர்.

இவற்றுள் கரந்தை, நொச்சி, பொதுவியல் புதிதாகக் கொள்ளப்பட்ட புறத்திணைகளாகும். அகத்திணையுள் அடங்கிய கைக்கிளை, பெருந்திணை புறத்திணையிலும் இணைக்கப்படவே இவற்றின் எண்ணிக்கை பன்னிரண்டாயிற்று. ஆநிரை கவர்தலைக் கூறிய தொல்காப்பியர், ஆநிரை மீட்டலாகிய கரந்தையைக் கூறவில்லை. ஏனெனில் அகத்திணைகளுக்கு இணையாகவே புறத்திணைகளைக் கூறும்போது ஒருவனும் ஒருத்தியும் காதல் கொள்ளும் களவினைக் கூறியவர் ஆநிரை கவர்தல் என்னும் களவினைக் கூறி ஒப்புமைப்படுத்துகிறார். ஆநிரை மீட்டல் என்றால் களவு நிலை மாறி, அடுத்தவர் தலையீடு நிகழ்ந்து, காதல் முறிக்கப்படுதல் வந்துவிடும் என அவர் நினைத்திருக்கக் கூடும்.அதே போல், நொச்சித் திணையையும் அவர் கூறவில்லை. நொச்சித் திணை என்பது கோட்டையின் உள்ளே இருந்துகொண்டு தன் மதில் அழிவு படாமல் காத்தலாகும். பகைவேந்தன் மதிலை வளைப்பான். இது, பகைவர் மதிலை அழித்துக் கோட்டைக்குள் நுழையும் உழிஞைத் திணையுள் அடங்கி விடுகிறது. ஏனெனில் ஊடலும், ஊடல் நிமித்தமும் உள்ள மருதத் திணையின் புறத்திணை, உழிஞைத் திணையாகும். வாயில் அடைத்து ஊடல் கொள்ளும் தலைவியின் ஊடல் தீர்த்துத் தலைவன் உள்ளே நுழைந்து விடுவதைக் குறிக்கும் மருதத் திணைக்குப் புறத்திணையாகிய உழிஞையுடன் நொச்சித்திணைச் செய்திகளும் அடங்கிவிடுவதால் அதனைத் தொல்காப்பியர் பிரிக்கவில்லை. மேலும் கைக்கிளை, பெருந்திணை ஆகியன காதல் பற்றிய செய்திகளுக்கு உரிய ஆகலான் அவற்றைத் தொல்காப்பியர் புறத்திணையில் சேர்க்கவில்லை. பொதுவியல் என்பது புறத்திணைகளில்

கூறப்படாது விட்ட துறைகளும் கூறப்பட்ட புறத்திணைகளுக்குப் பொதுவாய் வருவனவும் ஆகியவற்றுக்கு இலக்கணம் கூறுவதாகும். இதனையும் தொல்காப்பியர் கூற வேண்டிய தேவையில்லை என்பதால் விட்டு விட்டார். எனவே தொல்காப்பியர் மிகச் சிறப்பாகப் பாகுபாடு செய்த புறத்திணைகளை ஏதோ காரணம் கருதி, பிற்காலத்தார் பன்னிரண்டாகப் பிரித்தனர் என நாம் கருதலாம்.

**திணையும் துறைகளும்**

தொல்காப்பியர் ஆநிரை கவர்தல், மண் கவர்தல், கோட்டையைக் கவர்தல் ஆகிய போர்ச் செயல்களில் கவர்பவர், அதனை எதிர்ப்பவர் ஆகியோரின் செயல்களை முறையே வெட்சி, வஞ்சி, உழிஞை ஆகிய திணைகளில் விளக்குகிறார். கவர்தல், எதிர்த்தல் என்ற இரு செயல்களுக்கும் தனித் திணைகளை உருவாக்கி ஐயனாரிதனார் புறப்பொருள் வெண்பாமாலையில் வெட்சி - கரந்தை, வஞ்சி - காஞ்சி, உழிஞை - நொச்சி எனப்பகுத்துக் காட்டுகிறார். கரந்தையும் நொச்சியும் முறையே ஆநிரையை மீட்டலையும் கோட்டையை மீட்டலையும் குறிப்பன. இவை தொல்காப்பியரால் வெட்சியிலும் உழிஞையிலும் சுட்டப்பட்டிருக்கின்றன. பல்வேறு நிலையாமைகள் பற்றிக் கூறும் பகுதிக்குத் தொல்காப்பியர் காஞ்சித் திணை எனப் பெயரிட்டிருக்க, ஐயனாரிதனார் அதனை மண் மீட்டலைக் குறிக்கும் திணையாகக் காட்டியிருப்பது மிகப்பெரிய மாற்றமாகும். தொல்காப்பியர் சுட்டிய புறத்திணைகளின் உரிப்பொருளையும் அவற்றின் துறைகள் குறித்த செய்திகளையும் இப்பகுதியில் காண்போம். திணை என்பது முழுச்செயலைக் குறிப்பது. துறை என்பது முழுச்செயலுக்குள் இருக்கும் சிறுசிறு நிகழ்வுகளைக் குறிப்பது.

**வெட்சித் திணையும் துறைகளும்**

பகைவர் நாட்டின் மேல் போர் தொடுக்க எண்ணும் அரசன் போர் தொடங்கும் முன், அறவோர், பிணியாளர், பெண்டிர் முதலியவர்களைப் போர் நடக்கும் இடத்தை விட்டு வெளியேறப் பணிப்பான். தாமே வெளியேற முடியாத பசுக்கூட்டங்களைத் தன்படை வீரர்களைக் கொண்டு கைப்பற்றி வருவான். இது வெட்சிப் போர் ஆகும். ஆநிரை கவர்வோர் வெட்சிப் பூமாலை சூடியிருப்பர். ஆநிரை மீட்போர் கரந்தைப் பூ மாலை சூடியிருப்பர். ஆநிரை கவர்தலைப் போர் தொடங்கு முன் தன் கருத்தைப் பகைவர்க்கு அறிவிப்பது போலவும் கொள்ளலாம். தொல்காப்பியர் வெட்சித்திணைக்கு 14 துறைகள் கூறியுள்ளார். நிரை கவர்தலுக்கும் (வெட்சி) மீட்டலுக்கும் (கரந்தை) இத்துறைகள் பொதுவானவை.

**வெட்சியில் கரந்தை**

வெட்சித் திணையில் கரந்தை என்ற பகுதியையும் தொல்காப்பியர் கூறுவார். கரந்தையை ஒரு தனித் திணையாகக் கொள்ளவில்லை. புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் ஐயனாரிதனார் ஆநிரை கவர்தலை மட்டும் வெட்சிப் படலமென்று பெயரிட்டு 19 துறைகள் வகுத்தார். வெட்சிப் படையினர் தம் ஆநிரைகளைக் கவர்ந்து செல்வதைக் கண்டு இடைமறித்துப் போரிடுதலைத் தனித் திணையாக்கிக் கரந்தைப் படலம் எனப் பெயரிட்டு ஐயனாரிதனார் 13 துறைகளை வகுத்துள்ளார்.

**வஞ்சித் திணையும் துறைகளும்**

தன்னை மதியாது தனது நாட்டைக் கைப்பற்றக் கருதிய பகைமன்னன் மேல் தான் படையெடுத்துச் செல்வது வஞ்சித் திணையாகும். இதற்குத் தொல்காப்பியர் 13 துறைகளை வகுத்துள்ளார். படையெடுத்து வருவோரை எதிர்கொள்வதும் வஞ்சித் திணையுள் கூறப்பட்டுள்ளது. வெண்பாமாலை ஆசிரியர் நாட்டைக் கைப்பற்றுதலை மட்டும் வஞ்சிப் படலம் என்று கூறி அதற்கு 20 துறைகளை வகுத்தார். படையெடுப்பை எதிர்த்தலைக் காஞ்சிப் படலம் எனப் பிரித்துக் குறிப்பிட்டு அதற்கு 21 துறைகளை வகுத்துள்ளார். தொல்காப்பியர் காஞ்சி என்பதற்கு வேறு பொருள் கொண்டார்.

**உழிஞைத் திணையும் துறைகளும்**

பகைவர் மதிலை அழித்துக் கோட்டைக்குள் உழிஞை மன்னன் புகுதலைக் கூறுவது உழிஞை ஆகும். தொல்காப்பியர் படையெடுத்து முற்றுகையிடுதல் (உழிஞை), உள்ளேயிருப்பவன் அதைத் தடுத்துக் காத்தல் (நொச்சி) இரண்டையுமே உழிஞையாகக் கொண்டு 12 துறைகள் வகுத்தார்.

**உழிஞையில் நொச்சி**

நொச்சித் திணையைத் தொல்காப்பியர் தனித்திணையாகக் கொள்ளவில்லை. உழிஞையில் இணைத்தே கூறுகிறார். கோட்டையின் உள்ளே இருந்து கொண்டு தன் மதில் அழிவுபடாமல் காத்தல் நொச்சித் திணையாகும். மதில் காப்போர் நொச்சிப் பூவைச் சூடியிருப்பர். ஐயனாரிதனார் மதிலை வளைத்தலை மட்டும் உழிஞைப் படலம் என்று கூறி அதற்கு 28 துறைகளை வகுத்தார். மதில் காத்தலை நொச்சிப் படலம் என்று தனியாகப் பிரித்து அதற்கு 8 துறைகள் வகுத்தார்.

**தும்பைத் திணையும் துறைகளும்**

பகை அரசர் இருவர் ஓர் இடத்தைத் தேர்வு செய்து, அவ்விடத்தைப் போர்க்களமாகக் கொண்டு போரிடுதல் தும்பைத்திணையாகும். இவ்வாறு போரிடுவோர் தும்பைப் பூவைச் சூடிப்போரிடுவர். இத்திணை 12 துறைகளை உடையது. ஐயனாரிதனார் இதற்குத் தும்பைப் படலம் என்று பெயரிட்டு 23 துறைகளை வகுத்தார்.

**வாகைத் திணையும் துறைகளும்**

தன் பகை அரசனை வென்று வெற்றி பெறுதல் வாகைத்திணையாகும். வென்ற மன்னன் வாகைப்பூச் சூடி வருவான். வெற்றி பெற்றதும், அதைச் சிறப்பாகக் கொண்டாடுவதும் வாகைத் திணையின் பாற்படும். வாகையின் துறைகள் 18 ஆகும். அரசர்கள் மட்டுமன்றி மற்றவர்களும் அவரவர் துறையில் வெற்றி பெறுதலும் வாகையுள் அடங்கும். புறப்பொருள் வெண்பா மாலை இதனை வாகைப் படலம் எனப் பெயரிட்டு 32 துறைகள் வகுத்துள்ளது.

**காஞ்சித் திணையும் துறைகளும்**

நிலைபேறு இல்லாத உலக இயற்கையைப் பற்றி எடுத்துரைப்பது காஞ்சித் திணையாகும். இதற்கு 20 துறைகள் கூறப்பட்டுள்ளன. வெண்பாமாலை காஞ்சி என்பதற்கு வேறு பொருள் கொண்டு பகைவரைத் தன் நாட்டின் எல்லையைத் தாண்ட விடாமல் தடுத்தல் காஞ்சிப் படலம் என்கிறது. இவர்கள் காஞ்சிப் பூவைச் சூடியிருப்பர். இதற்கு 21 துறைகளைப் புறப்பொருள் வெண்பாமாலை காட்டுகிறது.

**பாடாண் திணையும் துறைகளும்**

வெற்றி பெற்ற அரசனின் வீரம், புகழ், கொடை முதலிய பண்புகளைப் புகழ்ந்து பாடுதல் பாடாண் திணையாகும். இத்திணையில் 25 துறைகள் உள்ளன. புறப்பொருள் வெண்பா மாலை இதனைப் பாடாண் படலம் என்று கூறி 48துறைகளைக் காட்டுகிறது. திணைகள், துறைகள் ஆகியவற்றின் விரிவும் விளக்கமும் புறப்பொருள் வெண்பா மாலை பற்றிய பாடங்களில் படிக்கலாம்.

**புறத்திணைகள் கூறும் சமூகச் செய்திகள்**

புறத்திணைகள் போர்ப் பிரிவுகளை விளக்குகின்றன. ஆநிரைகளைக் கவர்தல் தான் போருக்குத் தொடக்கமாக அமைகின்றது. ஆநிரை கவர்வோர் செயலை ஆநிரையை மீட்போர் மிகக் கடுமையாக எதிர்த்துப் போரிடுவர். பகைவன் நாட்டைக் கைப்பற்றவோ, அவ்வரசனின் மகளைப் பெண் கேட்டு, அவன் தர மறுக்கும்போதோ, போர் நடத்தப்பெறுதல் பெரும்பான்மை நிகழ்வாக இருக்கும். சில நேரங்களில் இகழ்ந்து பேசியதாலும் இகழ்ச்சிக்கு ஆட்பட்டவன் போர்தொடுத்தலும்

நடைபெற்றுள்ளது. புறத்திணைகள் போர்ப் பிரிவுகளைக் கூறினாலும் அவற்றிற்குரிய துறைகள் போரின் சிறு சிறு நிகழ்வுகளைக் கூறுவன ஆகும்.

போருக்கு அடிப்படைக் காரணம் உலகப் பொருள்கள் மேல் ஆசையும், பெண்ணாசையுமே ஆகும். புறத்திணைகளில் ஒன்றான காஞ்சித் திணை உலக நிலையாமையை எடுத்துரைக்கிறது. வாழ்வில் ஏற்படும் பல்வேறு அனுபவங்களையும் இது எடுத்துக்கூறுகின்றது. ஆசைகளால் பயன் இல்லை என்கிறது இது. போர் தொடங்குவதில் இருந்து போர் முடிந்து வெற்றி பெற்றோ, தோல்வியுற்றோ வரும்வரை ஓர் ஒழுங்கு கடைப்பிடிக்கப்பட்டதால் தான் போர் நிகழ்விற்கும் ஓர் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை நூல்களில் உள்ள புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகியவையும், பத்துப்பாட்டில் உள்ள ஆற்றுப்படை இலக்கியங்களும் மதுரைக் காஞ்சியும் மேற்கண்ட புற இலக்கணப் பாகுபாட்டை அடிப்படையாகக் கொண்டே இயற்றப்பட்டுள்ளன.கைக்கிளை, பெருந்திணை ஆகியவை அகத்திணைகளாக இருந்தாலும் அன்பின் ஐந்திணை என்னும் வரையறைக்குள் அடங்காததால் பிற்காலத்தில் புறத்திணையில் இணைக்கப்பட்டன.

புறத்திணைகளை அகத்திணைகளுக்கு இணையாக ஏழு எனக் கூறுவார் தொல்காப்பியர். அவை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என ஏழு திணைகளாகும். தொல்காப்பியருக்குப் பின் வந்த இலக்கண ஆசிரியர்கள் பன்னிரண்டு திணைகளாகப் பிரித்தனர். முன்னர்க் கூறிய ஏழு திணைகள் தவிர, கரந்தை, நொச்சி, பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்னும் ஐந்தும் பிற்காலத்தில் தனிப் புறத்திணைகளாக இணைக்கப்பட்டன. ஆனால் தொல்காப்பியர் கரந்தையை வெட்சியுடன் இணைத்தும், நொச்சியை உழிஞையுடன் இணைத்தும் கூறினார். கைக்கிளை, பெருந்திணையை அகத்திணைகளாகவே தொல்காப்பியர் கருதினார். பொதுவியல் என ஓர் இயல் கூறவேண்டிய தேவை தொல்காப்பியருக்கு ஏற்படவில்லை.

அகப்பொருள் என்பது போலவே புறப்பொருள் என்பதும் ஓர் இலக்கியக் கலைச் சொல்லாகும். புறம் என்பது காதல் தவிர்ந்த ஏனைய மானுடப் பொருள்களைப் பற்றியது. அதாவது போர், வீரம், கொடை, புகழ், அறநெறி போன்ற வாழ்க்கையின் புறக்கூறுகளைப் பற்றியது. தொல்காப்பியர் அகத்திணையியல் கூறியதற்குப் பிறகு புறத்திணையியலைக் கூறக் காரணம், அகப்பொருள் பகுதிக்குப் புறனாய் அமையும் (புறப்) பகுதிகளைக் கூறுவதற்கேயாகும்.

வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்.இதில், பாடாண் திணையானது கைக்கிளைக்குப் புறத்திணையாகும். கைக்கிளையாவது ஒரு நிலத்திற்கோ, ஒரு பொழுதுக்கோ உரியதாகாமல், எல்லா நிலத்திற்கும் எல்லாப் பொழுதுக்கும் உரிய ஒருதலைக் காமமாகும். அதுபோல, பாடாண் திணையும் ஒரு பாலுக்கு உரியது அன்று. ஒருவனை ஒருவன் ஏதேனும் ஒரு காரணம் பற்றிப் பாராட்டி நிற்பது பாடாண் திணையாகும்.போரில் தோல்வியுற்ற வேந்தன் தன் நாடு

சென்று அரண்மனையில் புகுந்து அடைத்துக் கொள்வான். அவனொடு பொருத வெற்றி வேந்தன் அவன் நாட்டிடப்புகுந்து அரணை விடியற்காலையில் முற்றுகையிடுவான். இதில் தொல்காப்பியர் 20 துறைகளைக் கூறுவார். புறப்பொருள் வெண்பாமாலை 28 துறைகளைக் குறிப்பிடுகிறது.
தொல்காப்பியர் கூறிய புறத்திணைகள் ஏழனுள் நொச்சித் திணை என்பது அடங்காது. உழிஞைத் திணையிலேயே நொச்சித் திணைச் செய்தி ஒரு பகுதியாக வருகிறது. கோட்டையின் உள்ளே இருந்து கொண்டு தன் மதில் அழிவுபடாமல் காத்தல் இத்திணையாகும். பகைவன் மதிலை வளைப்பான். மதில் காப்போர் நொச்சிப் பூவைச் சூடியிருப்பர். இதில் ஒன்பது துறைகள் உள்ளன.

பகை அரசர் இருவர் ஓர் இடம் குறிப்பிட்டு, அவ்விடத்தைப் போர்க்களமாகக் கொண்டு போரிடுதல் தும்பைத் திணையாகும். இவ்வாறு போரிடுவோர் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவர். இத்திணை 24 துறைகளை உடையது.

புறத்திணைகள் போர்ப் பிரிவுகளை விளக்குகின்றன. ஆநிரை கவர்தல் தொடங்கி, பாடாண் திணை வரை ஓர் ஒழுங்கு காணப்படுகிறது. போர் தொடங்கும் போது, பசுக்கூட்டங்களைக் கவர்ந்து வந்து பாதுகாப்பர். பசுக்கூட்டங்களைக் கவர்வதே போருக்கு அடிப்படையாக அமைகிறது. போருக்கு அடிப்படைக் காரணம் உலகப் பொருள்கள் மேல் ஆசையும், பெண்ணாசையுமே ஆகும். புறத்திணைகளில் ஒன்றான காஞ்சித் திணை உலக நிலையாமையை எடுத்துரைக்கிறது. வாழ்வில் ஏற்படும் பல்வேறு அனுபவங்களையும் இது எடுத்துக் கூறுகின்றது. சங்கப் புற இலக்கியங்கள் புறத்திணைகளையும் அவற்றின் துறைகளையும் அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டுள்ளன.

**மாற்றுத்திணைக்கோட்பாடு**

புறநானூற்றில் நானூற்றுப் பாடல்கள் உள்ளன. அவை புறப்பொருளிலக்கணத்தின் திணை துறைகளுக்கு முக்கியமாக உள்ளவை. இந்நூலில் உள்ள செய்யுள்களில் இருந்து சேர, சோழ, பாண்டியர்கள் வரலாற்றையும் பாரி, பேகன், ஆய், அதிகன், காரி, ஓரி, நள்ளி, குமணன் முதலான வள்ளல்களையும், புலவர்களின். வாழ்வியலையும் அறிந்து கொள்ள முடிகின்றன.இங்கு புறநானூற்றுக்கு திணை துறை குறிக்கப் பெற்றுள்ளதை ஆராய முற்படலாம். முன்னோர்கள் திணை குறிக்கும்போது ஏழு திணைகளைக் கொண்டு குறித்துள்ளனர். அவற்றில் குறிப்பாக புறநானூற்றில் இடம்பெற்றுள்ள பாடலின் கருத்துக்களைக் கொண்டு திணைகளைக் குறித்துள்ளனர்.இதில் தொல்காப்பியரின் புறத்திணைக் கோட்பாடு சரியாகப் பின்பற்றப்படவில்லை. மேலும் புறநானூறு பாடல்களில் இடம்பெற்றுள்ள முதல், கரு உரிப்பொருள்களைக் கொண்டு திணைப் பிரித்தல் தற்போது இடம்பெற்றுள்ள திணை மாறும் என்பது கவனிக்க வேண்டியது ஆகும். முதல், கரு, உரி ஆகிய முப்பொருளாலும் அகத்திணை ஒவ்வொன்றும் புறத்திணை ஒவ்வொன்றோடு இயைபு பெறும்' என்னும் கு.வெ.பாலசுப்பிரமணியன் கூற்று ஏற்புடையதாகும்.

சான்று :

புறநானூற்றில் சேரன் மாந்தரஞ்சேரல் இரும்பொறையைப் பொருந்தி இளங்கீரனார் பாடிய பாடல்.

''முதிர் வார் இப்பி முத்தவார் மணல்
கதிர் விடு மணியன் கண்பொரு மாடத்து
இலங்கு வளை மகளிர் தெற்றி ஆடும்
விளங்கு சீர் விளங்கில் விழுமம் கொன்றை
களம் கொள் யானை, கடு மான் பொறைய!
விரிப்பின் அகலும்ள௵ தொகுப்பின் எஞ்சும்
மம்மர் நெஞ்சத்து எம்மனோர்க்கும், ஒருதலை
கைம்முற்றல, நின் புகழே, என்றும்
ஒளியோர் பிறந்த இம் மலர் தலை உலகத்து
வாழேம் என்றலும் அரிதே - ஷதாழாது
செறுத்த செய்யுட் செய் செந் நாவின்
வெறுத்த வேள்வி, விளங்கு புகழ்க் கபிலன்
இன்று உளன் ஆயின், நன்றுமன், என்ற நின்
ஆடுகொள் வரிசைக்கு ஒப்ப
பாடுவல் மன்னால், பகைவரைக் கடப்பே''

இப்பாடல் வாகைத் திணை என்று குறிக்கப்பட்டுள்ளது.

வாகைத் திணை பாலைத் திணைக்குப் புறனான திணை என்று தொல்காப்பியம் கூறியுள்ளது. இங்கு பாடலில் மணல் மேடு என்னும் சொல் பாலை நிலத்தைக் குறிப்பதாகக் கொண்டால் வாகைத்திணை சரியாகப் பொருந்தியுள்ளது. ஆனால் இங்கு கவனிக்கப்பட வேண்டியது சில பாடலடிகள் ஆகும்.

''செறுத்த செய்யுட செய்நன் நாவின்

**வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்**

**இன்று உளன் ஆயின் நன்றுமன்''**

என்பது கபிலன் பற்றிய சிறப்பு ஆகும். ஷவிரைவாகப் பலபொருள் அடக்கிப் பாடல் புனையும் செவ்விய நாவினையும் செறிந்த புலமையையும் பலரும் அறிய நின்று விளங்கிய புகழையும் உடையவன் கபிலன் அவன் இன்று இருப்பான் நன்று என்றாய்" என்று கூறும் புலவர் இளங்கீரனார். நானும் உன் வெற்றிச் சிறப்பை பாடுவேன் என்கிறார்.இங்கு கபிலன் இருந்தால் பாடுவேன் என்னும் கருத்து குறிஞ்சி நிலத்தைச் சார்ந்த மன்னன் என்பதைக் காட்டுகிறது. காரணம் கபிலன் குறிஞ்சித் திணைப் பாடல்கள் மட்டும் பாடியதாக வரலாறு கூறுகிறது. அந்த அடிப்படையில் இப்பாடலை நோக்கினால் இது குறிஞ்சித் திணைக்குப் புறனான வெட்சித் திணை என்று குறிக்கலாம் அல்லவா?

இது போலவே மற்றொரு புறநானூறு 52 வது பாடல் இளநாகனார் பாடியது.

**''அணங்குடை நெடுங் கோட்டு அளையகம் முனைஇ**

**முணங்கு நிமிர் வயமான் முழு வலி ஒருத்தல்**

**ஊன் நசை உள்ளம் துரப்ப, இரை குறித்து**

**தான் வேண்டு ... என்னும் பாடலில் வருகின்ற**

**மீன் சுடு புகையின் புலவு நாறு நெடுங்கொடி''**

என்னும் அடி நெய்தல் நில மக்களின் உணவான மீன் பற்றியதாக அமைந்துள்ளது. பெரும்பாலும் நெய்தல் நில மக்களின் கருப்பொருள் மீன். எனவே இப்பாடலில் நெய்தல் நிலத்தின் புறனான ஷதும்பைத்' திணை என்று அல்லவா? இருக்க வேண்டும் ஆனால் வாகைத்திணை என்று இருக்கின்றது.வாகைத்திணை -பாலைத்திணைக்குரியது பாலைத்திணையில் மீன் பற்றிய கருத்தமைந்த பாடல் ஏன் வந்தது? காரணம் பாடலுடைய மொத்தக் கருத்தையும் வைத்துக்கொண்டு திணையை வரையறை செய்துள்ளனர்.

புறநானூற்றில் பாடாண்திணைப் பாடல்களில் இடம்பெற்றுள்ள பாடல்களை ஆராய்ந்துப் பார்த்தால் தொல்காப்பியத்தில் திணைக் கோட்பாடு வரையறையில் இடம்பெற்றுள்ள கருப்பொருளை மையமாகக்கொண்டு மாற்றுத்திணை குறிக்கலாம்.

**''ஓங்கு மலைப் பெருவிரல் பாம்பு ஞான் கொளீஇ**

**ஒரு கணை கொண்டு மூஎயில் உடற்றி**

**பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த**

**கறை மிடற்று அண்ணல் காமர் சென்னிப்**

**பிறை நுதல் விளங்கும் ஒரு கண்போல''**

இங்கு இப்பாடல் பாடாண்திணை என்று குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் இப்பாடலின் பொருள் உயர்ந்த மலையாகிய பெரிய வில்லில் பாம்பினை நாணாகக் கொண்டு ஒரே அம்பினால் மூவர் மதிலை அழித்துப் பெருஞ்சிறப்புடைய அமரர்க்கு வெற்றி தந்தவன் விடமுண்டு கருமை படிந்த திருமிடறுடைய இறைவன் அந்தப் பெருமானின் அழகிய திருவடியில், சூடிய பிறை சேர்ந்த நெற்றியில் விளங்கும் கண்போல, வேந்தர் மூவருள்ளும் உயர்ந்தவனே, பூமாலை அணிந்த மார்பை உடையவனே.என்று பாண்டிய நன்மாறனை மதுரை மருதன் இளநாகனார் பாடினார். இதில் மலை என்னும் முதல் பொருள் இடம்பெற்றுள்ளது மலை குறிஞ்சிக்குரியது, குறிஞ்சி - வெட்சித் திணைக்குப் புறனானது, ஆனால் இப்பாடல் பாடாண்திணை என்று குறிக்கப்பட்டுள்ளது. பாடாண் திணை - கைக்கிளைக்குப் புறனாக அமைந்தது. இது ஒருவகையில் சரியானதாகவே அமைந்துள்ளது. அதாவது தொல்காப்பியர் அகத் திணையியலில், உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே என்று நூட்பா கூறுகிறார். இதற்குப் பொருள் தரும், தமிழண்ணல், உரிப்பொருள் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவன ஐந்து இவ் அகன் ஐந்திணைக்குள்ளேயே கைக்கிளையும், பெருந்திணையும் மயங்கி வரும் குறிஞ்சியில் கைக்கிளையும், நெய்தலில் பெருந்திணையும் பெரிதும் இடம்பெறக் காணலாம் என்கிறார்.

இவ்வாறாகச் சுற்றிப் புரிந்து கொள்வதை விட புறநானூற்றுக்குப் பாடலுக்கு அடியிலேயே ஐந்திணையான - குறிஞ்சி - என்றும் கைக்கிளை – மயக்கம், பாடாண் - புறன் என்று குறிப்பிட்டால் பாடலில் தொல்காப்பியரின் திணைக்கோட்பாடு எளிதானதாக அமைந்துவிடும். இல்லையென்றால் புரிவது எளிதானதாக அமையாது. பிறிதொரு பாடலில் திணைக் குறிப்பு மிகப்பெரிய குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிறிதொரு பாடலில் திணைக் குறிப்பு மிகப்பெரிய குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

**முந்நீர் நாப்பண் திமில் சுடர் போல**

**செம்மீன் இமைக்கும் மாக விசும்பின்**

**உச்சி நின்ற உவவு மதி கண்டு**

**கட்சி மஞ்ஞையின் சுர முதல் சேர்ந்த**

**சில் வளை விறலியும் யானும் வல் விரைந்து** (பாடல் - 60)

என்னும் பாடல் பாடாண் திணை என்று குறிக்கப்பட்டுள்ளது. அதாவது இப்பாடலில் முழுக்க முழுக்க நெய்தல் நிலத்திற்குரிய கருப்பொருள்கள் இடம்பெற்றுள்ளன. முந்நீர், செம்மீன், உப்பு, போன்ற பொருள்கள் நெய்தல் நிலத்து மக்களின் பொருள்கள் ஆகும். அதாவது கடல் நடுவே படகினில் வைத்த விளக்கு போல செவ்வாயின் ஒளி திகழும் மாகமாகிய ஆகாயத்தில் உச்சியல் முழுமதி நின்று தோன்றும் அதனைச் சுரமாகிய அரிய பாலை வழியில் காட்டில் வாழும் மயிலைப் போன்றவளும் சில வளையல்களை அணிந்தவளுமான விறலியுடன் நானும் கண்டேன். கடற்கரைக் கழிமுகத்திலுள்ள நீரால் விளைந்த உப்பினைச் சுமந்து மலைநாடு நோக்கிச் செல்லும் ஆரக்கால்கள் அமைந்த வண்டி அதனை பள்ளத்தில் ஆழ்ந்துவிடாதபடி வலிமையுடையதும் சுமை தாங்குவதுமான காளை இழுத்துச் செல்லும். அந்த வலிய காளையைப் போன்றவன் எம் அரசன் என்கிறது பாடலின் பொருள்.இது நெய்தல் திணை சார்ந்த பாடல் என்பது கருப்பொருளைக் கொண்டு அறியலாம்.

## பயிற்சி வினாக்கள்

**குறுவினாக்கள்**

1.வெட்சித்திணையை விளக்குக

2.வஞ்சித்திணையின் விளக்கம் தருக.

3..தும்பைத் திணையின் இலக்கணமும் சிறப்பும் நூற்பா வழி விளக்குக

4.வாகைத் திணையின் பாகுபாட்டினை விளக்குக.

5.மருதமும் உழிஞையும்விளக்குக.

6.கைக்கிளையும், பாடாண் திணையும்விளக்குக.

7.நெய்தலும் தும்பையும்விளக்குக.

8.பாலையும் வாகையும் விளக்குக.

9.பெருந்திணையும் காஞ்சியும் விளக்குக.

10. புறத்திணைகளின் எண்ணிக்கை குறித்து எழுதுக.

**கட்டுரை வினாக்கள்**

1.கரந்தைப்போர் பற்றிய செய்திகளை ஆராய்க.

2. எயில் காக்கக் கருதும் மன்னனின் போர்மாண்பினைப் புலப்படுத்துக.

3. மாற்றுத்திணைக்கோட்பாடு குறித்து விவரிக்க.

4. புறத்திணைகள் கூறும் சமூகச் செய்திகளைத்தொகுத்துரைக்க.

5. கைக்கிளை, பெருந்திணையின் இயல்புகளைச் சான்றுடன் கட்டுரைக்க.

6. வாகைத்திணை குறிப்பிடும் செய்திகளை எடுத்துரைக்க.

7.அகப்புறத்திணைகளின் ‘புறனே’– விவரிக்க.

8. போரினால் ஏற்படும் அவலங்களைக் காஞ்சித் திணை வழித் தொகுத்துரைக்க.

9. தொல்காப்பியம் புறப்பொருள் வெண்பாமாலை வேறுபாடு

10 திணைக்குப் புறன் அகத்திற்குப் புறம்

பாடநூல்

தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர் உரை. 2012 சாரதா பதிப்பகம், சென்னை

பார்வை நூல்கள்

1.வெள்ளைவாரணன், 1983- தொல்காப்பியம் உரைவளம், சென்னை

2 காசிவத்தம்பி 1962 - இலக்கணமும் சமூக உறவுகளும். குமரன் புத்தக இல்லம் கொழும்பு

3.வ.சுப. மாணிக்கம் 1962 - தமிழ்க்காதல், மெய்யப்பன்பதிப்பகம், சிதம்பரம்

4.ந.சுப்புரெட்டியார். 1981 - அகத்திணைக் கொள்கை பாரி நிலையம், சென்னை

5. க.ப.அறவாணன்-1978 - அற்றை நாள் காதலும் வீரமும், தமிழக்கோட்டம், சென்னை

6.கு.வெ.பாலகப்பிரமணியன், 1986 சங்க இலக்கியத்தில் புறப்பொருள். மீரா பதிப்பகம் புதுக்கோட்டை,

7. மு.ஹம்ஸா, 2007 தொல்காப்பியரின் பொருள் இலக்கணக் கோட்பாடு. ராபியாபதிப்பகம்,சென்னை.

8.மு. மாதையன், 2009- அகத்திணைக்கோட்பாடும் சங்க அகத்திணை மரபும் ,பாவை பப்ளிகே‘ன்ஸ், சென்னை.

**முனைவர் ப.அலிஸ் ராணி**

**தமிழ்த்துறை,உதவிப்பேராசிரியர்**

**சாராள் தக்கர் கல்லூரி,**

**திருநெல்வேலி-627007**

**∴.போன் - 9442492029**